டாக்டர் உ. வே. சா

# செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பு

முனைவர் வே. இரா. மாதவன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# டாக்டர் உ. வே. சா

## செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பு

UGC - DSA

தமிழியல் துறை நூலகம்

துறை எண் :

பொ. வகை

எண் : 4941

இறப்பு

வரிசை எண் :

வகை வரிசை எண் :

**முனைவர் வே. இரா. மாதவன்**

விரிவுரையாளர், ஓலைச்சுவடித் துறை

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்-613 005

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சி. ஐ. டி. வளாகம், தரமணி, சென்னை-600 113.

டாக்டர் உ. வே. சாமிநாதையர்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-7
(18, 19-2-93)

Dr. U. V. SAMINATHAIYAR ENDOWMENT
LECTURE No. 7
Endowment Lecture Publication No. 43

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | Dr. U. Vē. Cā. Cevvaic Cūṭuvār Pākavatap Patippu |
| Author | : | *Dr. V. R. Madhavan* Lecturer, Dept. of Palmleaf Manuscripts, Tamil University, Thanjavur-613 005 |
| Publisher & Copy right | : | International Institute of Tamil Studies, C.I.T. Campus Taramani, Madras-600 113 |
| Publication No. | : | 178 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | Nov. 1993 |
| Edition | : | First |
| Paper used | : | Tamil Nadu Paper 16 Kg |
| Size of the book | : | 21 × 14 cms |
| Printing types used | : | 10 Point |
| No. of copies | : | 1200 |
| No. of Pages | : | VIII + 184 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty Only) |
| Printers | : | Pavai Printers Pvt. Ltd. Madras-14, Phone: 832441. |
| Artist | : | Sathya |
| Subject | : | Criticism on U. V. Saminathaiyar's Editing Work of Cevvai Suduvar's Bhagavadham |


* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல

# பதிப்புரை

பதிப்புலக மூலவர், தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையரை நினைவுகூரும், டாக்டர் உ. வே. சாமிநாதையர் அறக்கட்டளையின் ஏழாவது சொற்பொழிவு இந்நூல்.

டாக்டர் உ. வே. சா. அவர்களால் முற்றாகப் பதிப்பிக்கப் பெற்று அவர் மறைவுக்குப் பின் வெளிவந்த பாகவதப் பதிப்பினை நுணுக்கமாக ஆய்வு செய்கிறது இந்நூல். உயரிய நிலையில் உரையாசிரியர், பதிப்பாசிரியர் என்ற இரட்டைப் பெருமைக் குரியோராக ஐயரவர்கள் விளங்குதலை மிகத் தெளிவாகத் தம் ஆழ்கல்வியால் புலப்படுத்தியுள்ளார். நிறுவனச் சுவடியியல் மற்றும் ஆய்வு மாணாக்கராகவும், ஆய்வு அலுவலராகவும் திகழ்ந்து இன்று நிறுவனத்திற்கும், பதிப்புத் தந்தைக்கும் பெருமை சேர்க்கும் வகையில் சிறந்ததொரு நூலைப் படைத்துள்ள நூலாசிரியர் முனைவர் வே. இரா. மாதவன் அவர்கட்கு நிறுவனம் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவிக்கின்றது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை நிறுவ உதவிய அன்பர் திரு. மு. கோ. இராமன் உள்ளிட்ட பிறருக்கும் நன்றி உரித்து. சொற்பொழிவிற்கு வழி வகுத்து, நூலாக்கத்திற்குத் துணை நின்ற இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்; மெய்ப்புத் திருத்தற்கும், சொல்லகராதி தயாரித்தற்கும் துணை நின்ற ஆய்வு மாணாக்கர் திரு. ச. ஜெயசீலன், திரு. பு. பாலாஜி ஆகியோர்; சிறப்புற அச்சிட்டுத் தந்துள்ள பாவை பிரிண்டர்ஸ் அனைவருக்கும் எங்கள் நன்றி.

சென்னை-113 — ச. சிவகாமி

4.11.93

அறக்கட்டளைப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்



## ஆசிரியர் அறிமுகம்

## முனைவர் வே. இரா மாதவன் (6.4.1952)

**பதிப்பித்துள்ள நூல்கள்**

*1. கண் மருத்துவம் (1982 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த மருத்துவ நூலுக்கான முதற்பரிசு பெற்றது); 2. சித்திரக்கவிகள் (1983 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த மொழி இலக்கியம் பற்றிய ஆய்வு நூலுக்கான முதற் பரிசு பெற்றது.); 3. மீனாட்சியம்மன் திருப்புகழ்; 4. விராலி மலை வேலவர் குறவஞ்சி;* 5. Siddha Medical Manuscripts in Tamil; 6. Heritage of the Tamils-Siddha Medicine; 7. Heritage of the Tamils—Education and Vocation; *8. தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை (நான்கு தொகுதிகள்); 9. வைத்தீசுவரன் கோயில் பதிகங்கள்; 10. திருவேங்கடவன் திருப்பாமாலை; 11. வறுமைக்கு விடை கொடுத்த ஏழேழு வெண்பாமாலை; 12. வேலூர்ப் பதிகங்கள்; 13. நலம்தரும் நாராயண கவசம்; 14. திவ்விய தம்பதியர் புகழ்மாலை.*

*அச்சில்: அகத்தியர் வைத்திய காவியம்; வைத்திய சிந்தாமணி; குழந்தைகள் மகளிர் மருத்துவம்; தன்வந்தரி வைத்தியக் கும்மி; தமிழில் தல புராணங்கள் (டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அறக்கட்டளைச் சொற்பொழிவு 1992) வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம்—உரையும் பதிப்பும் ஆகியன உள.*

*அளித்துள்ள கட்டுரைகள்: 90 இற்கு மேற்பட்டவை*

*சிறப்பாய்வு*

1. *அரிய பழந்தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்தல்*
2. *அரிய சித்த மருத்துவச் சுவடிகளைப் பதிப்பித்தல்.*

## நூன்முகம்

தமிழ்ப்பணியே தம் வாழ்வுப் பணியாக மேற்கொண்டு அழியாப் புகழ் பெற்றவர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள். இவருக்கு முன்போ பின்போ இவ்வளவு நூல்களையும் இத்தகைய சிறப்புகளுடன் எவரும் பதிப்பித்து வெளியிடவில்லை என்னும் தனிப்பெரும் தகுதியையும் பெற்ற தமிழர் இவர். இக்காலத்தில் பலவகையான வசதிகளைப் பெற்றுள்ள பல்கலைக் கழகங்களே சாதிக்க முடியாத பணிகளை ஒரு நூற்றாண்டுக்கு முன்பே மிகக் குறைந்த வசதிகளுடன் தனிமனிதராக நின்று சாதித்த பெருமைக்குரியவர் இவர். இவருடைய பிறந்தநாள் அறக்கட்டளைச் சொற்பொழிவாக மலர்ந்ததே இந்நூல்.

1983ஆம் ஆண்டில் நிறுவனத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் பெயரில் அறக்கட்டளையை நிறுவியபின்னர், அவருடைய சங்க இலக்கியப் பதிப்புகள், காப்பியப் பதிப்புகள், இலக்கணப் பதிப்புகள், சிற்றிலக்கியப் பதிப்புகள் போன்ற தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்று அவை நூல்களாகவும் நிறுவனத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளன. அவருடைய வாழ்நாளில் செய்தளித்த தனிப்பெரும் பதிப்பான 'செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பு' ஒன்றினை மட்டும் அறிமுகம் செய்யுமுகமாக இச்சொற்பொழிவு நூல் அமைகின்றது.

முதற்பகுதியில், செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்புத் தோன்றிய வரலாறு விளக்கப் பெறுகிறது. தமிழில் புராண இலக்கிய வளர்ச்சி, தமிழில் மொழிபெயர்க்கப் பெற்ற வைணவ புராணங்கள், செவ்வைச் சூடுவார் வரலாறு, பாகவத புராண நூலமைப்பு, ஆரியப்பப் புலவர் என்பவர் இயற்றியதாக வெளிவந்த பாகவதம் பற்றிய செய்திகள் முதலில் விளக்கப் பெறுகின்றன. டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு இளமையிலேயே வைணவ நூல்களில் இருந்த ஈடுபாடும், பெரியவர்களின் தொடர்பும், அவர்தம் இறுதிக்காலத்தில் இப்பதிப்பைச் செய்ய மேற்கொண்ட முயற்சிகளும், வெவ்வேறு நிலைகளில் இந்நூல் வெளிவந்த வரலாறும் தொடர்ந்து கூறப்பெறுகின்றன.

இரண்டாம் பகுதியில், இப்பதிப்புக்காக அவர் எழுதியளித்துள்ள குறிப்புரைகள் ஆராயப்பெறுகின்றன. இக் குறிப்புரை

களே அவருடைய பேருழைப்பிற்குச் சான்றாக அமைவன. இப் பாகவதப் பதிப்புக்கு அவருடைய முகவுரை போன்றன கிடைக் காத நிலையில், அவருடைய பதிப்புப் பணிகளை விளக்கும் வகையில் அமைந்துள்ள குறிப்புரைப் பகுதிகள் அனைத்தும் தொகுத்து ஆராயப்பெறுகின்றன. சுவடிப் பதிப்புகளில் பதிப் பாசிரியர் செய்யத்தக்க பணிகளுக்கு எடுத்துக்காட்டாக இவை விளக்கப் பெறுகின்றன.

மூன்றாம் பகுதியில், செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பில் ஐயரவர்கள் குறித்துள்ள பாடவேறுபாடுகள் அனைத்தும் தொகுத்து ஆராயப் பெற்றுள்ளன. இவருக்குமுன் பிறர் பதிப் பித்த நூலிலுள்ள பாடங்கள், இவர் கொண்ட பாடங்கள், புதிய பாடங்கள் போன்றன பல்வேறு நிலைகளில் விளக்கப் பெறு கின்றன. இவர்தரும் பாடவேறுபாடுகள் அனைத்தும் தொகுக் கப்பெற்றுப் பின்னிணைப்பாகத் தரப்பெற்றுள்ளன. இனிவரும் பதிப்புகளுக்கும் மூலபாட ஆய்வுக்கும் இவை பெருந்துணை யாகும்.

நான்காம் பகுதியில், இப்பதிப்பிலுள்ள ஒப்புமைப் பகுதி களும் மேற்கோள் பகுதிகளும் தொகுத்து ஆராயப்பெறுகின்றன. பாடத் தெளிவுக்காகவும், பொருள் தெளிவிற்காகவும் இவர் இந்நூலின் ஐயாயிரம் பாடல்களையும் முன்னும் பின்னும் பலமுறை ஒப்புநோக்கிக் குறித்திருப்பதையும், இந்நூற் பகுதிகளைப் பிறதமிழ் நூல்களுடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ள மையையும், சான்று விளக்கங்களுக்காகத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை மேற்கோள் காட்டுவதுடன் வடமொழி முதனூலை ஆராய்ந்திருப்பதையும் இங்கு விரிவாக விளக்கக் காணலாம். இவ்வாறு இவர்தரும் ஒப்புமைப் பகுதிகள் அனைத்தும் நூல்கள் வரிசையில் தொகுக்கப்பெற்றுப் பின்னி ணைப்பாகத் தரப்பெற்றுள்ளன. ஒப்பியல் ஆய்வுக்கு இவை மிகவும் பயனுடையன.

ஐந்தாம் பகுதியில், பதிப்புச் சீர்மை பற்றிய சில எண்ணங் கள் விளக்கப் பெறுகின்றன. அவருடைய மறைவுக்குப் பின்னர் நிகழ்ந்த பதிப்புப் பணிகளைச் சுட்டி, இனிவரும் பதிப்புகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் சுருக்கமாக ஆராயப்பெறுகின்றது.

தமிழிலக்கிய உலகில் மிகப்பெரிய அளவில் சுவடிப்பதிப்பாக வெளிவந்த இப்பாகவதப் பதிப்பைப் பலரும் அறிய இயலாத நிலையில், இதை அறிமுகப்படுத்தும் நிலையிலேயே இந்நூல் அமைகின்றது. இவற்றை வெவ்வேறு நிலைகளில் விரித்துரைக் கலாம். அவை தனித்தனி ஆய்வுகளாக அமையும்.

## நன்றியுரை

''டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களின் செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பு'' என்ற பொருள் குறித்துச் சொற் பொழிவாற்றும் வாய்ப்பை நல்கிய இறையருளை நினைந்து போற்றுகிறேன்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் பெயரில் அறக்கட்டளை நிறுவக் காரண மாக இருந்தவரும், தமிழாய்வுப் பணிகளில் எனக்குப் பெரிதும் வழிகாட்டியாகத் திகழ்ந்தவருமான முன்னாள் இயக்குநர் பேராசிரியர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கும், அறக்கட்டளைக்கான பெருந்தொகையை அளித்துதவியவரும் ஐயரவர்களின் மாணாக்கர் வழிமுறையில் வந்தவரும் சுவடி யியலில் எனக்கு ஊக்கமூட்டி நெறிப்படுத்தியவருமான திரு. மு. கோ. இராமன் (கம்பன்) அவர்களுக்கும் முதற்கண் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் பிறந்தநாளில் நிறுவனத்தில் இச் சொற்பொழிவாற்ற எனக்கு வாய்ப்பளித்த நிறுவன இயக்குநர் பொறுப்பு வகிக்கும் டாக்டர் அன்னிதாமசு அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் டாக்டர் ச. சிவகாமி அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழாராய்ச்சிப் பணிகளில் எனக்கு அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் நல்கி இச் சொற்பொழிவினை நிகழ்த்த இசைவினை யும் வழங்கியுதவிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புமிகு டாக்டர் ஔவை து. நடராசன் அவர்களுக்கும், ஓலைச்சுவடித்துறைத் தலைவர் டாக்டர் த.கோ. பரமசிவம் அவர்களுக்கும் என் உளம் நிறைந்த நன்றி உரித்தாகும்.

இந்த ஆய்வுக்கான அச்சு நூல்களை அளித்தும் அரிய கருத்துரைகளை வழங்கியும் உடனிருந்து உதவிய சிரவையாதீனக் கவிஞர் புலவர் ப. வெ. நாகராஜன் அவர்களுக்கும் மற்றுமுள்ள அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் நன்றி உரித்து.

**வே. இரா. மாதவன்**

## உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பு | ... | 1 |
| உரையாசிரியர் நிலையில் டாக்டர் உ.வே.சா. | ... | 22 |
| பாகவதப் பதிப்பில் பாடவேறுபாடுகள் | ... | 46 |
| ஒப்புமையும் மேற்கோளும் | ... | 96 |
| பதிப்புச் சீர்மை | ... | 175 |
| துணை நூல்கள் | ... | 181 |
| சிறப்புச் சொல்லகராதி | ... | 183 |

## செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பு

தமிழின் பண்டைப் பெருமைகளையும் நாகரிகத்தையும் விளக்கும் பழந்தமிழ் நூல்களை மிகுதியான எண்ணிக்கையிலும், தரமான நிலையிலும் பதிப்பித்து வழங்கியவர் உ.வே. சாமிநாதையர். தமிழாராய்ச்சித் துறையில் இன்று பலரும் அடிப்படையாகக் கொள்கின்ற பல மூலநூல்களைத் திறம்பட அச்சில் பதிப்பித்துக் கொடுத்த பெருமை இவரையே சாரும். இவர்தம் வாழ்நாள் முழுமையும் சுவடி பார்த்து எழுதியும், குறிப்புரை வரைந்தும், பல செம்பதிப்புகளை உருவாக்கி அளித்துள்ளார். இவர் பதிப்பித்த நூல்களிலேயே அளவில் மிகப்பெரிய நூலாகிய 'செவ்வைச் சூடுவார் பாகவதம்' இவருடைய மறைவுக்குப் பின்னர் வெளிவந்ததாகும். சிறந்த வைணவப் புராணமாகிய இப்பாகவதப் பதிப்பை மிக நல்ல முறையில் வெளியிட வேண்டுமென இவர் மேற்கொண்ட முயற்சிகளும், உழைப்பும், இந்நூல் வெளிவந்ததும் நீண்டதொரு வரலாறாகவே அமைகின்றது.

### புராணங்கள்

மறை எனப்படும் வேதத்தில் மறைந்து கிடக்கும் உண்மைகளை விளக்க வந்தவையே இதிகாசங்களும் புராணங்களும். வேதங்களைப் படிக்கும்போது விளங்காத தத்துவங்களைப் பெரிதாக்கி விளக்கிக் காட்டுவது புராணம். காலத்தையும், நாட்டையும், தேவர்களையும், மனிதர்களையும், பலமடங்கு பெரிதாக்கிக் காட்டுவது புராணத்தின் இயல்பு. இதனால் இதை உண்மைக்குப் புறம்பானதென்றோ கட்டுக்கதையென்றோ புறக்கணிப்பதற்கில்லை. மேலும், புராணங்கள் இந்து மதத்தில் ஒருசாரார்க்கோ, இந்நாட்டின் ஒரு பகுதியினர்க்கோ மட்டும் உரித்தானவையல்ல. இவை பாரதநாட்டின் பொது உடைமை. இவை ஆன்ம வாழ்க்கையில் நிகழும் போராட்டங்களைக் கதையின் மூலமும் கவியின் மூலமும் சித்திரித்துக் காட்டுகின்றன. புராணம் (புரா அபி நவ:) பழையதினும் பழையதாயினும், தினந்தோறும் உதித்துப் புத்தொளிதரும் சூரியனைப்போல் என்றும் புதிது (நவே நவோ பவதி). நாம் புதிது புதிதாய்ப் படிக்கும் நூல்களில் பெரும்பகுதி இரண்டாந்தடவை படிக்கவும் தகுதியற்றவை. ஆனால், புராணங்களோ பல நூற்றாண்டுகளாக இந்நாடு முழுவதையும் வசப்

படுத்தி வந்துள்ளன. அன்றுபோல் இன்றும், இராமாயணத்தை யும் பாரதத்தையும் பாகவதத்தையும் கோடிக்கணக்கான மக்கள் கேட்டு இன்புறுகின்றனர். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நாள் தோறும் பாராயணம் செய்கின்றனர்.[1]

## மகாபுராணங்கள் பதினெட்டு

புராணங்கள் மூவகையின. அவை மகாபுராணம், உபபுரா ணம், அதிபுராணம் என்பன. இவற்றுள் மகாபுராணங்களே சிறப் புடையன. இவை வியாசரால் செய்யப்பெற்றன என்பர். புரா ணம் என்ற பொதுப்பெயரில் நாம் அறிய வருபவை மகாபுராணங் களே. இவை தொகையால் பதினெட்டு. இவற்றின் பெயர்களை வடமொழி நூல்களிலும், திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய தமிழ் நிகண்டுகளிலும் காணலாம்.

வடமொழியில் இயற்றப்பெற்ற மகாபுராணங்கள் பதினெட் டினுள் பத்து சிவபுராணங்கள். அவை; மச்சம், கூர்மம், வராகம், வாமனம், சிவமகாபுராணம், இலிங்கம், பவிடியம், காந்தம், மார்க்கண்டேயம், பிரமாண்டம் அல்லது வாயவியம் என்பன.

விஷ்ணுபுராணம் நான்கு: விஷ்ணுபுராணம், பாகவதம், காருடம், நாரதீயம் என்பன.

பிரமபுராணம் இரண்டு: பிரமம், பத்மம் என்பன.

மற்றவை, ஆக்கினேயம் எனும் அக்கினிபுராணம் ஒன்று, பிரமவைவர்த்தம் எனும் சூரியபுராணம் ஒன்று. இப்பதினெட் டின் மொத்தச் சுலோகங்களின் தொகை நான்கு இலட்சம் ஆகும்.

இப்பதினெண் புராணங்களுள் வாயுபுராணம் (பிரமாண்ட புராணம்), மார்க்கண்டேயம், விஷ்ணுபுராணம், மச்சபுராணம், பாகவதபுராணம், கூர்மபுராணம், சிவமகாபுராணம் ஆகிய ஏழும் காலத்தால் முற்பட்டவை என்பர்.

## பாகவதம்

பகவானுடைய வரலாற்றுக் கதைகளைச் சொல்லுவது பாக வதம். பகவான் என்றால் வைணவத்தில் பொதுவாகத் திரு மாலையும் சிறப்பாகக் கண்ணபிரானையும் குறிக்கும். வியாசர்

1. ஸ்ரீமத் பாகவத சாரம்—முதல்பாகம், முகவுரை, ப. 1.

செய்ததாக வழங்கும் வடமொழிப் பதினெண்புராணங்களில் திருமால் புகழ் கூறும் நான்கு புராணங்களுள் முதலாவது பாக வதம்.

பதினெண்புராணங்களுள் ஒன்றும், சைவபுராணங்கள் பத்தி னுள் ஒன்றுமான கூர்மபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்த அதிவீரராமபாண்டியர் சிறந்த சிவபக்தர். இவர் பதினெண் புராணங்களைக் கூறும்போது பாகவதத்தைப் 'பேர் உலகேத்து பாகவதம்' என்று சிறப்பித்துக் கூறுவது இவண் குறிப்பிடத்தக்க தாகும்.[1]

## தமிழில் பாகவதம்

வடமொழியிலுள்ள பாகவதப் பெருநூல்கள் ஏழு என்பர். அவை, 1. இதிகாச பாகவதம் 2. மகாபாகவதம் அல்லது புராண பாகவதம் 3. சம்மிதா பாகவதம் 4. உபசம்மிதா பாக வதம் 5. விஷ்ணுரகசிய பாகவதம் 6. விஷ்ணுயாமள பாகவதம் 7. கௌதம சம்மிதா பாகவதம் என்பன.[2]

இவற்றுள், முதல் இரண்டும் பெருநூல்களாய்த் தமிழில் செய்யப்பட்டுள்ளன. முதலாவதுள்ள இதிகாச பாகவதத்தைச் செவ்வைச் சூடுவாரும் (கி.பி. 1500-1525), இரண்டாவதுள்ள மகாபாகவதத்தை வரதராஜ ஐயங்கார் என்னும் நெல்லிநகர் அருளாளதாசரும் (கி.பி. 1543) தமிழில் செய்யுள் வடிவில் இயற்றியளித்துள்ளனர். பதினாறாம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற இவ்விரண்டு மட்டுமே தமிழிலே செய்யுள் வடிவிலுள்ள பாகவத நூல்களாகும். இவற்றுள், முன்னதாக எழுந்த செவ்வைச் சூடுவார் பாகவதம் 4970 செய்யுள்களையும், அதன் பின் எழுந்த அருளாளதாசர் பாகவதம் 9147 செய்யுள்களையும் கொண்ட பெருநூல்களாக விளங்குகின்றன.

---

1. "பிரமம்நற் பதுமம் வைணவம் சைவம்
பேர்உல கேத்துபா கவதம்
அருமறை தெளித்த பவுடிகம் நார
தீயம்மார்க் கண்டமாக் நேயம்
கருதரும் பொருள்சேர் பிரமகை வர்த்தம்
இலிங்கம்நல் வராகம்மெய்க் காந்தம்
மருவுவா மனம்சொல் கூர்மம்நீள் மச்சம்
காருடம் சிறந்தவா யவியம்"
(கூர்மபுராணம்—முதற்காண்டம்— இந்திரத்துய்மன் முத்தி பெற்ற அத்தியாயம்-8)

2. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 16ஆம் நூ. முதல் பாகம், ப. 322.

## செவ்வைச் சூடுவார் பாகவதம்

வடமொழியில் வியாசரால் இயற்றப்பெற்ற இதிகாச பாகவதம் 18,000 சுலோகங்களைக் கொண்டது. அதில் சுருதிகீதை முதலான நான்கு கீதைகளும், திருமால் அவதாரங்களில் நான்கு அவதாரங்களும் சொல்லப்பட்டுள்ளன. வேத வியாசர் இதைத் தம் பிள்ளையாகிய சுகருக்கு அருளினார் என்றும், சுகமுனிவர் சொல்ல பரீட்சித்து மன்னர் கேட்டார் என்றும் கூறுவர். இந்தப் பாகவதம் படித்தலால் பயன், ஞானம் விளையும் என்றும் கூறுவர். வடமொழியில் பன்னிரண்டு ஸ்கந்தமாக அமைந்துள்ள இந்தப் பாகவதத்தை முதனூலாகக் கொண்டு செவ்வைச்சூடுவார் தமிழில் இயற்றியளித்துள்ளார். இவருடைய பாகவதம், 'பாகவத புராணம்', 'இதிகாச பாகவதம்', 'விண்டு பாகவதம்' என்ற பெயர்களால் வழங்கப்பெறுகிறது. இதுவும் பன்னிரண்டு கந்தப் பாகுபாட்டைக் கொண்டதாகும்.

## செவ்வைச் சூடுவார்

பாண்டி நாட்டில் மதுரைக்கு வடகிழக்கே வைவை நதியின் வடகரையில் உள்ள வேம்பத்தூரில் பிறந்தவர் செவ்வைச் சூடுவார். இவ்வூர் பழைய காலத்தில் வேம்பற்றூரென வழங்கப் பெற்றதாகத் தெரிகிறது. சங்கப் புலவர்களுள் ஒருவரான வேம்பற்றூர்க் குமரனார் என்பவர் இவ்வூரினராகக் கருதப்படுகின்றார்.

வேம்பற்றூர்ப் புலவர்கள் பற்பல நூல்களை இயற்றித் தமிழன்னைக்கு அணிவித்து வந்துள்ளனர்.

"பாடுதுறை முதலிய பற்பல நூல்களை இயற்றிய **தத்துவராயரும்**, வரதுங்கராம பாண்டியருடைய ஆசிரியராகிய **ஈசான முனிவரும்**, ஆனந்தலகரி சௌந்தரியலகரி முதலிய நூல்கள் இயற்றிய **வீரைக்கவிராச பண்டிதரும்**, ஞானவாசிட்ட நூலாசிரியரான **ஆளவந்தான்** அல்லது **ஆளவந்தான் மாதவபட்டர்** என்பவரும், பகவத்கீதை இயற்றிய **ஸ்ரீபட்டரும்**, பராபரைமாலை பாடிய **அம்பிகாபதியும்**, நெல்லை வருக்கக் கோவை பாடிய **திருநெல்வேலிப் பெருமாளையரும்**, அழகர் கலம்பகம் இயற்றிய **கவிகுஞ்சரமையரும்**, அழகர் பிள்ளைத்தமிழ் இயற்றிய **சாமிகவி காளருத்திரரும்**, பிரபந்த தீபிகை இயற்றிய **முத்துவேங்கட சுப்பையரும்** இந்த வேம்பத்தூர்ச் சோழிய வகுப்பினரே"[1]

---

1. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், முகவுரை

ஐயாயிரம் பாடலுள்ள பாகவதம் இயற்றிய செவ்வைச் சூடுவாரின் காலம் கி.பி. 1500-1525 என்பர்.[1]

செவ்வைச் சூடுவாரே இப் பாகவதத்தை இயற்றினார் என்பதை ஒரு பழம்பாடல் தெளிவுறுத்தக் காணலாம்.

''திருமருவு பஞ்சலக் கணவேலை பொங்கிச்
செழிக்கும் இருநிதி கொழிக்கும்
தென்நிம்பை நகரமதில் வாழும் அந்தணரில்
சிறந்த செவ்வைச் சூடுவார்

சுருதிபுகழ் பாகவத பௌராணம் ஓதினர்,
துளங்கும் வாசிட்ட மதனைச்
சொல்லினர் ஆளவந்தார் மாதவ பட்டர்;
சொன்ன திருவிளை யாடலும்

....................புகழ்சவுந் தரியலகரி
பெருமைமிகு கவிராச பண்டிதர் புகன்றனர்;
ப்ரதாபமிகு திருநெல் வேலிப்
பெருமாளையன் சொனான் நெல்லையின் கோவைப்
பிரபந்த வகை பெருகவே''

என்னும் இப்பாடல், செவ்வைச் சூடுவாரின் பெயரைச் சுட்டி இவர் பாகவத பௌராணம் ஓதினர் என்று குறிப்பிடுகிறது.

## நூலமைப்பு

செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவத நூலின் முகப்பில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் தொடங்கி, அதன்பின் 155 அத்தியாயங்களாக மொத்தம் 4970 பாடல்கள் செம்மையாகவும் முழுமையாகவும் அமைந்துள்ளன.

கண்ணபிரானின் வரலாறுகள் நிகழ்ந்த இடங்கள் பலவாதலால் நாட்டுப்படலம், நகரப்படலம் போன்ற பகுதிகளை இந் நூலாசிரியர் அமைக்கவில்லை.

இக்காலத்தில் வழக்கிழந்து போன காப்பியத்துறை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம், கலிவிருத்தம் போன்ற பாவினங்கள் இந் நூலுள் பலவாறாகப் பயின்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

---

1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 16 நூ, ப. 328.

## நூற்பொருள்

பதினாறாம் நூற்றாண்டில் தமிழில் எழுந்த பெரும் புராணங்களில் காண்பது போன்று இந்நூலிலும் கால அளவு, உலகளவு, வருணாச்சிரமம் முதலான பொருள்களைப் பெருக்கிக் கூறக் காணலாம்.

முதல் கந்தம்—எட்டு அத்தியாயம் கொண்டது. இதில் மாயவன் அம்சாவதாரம் உரைத்தது என்ற முதல் அத்தியாயத்தில் இருபத்திரண்டு அவதாரங்கள் கூறப்பெறுகின்றன. கண்ணன் துவாரகை அடைதல்; தருமன் முதலானோர் வீடுபேறு; பரீட்சித்து ஆட்சி; சாபம் ஏற்றல் போன்ற பல பகுதிகள் இக்கந்தத்தில் விளங்கப் பெறுகின்றன.

இரண்டாம் கந்தத்தில் சுகர் தத்துவத் தோற்றம் சொல்லும் பகுதி இடம் பெறுகின்றது.

மூன்றாம் கந்தம்-ஒன்பது அத்தியாயங்களில் தத்துவங்களின் தோற்றம், இயல்பு முதலியன கூறப் பெறுகின்றன. விதுரனுக்கு உத்தவர் கண்ணன் சரிதம் கூறுதல்; மைத்திரேயர் விதுரனுக்குத் தத்துவம் உரைத்தல், பிரமன் தோற்றம், கால அளவு, சனகாதியர் தோற்றம், வராகவதாரம், தேவர் தோற்றம், கபிலர் பிறப்பு, கபிலர் தத்துவம் உரைத்தது, சுகமுனி தத்துவமுரைத்தது, விதுரற்குத் தத்துவமுரைத்தது போன்ற பகுதிகள் இதில் உள்ளன.

நான்காவது கந்தத்தில் சிவபிரான் சிறப்புக்களும் முருகன் அவதாரமும் மிக அழகாகச் சுவைபடக் கூறக் காணலாம்.

ஐந்தாம் கந்தத்தில் பிரியவிரதன் மரபு, பரதன் வரலாறு, நாவலந்தீவு, கங்கையில் பிதிர்க்கடன் செய்வதால் வரும் நற்பயன், கடல், சூரிய மண்டலம், மேலுலகு, கீழுலகு, நரக இயல்புகள் போன்றவற்றை விளக்கும் பகுதிகள் உள்ளன.

ஆறாவது கந்தத்தில் அசாமிளன், தக்கன், விச்சுவரூபன் வரலாறுகள், சித்திரகேது, மருத்துக்கள் ஆகியோர் வரலாறுகள் கூறப் பெறுகின்றன.

ஏழாம் கந்தத்தில் சிசுபாலன் வீடுபேறு, இரணியவதம் போன்றவை சிறப்பாக எடுத்துரைக்கப் பெறுகின்றன.

எட்டாம் கந்தம்-எட்டு அத்தியாயம் கொண்டது. கசேந்திரன், மனு, தேவாசுரர் போர், வாமனாவதாரம் மச்சாவதாரம், மோகினி ஆகிய வரலாறுகள் கூறப் பெறுகின்றன,

இப்பகுதியில் யமகம், திரிபு, அமைந்த பாடல்கள் மிகுதி. பல பாடல்கள் கம்பராமாயணப் பாடல்களை நினைவூட்டுவனவாக உள்ளன.

ஒன்பதாம் கந்தம்-பதினெட்டு அத்தியாயம் கொண்டது. இதில், சிவன், சையாதி, அம்பரீடன், இக்குவாகு, அரிச்சந்திரன், சகரன், பகீரதன், கன்மாட பாதன் ஆகியோர் பற்றியும், விரிவாக இராமாவதார வரலாறும் விளக்கப் பெறுகின்றன.

பாகவதத்திலேயே மிகவும் நீண்ட பகுதியாக அமைந்தது பத்தாவது கந்தம். இதில் ஐம்பத்துநான்கு அத்தியாயங்களில் மொத்தம் 1682 பாடல்கள் உள்ளன. கண்ணன் திருவவதாரம் முதல், இறுதிவரையில் கண்ணனுடைய லீலைகள் முழுவதும் சுவைபட விளக்கப் பெறுகின்றன.

பதினோராம் கந்தத்தில் யாதவன் சாம்பன், உலக்கை பெறுதல், வசுதேவருக்கு நாரதர் உலக நிலையாமையையும் கண்ணனின் தத்துவத்தையும் உணர்த்துதல் போன்ற பகுதிகள் உள்ளன. கண்ணன் போனபின் துவாரகையைக் கடல் கொண்ட செய்தியும் கூறப் பெறுகிறது.

பன்னிரண்டாம் கந்தமாகிய இறுதிப் பகுதியில், கலிதன்மம் உரைத்தல், கல்கி அவதாரம்.பிரளயம், பரீட்சித்து வீடு பெறுதல் சனமேசயன் சர்ப்ப வேள்வி செய்தல், வேதம் நான்கு என்ற பகுப்பு, மார்க்கண்டேயர் தவம் செய்து திருமாலை வேண்டுதல். சிவபிரான் தோன்றி, திருமாலும் தாமும் வேறு அல்ல என உரைத்தல் போன்ற பகுதிகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன.

## தனிச் சிறப்புகள்

பாகவத நூலாசிரியர் செவ்வைச்சூடுவார் தாம் கண்ணனிடம் கொண்ட சிறந்த பக்தியாலும், தமிழ்ப் புலமையாலும் இதைச் செய்தருளியுள்ளார். பொதுவாகக் காவியங்களில் காணப்பெறும் அலங்காரங்களிலோ, வருணனைகளிலோ இவர் விருப்பம் செலுத்தவில்லை. கதை சொல்லும் பாங்கிலும் இவர் அவதார முறை வைப்புக்கு அதிக இடமளிக்கவில்லை. திருமால் பக்தி ஒன்றையே கொண்டு, சமயப் பொது நோக்குடன் சொல்லும் திறனை நூல் முழுமையும் காணலாம்.

எனவே இந்நூல், காப்பிய அமைப்பினைக் கொள்ளாமலும் அதே சமயத்தில் வெறும் புராணமாக அமையாமலும், பரம்

பொருளாகிய கண்ணனையே தலைவனாகக் கொண்டு அவன் வரலாறு கூறும் ஓர் இதிகாசமாகவே விளங்கும் ஒரு பெரு நூலாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## இராசகோபாலப் பிள்ளை அச்சிட்ட பாகவதம்

கோமளபுரம் இராசகோபால பிள்ளை சென்னை மாகாணக் கல்லூரியில் தமிழ்ப் புலவராக இருந்தவர். இவர் மிகத் தீவிர வைணவர். இவரிடம் மயிலை சண்முகம் பிள்ளை போன்றவர் பாடங் கேட்டனர். இவர் திருவாய்மொழி *(1859)*, நளவெண்பா *(1879)*, நாலடியார் *(1903)* முதலியவற்றிற்கு உரையெழுதிப் பதிப்பித்துள்ளார்.

தென் திருப்பதி புராணம் *(1890)*, திருநீலகண்ட நாயனார் விலாசம் *(1875)*, வில்லிபுத்தூரார் பாரதம், தொல்காப்பியம் சேனாவரையம் *(1868)* முதலியனவும் இவரால் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

இவர் வில்லிபுத்தூரார் பாரதத்தைப் ''பெரியோர் வாக்கை அழியக் கூடாதென்று சிறிதும் அஞ்சாது சிவபரமாயிருந்த பாடல்கள் அநேகத்தைத் தள்ளியும் சில அடிகளை மாற்றியும், சில சொற்களைத் திரித்தும் மனம் போனவாறு பதிப்பித்தனர்'' என்று கடலூர்க் குமரகுரு சுவாமிகள் இயற்றி அச்சிற் பதிப்பித்த 'பரமோத்த ரசாபாச தருபணத்தில்' எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இவர் தமது தீவிர வைணவப்பற்றுக் காரணமாகத் தாம் அச்சிட்டுப் பதிப்பித்த கம்பராமாயணத்தில் பழைய பாடத்தை மாற்றித் தமது கருத்துக்கு ஏற்பப் புதிய பாடத்தைப் புகுத்தி அச்சிட்டுள்ளார் என்று தொழுவூர் வேலாயுத முதலியார், *1886* ஆம் ஆண்டில் அச்சிட்ட 'ஏரெழுபது திருக்கை வழக்கம்' நூல் முகவுரையில் சுட்டிக் காட்டிக் கண்டித்துள்ளார் என, இவருடைய பதிப்பில் காணும் குறைகளைச் சுட்டிக் காட்டுவர்.[1]

பெரும் வைணவ பண்டிதரான இராசகோபால பிள்ளை *1881* ஆம் ஆண்டில் இந்தப் பாகவதத்தை அச்சில் பதிப்பித்துள்ளார். இதில், முகவுரை, குறிப்புரை, அட்டவணைகள்

---

1. மா. சு. சம்பந்தன், அச்சும் பதிப்பும், தமிழர் பதிப்பகம், சென்னை பக். *264*.

ஏதுமின்றி வெறும் பாடல்கள் மட்டும் சீர் பிரிக்காமல் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதன் முகப்புப்பகுதி பின்வருமாறு அச்சிடப்பட்டுள்ளது.

**ஸ்ரீமத் பாகவத புராணம்**

புலவர் திலகராகிய

**ஆரியப்பப் புலவர்**

அருளிச் செய்தது

—

இது,

ம-ள-ள-ஸ்ரீ, தரங்கம்பாடி,

ந.வ.சுப்பராயலு நாயுடவர்கள்

வேண்டுகோளால்,

**சென்னை இராசதானி சருவகலாசாலைத் தமிழ்த் தலைமைப் புலவர்**

கோமளபுரம்

**இராசகோபால பிள்ளையவர்களால்**

கையெழுத்துப் பிரதிகள் ஒன்றற்கொன்று பாடபேதமா யிருத்தலைப் பல பிரதிகள் கொண்டாராய்ந்து வழூஉக்களைந்து

சென்ன பட்டணக்

கிரேவ்ஸ் கூக்ஸன் அண்டு கம்பெனியார் ஸ்காட்டிஷ்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இந்தப் பதிப்பை அந்நாளில் கண்டவர்கள், இந்த இதிகாச பாகவதம் ‘ஆரியப்பப்புலவர்’ என்பவரால் இயற்றப்பட்டதென்றே எண்ணி வந்தனர்.

காட்டாக, இந்த இதிகாச பாகவதத்தினின்றும் வேறுபட்டதான ‘மகாபாகவதத்தை’ (நெல்லி நகர் அருளாளதாசரென்னும் மதுரகவி ஸ்ரீ வரதராஜ ஐயங்கார் இயற்றியது) 1891 இல் அச்சில் பதிப்பித்து வெளியிட்ட பவாநி பால பாரதி முத்துசாமி ஐயர், ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை மற்றும் கா. ல. வெ. திருமலைகொண்ட நாயக்கர் ஆகியோர் தாம் எழுதிய முகவுரையில் முதலாவதாக இதைப்பற்றிக் கூறுவன இவண் நோக்கத்தகும்,

"இம்மகா பாகவத்தில் கண்ணன் சரிதங் கவின் பெறக் கூறப் பட்டிருக்கின்றது. இங்ஙனங் கண்ணன் சரிதங் கூறிய பாகவதங் கள் இதிகாசம், புராணம், சம்மிதை, உபசம்மிதை, விஷ்ணு ரகசியம், விஷ்ணு யாமளம், கௌதம சம்மிதை என ஏழு திறத் தின வென்ப. அவற்றுள், தமிழுலகுணர மொழி பெயர்க்கப்பட்டன இதிகாச பாகவதம், புராண பாகவதம் என்னும் இரண்டுமே யாம். அவற்றுள் சூர்ணிகைகள், விருத்தங்கள், பத்தியங்கள், வாக்கியங்கள், தண்டகங்கள் என்பவற்றானிறைந்த இரு நூறத்தியாயங்களையுடைய 12 கந்தங்களாக வியாச முனிவ ராற் செய்யப்பட்ட இதிகாச பாகவதம் சற்றேறக் குறைய ஐயா யிரம் செய்யுள்களால் மொழிபெயர்த் தியற்றப்பட்டுள்ளது. அறிஞர் புகழும் ஆரியப்பப் புலவராலியற்றப்பட்ட இது கோமள புரம் இராஜகோபால பிள்ளையவர்களால் சில காலத்தின்முன் பரிசோதித்து அச்சியற்றப்பட்டு வெளியுலாவுகின்றது. அதற்கு நெடுநாள் முன்முதற்கொண்டு இவ்விதிகாச பாகவதத்தின் படி எழுதப்பட்ட தமிழ்நடை அச்சுவாய்த் தோன்றித் தமிழ் நாடெங்கும் உலாவுகின்றது."[1] இவ்வாறு பலரும் இந்நூலாசிரி யரின் பெயர் பற்றித் தவறுதலாகவே எண்ணி வந்திருந்தனர்.

இராசகோபால பிள்ளை பதிப்பில் இந்தப் பாகவதத்தின் ஆசிரியர் பெயர் 'ஆரியப்பப் புலவர்' எனத் தவறுதலாக அச்சிடப் பட்டிருந்ததையும், அப்பதிப்பில் பிழையான பாடங்கள் பல இருந்ததையும் அக்காலத்திலேயே உ. வே. சா. கண்டறிந்தார். அதன் காரணமாகவே இந்தப் பாகவத நூலைத் தாம் பிழையறப் பதிப்பிக்க வேண்டுமெனவும் எண்ணினார். இதற்குத் துணையாக இவருடைய இளமை வாழ்க்கை நிகழ்ச்சிகளும் இருந்தமை அனை வரும் அறியத்தக்கதாம்.

## தமிழ் விதை விதைத்த சடகோபையங்கார்

உ. வே. சாமிநாதையர் முன்னோர் செய்த தவப்பயனே அவர் தமிழ்ப்பணியில் சிறக்கத் துணை நின்றது என்பது அவ ருடைய வாழ்க்கை வரலாற்றால் விளங்கும். இவருடைய முன்னோர்கள் அனைவரும் திருப்பதி வேங்கடேசப் பெருமா ளிடம் பெரும் பக்தி உடையவர்கள். இவர்கள் குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகளுக்கு வேங்கடராமன், வேங்கட சுப்பிர மணியன், ஸ்ரீநிவாசன் போன்ற திருப்பதிப் பெருமாளின் பெயர் களுள் ஒன்றையே வழி வழியாக வைத்து அழைத்தனர். இவ

1. ஸ்ரீ மகா பாகவதம், முகவுரை, ப. 1

ருடைய தந்தையார் பெயர் வேங்கட சுப்பிரமணிய ஐயர் என்ப தாகும். இளமையில் இவருக்கிட்ட பெயர் வேங்கடராமன் என்பதே.

இவருடைய தந்தையாராகிய வேங்கட சுப்பிரமணியரின் நண்பர் அரியலூர்ச் சடகோபையங்கார் ஆவார். இவர் சங்கீதத் திலும் தமிழிலும் வல்லவர். வீணை வாசிப்பதிலும் வல்லவர். இவரிடம் ஐயரவர்களின் சிறிய தகப்பனார் வீணை பயின்றார். ஐயரவர்களுக்கு இளமையில் இருந்த தமிழார்வத்தையும் இசை யார்வத்தையும் கண்ட தந்தையார் இவரைச் சடகோபையங் காரிடம் முதன்முதலாக மாணவனாகச் சேர்ப்பித்தார்.

''என் பிதா சடகோபையங்காரிடம் என்னை ஒப்பித்ததற்கு முக்கியமான காரணம் சங்கீதத்தில் எனக்கு நல்ல பழக்கம் உண் டாக வேண்டுமென்றும், அதற்கு உதவியாகத் தமிழறிவு பயன் படுமென்றும் எண்ணியதே. ஆனால் என் விஷயத்தில் அந்த முறை மாறி நின்றது. தமிழில் அதிகப் பழக்கமும் அதற்கு உபகாரப்படும் வகையில் சங்கீதமும் இருப்பதையே நான் விரும்பி னேன். **சடகோபையங்காரிடம், என்று நான் மாணாக்கனாகப் புகுந் தேனோ அன்றே தமிழ்த் தாயின் அருட்பரப்பிற் புகுந்தவனானேன்.** எனக்குத் தமிழில் சுவை உண்டாகும் வண்ணம் கற்பித்த முதற் குரு சடகோபையங்காரே. பொம்மை (பாவை)களைக் காட்டிக் குழந்தைகளைக் கவர்வது போலத் தமிழ்ச் செய்யுட்களின் நயத்தை எடுத்துக்காட்டி என் உள்ளத்துக்குள் அந்த இளம் பருவத்தில் தமிழ் விதையை விதைத்தவர் அவரே'' என்பார் ஐயரவர்கள்.[1]

சடகோபைங்காருக்குச் **செவ்வைச்சூடுவார் பாகவதத்திலும்** அத்வைத சாஸ்திரத்திலும் ,ஆராய்ச்சி அதிகம். கம்பராமாயணத் திலும் நல்ல பழக்கம் இருந்தது. அந்த நூற் செய்யுட்களை மணிக் கணக்காகப் பாடம் சொல்வார் என்பர் ஐயரவர்கள்.

''பல நூல்களை இயற்றிய சடகோபையங்கார் கல்வியின்ப மொன்றையே பெரிதாகக் கருதி வாழ்ந்தனர். அதனால் வறுமை நிலையில்தான் இருந்தார். அவருடைய் வாழ்க்கை நிலைக்கும் அவருடைய தமிழ் இன்பத்துக்கும் சம்பந்தமே இல்லை. அந்த உலகமே வேறு; அதில் அவர்தாம் சக்கரவர்த்தி. அங்கே பசி

---

1. என் சரித்திரம், ப. 71

யில்லை, வறுமையில்லை, இளைப்பில்லை. அந்த உலகத்திற்கு அவர் என்னையும் இழுத்துக் கொண்டார்'', என்பார் ஐயரவர்கள்.[1]

இவருடைய ஏழாம் வயதில் சடகோபையங்கார் ஊட்டிய தமிழமுதத்தின் சுவையைப் பருகியதன் விளைவாகவே இவருக்குப் பின்னாளில் தமிழ்ப்பற்று மிகுந்தது என்பர். செவ்வைச் சூடுவார் பாகவதப் பாடல்கள் பல அந்த இளவயதிலேயே இவருடைய உள்ளத்தைக் கவர்ந்து ஈர்த்துள்ளன. பின்பு இவர் தஞ்சை ஸ்ரீநிவாச ஐயங்கார், கார்குடி கஸ்தூரி ஐயங்கார் ஆகியோரிடம் இலக்கணப் பாடம் கேட்டுள்ளார். கஸ்தூரி ஐயங்கார் தம் கைப் பட இராமாயணம், பாரதம், பாகவதம் ஆகிய நூல்களை ஏடு களில் எழுதி வைத்திருந்ததைப் பார்த்ததாக இவர் குறிப்பிடுவார்.[2]

இவ்வாறு இளமையில் வைணவ ஆசிரியர்களுடைய தொடர்பும், அவர்களிடம் பயின்ற பாடல்களின் தாக்கத்தாலும் பாகவதம் போன்ற நூல்களில் அவருக்கு ஆர்வமும் பயிற்சியும் மிகுந்தன எனலாம்.

## பாகவதப் பதிப்பைத் தொடங்கிய வரலாறு

ஐயரவர்கள் தம் பத்தொன்பதாவது வயதிலேயே இராமயாணம், பாகவதம் இவற்றில் ஆழ்ந்த புலமை உடையவ ராக இருந்தார். இவருக்கு இளமை முதலே பாகவதத்தின் தொடர்பு இருந்ததை அவருடைய வரலாற்றினைக் கொண்டு அறிகிறோம்.

## கடன் சுமைக்காகக் கதை சொல்லல்

சாமிநாதையர் அவர்களுக்குப் பதின்மூன்று வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்பட்டது. அதன்பின் சுமார் ஆறு ஆண்டுகள் வரையில் அவர் படிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்தார். குடும்பச் செலவுகள் பற்றியோ பிறவற்றைப் பற்றியோ அவர் கவலைப்படவில்லை. ஆனால், இவருடைய திருமணத்திற் காக இவர் தந்தையார் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் குடும்பம் தத்தளிக்கும் நிலை ஏற்பட்ட பொழுது தான் இவருக்கும் தாம் ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது.

---

1. என் சரித்திரம், ப. 76.
2. மேற்படி ப. 105

## தெலுங்கு பாகவதம்

தந்தையாரின் அறிவுரையின்படி, செங்கணம் முதலிய இடங்களுக்குச் சென்று ஏதேனும் புராண விரிவுரை செய்தால் பணம் கிடைக்கும்; அதனைக் கொண்டு கடனைத் தீர்த்து விடலாம் என 1874 ஆம் ஆண்டில் பெற்றோருடன் செங்கணம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். பிறகு காரை என்னும் ஊரில் இருந்த கிருஷ்ணசாமி ரெட்டியார் என்பவரின் உதவியுடன் திருவிளையாடற்புராணம் சொற்பொழிவு செய்ய ஏற்பாடானது. அவ்வாறு அவர் செய்து வந்த காலத்தில், பகல் வேளைகளில் செங்கணம் விருத்தாசலரெட்டியாரிடம் வாங்கி வந்த பாகவதம், இராமாயணம், திருக்கோவையார் போன்ற நூல்களைப் படித்து வந்தார். அவற்றுள், ''ஏட்டுப் பிரதியாக இருந்த பாகவதத்தைப் படித்தபொழுது முதல் ஸ்கந்தமும் பத்தாம் ஸ்கந்தமும் என் மனத்தைக் கவர்ந்தன'' என்று இவரே குறிக்கக் காணலாம்.[1]

## ஐயம் நீக்கல்

அப்பொழுது பாகவதத்தில் இவருக்கு ஏற்பட்ட ஐயங்களை எல்லாம் நீக்கிக்கொள்ளத் தெலுங்கு பாகவதம் படித்திருந்த கிருஷ்ணசாமிரெட்டியார் உதவினார் என்பதனையும் இவர் நன்றியுடன் குறிப்பிடுவர்.[2]

## கிருஷ்ணசாமி ரெட்டியாரின் உதவி

புராண விரிவுரை எல்லாம் முடிந்ததும் ஐயரவர்கள் காரை நகரை விட்டுப் புறப்பட்டபொழுது, அவரிடம் கிருஷ்ணசாமி ரெட்டியார் ''நீங்கள் பாகவதத்தைப் பரிசோதித்து அச்சிட்டால் சகாயம் செய்கிறேன்'' என்று கூறினார். அதற்கு இவர் ''பார்க்கலாம்'' என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டுத் தம் ஆசிரியரிடம் போய்ச் சேர்ந்தார் என்பர்.

எனவே, இவருடைய பத்தொன்பதாவது வயதிலேயே இவருக்குப் பாகவதத்தைப் பதிப்பிக்கும் தகுதியும் வாய்ப்பும் வந்தன. ஆயினும் இவர் அவ்வளவு விரைவாக அதை ஏற்றுக்

---

1 என் சரித்திரம், பக். 361-367

2. மேற்படி ப. 368.

கொள்ளவில்லை. சுமார் 66 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பணியை ஏற்றுக் கொண்டார். அதுவரையில் இவர் தொடர்ந்து இப் பணியைச் செய்து வந்துள்ளார்.

## சிந்தாமணிப் பதிப்பின்போது

1887 ஆம் ஆண்டில் சீவக சிந்தாமணியின் முதல் பதிப்பு அச்சாகிக் கொண்டிருக்கும் நிலையில் ஐயரவர்கள் பல அன்பர் களையும் நேரில் சென்று பார்த்து வந்தார். ஒருநாள் கோமளீசு வரன் பேட்டை இராசகோபால பிள்ளையைச் சென்று பார்த் தார். இராசகோபாலபிள்ளை பாகவதம் முழுவதையும் அப் பொழுது அச்சிட்டு வெளியிட்டிருந்தார். அதிற் சில பகுதிகள் பி.ஏ., தேர்வுக்கும் பாடமாக இருந்தன. அந்த அச்சு நூலை ஐயரவர்கள் பலமுறையும் படித்த அளவில் அதில் பிழைகள் பல மலிந்திருந்ததை அறிந்தார். அதை இராசகோபாலபிள்ளை அவர்களிடமே நேரில் கேட்டார். அதை அவரே பின்வருமாறு விளக்கக் காணலாம்.

''மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் நான் படிக்க வருவதற்கு முன்பிருந்தே பாகவதத்தில் எனக்குப் பழக்கம் இருந்தது. பாகவத ஏட்டுச் சுவடிகள் பலவற்றை நான் பார்த் திருக்கிறேன். இராசகோபாலபிள்ளையின் பதிப்பில் (1881) நூலாசிரியரின் பெயர் ''ஆரியப்பப் புலவர்'' என்று இருந்தது. ''சிந்தகத்துக் கீழமர்ந்த'' என்ற சடகோபர் வணக்கச் செய்யு ளொன்றும் இருந்தது. இவ்விரண்டையும் ஏட்டுப் பிரதிகளில் நான் கண்டதில்லை. அதனால் இராசகோபாலபிள்ளையிடம், ''நான் பார்த்த பிரதிகளிலெல்லாம் ஆசிரியர் பெயரே காணப் படவில்லை. இந்தச் செய்யுளும் இல்லையே. இவற்றை நீங்கள் எங்கே கண்டுபிடித்தீர்கள்?'' என்று கேட்டேன். அவர், ''அந்த நூலை நான் பதிப்பிக்கவில்லை. சில பாகம் மாத்திரம் பார்த்த துண்டு. என் பெயரைப் போட்டு யாரோ அச்சிட்டு விட்டார் கள். ஆதலால் இந்த விஷயத்துக்கு நான் பொறுப்பாளியல்ல'' என்று சொல்லவே நான் வியந்தேன். பிற்காலத்தில் பாகவதத் தின் ஆசிரியர் வேம்பத்தூர்ப் புலவர்களுள் ஒருவரான செவ்வைச் சூடுவார் என்பதும், 'சிந்தகத்து' என்னும் முதலையுடைய செய்யுள் அச்சிட்டவர்களால் சேர்க்கப்பட்டதென்பதும் எனக் குத் தெரியவந்தன'', என்பர் ஐயரவர்கள்.[1]

---

1. என் சரித்திரம், பக். 605-606

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்த பதிப்புகளை ஐயரவர்கள் எவ்வளவு பொறுப்போடு ஆழ்ந்து ஆராய்ந்து தெளிந்து தம்முடைய பதிப்புகளைச் செய்தார்கள் என்பதற்கும் இந்நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.

## ஆரியப்பப் புலவர்

தமிழ் இலக்கிய வரலாற்றில் ''ஆரியப்பப்புலவர்'' என்பவர் ஒருவர் இருந்ததே இல்லை. அப்படியிருக்க 'பாகவதத்தை ஆரியப்பப்புலவர் எவ்வாறு இயற்றினார்' என்பதே ஐயரவர்களின் ஐயம். அந்நூலைப் பதிப்பித்த இராசகோபாலபிள்ளை, அதைத் தாம் பதிப்பிக்கவேயில்லை என்று கூறி அப்பொழுது தப்பித்துக் கொண்டார். ஆயின், இப்பிழையை அவர் செய்ததற்குக் காரணம் உண்டு என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

## அனதாரியப்பப் புலவர்

மதுரைச் சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடல்களை விரித்துக் கூறுகின்ற மதுரைத் தலபுராணங்கள் மூன்று. அவை, திருவாலவாயுடையார் திருவிளையாடல் (13ஆம் நூ.), திருவிளையாடற்புராணம் (17ஆம் நூ.), சுந்தரபாண்டியம் என்பன.

முதலிரண்டு புராணங்களும் பலமுறை அச்சிடப்பட்டுள்ளன. இவற்றிற்கான பல ஏட்டுப் பிரதிகளும் உள்ளன. ஆயின், மூன்றாவதான சுந்தரபாண்டியம் நூலுக்கு மட்டும் ஒரே ஒரு ஏட்டுப்பிரதி, அதுவும் குறைவுடைய நிலையில் ரா. ராகவையங்கார் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்கு அளித்திருந்தார். அது 1955 ஆம் ஆண்டு வரையில் அச்சிடப்பெறவில்லை.

இச் சுந்தரபாண்டியம் நூலை இயற்றியவர் அனதாரியப்பப் புலவர் என்ற பெரும்பண்டிதர். இவர் இயற்றிய நூலில் 2015 பாடல்களே கிடைத்துள்ளன. இவருடைய வரலாறும் பெருமையும், தொண்டைமண்டல சதகம், சோழமண்டல சதகம், சில தனிப்பாடல்கள் ஆகியவற்றாலும் சில சாசனச் செய்திகளாலும் அறிய வருகின்றன.

இவர் தொண்டை மண்டலத்துச் செங்காட்டுப் பகுதியில் சேயாற்றின் சங்கமத்துக்கு அருகிலுள்ள வாயற்பதி என்ற வயலூரில் வேளாள மரபில் பிறந்தவர். இவர் இளமையில்

கல்விப்பயிற்சி வேண்டி வாயலை விட்டுச் சோழ நாட்டிற்கு வந்தவர். திருவாரூருக்கு அருகிலுள்ள கன்றாப்பூர் சிங்கராயன் என்னும் வள்ளலிடம் இருந்து தம் புலமையையும் புகழையும் நிலை நாட்டியவர். இவரைப்பற்றி அக்காலத்தில் எழுந்ததே பின்வரும் பாடல்.

கம்பனென்றும் தாதனென்றும் காளிஒட்டக் கூத்தனென்றும்
கும்பமுனி யென்றும்பேர் கொள்வரோ-அம்புவியில்
மன்னா வலர்புகழும் வாயல்அன தாரியப்பன்
அந்நாளி லேயிருந்தக் கால்.[1]

என்பதாகும்.

## பிழையான பாடம்

இதே பாடல் பிற்காலத்தில் சில பாட வேறுபாடுகளுடன் சுவடிகளில் எழுதப்பட்டு வ ந் த து. முன்பு குறிப்பிட்ட இராசகோபாலபிள்ளை பதிப்பித்த பாகவதப் பதிப்பின் இறுதி யில் 'அபியுக்தரொருவர் செய்த நேரிசை வெண்பா' என்னும் தலைப்பில் இப்பாடல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

கம்பனென்றும் கும்பனென்றும் காளிஒட்டக் கூத்தனென்றும்
கும்பமுனி என்றும்பேர் கொள்வரோ-அம்புவியில்
மன்னா வலர்புடைசூழ் வாழ்குடந்தை யாரியப்பன்
அந்நாளி லேயிருந்தக் கால்.[2]

இதனுள் கம்பனென்றும் கும்பனென்றும் காளி ஒட்டக்கூத்த னென்றும் எனப் பாட வேறுபாடுகள் உள்ளன. (தாதன்-வாணியன் தாதன் என்ற புலவர்; கும்பன்-அகத்தியன்; காளி-நம்பி காளி என்ற புலவர். காளி என்றும் ஒட்டக்கூத்தனென்றும் என்று உம்மைத் தொகையாக அமையும்.)

மேற்கண்ட பாடலில் மூன்றாம் அடியில் உள்ள 'மன்னாவலர் புடைசூழ் வாழ்குடந்தை ஆரியப்பன்' என்னும் பிழையான பாடமே, பாகவத நூலின் ஆசிரியர் ஆரியப்பன் எனக் கொள்

1. தமிழ் இலக்கிய வரலாறு, 16ஆம் நூ, முதல்பாகம், ப. 306.
2. ஸ்ரீமத் பாகவதபுராணம், [இராசகோபால பிள்ளை பதிப்பு, ப. 594.

வதற்கு இடமாயிற்று. இப்பாடம் பிழையானது என அறியாத இராசகோபாலபிள்ளை இதைப் பதிப்பித்ததும் அல்லாமல் நூலாசிரியர் ஆரியப்பப்புலவர் என்றும் குறிப்பிட்டு விட்டார். பின்னால், ஐயரவர்கள் ஐயம் எழுப்பிய பின்பும் அவருக்கு இது விளங்காததால், இந்நூலையே தாம் பதிப்பிக்கவில்லை என்று கூறும் நிலைக்கு ஆளாகி விட்டார்.

'மன்னா வலர்புகழும் வாயல்அன தாரியப்பன்' என்பது,

'மன்னா வலர்புடைசூழ் வாழ்குடந்தை ஆரியப்பன்' என்று சுவடியில் எழுதப் பெற்றிருந்ததன் காரணமாக இக் குழப்பம் ஏற்பட்டது. இது, பிற்காலத்தில்தான் தெளிவாயிற்று.

பிற்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தார் உருவாக்கிய தமிழ்ப் பேரகராதியில் 'செவ்வைச் சூடுவார்' என்ற பெயரை விளக்கிய விடத்து, ''ஆரியப்பப் புலவரால் இயற்றப் பட்டதாகத் தவறி வழங்கும் தமிழ்ப் பாகவத புராணம் பாடிய வரும், இராமநாதபுரம் ஜில்லா வேம்பத்தூரில் வாழ்ந்தவருமான புலவர் (A native of Vempattur in Ramnad District, author of the Tamil Bakavatam, worngly ascribed to a fictitious poet Ariyappap pulavar.)'' என அச்சிட்டுள்ளனர். இந்த அளவுக்கு இப் பெருநூலின் ஆசிரியர் பெயர் பல காலமாக மறைந்திருந்தது வியப்புக்குரிய செய்தியாகும்.

## மாதவ பண்டிதர்

ஐயரவர்கள் பாகவதப் பதிப்பினை மேற்கொள்ளும்பொழுது சில ஏடுகளில் நூலாசிரியரின் பெயர் கிடைத்துள்ளது.

''கதிக்குமறு பிறப்பொழித்துக் கதிகொடுக்கும் பாகவத
கதையை முன்னம்
மதிக்குமுயர் வடமொழியாற் புனைந்தருளவ் வியாதமுனி
வரனே மீள
உதிக்கும்நிம்பை மாதவப் பண்டிதச் செவ்வைச் சூடியென
உலகு போற்ற
விதிக்குமறை யவர்க்குலத்திற் றோன்றியிருந் தமிழாலும்
விளம்பி னானே''[1]

என்னும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பாகவத ஏட்டுச் சுவடி களில் காணப்படும் சிறப்புப் பாயிரச் செய்யுளால் இந்நூலின்

1. செவ்வைச் சூடுவார் பாகவதம், முதல் பாகம், முகவுரை, ப. vi

ஆசிரியர் செவ்வைச் சூடுவார் என்பது இவருக்குத் தெரிய வந்தது.

செவ்வைச் சூடுவாருக்கு மாதவ பண்டிதர் என்றும் மற்றொரு பெயர் உண்டு என்பதும் இப்பாடலால் விளங்கும்.

வடமொழியில் பாகவதம் சொன்ன வியாசரே மீண்டும் செவ்வைச் சூடுவாரெனப் பிறந்து தமிழால் பாகவதம் செய்தார் என்று இப்பாடல் இவரைப் புகழ்ந்துரைக்கக் காணலாம்.

இவ்வாறு, மிகப் பெரிய நூலான பாகவதம் போன்றவற்றை எழுதிய தமிழ்ப்புலவர்களைப் பற்றிப் பெயரளவில் அறிவதுகூட அந்நாளில் எவ்வளவு கடினமானது என்பது இதனால் விளங்கும். பின்னாளில் நூலுக்கு எழுந்த சில சிறப்புப் பாயிரங்களாலேயே அந்நூலின் ஆசிரியரின் பெயரை அறிய வேண்டிய சூழ்நிலைகள் இருந்துள்ளன என்பது நாம் நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

## பதிப்பு நிலைகள்

ஐயரவர்களுக்கு இளமை முதலே பாகவதப் பதிப்பில் மிகுந்த ஈடுபாடு உண்டு. ஆயினும் இடையில் பல்வேறு நூல்களை வெளிக் கொணர வேண்டியிருந்ததால் அவர் பாகவதப் பதிப்பில் முழுமையாக ஈடுபடவில்லை. மேலும், ஐயாயிரம் பாடல்கள் கொண்ட ஒரு பெருநூலை அச்சில் பதிப்பிக்க அந்நாளில் எவரும் முன்வராததும் இதற்குப் பெருங்காரணமாகும்.

1941 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இப் பாகவதப் பதிப்பிற்கான முயற்சி தொடங்கப்பெற்றது. அப்போது கோயமுத்தூரிலிருந்த இராமலிங்க செட்டியார் என்பவர், தமிழ் மொழியின் ஆக்கத்தில் பெருவிருப்புடையவர். அவ்வாறே ஐயரவர்களிடமும் பேரன்பு சொண்டிருந்தார். இவ்விருவரும் ஒருநாள் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது தமிழ்நூல்களை அச்சிடுவது பற்றிப் பேசி வந்தனர். அப்பொழுது, இராமலிங்க செட்டியார், ‘திருமலை—திருப்பதி தேவத்தானத்தாரைக் கொண்டு நல்ல தமிழ் நூல்களை அச்சிட ஏற்பாடு செய்யலாம். தங்களிடம் வைணவத் தொடர்பான நூல் ஏதேனும் பதிப்பிக்கக் கூடிய நிலையில் இருந்தால் அங்கே அச்சிடலாம்’ என்று கூறினார். உடனே மிகவும் மனம் மகிழ்ந்த ஐயரவர்கள், தாம் முன்பே எண்ணியிருந்த ஒரு சிறந்த நூலைப் பற்றி அவரிடம் பின்வருமாறு எடுத்துரைத்தார். ‘‘தங்களுடைய அன்புடைமையை மிகவும் பாராட்டுகிறேன். செவ்வைச் சூடுவாரென்னும்

வித்துவான் செய்யுள் நடையில் இயற்றிய பாகவதம் ஒன்று இருக்கிறது. **நல்ல வாக்கு.** அவர் **சங்கப்புலவரைப்** போன்றவர். இப்போது நல்ல பதிப்பாக இல்லை. ஏறக்குறைய 5,000 செய்யுட்களை உடையது. சிந்தாமணியைக் காட்டிலும் பெரியது. கடிதப் பிரதி என்னிடமுள்ளது. பல ஏட்டுச் சுவடிகளோடு ஒப்பிட்டுச் சோதித்து வைத்திருக்கிறேன். குறிப்புரை முதலியவற்றோடு சேர்த்துப் பதிப்பித்தால் படிப்பவர்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். இன்று சனிக்கிழமை. வேங்கடாசலபதி எங்கள் குல தெய்வம். நல்ல குறிப்பாக இருக்கிறது'' என்று மகிழ்ச்சியோடு கூறினார்.

தாம் முன்னரே செய்து வைத்திருந்த ஒரு பெரிய பதிப்பு முயற்சிக்கு இப்போது இறையருளே துணை வந்தது போன்ற மகிழ்ச்சி ஐயரவர்களுக்கு அன்று ஏற்பட்டது. அன்றே திருமலை-திருப்பதி தேவத்தானத்திற்கு இது குறித்து ஒரு கடிதம் எழுதியனுப்பி வைத்தார். தேவத்தானத்தாரும் ஒப்புதல் தெரிவித்துக் கடிதம் அனுப்பினார்கள்.

அன்றுமுதல் ஐயரவர்கள் தாம் முன்பே எழுதி வைத்திருந்த பாகவதச் சுவடிப் பதிப்புக்கான குறிப்புரை முதலியனவற்றை எழுதிச் சேர்க்கத் தொடங்கினார். சில மாதங்களில் இந்நூலுக்கான பதிப்புப்பணி முழுமையும் எழுதி முடித்து வைத்தார்.

### அச்சு வேலைகள் தொடக்கம்

*1941* நவம்பர் மாதம் பாகவத நூலின் முதல் இரண்டு ஸ்கந்தங்களின் மூலமும் குறிப்புரை முதலியனவும் சென்னையிலிருந்த திருமலை—திருப்பதி தேவத்தான அச்சுக்கூடத்தாருக்குக் கையெழுத்துப் பிரதியாக அச்சுக்கு அனுப்பப் பெற்றன. அச்சு வேலைகளும் தொடர்ச்சியாக நடைபெற்றன.

### உலகப் போர்

*1942* ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகப்போர் ஏற்பட்டதன் காரணமாக அச்சுக்கூடம் சென்னையிலிருந்து திருப்பதிக்கு மாற்றப்பட்டது. அதுமுதல் அச்சுப் பணிகள் அங்கேயே நடைபெற்றன.

### ஐயரவர்கள் மறைவு

*1942* ஆம் ஆண்டு ஏப்பிரல் மாத இறுதியில் ஐயரவர்கள் காலமாகும் வரையில் இந்நூலின் 600 பாடல்கள் மட்டும் குறிப்

புரை முதலியவற்றுடன் அச்சாயின. அதனால் அவர் நூல் முழுமையையும் அச்சில் காண இயலவில்லை.

## ஐயரவர்களுக்குப்பின்

ஐயரவர்கள் காலமான பின்பு அவருடைய புதல்வர் கலியாணசுந்தரம் தொடர்ந்து அச்சு வேலையைக் கவனித்து நடத்தி வந்தார்.

நூலின் **1943** பாடல்கள் வரையில் அச்சானது. இது நிகழ்ந்தது **1943** ஆம் ஆண்டில். அதன்பின் **1944** ஆம் ஆண்டில் அச்சடிக்கும் காகிதம் கிடைப்பது அரிதாயிற்று. எனவே அச்சக வேலைகள் அப்படியே நின்றுவிட்டன.

இவ்வாறு மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அச்சுப் பணிகள் தடைபட்டன. **1948** ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அச்சடிக்கும் காகிதம் கிடைக்கத் தொடங்கியதும் மீண்டும் அச்சு வேலை தொடங்கப் பெற்றது.

## முதல்பாகம் வெளிவந்தது

சுமார் எட்டு ஆண்டுகளாக இந்த நூல் அச்சிடும் பணி நடைபெற்று வந்ததால் பல இடையூறுகள் ஏற்பட்டன. நூல் முழுமையும் அச்சிட்டு முடிப்பதற்குள் வேறு தடைகள் ஏற்படுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. எனவே, தேவத்தானத்தார் இந்நூலின் முதல் ஒன்பது ஸ்கந்தங்களை அச்சிட்டு, முதல் பாகமாக முதலில் வெளியிட்டு விடுவது என்று முடிவு செய்தனர். அதன்படி ஐயரவர்களின் புதல்வர் கலியாணசுந்தரம் மேற்பார்வையில் முதல்பாகம் அச்சிடப்பட்டு, திருமலை—திருப்பதி தேவத்தான வெளியீடாக **1949** ஆம் ஆண்டு தைத்திங்கள் பொங்கல் நன்னாளில் வழங்கப் பெற்றது.

## இரண்டாம் பாகம் வெளிவந்தது

ஐயரவர்கள் பதிப்பித்த பாகவதப் பதிப்பின் முதல்பாகம் வெளிவந்ததைக் கண்டு மகிழ்ச்சியுற்ற கலியாணசுந்தரம் இரண்டாம் பாகம் அச்சாகி நூல் முற்றுப்பெறுவதைக் காணும் முன்பே இயற்கை எய்திவிட்டனர். எனவே, அவரும் இந்நூலை அச்சில் முழுமையாகப் பார்க்க இயலவில்லை.

சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசியராகப் பணியாற்றிய வரும், ஐயரவர்களுக்குப் பாகவதப் பதிப்பில் துணை

நின்றவருமாகிய வித்துவான் வி.மு. சுப்பிரமணிய ஐயர் இந் நூலின் இரண்டாம் பாகத்தினை அச்சிடும் பணியை ஏற்று நடத்தி 10-5-1953 இல் நிறைவேற்றினார். திருமலை—திருப்பதி தேவத்தான வெளியீடாகிய இந்த இரண்டாம் பாகம் 1953ஆம் ஆண்டு ஆனி மாதம் வெளிவந்தது.

ஐயரவர்கள் தம் முதுமையின் காரணமாக இதன் அச்சுப் பணியை முழுமையாக நிறைவேற்ற இயலவில்லை. ஆயினும் அவர்வழி வந்தோர் மூலமாக இப்பணி நிறைவு செய்யப்பெற்றது. அதற்கு உறுதுணையாகப் பொருட்செலவு செய்த திருமலை—திருப்பதி தேவத்தானத்திற்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

# உரையாசிரியர் நிலையில் டாக்டர் உ. வே. சா.

தமிழில் தோன்றிய இலக்கியம், இலக்கணம், சமய நூல்கள் பலவும் மக்களினம் இன்புற்று வாழ வழிகாட்டும் சீரிய நோக்குடன் தோன்றியவையே. இத்தகைய நூல்கள் தோன்றிய காலத்தில் இவை எல்லோருக்கும் விளங்கும் நிலையில் இருந்தன. உரையும் விளக்கமும் இல்லாத மூல நூல்களே அனைவரும் கற்று மகிழும் தன்மையுடன் விளங்கின. 'கற்றலின் கேட்டலே நன்று' என்பது அக்காலக் கொள்கை. 'கற்றிலன் ஆயினும் கேட்க' என்பார் வள்ளுவர். உரையில்லாத மூலநூற் கல்வியையே அக்காலத்தில் போற்றிவந்தனர். மேலும், அக்காலத்திய எழுது கருவிகளை நோக்கினும், மிகுதியாக எழுதுவதைத் தவிர்த்துக் கேட்பதை மிகுதியாகக் கொண்டனர் எனத் தெரிகிறது. ஓலைச்சுவடிகளில் ஒரு நூலை முழுவதுமாக எழுதிப் படிப்பது என்பது அரிய செயல். எனவே, ஒருவர் எழுதிய ஒரு சுவடியை ஒருவர் படிக்க மற்றவர்கள் கேட்டல் என்பது பழக்கமாக இருந்தது. நூல்களுக்கு உரை எழுதும் நிலையில் சுவடிப் பெருக்கம் மிகுதியாகும் எனக் கருதியும்,காலமும் உழைப்பும் மிகும் எனக் கருதியும் உரைகளை எழுதும் பழக்கம் ஏற்படவில்லை. பல உரைகளை ஆசிரியர்தம் வாயால் கூறியே விளக்கினர்.

அக்காலத்தில் பழைய நூல்களைக் கற்றவர் அவற்றை வழி வழியாகப் பிறருக்கு எடுத்துரைத்தனர். வழிவழியாகப் பாடம் சொல்லச் சொல்ல நூல் விளக்கம் பெருகியது. சமயப் பெரியோர்கள் பக்தி இலக்கியங்களான இராமாயணம், பாகவதம் போன்றவற்றிலுள்ள பாடல்களைப் பொது மக்களிடம் விரித்துக் கூறி நிகழ்த்திய சொற்பொழிவுகளால் அப்பாடல்கள் பலருக்கும் விளக்கமாயின. இவ்வாறு நூல்கள் பலவற்றிற்கு எவரும் உரை எழுதாமல், மூலநூல்கள் மட்டும் சுவடிகளில் எழுதிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. வாய்மொழியாகத் தோன்றிய உரை விளக்கங்கள் முதலில் வினாவிடை முறையில் அமைந்தன. பின்பு இவை குறிப்புரைகளாக மலர்ந்தன என்பர்.

"வழிவழியாக நூல்களுக்கு உரை கேட்டுப் பழகியவர்களும் தொடக்கத்தில் விரிவான உரையோ விளக்கமோ எழுதவில்லை

முதன் முதலில் அருஞ்சொற்களுக்குப் பொருளும், சொற்களைக் கொண்டு கூட்டி முடிக்கும் வகையும், சில வரலாற்றுக் குறிப்பும் மிகச் சுருக்கமாய் எழுதி வைத்தனர். சிலப்பதிகாரத்திற்கு முதலில் அரும்பத உரை தோன்றியது. ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து போன்ற பழந்தமிழ் நூல்களுக்கு முற்காலத்தில் தோன்றிய பழைய உரைகள் மிகச் சுருக்கமாக—குறிப்புரையாக உள்ளன. புறநானூற்றின் பழைய உரை பொழிப்புரையாக உள்ளது. பரிபாடலுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை சுருக்கமாகவே உள்ளது. அகநானூற்றிற்குப் பழைய உரை (90 பாடல்களுக்கு மட்டும்) குறிப்பு உரையாகவே உள்ளது.

குறிப்புரை எழுதியவர்களின் ஊர்பேர் தெரியவில்லை. அவர்களைப் பற்றிய வரலாறு எதுவும் தெரியவில்லை. குறிப்புரைக்குத் தந்த முதன்மை, அவற்றை இயற்றியவர் பெயருக்கும் வரலாற்றுக்கும் தரவில்லை. புகழை விரும்பாத—பெயரையும் துறந்த பெரியவர்கள் அவர்கள்!

காலம் செல்லச் செல்லக் கருத்துக்கள் வளர்ந்தன. குறிப்புரையுடன் முன்னோர் சொல்லி வந்த விளக்கம், மேற்கோள் ஆகியவை விரிவடைந்தன. அவற்றையும் ஏட்டில் எழுதும் நோக்கம் ஏற்பட்டது. விரிவுரையும் விளக்க உரையும் தோன்றின. எடுத்துக்காட்டும் மேற்கோள் விளக்கமும் பெருகின. இவற்றைத் திறம்படக் கூறுவோர் இரண்டொருவரே இருந்தனர். "அவர்களே அவற்றை ஏட்டில் எழுதி வைத்தனர்" என இவ்வாறு உரைகள் பெற்ற வளர்ச்சி நிலைகளை விளக்குவர் ஆய்வாளர்.[1] எனவே, மூல நூல்களுக்கு முதலில் குறிப்புரைகளே தோன்றுவது மரபாயிற்று என்பது தெளிவாகும். இதனடிப்படையில் உ.வே.சா. தாம் பதிப்பித்த மூலநூல்களுக்கு முதலில் குறிப்புரைகள் வரையமுற்பட்டார் எனலாம்.

தமிழில் பக்தி நூல்களுக்கு உரை எழுதுதல் கூடாது என்ற கொள்கை நீண்ட காலமாகவே இருந்து வந்துள்ளது. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருமுறைகள், பாகவதம் போன்ற நூல்களுக்குப் பழங்காலத்தில் உரை எழுதாமைக்கு இதுவே காரணமாகும். சமயப் பெரியோர்களே இவ்வாறு உரை எழுதுவதைத் தவிர்த்துள்ளனர். பின்னாளில் மிகச் சிலரே இத்தகைய நூல்களுக்கு உரை எழுதியளித்துள்ளனர்.

---

1. மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், பக். 11, 12,

## உ.வே.சா. குறிப்புரைகள்

தமிழகத்தின் தலைசிறந்த பதிப்பாசிரியர் என்ற நிலையில் தாம் பதிப்பித்த நூல்களனைத்திற்கும் உ.வே.சா. குறிப்புரை எழுதியுள்ளார். இவர் பதிப்பித்த சமய நூல்களில் இந்தப் பாகவதப் பதிப்பிற்கு எழுதியுள்ள குறிப்புரைகள் இவண் குறிப்பிடத்தக்கன. இவருடைய பன்னூற் புலமை, ஆழ்ந்த ஆய்வுத்திறன், ஒப்பற்ற நினைவாற்றல் ஆகியவற்றின் வெளிப் பாடே இவருடைய குறிப்புரைகளாக மலர்ந்துள்ளன. பழைய உரையாசிரியர் மரபைப் போற்றி ஐயரவர்கள் உரைகளும் அவ்வாறே சிறப்புற்று விளங்குகின்றன.

நன்னூலில் உரையின் பொதுவிலக்கணம் கூறும் பவணந்தி முனிவர் உரை பதினான்கு வகைப்படும் என விளக்குவர். அவை யாவன: 1. பாடம்—மூலபாடம் எடுத்துரைத்தல், 2. கருத் துரை, 3. சொல்வகை—சொற்களைப் பிரித்துரைத்தல், 4. சொல் லுக்குப் பொருளெழுதும் பதவுரை, 5. தொகுத்துரை என்னும் பொழிப்புரை (பதத்தைத் தனித்தனி எடுத்துப் பொருளெழுதா மல் தொகுப்பாக எழுதுகின்ற பொழிப்புரை). 6. உதாரணம் எடுத்துரைத்தல், 7. வினா, 8. விடை, 9. விசேடம்—சூத் திரத்து உள்ள பொருளன்றியும் அவ்விடத்துக்கு வேண்டுவன வற்றைத் தந்துரைத்தல், 10. விரித்துரை, 11. அதிகாரத்தோடு பொருத்திக் காட்டியுரைத்தல், 12. துணிந்துரை, 13. பயனுரை, 14. ஆசிரிய வசனமெனும் ஆன்றோர் நூல்களினின்று மேற் கோள் காட்டியுரைத்தல் என்பன.[1]

இவையனைத்தையும் மரபாகப் போற்றிய உரையாசிரியர் வழி வந்த ஐயரவர்கள் தாம் நூல்களுக்கு உரை எழுதியவிடத் தெல்லாம் மரபு வழுவாமலும், புதுமைப் போக்குடனும் தம் முடைய முத்திரையை ஒவ்வொரு பதிப்பிலும் பதித்திருக்கக் காண்கிறோம்.

செவ்வைச் சூடுவார் பாகவதத்திற்கு உரை ஏதும் இல்லாத நிலையில், இந்நூலைச் செம்மையாகப் பதிப்பிக்க முனைந்த ஐயரவர்களின் குறிப்புரை பல்வேறு நிலைகளில் நூல் பயில் வோருக்குப் பயன்படத்தக்க வகையில் அமைந்திருக்கக் காண்

1. ''பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவதி காரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனமென் றீரே ழுரையே.''—நன்னூல், பொதுப் பாயிரம் 21.

கிறோம். அவையாவன: 1. பதவுரை தருதல், 2. சொல்லமைப்பு களை விளக்கல் 3 கருத்துரை தருதல் 4. இலக்கணக் குறிப் புரைத்தல், 5. சொற்பொருள் விளக்கக் குறிப்புரைத்தல், 6. பிறர் உரையைப் பதவுரையாக அமைத்தல், 7. பொருள்கோள் முறை விளக்கல், 8. இன்னார் கூற்று என விளக்குதல். 9. இன்ன காட்சி என விளக்குதல், 10. பிற நூல்களில் காண்க என குறிப் பிடுதல், 11. வட நூலார் வழக்கு எனல், 12. கதை மாந்தர் உறவுநிலை விளக்கம் தருதல், 13. பொதுப் பெயர்களை விளக்கு தல், 14. சிறப்புப் பெயர்களை விளக்குதல், 15. நூல் நயம் சுட்டுதல், 16. உவமை முதலான அணிநயம் சுட்டுதல், 17. நாடு நகர் முதலான இடவியல் விளக்கமளித்தல், 18. புராணக் கதைக் குறிப்புகள் தருதல், 19. அரிய நூல்கள், மரபுகள், நூற்கொள்கை கள் சுட்டுதல், 20. பிற சிறப்புச் செய்திகள் என இவ்வாறு பல நிலைகளில் இவருடைய குறிப்புரை அமைகின்றது. இவற்றைச் சில எடுத்துக்காட்டுகளால் விளக்கிக் காண்போம்.

### 1. பதவுரை தருதல்

நூலிலுள்ள சொல், தொடர் ஆகியவற்றில் கடினமான வற்றிற்கு விளக்கம் தரும் வகையில் அமைவதே பதவுரை ஆகும். இதில், அரிய சொற்களுக்கு மட்டுமேயல்லாமல் பிற வகைகளிலும் இவர் விளக்கங்களை அமைக்கிறார். அவற்றைப் பின்வருமாறு காணலாம்.

### அ. அருஞ்சொற்பொருள் விளக்கம் தருதல்

(எ-டு) கமடம்-ஆமை-34, துரகம்-குதிரை-42, சேடம்-எஞ் சிய உணவு 56, கலம்-கரை-64, தெருமந்தாள்-சுழன்று மயங்கி னாள்-87, எழு-கணையமரம்-88, குரசதம்-குதிரை-93, இயம் வாத்தியம்-114, கைக்கிரி-யானை-116, குல்லை-திருத்துழாய்-125, நடலை-வஞ்சனைச் செயல்-215, சமம்-அகப்பொறிகளை அடக்குதல்-258 தமம்-புறப்பொறிகளை அடக்குதல்-258, வாரம்-அன்பு-260, பழங்கண்-துன்பம்-262, நிரயம்-நரகம்-818, ஆதபன்-சூரியன்-1303, அசகரம்-மலைப்பாம்பு-1741, காளகூடம்-ஒருவகை விஷம்-1834, பஞ்சவடி-ஐந்து ஆலமரங் கள் நின்ற இடம் 2264, அறல்-கருமணல்-3911, பொறி முடங் கல்-எழுத்துக்கள் பொறித்த ஓலை-3911, குறங்கு-துடை-4238 ஆயுதமொடு ஆயுதம் ஆண்டு-இருபதனாயிரம் வருஷம்-4849, இவ்வாறு பல அரிய சொற்களுக்கும் தொடர்களுக்கும் விளக்கம் தருகிறார்.

**ஆ. எளிய சொற்களுக்கும் விளக்கம் தருதல்**

(எ-டு) மன்-பூமி-638, மேவும்-உண்டாகும்-656, போம்-நீங்கும்-658, நெறி-வழி-662, அலைத்திட-துன்புறுத்த-664, நடக்க-நடப்பாராக-688, தீயன-தீயவை-735, கூற-கூறும்படி-738, இலதாக-இல்லாமற்போக-747, விரிக்கும்-பரப்பும்-777, அகல—நீங்கி-1079, மகிழ்ந்திலன்-மகிழவில்லை-1504, நல்கின-கொடுத்த-3306, கண்டும்-பார்த்தும்-4299, கலந்தும்-கூடியும்-4299, இயம்பான்-பேசமாட்டான்-4603.

இவ்வாறு சில எளிய சொற்களுக்கும் விளக்கம் தருகிறார். இவை மிக அருகியே காணப் பெறுகின்றன. சில இலக்கிய வழக்குச் சொற்களுக்கு வழக்கிலுள்ள இணையான சொற்களைத் தருவதாக இவை அமைந்துள்ளன.

**இ. சொற்பொருள் விளக்கம் திரும்ப அளித்தல்**

எளிய சொற்களுக்கும் விளக்கம் தருவது ஒருபுறமிருக்க, சில சொற்களுக்கு இணையான வேறு சொற்களைக் குறிப்பிட்டுக் காட்டுவதும் இவருடைய வழக்கமாக அமைகின்றது.

(எ-டு) பன்னு-சொல்லுவாயாக-603, மங்குல்-மேகம்-609, கண்ணி-மாலை-609, கிள்ளை-கிளி-611, மருங்கு-இடை-612, முளரி-தாமரை 614, ஒருபது-பத்து-673, கூவல்-கிணறு-677, வரம்பு-எல்லை-720, பித்திகை-பிச்சிமலர்-733, நோக்கம்-கண்கள்-764, விழைவு-விருப்பம்-1081, கிளைக்கும்-விரிக்கும்-1111, பருதி-சூரியன்-1114, 1279, காத்தி-காப்பாயாக-1115, புறந்தருக-காப்பாற்றுக-1115, பானு-சூரியன்-1299, பரி-குதிரை-1300, வையகம்-பூமி-1513, பாலாழி-பாற்கடல்-1652, பாலெனும் வேலை-பாற்கடலை-2276, வெள்ளடிசில்-வெண்சோறு-2963, கூட்டுண்டு-சேர்த்துண்டு-2966, பதின்மர்-பத்துப்பேர்-3661, இவ்வாறு பலவிடங்கள் அமைகின்றன.

**ஈ. ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்களைத் தருதல்**

(எ-டு) புலம்-அறிவு; நூலுமாம்-20, வித்தம்-பொருள்: வித்தகம்-திறமையுமாம்-64, குடம்பை-கூடு; முட்டையுமாம்-100, ஆடல்-வெற்றி; போராடலுமாம்-123, சுதை-அமுதத்தை; பாலுமாம்-128, மன்றல்-நெடுந்தெரு; நறுமணமுமாம்-151, ஐய-அழகுடைய; வியக்கத்தக்க என்றுமாம்-229, கன்னி-இளமை; அழியாமையுமாம்-299, அளை-செறிந்த; குகையுமாம்-620, நளி-குளிர்ச்சி; செறிவுமாம்-1094, பம்மல்-மூட்டம்; மந்தார

மென்றும் கூறுவர்-2919, பரூஉதட-பெரிய அகன்ற; தட-வளைவு எனலுமாம்-3239.

இவ்வாறு பல சொற்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்கள் இருத்தலைச் சுட்டி, அங்கங்கே பொருத்தமானவற்றையும் கூறி விளக்குகின்றார்.

## உ. தமிழ்ச் சொற்களுக்கு வடசொற்பொருள் தருதல்

பாடலிலுள்ள தமிழ்ச் சொற்களுக்கு இணையான வேறு தமிழ்ச் சொற்களைச் சுட்டுவதுமல்லாமல் குறிப்பிட்ட சில சொற்களுக்கு வழக்கிலுள்ள வடசொற்களையும் இவர் பதவுரையில் அமைக்கின்றார் பதிப்பாசிரியர் தாம் வடமொழிமீது கொண்ட பற்றின் காரணமாக இவ்வாறு வலிய வடசொற்களை விளக்கமாகத் தருகிறாரோ என்பது சிலருடைய ஐயமாகலாம். ஆயின், உண்மை அதுவன்று. தமிழில் பிறமொழிச் சொற்கள் வெகுவாகப் புருந்து விட்ட நிலையில் சில தமிழ்ச் சொற்களுக்குரிய வடசொற்கள் பலராலும் இன்றும் போற்றப்படுவதைக் காண்கிறோம். மேலும் குறிப்பிட்ட சில வடசொற்களைக் கூறினால் தான் உரிய பொருள் விளங்கும் என்பதும் அக்கால நிலையாகும். இவ்வகையில் இவர் அமைக்கும் பதவுரைகள் பல இவண் குறிப்பிடத்தக்கன.

(எ-டு) தொன்னூல்-புராணம்-3. கலை-அம்சம்-13. தொல்கதை-புராணம்-17, பெயர் உருவினை-நாம ரூபக்கிரியைகள்-21, உளத்தினோர்-உபாஸகர்கள்-23. ஆதியாகிய மனு-சுவாயம்பு மனு-32. முழுத்த-பூரணமான-39. நல்லறிவானவன்-மெய்ஞ்ஞானமே உருவாகவுடையவன்; சிற்சொரூபி-45. மானதப் பெருந்தடம்- மானஸஸரஸ்; இஃது இமயமலையின் நடுவில் உள்ளதென்பர். மானத ஆறு என்றும் கூறப்படும்-53. உளத்திருள்-அஞ்ஞானம்-60, ஈமநல்வினை-அபரக் கிரியை-84. பூவண்டம்-பிருதிவி அண்டம் 114. பொற்றுகிலேர்ன்-பொன்னாலாகிய ஆடையை அணிந்தவன்; பீதாம்பரதாரி-173. சாதநல்வினை-ஜாத கருமம்; குழந்தை பிறந்தபொழுதே செய்வதொருவைதீகச் சடங்கு-175, மெய்ம்மை-சத்தியம்-178, இளமதி—பாலசந்திரன்-180. புரவிவேள்வி-அசுவமேதயாகம்-190. நவக்கோள்-நவக்கிரஹம்-264. எண்ணோர்-சோதிடர்-264. விடை-இடபம்-265. ஏறு-இடபம் 266. மெய்-சத்தியம்-271. வினைக்குறும்பு-வினையின் சேஷ்டை-319. மேலுலகு-சத்தியலோகம்-321. பொற்கலை-பீதாம்பரம்-322, இயக்கர்-யக்ஷர்-328, ஊறு-ஸ்பரிசம்-348,

உருசெயல்-உருவமும் செயலும்; ரூபக்கிரியை-371, வேள்வியின் உருவ வெண்கேழல்-யக்ஞ ரூபியாகிய வராகம்-504, கனகக் கண்ணன்- இரணியாக்ஷன்-505. மலர்க்கிழவன்-பிரமன்-606, வீடு-மோக்ஷம்-618, 1141, 1393, உருவம்-ரூபம்-636. விண்-சுவர்க்கம்-683. பொன்னாடு-சுவர்க்கம்-683, அழல்-அக்நி-737. ஆறிரண்டெழுத்தும்-துவாதசாக்ஷர மந்திரம்-841, ஆடியம் பாவை-கண்ணாடியிற் றோற்றும் பிரதிபிம்பம்-1030, புழைக் கைமா நகரம்-அத்தினாபுரம்-1107, மதுக்கடல்; மது-கள்; ஸீராசமுத்திரம்-1260, ஏழ்முனிவர்-ஸப்தரிஷிகள்-1324, 1511, திருமறுமார்பன்-ஸ்ரீவத்ஸன்-1389, 1458, மறைவல்லாளன்-பிரஹஸ்பதி-1430, வெள்ளி-சுக்கிரன்-1431, கேழலாய்-வராஹமாய்-1444, தடி-கதை-1462, இசை-கீர்த்தி-1472, முடி-கிரீடம்-1502, மானதவாவி-மானதசரஸ்-1510, பரிமகம்-அசுவமேதயாகம்-1512, அரவின்வேந்தன்-ஆதிசேடன்-1538, பாந்தள் வேந்தை-ஆதிசேடன்-1540, குரு-பிரஹஸ்பதி-1941, மதி வளர் தரு பக்கம்-சுக்கிலபக்ஷம்-1959, பரிவேள்வி-அசுவமேத யாகம்-1969, உடு-நக்ஷத்திரம்-2190, இரண்டெனும் ஊழி-திரேதாயுகம்-2436, ஒரேழ் முனிவர்-ஸப்த ரிஷீகள்-2487, எழுமா முனிவர்-ஸப்த ரிஷிகள்-2501, காப்பனகள்-கண்ணெச்சிற்படாமல் காப்பனவாகிய தோட பரிகாரங்கள்; ரக்ஷைகள்-2738, வேத்தவை-வேந்தவை-இராசசபை-3193, களிற்றுநகர்-அத்தினாபுரம்-3313, ஊழி-யுகாந்த காலம்-3325, அத்தாணி-ஆஸ்தான மண்டபம்-3362, மறு-ஸ்ரீவத்ஸம்-3365, பெருந் தேவிகள்-பட்டமகிஷிகள்-3661, அழல் வெங்கணை-ஆக்னேயாஸ்திரம்-3731, வேந்தமுனிவர்-ராஜரிஷிகள்-4497, மறைவலாளன்—பிருகஸ்பதி-4817.

இவ்வாறு அமையும் பதவுரைப் பகுதிகள் குறிப்பிடத்தக்கன.

இவற்றுள், சிந்துநாடு என்பதற்குச் 'சிந்து தேசம்-162' எனவும், அணித்து என்பதற்குச் 'சமீபத்திலுள்ளது-163' எனவும், ஐயம் என்பதற்குச் 'சந்தேகம்-1075' எனவும், புனிதநீர் என்பதற்குச் 'சுத்த ஜலம்-1215' எனவும், கவர்வான் என்பதற்கு 'அபகரிக்க-1997' எனவும், நூல்முறை என்பதற்குச் 'சாத்திரப்படி-2384' எனவும், வலிதின் என்பதற்குப் 'பலாத்காரத்தால்-2714' எனவும் பொன்னணி என்பதற்குப் பொன்னாபரணம்-4286' எனவும், கைம்மாறு என்பதற்குப் 'பிரதி உபகாரம்-4294' எனவும், பேறு என்பதற்குப் 'பாக்கியம்-4361' எனவும் இவர் வடசொற் பொருள் தருவது வலிந்து வடசொற்களைப் புகுத்துவதாக அமையினும் பல சொற்பொருள்கள் அக்காலத்தில் பலருக்கும் பயனுடையதாயின என்பதில் ஐயமில்லை.

வழக்கிலுள்ள வடசொற்களுக்கு இணையான நல்ல தமிழ்ச் சொற்களை மூல நூலாசிரியர் தம் பாடல்களில் எவ்வாறெல்லாம் அமைத்துள்ளார் என்பதைத் தெளிவாக அறிவதற்கும் இத்தகைய பதவுரைப் பகுதிகள் பெருந்துணையாகும். இதை ஆய்வாளர்கள் நன்கு உணர்தல் வேண்டும்.

### ஊ. வடசொற்களுக்குத் தமிழில் பொருள் தருதல்

பாகவதம் வடமொழியில் இயற்றப் பெற்றது. அதைத் தமிழில் மொழி பெயர்க்குமிடத்துச் சில வட சொற்கள் அமைவது இயல்பு. இத்தகைய வடசொற்களுக்குரிய பொருளையும் இவர் அடிக்குறிப்பில் தருகின்றார்.

(எ-டு) பொன் உத்தரீயம்-பொன்னாலாகிய மேலாடை-92, பிராகிருதம்-இயற்கையாயுள்ளவை-451, வைகிருதம்-வேறுபட்டவை-451, சௌரமானம்-சூரியனை அளவாகக் கொண்டது-467, சந்திரமானம்-சந்திரனை அளவாகக் கொண்டது-467, ரோதனம்-அழுதல்-480, உபயம்-இரண்டும்-606, சரம்-அசையும் பொருள்கள்-655, அசரம்-அசையாப் பொருள்கள்-655, உபாதி-தடை-990, அந்தர்த்தானம்-மறைவு-1003, ஆரோகம்-ஆரோஹனம்-மேலே சொல்லுதல்-1288, அவரோஹம்-கீழே இறங்குதல்-1288, நாம கீர்த்தனம்-பெயரைச் சொல்லல்-1370, கன்மாஷபாதன்-கருகிய கால்களையுடையோன்-2201, நாரீகவசன்-பெண்களைக் கவசமாக உடையவன்-2215, உற்பாத மடுக்கும்-தீயன உண்டாகும்-2730, பௌவம்-கடல்-3662, விசாரம்-ஆராய்ச்சி-4547,

இவ்வாறு பல வடசொல் ஆட்சிகளுக்குத் தமிழில் பொருளுரைக்கின்றார்.

### எ. பாடவேறுபாடுகளுக்கும் விளக்கம் தருதல்

மூலபாடம் என இவர் கொண்ட பாடத்திற்கு உரை வரைதலே பெரும்பான்மையாக இருக்க, ஒரோவிடத்து வேறு பிரதிகளில் காணும் பாடவேறுபாடுகளுக்கும் உரை விளக்கம் தருகின்றார்.

(எ-டு) கட்டீச் சிந்துபு-கண்களினின்றும் தீயைச் சிந்தி. கோயில் தீர்க-கோயில் இல்லையாகுக-4234. இத்தகைய உரைகள் இந்நூலில் மிகமிகக் குறைவே.

**2. சொல்லமைப்புகளை விளக்கல்**

நூலின் செய்யுள்களில் விகாரப்பட்டு வரும் சொற்கள், மரூஉ மொழி, பிறமொழிச் சொற்கள் ஆகியவற்றைத் தெளிவாக இனங்காணல் உரை விளக்கத்திற்குப் பெரும் பயனளிப்பதாகும். இவ்வகையில் ஐயரவர்கள் பல சொல்லமைப்புகளை அடிக் குறிப்பில் விளக்குகிறார்.

(எ-டு) பவம்-பாவம்; குறுக்கல் விகாரம்-16, பஞ்சராத்திரம்-பாஞ்சராத்திரம்; குறுக்கல் விகாரம்-30, ருருகன்-ருருகன்-நீட்டல் விகாரம்-2189, பதாரவிந்தம்-பாதங்களாகிய தாமரை; குறுக்கல் விகாரம்-2193, குறுத் தாள்-குறிய பாதத்தையுடைய; வலித்தல் விகாரம்-3721, நீல்நிறம்-நீலம்; கடைக்குறை-355, உதித்த-உதித்தது-கடைக்குறை-605.

இவ்வாறு அமையும் செய்யுள் விகாரங்களை விளக்குவதுடன்

கழீஇ-கழுவி-3311, வெரீஇ-அஞ்சி-3736, மரீஇயினான்-பொருந்தினான்-3701, தொழூஉ-தொழுது-3985, கழீஇயினான்-கழுவினான்-3986, தழீஇயினன்-தழுவினான்-4116, ஒரீஇயினன்-நீங்கினன்-4394.

என இவ்வாறு விகாரப்பட்டு அளபெடுத்த சொற்களுக்குரிய பொருள் விளக்கங்களையும் அங்கங்கே தருகிறார்.

இவ்வாறே சொற்களின் புணர்ச்சி நிலைகளை எடுத்துக் காட்டியும் விளக்கம் தருகிறார்.

(எ-டு) சராசரம்-சரம் அசரம்-27,
புத்தமுதம்-புதிய அமுதம் 35.
அம்சிறை-அகம்சிறை-உள்ளிடத்தே சிறையையுடைய-75.
வேத்தவை-வேந்துஅவை-இராசசபை-109.
வெற்றிமேவியம்-வெற்றி மேவு இயம்-வெற்றிமுரசு-114
நடுவேயந்தரம்-நடுஎய் அந்தரம்-விண்ணுலகம், மண்ணுலகம் என்ற இரண்டின் நடுவிலுள்ள ஆகாயம்; இங்கே புவர்லோகம்-320.
இரண்டாம் ஆயிரம்-இரண்டாயிரம்-1197.
பஃறீவு-பல தீவுகள்-1257.
பஃறலை-பல தலைகளையுடைய-1341, 3146.

பூந்தேவரம்பை-பூ தே அரம்பை-அழகிய இனிய வாழை மரங்கள்-1796.

இவ்வாறு அமையும் விளக்கங்கள் குறிப்பிடத்தக்கன.

வடமொழிச் சொற்கள் எவ்வெவ்வாறு தமிழ் வடிவம் பெற்று வந்துள்ளன என்பதையும் அங்கங்கே அடிக்குறிப்பாகத் தருகின்றார்.

(எ-டு) வேடம்-வேஷம்-25. கவுத்துவம்-கௌஸ்துபம்-34. உகம்-யுகம்-165. கமை-க்ஷமை-பொறுமை-249, 1758. குருக்கேத்திரம்-குருக்ஷேத்திரம்-250. வெதரி-இலந்தை; இது பதரி என்ற வடமொழிச் சிதைவு-409. பக்கம்-பக்ஷம்-466, மயன்-ஸ்மயன்-732. துட்டி-துஷ்டி-732. புட்டி-புஷ்டி-732. மிருதி-ஸ்மிருதி-733. திதிக்கை-திதிக்ஷை-733. கேமன்-க்ஷேமன்-733. அருச்சி-அருச்சிஸ் என்பவள்; பிருதுவின் மனைவி-968. கணம்-க்ஷணம்-1051. தூலம்-ஸ்தூல சரீரம்-1074. சகத்திரம்-ஸஹஸ்ரம்-ஆயிரம்-1205. கிரகம்-கிரஹம்-1288. விண்டு-விஷ்ணு-1326. அருச்சித்து-அருச்சிஸ்-1413. திடணை-திஷணை-1413. சரிடி-சர்ஷணி-1555. ஆவுதி-ஆஹீதி-1584. அசிதன்-அஜிதன்-1818. மாவலி-மஹாவலி-2007. திரசதசியன்-த்ரஸ் தஸ்யு-2137. ஓதா-ஹோதா-ஹோமம் செய்பவர்-2152. சமதங்கி-சமதக்நி-2152, ஓத்திரன்-ஹோத்ரன்-2445, அசகன்-அஜகன்-2446. சீதாமன்-ஸ்ரீதாமன்-2874. நயிட்டிகர்-நைஷ்டிகர்-4535. விடயம்-விஷயம்-4547. இதயம்-ஹ்ருதயம்-4821. இயக்கர்-யக்ஷர்-4889.

என இவ்வாறு பல சொற்களின் வடமொழி வடிவங்களை எடுத்துக்காட்டி அவை தமிழில் பெற்றுள்ள வடிவங்களையும் விளக்குகிறார். இவற்றால், மூல நூலாசிரியர் தாமறிந்த வட சொற்களைத் தமிழில் கையாண்ட முறைகளும் நமக்குப் புலனாகின்றன.

### 3. கருத்துரை தருதல்

ஒவ்வொரு பாடலுக்கும் பதவுரை, சொல்லமைப்பு விளக்கம் தரும் ஐயரவர்கள், சில பாடற்பகுதிகள் ஒருபொருள் முடிவு கொண்டிருப்பதைச் சுட்டி அவற்றிற்குத் திரண்ட கருத்துரையை அந்தந்தப் பாடல்களின் அடிக்குறிப்பில் தருகின்றார்.

(எ-டு) ''இந்நூல் முழுவதும் கலைமகளே என் நாவிலிருந்து பாடியதாக அமைதலால் அத்தேவியைப் பற்றி ஒரு துதிகவி சொன்னால் அஃது அவளே தன்னைப் பாடியதாய்விடும் என்று கருதி நான் துதிகவி பாடவில்லை; மனத்தால் வணங்குகின்றேன் என்பது கருத்து''-2.

''நதிநீருக்கும் மணலுக்கும் ஒருவித சம்பந்தம் இல்லாதது போலத் தந்தைக்கும் தனயனுக்கும் சம்பந்தம் இல்லை என்பது கருத்து''-1527.

''எமது மரபிற் கண்ணபிரான் பிறந்த பாக்கியத்தின் பயனே உன்னை நான் கண்டு உய்ந்தது என்றான் என்றபடி.''-312.

''திருமால் ஆலயத்திற்குச் செல்லாத கால்களும் அவன் கதையைக் கேளாத செவிகளும் பயனற்றன என்றபடி''-341.

''விழியால் வளையாழி வழங்கலென்றது, கண்ணபிரானுடைய பார்வையால் காமநோய் கொண்ட மகளிருக்கு உடல் மெலிதலாலே, அவர்கள் அணிந்திருந்த வளையல்களும் ஆழியுட் நழுவியதைக் குறிப்பித்தபடி''-145. இவ்வாறு பல பாடல்களுக்கும்[1] கருத்துரையைச் சுருக்கமாக அமைக்கின்றார்.

நூலின் தெளிவினைக் கருத்தில் கொண்டு இத்தகைய கருத்துரைகளை இவர் அமைக்கின்றார். இவ்வாறு எல்லாப் பாடல்களுக்கும் இவர் கருத்துரைகளை எழுதிச் சேர்க்கவில்லை. தேவையான இடங்களுக்கு மட்டுமே தருகின்றார். பாகவதத்திற்கு உரை ஏதும் இல்லாத நிலையில் எல்லாப் பாடல்களுக்கும் இவரே கருத்துரை வழங்கியிருப்பின் மேலும் பயனுடையதாயிருந்திருக்கும். இந்நூலிலுள்ள பன்னிரண்டு கந்தங்களின் தொடக்கத்தில் ஒவ்வொரு கந்தத்தின் கருத்துச் சுருக்கத்தையும் அளித்திருக்கலாம். மேலும், பன்னிரண்டு கந்தத்திலுள்ள நூற்றைம்பத்தைந்து அத்தியாயங்கள் ஒவ்வொன்றின் தொடக்கத்திலும் கருத்துச் சுருக்கத்தை எழுதிச் சேர்த்திருக்கலாம். இப் பணிகளை இவர் இப்பதிப்பில் செய்யவில்லை.

### 4. இலக்கணக் குறிப்புரைத்தல்

செய்யுளிலமையும் சொற்களுக்கு இலக்கணக் குறிப்புரைக்கும் இவர் சிலவற்றிற்கு விளக்கமும் தருகின்றார்.

---

1. காண்க பா. எண்: 119, 124, 144, 146, 149, 157, 165, 168, 171, 237, 241, 282, 298, 537, 805, 806, 978, 1023, 1249, 1428, 1530, 1888, 1989, 2679, 4312, 4527.

(எ-டு) தருவும்: உம்மை, இழிவு சிறப்பு-3. மலரவற்கும்: உம்மை, உயர்வு சிறப்பு-14. மற்று: அசைநிலை-14, 22, 51, 82, மதி-முன்னிலையசை-60, 319, 4183. எறுழ் வலி-மிக்கவலி; ஒருபொருட் பன்மொழி-92. நாமவேலி னான்: தருமபுத்திரன்; நாமம்-நாம்-அச்சம்; உரிச் சொல் ஈறு திரிந்தது-103. ஐவர்-பாண்டவர் ஐவர்; தொகைக் குறிப்புப் பெயர்-108, கண்ணன்-சுட்டுப் பெயரளவாய் நின்றது-190. விசும்பு-விண்ணுலகத் துள்ள தேவர்கள்; ஆகுபெயர்-340, கண்டாய்-முன்னிலை ஒருமை அசைச்சொல்-496, அல்லதை-அல்லது; ஐ. சாரியை-614, இயல்புளி-இயல்பால்; உளி, மூன்றாம் வேற்றுமை உருபு-1395, ஆரணமறை-இரு பெயரொட்டு-1412.

இவை அனைத்தும் பொருள்கோளுக்காகத் தரப்பெற்றவையாம். செய்யுளிலுள்ள உருபுமயக்கம், எச்சங்களும் முற்றும் தம்மில் மாறுபட்டு அமைதல், சொற்கள் விகாரப்பட்டு அமைதல் ஆகியவற்றை விளக்கி, தேர்ந்த பொருள் விளக்கம் தருவதற்காகவே இத்தகைய இலக்கணக் குறிப்புகளை இவர் அமைக்கின்றார். இவற்றால் பொருள் மயக்கங்கள் நீங்கிப் பொருளுடை வடிவங்கள் பலவும் புலனாகின்றன.

## 5. சொற்பொருள் விளக்கக் குறிப்புரைத்தல்

செய்யுளிலுள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் விளக்குமிடத்து, பல சொற்களின் பொருள்நயம் நன்கு புலப்படும்படியாகவும் இவர் குறிப்புரைகளை அமைக்கின்றார்.

(எ-டு) நேமி-தருப்பையாற் செய்யப்பட்ட சக்கரம்-6,
கலிஉததி-கலியுகமாகிய கடல்-15.
கவுமாரம்-பிரமசரியம்; இது கௌமார கிருஷ்டி எனப்படும்; நால்வகைச் சிருஷ்டிகளுள் ஒன்று. ஏனையவை ஆரிஷம், பிரசாபத்தியம், மாணவம் என்பன-28. பாஞ்சராத்திரம்-இது வைஷ்ணவாகமங்களுள் ஒன்று. ஐந்து ராத்திரியில் செய்யப்பட்டதென்பர்-30, மன் வந்தரமென்பது காலத்தின் பெரிய அளவுகளுள் ஒன்று-32, வியாதனாய்-வியாசமுனிவராகி; வேதத்தை நான்கு கூறாகப் பிரித்தமையின் 'வியாசர்' என்று பெயர் பெற்றார்; வியாசம்-வேறு பிரித்தல்-38. முன்மறை-

முதல் வேதமாகிய ருக்வேதம்-38, தற்பரம்-அதுவாகவே இருத்தல் அல்லது அதையே நினைத்தல்-58, தபோதனன்-தவத்தையே பொருளாக உடையவன்; என்றது சுகமுனிவரை, அவர் பிச்சை கொள்வதற்குப் போகுமிடங்களில் பசு ஒரு பீர் கறக்குங்காலந்தான் நிற்பர்-63, ஞானவித்தகன்-சுகமுனிவன்; ஞானத்தையே பொருளாக உடையவன்-64, சிகாமணி-பிறந்த பொழுதே அசுவத்தாமனுடைய தலையில் அமைந்த மணி-83. அபாண்டவம்-பாண்டவர் குலமே இல்லாததாகச் செய்வது-85. இரும்பனைக்கை-கரிய பனை போன்ற துதிக்கை-88. இராசசூயம்-எல்லா அரசர்களையும் தன்கீழ்ப்படுத்தித் திறைவாங்கி, ஆணை செலுத்தும் ஏகசக்கரவர்த்தியினால் செய்யப்படும் யாகம்; இதைத் தருமபுத்திரன் செய்தான்-95. வாசுதேவன்-வசு-பொன்; வாசு-பொன்னாலாகிய ஆடை (பீதாம்பரம்); தேவன்-ஒளியையுடையவன், பீதாம்பரத்தால் போர்த்தப்பட்டு வந்த தோற்றம், மாயையான போர்வையால் நீ போர்த்தப்பட்டிருப்பதைப் புலப்படுத்தும்-98. நாரதர்-அஞ்ஞானத்தைப் போக்குபவர்; நாரம்-அஞ்ஞானம்-198. பரந்தாமம்-மேலான இடம், திருவைகுந்தம்-554. கிராமணியர்-தேவர்களைச் சேர்ந்த ஒருவகையினர்-1304. பாகவதர்-பகவானிடம் அன்பு செலுத்துபவர்-4330.

இவ்வாறு அமையும் பொருள் நயந்தோன்றும் விளக்கக் குறிப்புகள் மிகவும் பயனுடையன.

### 6. பிறர் உரையைப் பதவுரையாக அமைத்தல்

பாடலில் வரும் குறிப்பிட்ட சொல், தொடர் ஆகியவற்றைப் போன்றே பிற நூல்களில் கண்டவிடத்து, அதற்கு அந்நூலாசிரியர் அல்லது உரையாசிரியர் கண்ட பொருள் விளக்கத்தை அப்படியே பதவுரையில் எடுத்துக் காட்டுவதும் இவருடைய மரபாகும்.

(எ-டு) நிழல்வாய் நேமி யுருட்டி நிலவுக் கதிர்வெண் டிங்கள்
எழில்வாய்க் கவிகை நீழ லெறிநீ ருலகங் காக்கும்
வழுவில் சிறப்பு வாய்ந்த வடசொற் பெயரால் விளங்கும்
அழல்வெம் பருதி வதனத் தரசற் கண்டா னன்றே.
-3314 (10ஆம்—கந்தம். 20. அக்குரூரனை அத்தினாபுரத்து விடுத்த அத்தியாயம் பா.3)

என்னும் பாடலுக்குப் பின்வருமாறு குறிப்புரை அமைக்கிறார்.

நிழல்-ஒளி, நேமி உருட்டி-ஆஞ்ஞா சக்கரத்தைச் செலுத்தி. நேமி உருட்டி, திங்கட் கவிகையின் நிழலில் உலகத்தைக் காக்கின்ற அரசனை; வடசொற் பெயரால் விளங்கும் பருதி வதனத்தரசனை: திருதராஷ்டிரனை; ''வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற, முகத்தவன்'' (கலி. 25: 1—2) என்பதற்கு. 'வடமொழிப் பெயர் பெற்ற வயக்குறு மண்டிலம் போலு முகத்தவனென்றது ஆதித்தரிலே பகனென்னும் வடமொழிப் பெயரைப் பெற்று விளங்குதலுறும் ஆதித்தனைப் போலும் முகத்தையுடையவனென்பது, அவன்தான் குருடாயினமையிற் பிறரைக் காணாதவாறு போல இவனும் பிறரைக் காணாத முகத்தையுடையவனென்றவாறு; என்றது திருதராஷ்டிரனை. இனி விளக்கமுற்ற கண்ணாடியின் பெயரை வடசொல்லாகிய பெயராற் பெற்ற முகத்தவனென்றலுமாம்; அது தர்ப்பணானனன் என்னும் பெயரை. அது பிறரைத்தான் காணாதவாறு போல இவனும் பிறரைக் காணானென்றதாம். இனி விளக்கமுற்ற நாடென நின்ற அச் சொல்லினைத் திருதராஷ்டிரனென்னும் வடமொழிப் பெயராலே தமிழ்ச் சொல்லீறாகத் திரித்த ததராயனென்னும் பெயர் பெற்ற பாண்டுவுக்கு மூத்தவனென்றும் உரைப்ப' என்று **நச்சினார்க்கினியர்** உரை எழுதியிருத்தலும் அக் கருத்துப்பற்றி ''முகுரவானனனும்'', ''முகமுகுரம்புரை முதலொடு'', ''ஆடித்திருமுக மன்னவன்'', ''முகுரானனன் மைந்தனும்'' (வி. பா. சம்பவ 115; வாரணாவத. 102; அருச்சுனன்றவ. 165; பதினெட்டாம் போர். 194) என்று வில்லிபுத்தூரார் கூறியிருத்தலும் ஈண்டு அறியத்தக்கன.

இவ்வாறு பிறர் உரைகளைச் சுட்டவந்தவிடத்து, அதனை மேலும் விளக்காமல், அந்நூல்களின் உரையில் இன்ன இன்ன பகுதிகளைக் காண்க எனவும் குறிப்பிடுகின்றார்.

(எடு) ஊதுலைக் குருகுமற்றாங் குயிர்ப்பது போலுமாதோ-338 என்றபாடலடிக்கு உரை கூறுமிடத்து, ''ஊதுலைக் குருகு-கொல்லன் உலை மூக்கு; ''ஊதுலைக் குருகி னுயிர்த்தனர்'' (**சிலப் 4:59**) ஆம் அடியையும் அதனடிக் குறிப்பையும் பார்க்க–338.

ஆம்பலந் தீங்குழல்–வெண்கலத்தால் ஆம்பற்பூ வடிவாக அணைசு பண்ணிச் செறித்த குழல் என்பர் **அடியார்க்கு நல்லார்; சிலப். பக். 445, 457** ஆம்பலென்னும் பண்ணையுடைய குழல்

என்பர் **நச்சினார்க்கினியர்;** கலி. 108:62:3 ஆம்பல்-ஆம்பற் பூ-3044

"மாவின், தளிரே ரன்னமேனித் தளிர்ப்புறத், தீர்க்கி னரும் பிய திதலையர்" (மதுரைக். 706-8) என்பதும், "மாயவன் மேனி போற் றளிரீனவம்மேனித், தாய சுணங்குபோற் றளீர்மிசைத் தாதுக" (கலி. 35:3-4); என்பதும் "பூத்ததைந்த தாழ்சினைத் தளிரன்ன வெழின்மேனித் தகைவாடா" (கலி. 40:19-20) என்றவிடத்து, 'பூத்தாழ்ந்த தளிரெனவே சுணங்கும் மாமைநிற மும் கூறிற்று' என்றெழுதிய **நச்சினார்க்கினியருரையும்** ஈண்டறியற் பாலன.

ஒழுக்கு, வழக்குத் தண்டம் என்பவற்றின் பொருள் விளக் கத்தை, **குறள், பரி, உரைப்பாயிரத்தில்** பார்க்க-485.

தேவர்கடன் வேள்வியாலும், முனிவர்கடன் கேள்வியாலும், பிதிரர்கடன் புதல்வர்ப் பெறுதலாலும் நீங்கும் என்பர்; **குறள்;** 7ஆம் அதிகாரம்: அவதாரிகை, **பரிமேல்.**-1730.

இயல்புளி—இயல்பால்; உளி: மூன்றாம் வேற்றுமை உருபு; **குறள் 545, பரிமேல்.**-1395.

இவ்வாறு அமையும் குறிப்புரைகள் ஐயரவர்களின் பலநூல் அறிவிற்குச் சான்றாக அமைவன. பிற உரையாசிரியர்களின் குறிப்புரைகளை அறிந்து, அங்கங்கே சுட்டுவது, நூல் பயில் வோரை மேலும் பயிலத் தூண்டுவதாக அமைகின்றது.

## 7. பொருள்கோள் முறை விளக்கல்

பாடலின் பொருள் விளக்கத்திற்குச் சொற்களை மாற்றிக் கூட்டுதல், ஒரு சொல்லைப் பிறபாடல்களுடன் கொண்டு கூட்டு தல், பிரித்து இயைத்தல், அடியை மாற்றி அமைத்துக் கொள்ளல் என்பன உரையாசிரியர் மரபாகும். இம்மரபில் பல நூல்களுக் கும் குறிப்புரை வரைந்துள்ள இவர் இப்பதிப்பிலும் பாடலின் பொருள்கோள் முறையை அங்கங்கேயே விளக்குகிறார்.

(எ-டு) அரிகதையானது ஓடம், புனிதம், அமுதம், மருந்து என முடிக்க-15, நான்கு என்பதனை ஆச்சிரமத்தோடு கூட்டுக-20, தெரிகிற்பான் கூறினன் என இயைக்க-78, வாளி அழன்று வளைத்தது எனக் கூட்டுக-86, துள்ளித் துடிக்கும் என இயைக்க-149. கண்ணினாற் காத்தருள் என இயைக்க-215. என் காண்டபம், கணை, வீரம்,

வலி, விசயம் எல்லாவற்றையும் கைக்கொண்டு, 'கண்ணன் ஏகினான்' என மேல்வரும் பாடலோடு இயைக்க-216. இறப்பு வந்தெய்துழி யென்பதைப் பிறவிடத்துங் கூட்டலாம்-314. மகிழ்ந்துளான் கொலே புக்கு நீ அறிகென அக்குரூரன்றனைப் போக்கும் வண்ணம் என முடிக்க-386. காத்துப் படரும் வண்ணம் தோற்றஞ் செய்தாரென முடிக்க-1139, தொடை சூட்டினான் என்று அடுத்த செய்யுளோடு முடிக்க-1159, அண்டச் சுவரதனைப் பதின்மடங்காய், குலவு தெளிநீர் சூழும் என அடுத்த செய்யுளோடு முடிக்க-1280.

என இவ்வாறு, ஒரே செய்யுளினுள்ளும், ஒரு செய்யுளினுள்ள சொற்களைப் பிற செய்யுளினுள்ளும் கொண்டு கூட்டியும், பிரித்து இயைத்தும் பொருள் கொள்ளும் நிலைகளையும் நூல் முழுவதிலும் இவர் தெளிவாகச் சுட்டுகின்றார்.

## 8. இன்னார் கூற்று என விளக்குதல்

பாடலின் குறிப்பிட்ட பகுதிகள் ஒருபொருள் தொடர்நிலையாக அமைவதையும், குறிப்பிட்ட கதைமாந்தர்களைச் சுட்டி இது இன்னார் கூற்று என்பதையும், இவையிவை கவிக்கூற்றுகள் என்பதையும் இவர் அடிக்குறிப்பில் விளக்குகின்றார்.

(எ-டு) கண்ணபிரானைக் கண்டு நாணம் அழிந்த மகளிர் கூறியது 151, இது கவி இரங்கிக் கூறியது-222, இது முதல் 261 வரை பூமியாகிய பசுவின் கூற்று-256, இது விடையின் கூற்று-264, சமீக முனிவரின் கூற்று-298-300, புகல்கேன் என்றது சுகனது கூற்று-1118, இது ரகுகணனது கூற்று-1166. புகலுவாம் என்றது சுகன் கூற்று-1277. இப்பாடலும் அடுத்த பாடலும் கஞ்சன் இரங்கிக் கூறுவன-2719. இது கவிக்கூற்று.2787. இப்பாடல் வேதியர் தம் மனைவியரை நோக்கிக் கூறியது-2954. இது முதல் மூன்று பாடல்கள் மறையவன் வார்த்தை-3408. இப்பாடல் உருக்குமிணி கூறியதாக அந்தணன் கூறியது-3410. இப்பாடல் அக்குரூரன் மொழி-35?6.

என இவ்வாறு கூற்று முடிவுகளை விளக்குகிறார்.

பாடல்களின் பொருளை உணர இக்கூற்று முறைகளை விளக்குதல் பெரும் பயனாகும். இன்ன கதை மாந்தர் இப்படிக் கூறுகிறார் என்பன எல்லாச் செய்யுள்களிலும் காண இயலாது. அத்தகைய இடங்களிலெல்லாம் பொருள் காணலில் குழப்பம்

உண்டாகாமல் தவிர்க்கவே இது இன்னார் கூற்று என்பதை இவர் அங்கங்கே சுட்டிச் செல்கிறார்.

## 9. இன்ன காட்சி என விளக்குதல்

பாகவதத்தில் பல நிகழ்ச்சிகள் விவரிக்கப் பெறுகின்றன. குறிப்பிட்ட பாடல்கள் இன்ன நிகழ்ச்சிகள் அல்லது இன்ன பொருளை விளக்குகின்றன என்பதைச் சுட்டுவதும் பதிப்பாசிரியர் கடனாம். இவ்வகையில் குறிப்புரை தந்துள்ள இவர் பாடற்காட்சிகளை அடிக்குறிப்பில் விளக்குகின்றார்.

(எ-டு) கண்ணபிரான் பீஷ்மரைக் கொல்லச் சென்ற காட்சி இதிற் கூறப்பட்டது-*92*. உத்தரையின் கருப்பத்தைப் பாதுகாத்த கண்ணபிரானுடைய திருவுருவம் இதிற் கூறப்பட்டது-*173*. இப்பாடலும் அடுத்த பாடலும் விராட சுவரூபனான மாயவனுடைய உறுப்புக்களைக் கூறுவன-*320*. இது முதல் மூன்று கவிகள் திருமாலின் தோற்றத்தைக் கூறும்-*527*. கேதுமாலம் என்னும் வருடத்தின் எல்லை இச்செய்யுளிற் கூறப்பட்டுள்ளது-*1200*. கோள்கள் செய்யும் நன்மை தீமைகள் சொல்லப்படுகின்றன-*1318*. இப்பாடலும் அடுத்த பாடலும் பரிட்சித்தின் உட்கோள்-*265*. இதுமுதல் சந்நியாஸாச்சிரமம் கூறப்படுகிறது-*1735*. இவ்வாறு அந்தந்தப் பகுதிகள் இன்ன காட்சியை விளக்குகின்றன. எனச் சுட்டிக் காட்டுவதால் நூலைப் பயில்வோர்க்கு மேலும் பயில ஆர்வம் பெருகும். அதன்வழிப் பொருளுணர்வும் பெருகும்.

## 10. பிற நூல்களில் காண்க எனக் குறிப்பிடுதல்

குறிப்பிட்ட பாடல்களில் காணும் சில குறிப்பிட்ட கருத்துக்கள், சில வரலாறுகள், சில விளக்கங்கள் ஆகியன பிற நூல்களில் அவ்வாறே அமைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுதல் உரையாசிரியர் மரபாகும். இவ்வகையில் 'இதே கருத்தை இன்ன நூலில் இன்ன பகுதியில் காண்க' என இவர் அடிக்குறிப்பிலேயே விளக்குகிறார்.

(எ-டு) இப்பாடற்கருத்து **அழகர் கலம்பகம்** *63* ஆம் செய்யுளிற் காணப்படும்-*148*. சுகமுனிவரது வரலாறு **மகாபாரதம்**, சாந்திபர்வம், மோக்ஷ தர்மம், *331* ஆம் அத்தியாயம் முதலியவற்றிற் காணப்படும்-*3*. இப்பாடல்களின் விஷயங்களை **விஷ்ணு புராணம்** *2:10*, ஆல் அறியலாகும்-*1307*. இவ்விதமே, பகல் இரவு நேரங்களின் பகுதிகளில் அந்த அந்தக் கவச தெய்வங்கள் காப்பாற்றுக என்று **சிவகவசம்** முதலியவை கூறும்-*1459*. இக்

கருத்து **சாகுந்தலத்திற்** காளிதாசராற் கூறப்பட்டுள்ளது என்பர்-2536. குரவைக்கூத்து-இதன் விரிவைச் **சிலப்பதிகாரம்** ஆய்ச்சியர் குரவை என்னும் பகுதியால் அறியலாம்-3075.

இவ்வாறு இவர் தரும் குறிப்புக்களால் இப்பாடற் கருத்துக் களின் தெளிவான விளக்கங்களை அந்தந்த நூல்களைக் கொண்டு அறிய ஏதுவாகும்.

## 11. வடநூலார் வழக்கு எனல்

பாடலில் வரும் பெயர், சொல், தொடர், கருத்து முத லானவை வடநூலாரின் கருத்துக்களோடு தொடர்புடைய தாயின், அல்லது, வடநூல் கருத்துக்கள் தமிழ் வடிவாக வந் திருப்பின், அவற்றின் வடமொழி வடிவைச் சுட்டிக் காட்டுவதும் இவருடைய சிறப்பாகும்.

(எ-டு) 'உருச்செய லிலாத முன்னவன்' என்பதற்கு உரை கூறவந்தவிடத்து, உருசெயல்-உருவமும் செயலும்; ரூபக்கிரியை என்பர் **வடநூலார்**-371.

புரஞ்சனன் 1100 பிள்ளைகளையும் 110 பெண்களையும் பெற்றான். இந்திரியங்களுடைய விருத்திகள் 1100 என்றும், புத்தியின் விருத்திகள் 110 என்றும் கூறுவர் **வடநூலார்**-1036.

இவ்வாறு கூறுமிடங்களில், இவை இன்ன நூலில் உள்ளன என்பதை இவர் குறிப்பிடவில்லை. இவை பொதுவான வட மொழி மரபு எனவும் அறியலாம். இவ்வகையான குறிப்புகள் ஒப்பியல் ஆய்வுக்குப் பயனுடையன.

## 12. கதைமாந்தர் உறவுநிலை விளக்கம் தருதல்

பாகவதத்தில் பல்வேறு கதைகளும் இடம் பெறுகின்றன. இவற்றில் வரும் மாந்தர்களுக்கிடையே அமைந்துள்ள உறவு முறைகளைச் சுட்டிக்காட்டிக் கதைப் போக்கை அனைவரும் உணர இவர் வழிவகை செய்கின்றார்.

(எ-டு) தேவஹூதி-இவள் கபிலருடைய தாய்-30. அலர்க் கண்-குவலயாசுவன் என்னும் சூரியவம்சத்து அரசனுடைய புதல்வன்-31. ருசி-ஒன்பது பிரமருள் ஒருவர்; ஆஹூதி என்பவ ளின் கணவர்-32. மகப்புருடன்-யக்ஞபுருடர்; இவர் ருசிக்கும் ஆஹூதிக்கும் பிறந்தவர்-32. இடபன்-ரிஷபேசுர சக்கரவர்த்தி; இவர் நாபிக்கு மேருதேவியினிடத்துப் பிறந்தவன்-32. பிருது-

வேனன் என்னும் அரசனுடைய மகன்-33. அதிதி-காசிப முனிவருடைய மனைவி-37. பராசரன் -வசிஷ்ட முனிவர் புத்திரராகிய சக்தி முனிவருடைய பிள்ளை; வியாசருடைய தந்தை-46.

இவ்வாறு பலருடைய உறவுநிலைகளை விளக்குகிறார். பரந்து விரிந்த புராண வரலாற்றுக் கதைமாந்தர்களை இனங்கான இத்தகைய குறிப்புரைகள் பெருந்துணையாகும்.

## 13. பொதுப்பெயர்களை விளக்குதல்

பாடலில் குறிப்பிடப்பெறும் சில பொதுப்பெயர்கள் குறிப்பிட்ட சிலரையே குறிப்பன. அவற்றை அங்கங்கே சுட்டுவது உரையாசிரியர் மரபு.

(எ-டு) அந்தணர்-சௌனகர் முதலியோர்-7. வேட்டவர்-பிரகலாதன் முதலியோர்-10. பகைத்துக் கருதினோர்-இரணியன் முதலியோர்-10. புருடன்-கௌமார வடிவமான விராட் புருடன்-29.

இவ்வாறு இவர் பலவிடங்களிலும் விளக்குவர்.

## 14. சிறப்புப் பெயர்களை விளக்குதல்

(எ-டு) பயிலன்-ஒரு முனிவர்-38. யாழ்முனி-நாரதர்-50. மறைக்கிழவர்-மரீசி, அங்கிரா முதலிய ஏழு முனிவர்கள்-60. காற்றின் மாமகன்-பீமன்-195. அறத்தின் வேந்தன்-இயமன்-1390. கங்கை உயிர்த்தோன்றல்-பீஷ்மன்-3315. பஃறலை அரக்கன்-இராவணன்-3507. அம்பிகை புதல்வன்-திருதராஷ்டிரன்-3516. காங்கேயன்-கங்கையிற் பிறந்தவன்; முருகன்-4500. காங்கேயன்-பீஷ்மன்-4555. வேனிலஞ் செல்வன்-மன்மதன்-4853.

இவ்வாறு குறிப்பிட்ட பெயர்கள் இவரிவர்களையே குறிக்கும் என்பதை இவர் ஒவ்வோரிடத்தும் விளக்குகிறார். இவற்றால், ஒருவருக்கேயுரிய பல சிறப்புப் பெயர்களை மூலநூலாசிரியர் கையாண்டிருக்கும் விதமும் புலனாகின்றது.

## 15. நூல்நயம் சுட்டுதல்

பாடற்பகுதிகளில் காணும் நயமான கருத்துக்களைத் தனியே எடுத்துக்காட்டுவது இவர்தம் தனிச் சிறப்பாகும்.

(எ-டு) உலகமெல்லாம் தன் வயிற்றின் ஒரு பக்கத்தில் கிடப்பத் தான் ஒருத்தி வயிற்றில் உற்றோனென்பது ஒருநயம்-11

சாதகப் பறவை போன்று தன்னை நோக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு, மேகம் போன்ற கண்ணபிரான் கருணையென்னும் மழையை வழங்கினான். துளியை யுண்ணும் பறவைக்கு முகில் மழையை வழங்கு மென்றது ஒருநயம்-136. கண்ணபிரானைக் கண்டு நாணம் அழிந்த மகளிர் கூறியது. வில்லையே முறித்த உனக்கு வில்லின் நாணை ஒழித்திடுதல் அரிதோ என்றது ஒரு நயம்-151. உலகத்தையே காக்கும் கண்ணபிரானைக் காப்பதற்குத் தருமன் அனுப்பிய தேர்ப்படை சென்றது என்பது ஒரு நயம்-161. ஐந்து நடையையுடைய குதிரையைக் கால் நடையையுடைய அலைக்கு ஒப்பாகக் கூறுதல் தக்கதன்று என்றது ஒரு நயம்-240. கொண்மூ என்றதற்கு ஏற்பக் குயில் மாழ்க என்றதும், தோகைய ரோகை கூர என்றதும் நயம்-2880.

இவ்வாறு நயம்மிக்க பாடற்பகுதிகளை விளக்குகிறார். இலக்கிய இன்பம் நுகர்வோருக்கு இத்தகைய குறிப்புரைகள் பெரும் பயனளிப்பனவாம்.

## 16. உவமை முதலான அணிநயம் சுட்டுதல்

(எ-டு) கண்ணபிரான் ஏறிவந்த தேருக்கு மலையும், அம் மகளிருடைய சிந்தைக்குத் தாமரை மலரும், கண்களுக்குப் பாற் கடலும் உவமைகள்-158. அன்னப்பறவை சங்கத்திற்கும்,தாமரை முகத்திற்கும் உவமைகள்-163. கண்ணபிரானைக் கண்டு மொய்த்துக் கொண்ட மகளிருக்கு மேகத்தைக் கண்ட மயில்களின் கூட்டம் உவமை-170. கவட்டொடும் உயர்மரத்தைக் கைக்கொண்டுள்ள யானை மேலே மரங்களோடு கூடிய உதயமலைக்கும், அவ்யானையின் முதுகின் மீது விளங்கும் வெண்குடை அம்மலைச் சிகரத்தின்மீது எழும் சந்திரனுக்கும், அக்குடையைக் கண்டு பொங்கி எழும் சேனை அந்தச் சந்திரனைக் கண்டு பொங்கி எழும் கடலுக்கும் உவமைகள்-238.

இவ்வாறு அணியும் உவமைகளைப் பிற பாடல்களின் (242, 277-281, 311, 317, 340, 377, 494, 1014, 1076, 1153, 1170, 1177, 1216, 1223, 1490, 1781, 1887, 1913, 1922, 2705, 2915, 2881, 2887, 2889, 2895, 2914, 2921, 3019, 3021, 3022, 3023, 3164, 3166, 3167, 3170, 3178, 3334, 3335, 3339, 3419, 3425, 3438, 3441, 3451, 3497, 3519, 3566, 3601, 3714, 3722, 3911, 4066, 4276, 4279, 4283) அடிக்குறிப்பிலும் விளக்குகிறார்.

இச்செய்யுள் முற்றுருவக அணி-4, இது தற்குறிப்பேற்றவணி-546, 2884, 2886, இச்செய்யுள் வேற்றுப்பொருள் வைப்பணி-1162, வஞ்சப் புகழ்ச்சியணி-1878 எனப் பிற அணிகளையும் சுட்டுவர்.

முதல் இரண்டடிகளும் முறையே நந்தகோபனுக்கும் சந்திர னுக்கும் சிலேடை-3088. இப்பாடல் தாமரைக்கும் நகருக்கும் சிலேடை-3415, எனச் சிலேடைநயம் அமைந்த பாடலடி களையும் அங்கங்கே விளக்குவர்.

## 17. நாடு, நகர் முதலான இடவியல் விளக்கமளித்தல்

பாகவதத்தில் இடம்பெறும் நாடு, நகர், நதி, மலை, முதலா னவை இருக்குமிடம் பற்றிய விளக்கங்களையும் இவர் அங்கங்கே தருகின்றார்.

(எ-டு) கீகடதேசம் என்பது கயையை அடுத்துள்ளது என்பர்-42. மதுவனம்-இது மதுரையின் பக்கத்தில் யமுனை யாற்றங்கரையில் உள்ளது-133. ஆனத்தம்-ஆனர்த்தமென்னும் தேசம்; இது பாஞ்சாலத்திற்கு அருகில் உள்ளதென்பர்-162. மூதூர்-துவாரகை-163. சமந்த பஞ்சகம்-பரசுராமர் தம் தந்தைக்கு நீர்க்கடன் முடித்த புண்ணிய தலம்; இது குருக்ஷேத் திரத்திலுள்ளது-364.

இவ்வாறு பல இடவியல் விளக்கங்களைத் தருகின்றார்.

## 18. புராணக்கதை குறிப்புகள் தருதல்

(எ-டு) மனு, ருசிக்கு ஆஹூதியை மணம் செய்து கொடுக்கும் போது, 'இவளுக்குப் புத்திரன் பிறந்தால் என்னிடம் கொடுத்து விட வேண்டும்' என்று அவரிடம் வாக்குறுதி பெற்றார் என்ற கதை இங்கே அறியற்பாலது-723.

தேவர்கள் ஒருசமயம் அந்தணர் வேடம் பூண்டு வந்து விரோசனனது ஆயுளை இரக்க, விரோசனன், இரந்தவர் தேவர் என்று அறிந்தும் ஆயுளைக் கொடுத்தான் என்பது புராண வரலாறு-1978.

இவ்வாறு பல புராணக் கதைக் குறிப்புகளை விளக்கக் கருதி அங்கங்கே எழுதிச் சேர்த்துள்ளார்.

## 19. அரிய நூல்கள், மரபுகள், நூற்கொள்கைகள் சுட்டுதல்

மேற்காணும் பல குறிப்புகளுடன், சில அரிய நூல்களைச் சுட்டுதல், உலக வழக்கு மரபு இவற்றைச் சுட்டுதல், சில நூற் கொள்கைகளைச் சுட்டுதல் போன்றவற்றையும் இவர் எழுதி அமைக்கின்றார்.

(எ-டு) பிரகலாதன், அலர்க்கண் என்னும் இருவருக்கும் தத்தாத்திரேயரால் உபதேசிக்கப்பட்டது **ஆன்வீக்ஷிகி** என்ற தத்துவநூல்-31

வாழி வாளரச; வாழி என்பது தலைவன் பெயரைக் கூறு முன் வருதல் மரபு-346.

முல்லை கற்பிற்குச் சூடுதல் மரபு-3413.

சுக்கிரன் மழையை விளைவிக்கும்;

சுக்கிரனுக்கு மழைக்கோளென்னும் பெயருண்மையும் அறியற்பாலது-1318.

உபநயனத்தால் அந்தணர் இரண்டாவது பிறப்பை அடைகின்றாரென்பர்: அதனாலேயே த்விஜ: என்ற பெயர் வந்தது என்பர்-1968.

போர்க்களத்தில் வீரத்தோடு இறப்பவர் தேவராவர் என்பது நூற்கொள்கையாதலால் இங்ஙனம் கூறினார்-1883.

ஏகாதசியன்று விருதமிருந்தவர் துவாதசியில் ஒரு நாழிகைக்குள் பாரணை செய்தல் வேண்டும் என்பது ஈண்டு அறிதற்குரியது-2087. இவ்வாறு பல அரிய விளக்கங்களையும் உரிய விடத்தில் அமைக்கின்றார்.

## 20. பிற சிறப்புச் செய்திகள்

(எ-டு) முக்குணம்-சத்துவம், ராஜஸம், தாமதம்-1673. மூன்றவத்தை-ஜாக்ரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்பன-1673. முக்கடன்-தேவர் கடன், முனிவர் கடன், பிதிரர் கடன்-1730. முத்தழல்-ஆஹவநீயம், காருஹபத்தியம், தக்ஷிணாக்கினி-2070. மூன்று மெய்-ஸ்தூல, சூக்ஷ்ம, காரணமாகிய மூன்று சரீரம்-2529. அகங்காரம் மூன்று-சத்துவகுண அகங்காரம், ராஜஸகுண அகங்காரம், தாமஸகுண அகங்காரம்-4772. வருணம் நான்கு-பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்-1717. நான்கு ஆச்சிரமம்-பிரம்மசரியம், கார்ஹஸ்தியம், வானப் பிரஸ்தம், சந்நியாசம்-1717. ஆதாரம் ஆறு-மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஜ்ஞை என்பன, 323. ஐந்து-தீவு பிலக்கம், சான்மலி, குசத்தீவு, கிரவுஞ்சம்-

சாகம் என்பன-1263. ஏழு தீவுகள்--நாவல், இறலி, இலவு, கிரௌஞ்சம், குசை, தேக்கு, புட்கரம்-1120.

என இவை போன்ற பலவற்றின் விளக்கங்களையும் தருகிறார்.

பதினாறு உபசாரங்கள்-1952, நரகங்கள் இருபத்தெட்டு என்பன-1344, காசிபன் மனைவியர் பதின்மூன்று பேர்-1416 என, இவைபோன்றவற்றின் விளக்கங்களையும் அவ்வவ்விடங்களி லேயே விரிவாக வரைகின்றார். இவ்வாறே, மகதி:நாரதருடைய வீணைக்குப் பெயர்; விசுவாவசுவினது வீணைக்கு பிருகதீ என் றும், தும்புருவின் வீணைக்குக் கலாவதி என்றும், கலைமகள் வீணைக்குக் கச்சபீ என்றும் பெயர்-342 என அமையும் விளக்கக் குறிப்புகளும் மிகவும் பயனுடையனவாம்.

இத்தகைய சிறப்புச் செய்திகள் பலவற்றையும் இப்பாகவதப் பதிப்பு முழுவதிலுமுள்ள குறிப்புரைப் பகுதிகளில் காணலாம்.

உரையாசிரியர்களுக்குத் தேவையான பல துறை அறிவுக் கூறுகளைப் பெற்றவர் உ.வே.சா.இவருடைய பல்கலைப் புலமை, அகராதிக் கலையாகவும், இலக்கியச் சுவையாகவும், இலக்கண ஆராய்ச்சியாகவும், திருத்தமான பாடங்காணும் திறனாய்வாக வும் திகழ்கின்றது. கற்பிக்கும் நல்லாசிரியராகவும், திறனாய்வாள ராகவும், சொற்பொழிவாளராகவும் திகழ்ந்த இவர் பல நூல் களை முறையாகப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்து, உரையாசிரியர்களுக்குரிய பல ஏற்றங்களையும் பெற்றுயர்ந்தார். இவருடைய பெரும் பணிகளில் அழுக்காறு கொண்டு தூற்றியவர் சிலரும் அக்காலத்தே இருந்தனர். இவர்தம் இறுதிக் காலத்தில் மூப்பின் காரணமாக நூல்களைப் பதிப்பிக்கவும் குறிப்புரை எழுதவும், தம் மாணாக்கர்களை நியமித்துக் கொண்டு, அந்நூல் களைத் தம்முடைய பெயரிலேயே வெளியிட்டுக் கொண்டார் என்றும் கூறுவர். இதன் உண்மை இவருடைய வரலாற்றை முழு மையாக அறிந்தவர்களுக்கே புலப்படும்.

'டாக்டர் உ. வே. சா. பதிப்புப்பணி' என்னும் தலைப்பில் ஆய்வு செய்த ஆய்வாளர் இந்தப் பாகவதப் பதிப்பைப் பற்றிக் கூறுமிடத்து, ''திருப்பதி தேவஸ்தானத்தார் 1941 இல் உ. வே. சா. அவர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் செவ் வைச் சூடுவார் பாகவதத்தின் ஒரு பகுதிக்குக் குறிப்புரை எழுதி னார்; பிற்பகுதிக்கு வி. மு. சுப்பிரமணிய ஐயர் எழுதினார். உலகப் போர் காரணமாக நிறுத்தி வைக்கப்பெற்ற பதிப்புப்பணி மீண்டும் தொடங்கி, 1949 இல் முதற்பகுதியும் 1953 இல் அதன்

இரண்டாம் பகுதியும் வெளியிடப் பெற்றன'' என விளக்கு கிறார்.[1] ஆயின், அச்சிட்ட முதல் பாகத்தில், ஐயரவர்களின் புதல்வர் சா. கலியாணசுந்தரம் தம் முகவுரையில் எழுதியதை நோக்க இப்பாகவத நூல் முழுமைக்கும் ஐயரவர்களே குறிப்புரை முதலியன எழுதி முடித்துக் கொடுத்தார் என்பது தெளிவா கிறது.

''..... அப்பால் செட்டியாரவர்கள் விரும்பியபடி எந்தையா ரவர்கள் திருமலை-திருப்பதி தேவஸ்தானம் கமிட்டியாருக்குப் பாகவதம் பதிப்பிக்க வேண்டிய விஷயமாக ஒரு கடிதம் எழுதி யனுப்பினார்கள். பிறகு ஒரு நல்ல தினத்தில் எந்தையார் பாக வதத்திற்குக் குறிப்புரை முதலியன எழுதத் தொடங்கிச் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழாசிரியர் ம-ள-ள-ஸ்ரீ வி. மு. சுப்பிரமணிய ஐயர் பி. ஒ. எல்., அவர்களையும், திருவல்லிக்கேணி தேசீயப் பெண்கள் உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியர் ம-ள-ள-ஸ்ரீ வித்வான் அ. வைத்தியநாதையரவர் களையும் உதவிக்கு வைத்துக் கொண்டு சில மாதங்களில் எழுதி முடித்தார்கள்'' என்பர் சா. கலியாணசுந்தரம்.[2]

இம் முதல்பாகம் அச்சாகி வருகையில் ஒப்பு நோக்குதல் முதலிய உதவிகள் புரிந்ததற்காக மேற்கூறிய இருவருக்கும் சா. கலியாணசுந்தரம் தம் முகவுரையில் நன்றி கூறியுள்ளார். இந்நூலின் இரண்டாம் பாகம் அச்சான போது அவர் காலமாகி விட்டதால், திரு. வி. சுப்பிரமணிய ஐயர் இதன் அச்சுப்பணியை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளார். இது, இரண்டாம் பாகம் முகவுரையால் நன்கு விளங்கும்.

செவ்வைச் சூடுவார் பாகவதம் இரண்டு பாகங்களின் குறிப்புரைப் பகுதிகளை நோக்கின் அவை ஐயரவர்களாலேயே எழுதப் பெற்றன என்பது தெளிவாகும். முதல் பாகம் முகவுரையும் இதற்குச் சான்றாகும்.

---

1. பூ. சொல்விளங்கும் பெருமாள், டாக்டர் உ. வே. சா. பதிப்புப் பணி-ஓராய்வு, ப. 2.
2. செவ்வைச் சூடுவார் பாகவதம், முதற்பாகம், முகவுரை, பக். vii

# பாகவதப் பதிப்பில் பாடவேறுபாடுகள்

பாடம் என்பது நூலாசிரியரின் உண்மைத் தொடராகிய மூல பாடம் ஆகும். பாடம் வேறுபடுவது பாட வேறுபாடு எனப் படுகிறது. அதாவது, நூலாசிரியரின் உண்மைத் தொடர் படிப் போராலும் எழுதுவோராலும் வேறுபட்டு வழங்குவது பாட வேறுபாடு ஆகும்.

மூல நூலாசிரியரின் ஒரு சொல்லுக்கு மாறாக வரும் பிறிதொரு சொல்லைப் பாட வேறுபாடு எனக் குறிப்பர். உரை யாசிரியர்கள் 'என்பதும் பாடம்', 'எனவும் பாடம்' என இவ்வாறு 'பாடம்' என்ற சொல்லாலேயே பாடவேறுபாட்டைக் குறித்தனர். அதாவது, இதற்கு இப்படியும் ஒருபாடம் கூறப்படு கிறது என்பதை இவர்கள் குறித்தனர்.

பின்னாளில், சுவடிகளை அச்சில் பதிப்பித்த சி. வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாதையர், ச. வையாபுரிப் பிள்ளை போன்றோர் பாடபேதம், ரூபபேதம், பிரதிபேதம் போன்ற சொற்களால் பாடவேறுபாட்டைக் குறித்தனர்.

பாடவேறுபாடு என்பது உரை காணுதற்கு முந்திய மூலநூல் நிலையில் ஏற்பட்டுள்ளது. இவை ஏடு பெயர்த்து எழுதுவோரால் ஏற்பட்டவை. இப் பாடவேறுபாடுகளை அந்தந்தச் சுவடிகளில் உள்ளவாறே எடுத்துக் காட்டுவது பிற்கால ஆய்வுக்குப் பயனுடையதாகும். அவ்வாறு பின்னால் அராய்வோர் மூலநூல் ஆசிரியர் கொண்ட பாடம் இவ்வகையால் இதுவாகவே இருக்கும் எனத் துணிவதற்கும் இவை பயன்படும்.

சுவடிப் பதிப்புகளில் பாடவேறுபாடு காட்டாவிடின் அதன் பின்னர் ஆராய்ச்சிக்கே இடமில்லை. ஆறுமுக நாவலருடைய பதிப்புகள் யாவும் பிழையற்ற பதிப்புகள் என்ற சிறப்புடையன வாயினும், அவர் தம் பதிப்புகளில் பாடவேறுபாடுகளைக் காட்டினாரில்லை. அதனால், பல அரிய பாடங்கள் நமக்குக் கிடைக்கவில்லை என்பதே உண்மை. இவற்றை நன்குணர்ந்த உ. வே. சாமிநாதையர் தம் பதிப்புகளில் தவறாமல் பாடவேறு பாடுகளைக் குறித்துள்ளார்

## பல சுவடிகளை ஒப்பிடுதல்

உ. வே. சா. ஒரு நூலைப் பதிப்பிக்கும் முன் பல நூல்களையும் சுவடிகளையும் ஒப்பிட்டு அறிந்துணர்ந்து தெளிவு கொள்வது வழக்கம். அவ்வாறே இந்தப் பாகவதப் பதிப்பினைச் செய்வதற்கு முன் பல ஆண்டுகளாக இதற்காகப் பல ஏட்டுச் சுவடிகளை ஒப்பிட்டு வந்துள்ளார்.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சுவடிகளையும் இவர் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். அவற்றுள் ஒன்றன் இறுதியில் ''இப்படிப்பட்ட பாகவதம் கலியுகம் 4892-க்குச் சாலிவாகன சகாப்தம் 1713-க்கு மேல் செல்லாநின்ற விரோதிகிருது வருஷம் கார்த்திகை 27 ஆம் தேதி சுக்கிரவாரம், சதுர்த்தசி, ரோகிணி, நக்ஷத்திரம் சித்தநாம யோகமும் வணிகர்ணமு மத்தமன புண்ணிய தினத்திலே மகர லக்கினத்தில் செஞ்சி நகரத்தில் வேளாளர்களில் துளுவ வேளாளர்களில் ஸ்ரீமன் நாராயண சுவாமி கோத்திரத்தில் வீரராகவ பிள்ளை சற்புத்திரரான ராமசாமி அவர்களுக்குக் கடலூரிலிருக்கும் வேளாளரில் குருவப்பிள்ளை எழுதிக் கொடுத்த ஸ்ரீபரம பாகவதம் முடிந்தது. மார்க்கண்டாயுசு பெற்றிருக்க வேண்டியது'' (உ. வே. சா. நூலகச் சுவடி எண்: 462) என்னும் தொடர் எழுதப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் மட்டுமல்லாமல் வட மாவட்டங்களிலும் இத்தகைய ஏடுகள் பல பலரால் எழுதி வைத்திருந்ததை அறிய முடிகின்றது. இத்தகைய சுவடிகள் பலவற்றை இவர் தொகுத்து ஆராய்ந்துள்ளார்.

ஐயரவர்களின் பதிப்புகளின் சிறப்பிற்கு அடித்தளமாக அமைந்த பல கூறுகளில் ஒன்று, அவர் தரும் பாடவேறுபாடுகள். பல ஏடுகளை ஆராய்ந்து, பிழையின்றிப் படித்து, மூலபாடம் காண்பதென்பது எளிய பணியன்று. இப்பணியில் இவர் அயராது உழைத்தவர். இப் பாகவதப் பதிப்பிலும் பல ஏடுகளை ஆராய்ந்து, மூலபாடம் அறிந்தபின், பாடவேறுபாடுகளைப் 'பிரதிபேதம்' (பி-ம்) எனக் குறிப்பிட்டுள்ளார். ஐயாயிரம் பாடல்களுக்குப் பல பிரதிகளில் காணப்பெறும் பாடவேறுபாடுகளைக் கண்டறிவது என்பது அவரைப் போன்ற அனுபவமுள்ளவருக்கே இயலுவதாகும்.

முதன் முதலில், இவருக்கு முன் அச்சிட்ட பாகவதப் பதிப்பில் மூல நூலாசிரியரின் பெயர் மாறியிருப்பதையும் பல பிழையான பாடங்களும் மூலத்திற்கு ஒவ்வாத பல பகுதிகளும் இருந்ததையும் ஐயரவர்கள் கண்டறிந்தார். சாட்டாக, பத்தாம் கந்தத்தைச் சேர்ந்த பிருகுமுனி சென்ற அத்தியாயத்தில் காணப்படும் சில செய்யுட்கள் ஏட்டுச்சுவடிகளில் காணப்பெறாததையும், அவை முதனூ லுக்கு ஏற்பஇல்லாதிருந்ததையும் கண்டறிந்தார் என்பர்.

மேலும், **1924-27** ஆம் ஆண்டுகளில் சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியில் முதல்வராக இருந்த பொழுதும் ஐயரவர்கள் தம்மிடமிருந்த பழைய அச்சுப் பிரதியையும் ஏட்டுச்சுவடி களையும் ஒப்பு நோக்கி வந்துள்ளார். அப்பொழுது அந்த ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு திருத்தப்பட்ட பாடங்களைத் தம் மாணாக்கர்களுக்கும் பாடம் சொல்லி வந்துள்ளார். அது முதலே பாட பேதங்களும், திருத்தங்களும் குறிக்கப் பெற்று வந்தன என்பதை வி. மு. சுப்பிரமணிய ஐயர் குறிப்பிடுவர்.[1]

எனவே, ஐயரவர்கள் தமது பத்தொன்பதாம் வயதில் பாகவதம் படிக்கத் தொடங்கியது முதல், தொடர்ந்து அறுபது ஆண்டுகளாக இப் பாகவத ஏடுகளை ஆராய்ந்து, தெளிந்து உணர்ந்து பாடவேறுபாடு குறித்துவைத்து வந்ததை அறிகிறோம். இவற்றை நோக்குமிடத்து, இத்துறையில் அவர் கொண்டிருந்த அயராத உழைப்பும் ஆர்வமும் நம்மைத் திகைக்க வைக்கின்றன.

செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பில் தாம் பயன்படுத்திய ஏடுகளின் விவரம் குறித்து ஐயரவர்கள் ஏதும் குறிப்பிடவில்லை. அதனால் அவற்றின் தன்மை, நிலை குறித்து நாம் எதுவும் அறிய இயலவில்லை. இருப்பினும், இவருக்குக் கிடைத்த பாகவதச் சுவடிகளுடன், அக்காலத்தில் 'இராசகோபாலபிள்ளை' அச்சிட்ட பாகவத நூலையும் இவர் ஒப்பிட்டு ஆராய்ந்தார் எனத் தெரி கிறது. இவ்வகையில் இவர் கொண்ட தெளிவுகள் சிலவற்றை இவர் பதிப்பின் வழி நாம் உணரலாம்.

## 1. உ. வே. சா. கொண்ட மூலபாடம்

இவர் பல பாகவதச் சுவடிகளை ஒப்பு நோக்கி ஆராய்ந்து, மூல பாடத்தை நிறுவியுள்ளார். ஓரளவு பிழையற்ற, திருந்திய

---

1. செவ்வைச் சூடுவார் பாகவதம், இரண்டாம் பாகம், முகவுரை p. iii

குறிப்பு : **ஐயரவர்கள் காட்டும் பாடவேறுபாடுகள் அனைத்தும் பின்னிணைப்பில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.**

சுவடி ஒன்றை முதன்மையாக வைத்துக் கொண்டு அதிலுள்ள பாடங்களைத் திருத்தமாக மேற்கொள்வது இவர் பழக்கம். அது போன்றே இப்பதிப்பிலும் செய்திருத்தல் வேண்டும். தாம் மூல பாடமாகக் கொண்டதைத் தவிர வேறு பாடங்கள் சொற் பொருள் அமைப்பில் பொருந்தி வந்த நிலையில் அவற்றை அங்கங்கே பாட வேறுபாடாகச் சுட்டுகின்றார்.

**2. இராசகோபாலபிள்ளை பதிப்பிலுள்ள மூலபாடமே உ. வே. சா. பதிப்பிலும் மூலபாடமாக அமைதல்**

இவர் பதிப்புக்கு முன் இராசகோபாலபிள்ளை அச்சிட்ட பாகவதம் முழுவதும் பிழையென இவர் தள்ளினாரில்லை. அச்சிட்ட பாகவதத்திலுள்ள பல மூலபாடங்கள் இவருக்கும் மூல பாடமாகக் கிடைத்துள்ளன. அவற்றை அப்படியே மேற் கொண்ட இவர், அவையல்லாமல் புதிதாகக் கிடைத்த பாடங் களைப் பாட வேறுபாடாகத் தருகின்றார். காட்டாக, 11:2 கலையரும்பு-என இவர் மூலபாடமாகக் கொண்டதே முன்பு அச்சிட்ட பாகவதத்திலும் மூலபாடமாக உள்ளது. இதற்கு மாறாக, 'கலையரும்பிய' என்னும் புதிய பாடம் ஒன்றும் இவருக்குக் கிடைத்துள்ளது. இதை இவர் பாட வேறுபாடாகக் காட்டுகின்றார்.

இவ்வாறு, முன்பு அச்சிட்ட பாகவதத்திலுள்ள மூல பாடங்களே இவருக்கும் மூலபாடமாக அமையுமிடங்கள் பல வற்றை இவருடைய பதிப்பில் காணலாம். அவ்விடங்களி லெல்லாம் இவருக்குக் கிடைத்த 'புதிய பாடங்களையும்' இவர் பாடவேறுபாடாகக் குறிக்கத் தவறவில்லை.

பின்னிணைப்பில் 'புதிய பாடம்' என வரும் பாடவேறுபாடு கள் அனைத்தும் ஐயரவர்களுக்குக் கிடைத்த புதிய பாடங் களாகும். எனவே, இவர் தமக்கு முன்பு அச்சிட்ட நூலே யல்லாமல் பல ஏட்டுச்சுவடிகளையும் ஒப்பு நோக்கி மூல பாடத்தை நிறுவியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

**3. உ. வே. சா. குறிப்பிடும் பாடவேறுபாடுகளே இராசகோபால பிள்ளை பதிப்பில் மூலபாடமாக அமைதல்**

உ. வே. சா. பாகவதப் பதிப்பில் குறிப்பிடத்தக்கது, அவரால் பாடவேறுபாடாகக் கூறும் பல பாடங்கள் இராச

கோபாலபிள்ளை பதிப்பித்த பாகவதத்தில் மூல பாடங்களாக அமைவநாகும். இவ்வாறு மிகப் பல இடங்கள் அமைகின்றன. காட்டாக,

2:4 'பாமடந்தைதற்' என இவர் மூலபாடமாகக் கொண்டு அவ்விடத்தில் 'பாமடந்தையள்' என்பதைப் பாடவேறுபாடாகச் காட்டியுள்ளார். 'பாமடந்தையள்' என இவர் கூறும் பாடவேறு பாடே இராசகோபால பிள்ளைப் பதிப்பில் மூலபாடமாகப் பாடலுள் அமைந்துள்ளது.

**4. முன் அச்சிட்ட பாகவதத்தில் காட்டப்பெறாத புதிய பாடங்களைச் சுட்டுதல் என்பதுடன், அச்சு நூலிலுள்ள பாடங்களை ஏற்காதிருத்தல்**

உ.வே.சா. பதிப்பித்த பாகவதத்தில் தாம் கொண்ட மூல பாடத்துடன் புதிய பாடவேறுபாடுகளைக் காட்டுமிடங்களில், முன்பு அச்சிட்ட நூலிலுள்ள பாடங்கள் தவறானவை என்று தாம் கருதிய நிலையில் அவற்றைப் பாடவேறுபாடாகச் சுட்டவில்லை. காட்டாக,

3:1 'போனடப்ப' என்ற மூலபாடத்திற்கு மாறாகப் 'போனடந்து' என்ற புதிய பாடத்தை இவர் காட்டுகின்றார். ஆயின், 'போனடிப்ப' என்பது முன்பு அச்சிட்ட நூலிள்ள மூல பாடமாகும். இதை உ. வே. சா. ஒரு பாடமாகக் கொள்ளவில்லை. அதனால் இவ்வாறு அமைவனவற்றைப் பாடவேறு பாடாகவும் காட்டவில்லை. இவ்வாறு தாம் பிழையென அறிந்த பல பாடங்களை இவர் பாடவேறுபாடாகக் காட்டவில்லை. தாம் சரியென அறிந்த பிற பாடங்களை மட்டுமே பாடவேறு பாடாகக் காட்டுகின்றார்.

733:4 மென்மொழித்திதிக்கை-மென்மொழித்தக்கை (பு.பா) [மென்மொழித் திதீக்கை (இ.ப.)]

750:1 இழைத்த காலை-இழைத்தலோடும் (பு. பா) [இழைக்குங்காலை (இ.பா.)]

778:3 மாயுமல ரண்ணறலை மாயுர விறும்பைமலர் மாலைகள் வயங்கக்-மாலைகள் குலாவ (பு.பா.) [மாயுற விறும்பைநறு மாலைகள் வயங்கக் (இ.பா.)]

878:2 ஆடல் வாளரக்கனால்-ஆடல் வாளியரக்கரால் (பு.பா.) [ஆடல் வாளரக்கரால் (இ.பா.)]

*1179:1* பழுத்துக் காட்டகத்-பழுத்த காட்டகத்தே (பு.பா.) [பழுத்த காட்டகத் (இ.பா.)]

என அமையுமிடங்களைக் காண்க. இவ்வாறு அச்சிட்ட பாகவதத்திலுள்ள (இ.பா. எனச் சுட்டப்பட்டவை) பல பாடங்களை ஐயரவர்கள் ஏற்கவில்லை எனத் தெரிகிறது.

## 5. சில பாடங்களை ஏற்பதும், சில பாடங்களை விடுவதும்

இவருக்குமுன் அச்சிட்ட பாகவதத்திலுள்ள பாடங்களில் ஒரே பாடலடியில் உள்ள சில குறிப்பிட்ட பாடங்களை மட்டும் இவர் ஏற்று, அவற்றைப் பாட வேறுபாடாகக் காட்டுவதும், அவற்றுள் பிழையானவற்றை இவர் பாடமாகக் கொள்ளாமல்-அவற்றைப் பாட வேறுபாடாகக் காட்டாமல் விடுவதும் இவண் குறிப்பிடத்தக்கன. காட்டாக,

*2913:4* 'வளமுலைக் குவட்டில்' என இவர் மூலபாடம் கொண்டவிடத்து, 'வளமுலைக்குவடு' என்ற புதிய பாடமொன்றைச் சுட்டுகிறார். இதுவே முன்பு அச்சிட்ட பாகவதத்தில் 'வனமுலைக்குவடு' என மூலபாடமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இதில், 'குவடு' என்பதை ஐயரவர்களும் ஒரு பாடமாக ஏற்றுள்ளார். ஆனால், 'வனமுலை' என்ற பாடத்தை இவர் ஏற்கவில்லை. 'வளமுலை' என்பதையே சரியான பாடமாகக் கொள்கின்றார். 'வனமுலை' என்பதை இவர் பாடவேறுபாடாகவும் காட்டவில்லை. இதே போன்று,

*2726:4* 'நித்தலும் வீதிதோறும் நெய்விளை யாடி னாரே' என்ற பாடலடி, 'நெய்த்த பேரன்பு போர்ப்ப நெய் விளையாடல் செய்தார்' என்பதாக இராசகோபாலபிள்ளை முன்பு அச்சிட்ட நூலில் உள்ளது. இப்பாடலில் முதல் மூன்று சீர்களான 'நெய்த்த பேரன்பு போர்ப்ப' என்பதை ஐயரவர்கள் ஒரு பாடமாகக் கொள்கிறார். அதைப் பாடவேறுபாடாகவும் காட்டுகின்றார். ஆயின், இறுதியிலுள்ள மூன்று சீர்களான 'நெய்விளையாடல் செய்தார்' என்பதை ஐயரவர்கள் ஒரு பாடமாக ஏற்கவில்லை. அதைத் தவறெனக் கொண்டு, பாடவேறுபாடாகக் காட்டாமலும் செல்கின்றார். இவ்வாறு ஐயரவர்கள் ஏற்காத பல பாடங்கள் இராசகோபாலபிள்ளை முன்பு அச்சிட்ட பாகவத்ததில் உள்ளன.

### 6. ஒரு மூலபாடத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பாடவேறுபாடு களைக் குறிப்பிடுதல்

ஐயரவர்கள் தமக்குக் கிடைத்த நல்ல பாடங்கள் அனைத்தையும் பாடவேறுபாடுகளாகக் குறித்துள்ளார். ஒரு மூல பாடத்திற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் கிடைப்பின் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அங்கேயே குறிக்கின்றார்.

| (எ-டு) | மூலபாடம் | | பாட வேறுபாடுகள் |
|---|---|---|---|
| 2:4 | பாடமடந்தைதற் | - | பாமடந்தையள், பாமடந்தையர், பாமடந்தைமுன் |
| 192:1 | அறநெறிகெழுமிய | - | அறநெறி தவழ்தர, அறநெறி தழுவிய |

ஐயரவர்கள் பல சுவடிகளையும் ஒப்புநோக்கி ஆராய்ந்து பதிப்பித்தார் என்பதற்கு இவையனைத்தும் சான்றாகும்.

இருப்பினும், இராசகோபாலபிள்ளை பதிப்பைத் தாம் பாடவேறுபாடு காணப் பயன்படுத்தியதாகவோ, அல்லது அப் பதிப்பிலுள்ள மூலபாடம், பாடவேறுபாடு என்பதாகவோ ஐயரவர்கள் எங்கும் குறிக்கவில்லை. தாம் மூலபாடமாகக் கொள்ளாதவற்றைப் பாடவேறுபாடு (பி—ம்) என்று மட்டுமே இவர் குறித்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

### பாட வேறுபாடுகளின் பல்வேறு நிலைகள்

ஐயரவர்கள் இப்பதிப்பில் காட்டும் பாடவேறுபாடுகளை வெவ்வேறு வகைகளில் பிரித்தறியலாம். ஒலி மாறுபடுவன, சொல்லும் அதன் பகுதியும் மாறுபடுவன, தொடர் அல்லது வரி மாறுபடுவன, அத்தியாயத் தலைப்பில் மாறுபடுவன என்ற நிலைகளில் இவை அமைகின்றன.

### 1. ஒலி மாறுபாடு

உயிர் ஒலி வேறுபாடு, மெய்யொலி வேறுபாடு என இரு வகையிலும் இத்தகைய பாடவேறுபாடுகள் அமையும். காட்டாகச் சிலவற்றை நோக்குவோம்.

| பா. வரி | மூலபாடம் | பாடவேறுபாடு |
|---|---|---|
| 20:3 | மகிழ்தரு | —மகிழ்தர (உ > அ) |
| 21:4 | சத்துவத்தால் | —சாத்துவத்தால் (அ > ஆ) |

| | | |
|---|---|---|
| 23:2 | விராட்டுவை | —விராட்டினை (உ>இ) |
| 27:3 | அவயவமாம் | —அவையவமாம் (அ>ஐ) |
| 45:2 | வருந்தி | —வருந்து (இ>உ) |
| 116:1 | கைக்கிரி | —கைக்கரி (இ>அ) |
| 162:4 | விளிம்புடுத்து | —விளிம்படுத்து (உ>அ) |
| 166:1 | நகைமுடி | —நகுமுடி (ஐ>உ) |
| 171:3 | உறைந்து | —உறைந்த (அ>இ) |
| 194:3 | ஓதலன் | —ஓதிலன் (அ>இ) |
| 295:4 | தாழ்கலா | —தாழ்கிலா (அ>இ) |
| 307:1 | சவனன் | —சவுனன் (அ>உ) |
| 411:2 | என்ன | —என்னே (அ>ஏ) |
| 752:2 | சீற்றம் | —செற்றம் (ஈ>எ) |
| 931:4 | நிடாதனாயினான் | —நிடதனாயினான் (ஆ>அ) |
| 1524:4 | குலந்தழு தானரோ | —குலைந்தழிந் தானரோ (உ>இ) |
| 1794:3 | குற்றம் | —கொற்றம் (உ>ஒ) |
| 2817:4 | வீறர்தவத்தா | —வீறார்தவத்தா (அ>ஆ) |

## மெய் கெடுதல், தோன்றல், மாறி அமைதல்

| | | |
|---|---|---|
| 22:4 | வாமமூர்த்தியை | —வாமமுத்தியை |
| 77:2 | தீந்தது காணா | —தீய்ந்தது காணா |
| 125:4 | சோருவார் | —சோர்குவார் |
| 330:1 | மூசும்பனி | —மூசுபனி |
| 2874:3 | சீதாமன் | —சீர்த்தாமன் |

## ஒலி மாறிவரல்

ஏடுகளை எழுதுவோர் சில இன ஒலிகளை வேறுபடுத்தி அறியாத காரணங்களாலும் பல பாடவேறுபாடுகள் அமைந்து விடுகின்றன. விகாரப் பட்டு—இனஒலி அமைதலும், ரகர றகர வேறுபாடுகளும், இன்னபிற வேறுபாடுகளும் என இவை வெவ்வேறாக அறியப் பெறுகின்றன. காட்டாக,

ர-ற

524:2 வாயிலா றிறந்தேகி—வாயிலா ரிறந்தேகி (றி-ரி)

730:3 புலத்தவர்க் கொருத்தியை—புலத்தவற் கொருத்தியை (ர்-ற்)

845:3 நிலாச்சொரி தூசு—நிலாச்செறிதூசு (ரி-றி)

1199:2 நிரவி —நிறுவி (ர-று)

ன, ண; ள, ன; ங-ஞ; ல-ள

450:3 எனமுறை —எண்முறை (ன-ண)

495:4 கவளமால்களிறு —கவனமால்களிறு (ள-ன)

3268:3 உம்மை யிங்ஙன் —உம்மை யிஞ்ஞன் (ங-ஞ)

501:4 விலங்கினவால் —விளங்கினவால் (ல-ள)

க. க; த.ந

231:4 வளை கலிக்கவே —வளை கலித்தவே (க-த)

650:1 விளைவதை —வினைவகை (ள-ன) (த-க)

304:3 பொருந்துவேன் —பொருத்துவேன் (ந-த)

306:3 விரித்த புல் —விரிந்த புல் (த-ந)

பேச்சு வழக்காக ஒலி மாறுதல்

836:2 கிண்கிணி —கிங்கிணி

எழுத்து முன்பின் மாறி வருதல்

729:4 மக்களோர் பதினறுவரை—மக்களோரறுபதின்மரை

865:1 நஞ்சு குமிழி —நஞ்சு குழுமி

1458:3 உன்னுறு மபரமா நிசி—உன்னுறு பரமமாநிசி

ஒத்த ஒலியுடைய எழுத்து வேறுபாட்டால் சொல் மாறிவரல்

276:2 ஆட்டினுக்கெழுந்—ஆட்டினுற்றெழுந் (க்கெ—ற்றெ)

360:1 ஈட்டுமாதவங் —மீட்டுமாதவங் (ஈ-மீ)

385:1 துன்னிநீ —துன்னினை (நீ-னை)

434:3 சொல்லலும் —சொற்றலும் (ல்ல-ற்ற)

| | | |
|---|---|---|
| 4 | விளம்புவான் | —விளம்புமால் (வா-மா)(ன்-ல்) |
| 1199:2 | முட்பட | —முற்பட (ட்-ற்) |
| 1984:4 | வென்றியாக்கு | —வென்றியாற்கு (க்கு-ற்கு) |
| 2430:2 | பாவையெங்கே | —பாவை யெங்ஙன் (ங்கே-ங்ஙன்) |
| 3566:4 | திகிரி மாயோன் | —திகிரி மாலோன் (யோ-லோ) |

## 2. சொல் அமைப்பில் வேறுபாடு

பாடவேறுபாடுகளில் பல சொற்கள் மாறுபட அமைகின்றன. சொல் உறுப்புக்களான பகுதி, விகுதி, கால இடைநிலை, சாரியை, எச்சம், முற்று, வேற்றுமை உருபு, இடைச்சொல், சுட்டு, திணை பால் விகுதி சேர்தல், மாறுதல் எனப் பலவாறு அமைந்து பல பொருள் மாறுபாடுகளையும் தோற்றுவிக்கின்றன. மூலபாடத்திலுள்ள சில சொற்கள் நீக்கப்பெற்றும், மூலபாடத்தி லில்லாத சில சொற்கள் சேர்க்கப்பெற்றும் பல பாடவேறுபாடு கள் அமைகின்றன. காட்டாகச் சிலவற்றை நோக்கலாம்.

| | | |
|---|---|---|
| 29:3 | எடுத்ததை | —எடுத்தமை |
| 39:4 | சொற்றான் | —சொன்னான் |
| 45:1 | நல்லறிவானவன் | —நல்லறிவாயவன் |
| 64:4 | தடநதியாடினாரே | —தடநதியாடுவாரால் |
| 70:1 | காக்கு மன்னன் | —காக்கு மேந்தல் |
| 106:1 | வாயிலின் | —வாய்தலின் |
| 137:1 | தாமநீள் மறுகில் | —தாமநன் மறுகில் |
| 315:1 | கூறினை | —கூறினன் |
| 336:4 | கழிக்கின்றாரே | —கழிக்கின்றாரால் |
| 401:4 | அறிந்திலார்களே | —அறிந்திலார்களால் |
| 409:3 | உறுவர் | —முனிவர் |
| 462:3 | முன்று | —மும்மை |
| 523:2 | மறை நான்கு | —தவ நான்கு |
| 904:4 | விளம்புவான் | —விளம்புமால் |
| 935:4 | மாலே யென்றான் | —மாய னென்றான் |
| 959:3 | சொல்லுவாள் | —சொல்லுமால் |
| 1221:3 | அதையருந்தினார்கள் | —ஆங்கருந்தினார்கள் |
| 4 | பரிமளிக்கும் | —பரிமளிப்பர் |
| 1385:4 | மால்பதம் | —மால்கழல் |

*1809:1* வண்ணத்தண்ணல் —வண்ணத்தெம்மான்
*2647:4* திருமணம் புணர்ந்தான்—திருமணம் புரிந்தான்
*2953:2* முனிவு செய்திடார் —முனிவு செய்கலர்
*2978:2* ஈன்ற வண்ணல் —ஈன்ற நம்மான்

**வடசெல்லாதல்**

*361:2* ஒருமூதண்ட வுருவனாய்—ஒருமூதண்ட ரூபியாய்

**உவமஉருபு மாற்றம்**

*1102:2* தழையுமா போல —தழையுமா மான

**3. தொடர் அடி முதலான மாறி வருதல்**

ஒரு பாடலிலுள்ள பல சொற்கள் தொடர்ந்து வேறுபட்டு மாறி அமைவதை இவர் பல சுவடிகளில் அறிந்து குறித்துள்ளார்.

(எ-டு)

*24:4* நவிற்றினா ராயண னாமால் (மூலபாடம்)—
நவிலினா ராயண னெனுமால் (பாடவேறுபாடு)

*36:3* கடுந்திறற் கூற்றுவ னெஞ்சம் (மூலபாடம்)—
கடுந்திற லோனெஞ்சு கதழ்ந்த (பாடவேறுபாடு)

*99:3* திகழ்சக மில்லை யானால் (மூலபாடம்)—
திகழ்சக மின்றே லென்னே (பாடவேறுபாடு)

*1197:2* சிருங்கி யென்னுமூ வெற்பும் (மூலபாடம்)—
சிருங்க மென்னுமோர் வெற்பும் (பாடவேறுபாடு)

ஒரே பாடலில் ஓரடி அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட அடிகளே மாறி வருவனவற்றையும் இவர் பாடவேறுபாடுகளாகக் காட்டு கின்றார்.

(எ-டு)

*49:4* இலகியெம்முளந் தெளிவுறப் பெற்றில தின்னும்
(மூ.பா)—
இலகியெம்முளந் தெருடரப் பெற்றில மின்னும்
(பா.வே.)

141:4 முறிக்க கில்லா யென்ச்சிலர் கழறிச் சோர்வார் (மூ.பா)
முறித்தி லாய் நீ யென்ச்சிலர் கருதிச் சொல்வார்
(பா.வே.)

283:3 குலவ ரைத்தடங் குடுமி கொண்டசேல் (மூ.பா.)—
நிலவ ரைப்பினி னீடு வெம்பகை (பா.வே.)

4 வலனு யர்த்தவாள் வழுதி மானவே (மூ.பா.)—
வலன ழித்தவாண் மன்னர் மன்னனே (பா.வே.)

448:3 ஞானம்வந் துற்றிடு முலகமீ ரேழும் (மூ.பா.)—
ஞானம்வந் துறமுலகி யாவையும் நன்கு (பா.வே.)

408:3-4 அன்னதொர் சாபந் தன்னை யுத்தவ னடையானாகி
மன்னின னென்று மன்னன் வழங்கமா முனிவன்
கூறும் (மூ.பா.)—
அன்னவெந் திறல்கொள் சாப முத்தவ னடைத லின்றி
மன்னின னெனக்கடாவ மன்னன் மாமுனிவன் கூறும்
(பா.வே.)

2603:3-4 கூரிருஞ் சுடர்க் கொற்றவன் குதன்முத லாய
ஓரிருந்தவ மூவரை யுயிர்த்தன னுவப்பால் (மூ.பா.)—
போரி யன்றதன் புகழையார் புகல்பவர் புவிமேல்
சீரி யன்றவன் மதலைதன் றிறத்தையுந் தெரிக்கின்ற
(பா.வே.)

4236:3-4 நிற்றியோ நெறியி னென்ன நெற்றியிற் சண்ணே
போல
மற்றிரு கண்ணுஞ் சேந்து மண்டழற் சூலங்
கொண்டான் (மூ.பா.)—
நிற்றிநீ தூய்மை நீத்தா யன்னலு நீடு செந்தீ
நெற்றியிற் கண்டி றந்து நீடழ றேற்றி நின்றான்
(பா.வே.)

என் இவ்வாறு வருமிடங்கள் சுட்டத்தக்கன.

## 4. தலைப்பில் மாறுபடுதல்

நூலினுள் காணப்படும் அத்தியாயங்களின் தலைப்பிலும் சில வேறுபாடுகள் கிடைத்தவற்றை ஐயரவர்கள் குறிப்பிடுகின்றார். காட்டாக,

முதல்கந்தம்-ஐந்தாம் அத்தியாயத் தலைப்பு—'பரிட்சித்தின் தோற்ற முரைத்த அத்தியாயம்' என்பதில் 'பரிட்சித்துவின்' என்ற பாடத்தை இவர் அடிக்குறிப்பில் சுட்டுகிறார்.

பத்தாம் கந்தம்-53 ஆம் அத்தியாயத் தலைப்பு—'இறந்த மக்களைத் தந்த அத்தியாயம்' என்பதற்கு மாறாக—'அந்தணனுக்குப் பிள்ளைகளைக் கொண்டுவந்து கொடுத்த அத்தியாயம்' எனக் கிடைத்த பாடத்தையும் இவர் அடிக்குறிப்பில் சுட்டுகிறார்.

## பதிப்பில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் சில

செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம் முழுவதையும் ஒப்பு நோக்கிய உ.வே.சா. நூலின் முழுமையைக் கருத்தில் கொண்டு, இந்நூலின் அமைப்பைச் சீர்மை செய்து அளித்துள்ளார். இப் பாடல்கள் பல சுவடிகளில் பலவாறு எழுதப்பட்டுள்ளதைத் தொகுத்து, அவற்றில் சிறப்பான பாடங்களை மூலபாடமாக மேற்கொண்டு அமைத்ததுடன் இடைச்செருகலாக நுழைக்கப் பட்ட பாடல்களைத் தம் பதிப்பில் காட்டாது விடுவதும், சில சுவடிகளில் இடைச்செருகலாக அமைந்த பாடல்களைக் காட்டுவதும், சில சுவடிகளில் சில பாடல்களே விடுபட்டு இருப்பதைக் காட்டுவதும் இவருடைய பதிப்பின் சிறப்புக்களாம். காட்டாகச் சிலவற்றை நோக்குவோம்.

இப் பாகவத நூலின் முதலில், 'சீர்பூத்த பரஞ்சுடராய்' எனத்தொடங்கும் முதற்பாடலை அடுத்து, 'சிந்தகத்து' எனத் தொடங்கும் ஒரு பாடல் இராசகோபால பிள்ளை அச்சிட்ட நூலில் உள்ளது. இப்பாடலை ஐயரவர்கள் தம் பதிப்பில் சேர்க்கவில்லை. இப்பாடல் சுவடிகளில் காணப் பெறவில்லை என்பதே ஐயரவர்கள் துணிபாகவுள்ளது. எனவே முதற்பாடலுக்குக் குறிப்புரை வரைந்தவிடத்து, '' 'சிந்தகத்து' என்னும் முதலையுடைய ஒரு செய்யுள் இதனை அடுத்துக் காணப்படுகின்றது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

நூலின் முதலிலுள்ள ஐந்து பாடல்களைக் 'கடவுள் வாழ்த்து' என்ற தலைப்பின் கீழே ஐயரவர்கள் பின்வருமாறு அமைக்கின்றார்.

1 ''சீர்பூத்த .................நினைவாம்''

2 ''பூமடந்தை...............தாகுமே''

3 ''பிறந்தபொழு...........செய்வாம்''

4 ''சுழித்து.....................மேலோர்''

5 ''உறைபடு...... ......, ...... யானுமே''

இவ்வைந்து பாடல்களுக்கும் முறையே **திருமால், கலைமகள், சுகமுனிவர், நூற்பெருமை, அவையடக்கம்** என ஐந்து தலைப்பு களையும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயின், இராசகோபாலபிள்ளை பதிப்பில் இவை முறைப்பட இல்லை. மேற்குறித்த ஐந்து பாடல்களும் இதில் வேறு வகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 'சீர்பூத்த' எனத் தொடங்கும் முதற்பாடலையடுத்து, 'சிந்தகத்து' எனத் தொடங்கும் இரண்டாம் பாடலும், 'பிறந்த பொழுது' எனத் தொடங்கும் பாடல் மூன்றாம் பாடலாகவும் இப்பதிப்பில் அச்சிடப்பட்டுள்ளன. இம் மூன்றும்'சிறப்புப் பாயிரம்' எனத் தலைப்பிடப்பட்டு அச்சிடப் பட்டுள்ளன. பா. 4, பா. 2, பா. 5 ஆகிய இவற்றிற்கு இப் பதிப்பில் தலைப்பேதும் குறிப்பிடப் பெறவில்லை. இவற்றை ஐயரவர்கள் சீர்செய்து மேற்கண்டவாறு திருத்தி அமைத் துள்ளார்.

## சுவடிகளில் இல்லாத பாடல்களைச் சுட்டுதல்

''இச்செய்யுள் சில பிரதிகளிற் காணப்படவில்லை''
பா. எண்: 154, 1804, 1819-21, 1918, 2003, 2035, 2186, 4235, 4237

''இப்பாடல் ஓரேட்டுப் பிரதியில் இல்லை''
பா. எண்: 1542, 3987, 4155, 4863

''இது முதலுள்ள மூன்று பாடல்கள் ஒரு பிரதியில் காணப் படவில்லை''-பா.எண்: 4699

இவ்வாறு சில பாடல்கள் சில ஏடுகளில் காணப்பெறாததையும் சில பாடல்கள் ஒரு ஏட்டுப்பிரதியில் காணப்பெறாததையும் அங்கங்கேயே குறித்துக் காட்டுகின்றார். இவற்றுள் பல பாடல்கள் இராசகோபாலபிள்ளை பதிப்பில் உள்ளன.

## ஐயரவர்கள் கண்ட புதிய பாடல்கள்

''இச்செய்யுள் அதிகமாக ஓர் ஏட்டுச்சுவடியிற் கண்டது''-
பா.எண்: 2614

''இப்பாடல் ஓர் ஏட்டுப்பிரதியிற் காணப்படுகிறது''
பா. எண்: 2749, 3580, 3840, 3882, 4155.

என ஐயரவர்கள் தமக்குக் கிடைத்த புதிய பாடல்கள் சில வற்றை அங்கங்கேயே குறிக்கின்றார். இந்தப் பாடல்கள்

அனைத்தும் இராச கோபாலபிள்ளையவர்கள் பதிப்பில் இல்லாதவை; புதிய பாடல்கள் என்பது சுட்டத்தக்கதாகும்.

இவ்வாறு ஐயரவர்கள் தமக்குப் புதியதாகக் கிடைத்த பாடல்களை அந்தந்த இடங்களிலேயே மூலத்துடன் சேர்த்துப் பதிப்பிக்குமிடத்து, அவை மிகையான பாடல்கள் என்பதை அடிக்குறிப்பில் குறிப்பிடுவதுடன் மேலும் ஒரு புதுமையையும் செய்துள்ளார். மிகையான, புதிய பாடல்களுக்குத் தனி எண்கள் கொடுக்காமல், இப்பாடல்களுக்கு முன்புள்ள எண்ணுடன் (அ), அல்லது (1), (2) என அமைக்கின்றார்.

(எ-டு)

| பா.தொடர் எண் | | கந்தம்:அத்:பா. |
|---|---|---|
| 2749 | 'பூவைப்...புதைத்தாள்' | 10:3:பா.6 |
| 2749 அ | 'புள்வாள்...வந்தான்' | |
| | | (மிகை) |
| 3580 (1) | 'அஞ்சன...அம்மா' | 10:30:ச—1 |
| 3580 (2) | 'பாகடு......மன்னோ' | 10:30:ச—2 |
| | | (மிகை) |
| 3840 (1) | 'ஈரிரு.........மாய்ந்தான்' | 10:39: —1 |
| 3840 (2) | 'தேன்குலவு...அறுத்தான்' | 10:39: —2 |
| | | (மிகை) |
| 3882 (1) | 'விரிந்த்.........புரியும்' | 10:40:உ—1 |
| 3882 (2) | 'வெறித்த .....யாடும்' | 10:40:உ—2 |
| | | (மிகை) |
| 4155 (1) | 'வாவியங்......மாற்றினானால்' | 10:46:உ—1 |
| 4155 (2) | 'பொங்கிள...மார்பினானே' | 10:46:உ—2 |
| | | (மிகை) |

இவ்வாறு ஐயரவர்களுக்குக் கிடைத்த புதிய பாடல்களுக்குத் தனி எண்கள் கொடுக்காததால் பாடல் தொடர் எண்ணில் மாற்றமில்லை. பாகவதம் முழுவதும் 4970 பாடல்கள் என்ற தொகையும் மாறவில்லை. பாடல்களின் பொருள் தொடர்ச்சியினைக் கருதி இத்தகைய புதிய பாடல்களை அங்கேயே அமைத்துள்ள ஐயரவர்கள், இடைச்செருகலால் நூலின் பாடல் தொகையில் வேறுபாடு நிகழக் கூடாது என்பதிலும் கவனம் செலுத்தி அமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஐயரவர்கள் தாம் பதிப்பிக்கும்போது பாடலின் பொருள் உணர்ந்து, தொடர்ச்சி கருதிப் பதிப்பித்தமைக்கு எடுத்துக்காட்டாத வேறு சிலவற்றையும் கூறலாம்,

அ. ''இதன்பின் ஒருசெய்யுள் இருக்க வேண்டுமென்று தோற்றுகிறது'' என 1034ஆம் பாடலின் அடிக் குறிப்பில் குறிப்பிடுகின்றார்.

ஆ. ''3042-3047ஆம் பாடல்களில் ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வோரடிகளில் ஒவ்வொரு சீர்கள் குறைந்தும், பாடங்கள் பலவகையாக வேறுபட்டும் ஓரேட்டுப் பிரதி யிற் காணப்படுகின்றன'' என 3047ஆம் பாடலின் அடிக்குறிப்பில் குறிப்பிடுகின்றார்.

இ. ''இச்செய்யுள் பிரதிகளிற் காணப்படவில்லை. மூலத் திலும் இக்கருத்து இல்லை'' என 4235 ஆம் பாடலின் அடிக்குறிப்பில் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு அமையும் பல குறிப்புகள் ஐயரவர்கள் ஏடுகளை ஒப்பு நோக்கிய திறத்தைக் காட்டுவனவாம்.

பொது நிலையில், சுவடிகளில் காணும் பொருளில்லாத-பிழை யான பாடங்களை ஐயரவர்கள் பாடவேறுபாடுகளாகக் குறிப் பதில்லை. ஒலிப்பிழைகளாகவும் கொச்சைச் சொற்களாகவும் (தொடர்-துடர்; தொலை—துலை; குழறும்-குளறும்; கௌசிலை-கவுசிலை; என்பன போல) வருவனவற்றை இவர் பாடவேறு பாடுகளாகக் காட்டுவதில்லை. இவை பிழையென்றே கருதி ஒதுக்கியுள்ளார். இவ்வாறு சுவடி எழுதியோர் தம் கல்வியறிவிற் கேற்பவும், தம் வட்டார மொழியமைப்பிற்கேற்பவும் எழுதிய எழுத்துப் பிழைகளையெல்லாம் இவர் பாடவேறுபாடுகளாகக் குறிப்பதில்லை. இந்நிலையை இப்பதிப்பிலும் காணலாம்.

செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் ஐயரவர்கள் குறிப்பிடும் பாடவேறுபாடுகள் சுமார் 700 ஆகும். இந்நூலின் பாடற்றொ கையை நோக்க இவை மிகக் குறைவேயாகும். மக்களிடையில் பரவலாக வழங்கப்பட்டுவரும் இலக்கியங்களுக்குப் பாடவேறு பாடுகள் குறைவாக இருப்பது என்பது திருமுருகாற்றுப்படை, சீவக சிந்தாமணி போன்ற நூல்களால் அறியப்பெறும் செய்தி யாகும்.

ஐயரவர்கள் தாம் பதிப்பித்த மணிமேகலையில் 1360 பாட வேறுபாடுகளையும், சிலப்பதிகாரத்தில் 1276 பாடவேறுபாடு களையும், பெருங்கதையில் 1155 பாடவேறுபாடுகளையும் காட்டுகின்றார். ஆயின், இவை அனைத்தைக் காட்டிலும் மிகுதி யான பாடல்களைக் கொண்ட பாகவதத்தில் சுமார் 700 பாட

வேறுபாடுகளே இவருக்குக் கிடைத்துள்ளன. எனவே, இந்நூல் சில நூற்றாண்டுகளாகப் பலராலும் போற்றப்பட்டு வழங்கி வந்துள்ளது என்பது புலனாகின்றது.

ஐயரவர்கள் தாம் பதிப்பித்த நூல்களை மீண்டும் பதிப்பிக்க வாய்ப்பு ஏற்பட்டபொழுதெல்லாம், முதல் பதிப்பில் கொண்ட மூல பாடங்களைத் திருத்தி அமைப்பதையும், முதல் பதிப்பில் இடம்பெறாத புதிய பாடங்களைச் சேர்த்து அமைப்பதையும் பழக்கமாகக் கொண்டிருந்தார். ஆயின், இந்தப் பாகவதப் பதிப்புக்கு மறுபதிப்பு இதுவரை வரவில்லை. அவரே இருந்து இதை மீண்டும் பதிப்பித்திருப்பின் மேலும் பல பாடங்களைத்திருத்தம் பெற நிறுவி இருப்பார். எனவே, இன்று கிடைக்கும் பாகவதச் சுவடிகளை ஒப்புநோக்கி, ஐயரவர்கள் கொண்ட பாடங்களையும் ஒப்பு நோக்கினால் சிறப்பான மூலபாடங்களை நாம் நிறுவலாம் என்பது தெளிவு.

## செவ்வைச் சூடுவார் பாகவதம்—பாட வேறுபாடுகள்

| உ.வே.சா. கொண்ட மூலபாடம் | | பாட வேறுபாடு |
|---|---|---|
| (எண்: பாடல், வரி எண்) | | |
| 2:4 பாமடந்தைதற் | — | பாமடந்தையள் (இ.பா.) பாமடந்தையர், பாமடந்தைமுன் (பு.பா.) |
| 3:1 போனடப்ப | — | போனடந்து (பு.பா.) (போனடிப்ப இ.பா. 7) |

(இ.பா) — இராசகோபாலபிள்ளை பாகவதப் பதிப்பிலுள்ள மூலபாடம் என்பதைக் குறிக்கும்.

(பு.பா-புதிய பாடம்) — இராசகோபாலபிள்ளை பாகவதப் பதிப்பில் இல்லாததும், ஐயரவர்கள் கண்ட வேறு பிரதிகளிலுள்ளதுமான பாட வேறுபாடுகள் என்பதைக் குறிக்கும்.

( ) — ஐயரவர்கள் காட்டாத பாடங்கள் என்பதைக் குறிக்கும்.

11:2 கலையரும்புறு (இ.பா.)— கலைய ரும்பிய) பு.பா.)

13:4 உலகெ லாநிறைந் — உலகெ லாந்தரும் ,,
(இ பா.)

14:2 விரிக்க நாண்மடல் ’’ — விரித்த நாண்மடல் ,,

17:3 கேட்குநர் ,, — கேட்பவர் ,,

19:3 உடல் வருந்துவதன்றிக் — உடல்வருந்துந ராமக்
(இ.பா.)

20:3 மகிழ்தரு — மகிழ்தர (இ.பா.)

21:4 ஏற்று சத்துவத்தால் — ஏத்து சாத்துவத்தால் (,,)
உருவென வியைந்தான் — உருவென வெடுத்தான்
(இ.பா.) (பு.பா)

22:4 வாம மூர்த்தியை ,, — வாம முத்தியை (பு.பா)

23:2 விராட்டுவை ,, — விராட்டினை ,,

24:4 நவிற்றினா ராயண — நவிலினா ராயண
னாமால் னெனுமால் (இ.பா.)

25:2 உன்னுகூத்தினிற்(இ.பா)— பன்னு கூத்தினிற் (பு.பா)

26:2 தழைப்ப (இ.பா) — தழைய (,,)

27:3 அவயவமாம் ,, — அவையவமாம் (,,)

28:2 விராட்டுவாம் புருடன்,,— விராட்டெனும்புருடன்(,,)
3-4வயங்க அரியராஞ் — வயங்கல், வரியராஞ்
(இ.பா)

29:3 எடுத்ததை — எடுத்தமை (,,)

31:2 உதித்தலர்க் கனுக்கும் — உதித்தளக் கனுக்கும்
(இ.பா) (பு.பா)

33:4 மன்வந்தரத் தடைகட — மன்வந்தரத் தடைகெடக்
லெடுத்தான் கெடுத்தான் (இ.பா)

36:3 கடுந்திறற் கூற்றுவ — கடுந்திற லோனெஞ்சு
னெஞ்சம் கதழ்ந்த (இ.பா)

4 மாய்தரச் சினத்துடன் — மாய்ந்திடச்சினத்துடன்(,,)

38:2 வியாதனா யிறைவன் — வியாதனா யரிதான்
(இ.பா) (பு.பா)

| | | |
|---|---|---|
| 39:4 | சொற்றான் ,, | — சொன்னான் ,, |
| 42:3 | பகைஞரைத் ,, | — பகைவரைத் ,, |
| 4 | நிறுத்துவ னினிமேல் | —நிறுத்து வனினியால்(இ.பா) |
| 43:2 | மருவு மிங்ஙன மாயவன் (இ.பா) | — மருவு மிப்படி மாயவன் (பு.பா) |
| 45:1 | நல்லறி வானவன் | — நல்லறி வாயவன் (இ.பா) |
| 2 | வருந்தி முத்தொழில் | — வருந்து முத்தொழில் ,, |
| 46:4 | யான் (இ.பா) | — நான் (பு.பா) |
| 48:3 | பெயர் பெற்ற | — பெயர் வயங்கு (இ.பா) |
| | பேர்யாற் (இ.பா) | — பேராற்று (பு.பா) |
| 49:1 | நெஞ்சகந் தெளியப் | — நெஞ்சகந் தெருள(இ.பா) |
| 4 | இலகி யெம்முளந் தெளிவுறப் பெற்றில தின்னும் | — இலகி யெம்முளந் தெருடரப் பெற்றில மின்னும் (,,) |
| 50:2 | விளங்கயாம் (இ.பா) | — விளங்கநாம் (பு.பா) |
| 51:2 | யாயினும் (,,) | — யாகிலும் (,,) |
| 53:4 | ஞான மிக்கவராய் (,,) | — ஞான முற்றவராய் (,,) |
| 55:4 | ஆர்வ வேர்முதல் | — ஆர்வம் வேர்முதல் (இ.பா) |
| 57:4 | ஈன்றவ ளிறப்ப (இ.பா) | — ஈன்றவ ளிறக்க (பு.பா) |
| | சாரல்வாய்ப் புக்கேன் | — சாரல்வாய் நடந்தேன் (,,) |
| 58:1 | காண்குது மென்னா (,,) | — காண்குவ மென்னா(,,) |
| 60:4 | யாழ்த்தொன்முனி (,,) | — யாழ்முனிவரன் (,,) |
| 61:3 | ஆர்வ வேரிரந்து | — ஆர்வமொடிருந்து (பு.பா) |
| 63:4 | ஓர்பசுப்பீர்கொள் கலம் (இ.பா) | — ஓர்பசுப் பயங்கொள் கலம் (பு.பா) |
| 64:4 | தடநதி யாடி னாரே | — தடநதி யாடு வாரால் (இ.பா) |
| 65:3 | மறைகள் சொற்ற(இ.பா) | —மறைகள் சொன்ன (பு.பா) |
| 66:4 | சொன்மி னற்றுகில் (,,) | — சொல்லு நற்றுகில் (,,) |
| 67:2 | ஆடவ ரிவர்க ளென்று மரிவைய ரிவர்க ளென்றும் | — ஆடவ ரிவர்கண் மற்றை யரிவையரிவர்க ளென்ன (இ.பா) |

| | | | |
|---|---|---|---|
| 70:1 | காக்கு மன்னன் | — | காக்கு மேந்தல் (இ.பா) |
| 71:2 | போல்வன் | — | போல வந்த (,,) |
| 72:4 | புரிவுரிக் கொன்றனன் | — | புரிவுழி முருக்கினன் (,,) |
| 73:1 | மஞ்சகங் கிழித்தெழ மலர்கதிர் மின்னன்ன | — | மஞ்சகங் கீண்டெழு மலர் கதிர்த் தடித்தன்ன (இ.பா |
| 74:4 | தழற்படை விடுத்தானே | — | தழற்படை தொடுத்தெய்தான் (,,) |
| 75:4 | வளைத்தோனே | — | வளைத்தோய் கேள் (,,) |
| 76:3 | துயிலொழி பரம் பொருள் (இ.பா) | — | துயிலெழு பரம்பொருள் (பு.பா) |
| 77:2 | தீந்தது காணா ('') | — | தீய்ந்தது காணா ,, |
| 79:4 | உரைத்தானே | — | உரை செய்தான் (இ.பா) |
| 82:2 | மறையவர் செய் திடிற் (இ.பா) | — | மறையவ ரியற்றிடிற் (பு.பா) |
| 83:4 | ஈர்ந்து கொண்டனன் ,, | — | ஈர்ந்தனன் கொண்டானே,' |
| 85:4 | மறைமுதல் (,,) | — | மாயவன் (,,) |
| 88:3 | இரும்பனைக்கை வேழக் | — | இருபனைக்கைவேழக் (இ.பா) |
| 4 | குந்தியங் கேத்தினாளால் (இ.பா) | — | குந்தியாங் கேற்றினாளே (பு.பா) |
| 89:2 | அணையின் மீதாக்,, | — | அணையின் மேலே ,, |
| 3 | கிடந்துழி யெழுந்து | — | கிடந்துழி யினிது (இ.பா) |
| 90:4 | ஊறவாய் விண்டு கூறும் (இ.பா) | — | ஊறல்வாய் விண்டு கூறும் (பு.பா) |
| 91:2 | யான் சொற்ற ,, | — | யான் சொன்ன ,, |
| 93:2 | வேர்மற் றாடல் | — | வேர்மா றாடல் (இ.பா) |
| 96:4 | நின் மாயை (இ.பா) | — | உன் மாயை (பு.பா) |
| 98:1 | அணிந்து முன்வந்த | — | அணிதரா வந்த (இ.பா) |
| 2 | மாயை யான | — | மாயை யாமீப் ,, |
| 4 | அறிவித்த தாமால் | — | உணர்வித்த தாமால் ,, |
| 99:3 | திகழ்சக மில்லையானால் | — | திகழ்சக மின்றே லென்னே ,, |

| | | | |
|---|---|---|---|
| 100:1 | இயற்றிய தவத்திற் | — | இயற்றுநற் றவத்திற் (இ.பா) |
| 2 | நின்ற கார்வண் ணன் | — | நின்றநம் மிறைவன் (,,) |
| 106:1 | வாயிலின் | — | வாய்தலின் (,,) |
| 107:3 | வருமறை முதல்வன் வேழத் (இ.பா) | — | அஞ்சன வண்ணன் வேழத் (பு.பா) |
| 109:2 | பகருமுத் தவன்ற னோடு | — | பகருமுன் னவன்ற னோடு (இ.பா) |
| 3 | தடக்கை யேந்தி (இ.பா) | — | தடக்கை தம்மாற் (பு பா) |
| 112:3 | மோகனேகுமுன்(,,) | — | மோக னேகமுன் (,,) |
| 116:1 | கைக்கிரி (,,) | — | கைக்கரி (,,) |
| 125:1 | குல்லை வேய்ந்த(,,) | — | குல்லைதங்கு (,,) |
| 4 | சோருவார் | — | சோர்குவார் (இ. பா) |
| 128:2 | நெஞ்சி னாடி | — | நெஞ்சினோடு (,,) |
| 131:4 | மன்னுவானென் பார் | — | மன்னாவான், மன்னவன் (,,) |
| 133:2 | மார்பன் தன்னாற் (இ.பா) | — | மார்ப னாலே (பு.பா) |
| 3 | துவரை யிந்தக் | — | துவரை நங்கள் (இ.பா) |
| 134:1 | மடிய வென்றோன் | — | மலங்க வென்றோன் (,,) |
| 4 | முதுகுல மாய | — | முதுகுல மானது (பு.பா) |
| 135:1 | திரைநீர் சூழ்ந்த | — | திரைசுலாமிச் (இ.பா) |
| 4 | கருதிலஞ் சிறிதும் | — | கருதில சிறிதும் (,,) |
| 137:1 | தாமநீள் மறுகில் | — | தாமநன் மறுகில் (,,) |
| 4 | வளர்த்திடல் | — | வளர்க்குதல் (,,) |
| 138:3 | தந்தளித் தழிக்குஞ் | — | தந்தினி தளிக்குஞ் (இ.பா) |
| 139:1 | வாய்தற் (இ.பா) | — | வாயிற் (பு.பா) |
| 141:2 | மருதஞ் சாய்த்தாய் (,,) | — | மருது சாய்த்தாய் (,,) |
| 4 | முறிக்க கில்லாயெனச் சிலர்கழறிச் சோர் வார் (இ.பா) | — | முறித்தி லாய்நீ யெனச்சிலர் கருதிச் சொல்வார் (பு.பா) |
| 144:2 | சாருமெமை (இ.பா) | — | சாற்றுமெமை (,,) |

| | | | |
|---|---|---|---|
| 3 | உற்றிலையென்று ,, | — | உற்றிலமென்று (,,) |
| 145:2 | தரித்திடுவாய் | — | தரித்தணிவாய் (இ.பா) |
| 3 | வனைந்தவளுக்கு | — | வளைந்தவளுக்கு (,,) |
| 146:2 | கானழலுண் டணையாய் (இ பா) | — | கானழலுண் டவனீ (பு.பா) |
| 149:2 | உள்ளத்தினின்றும்(,,) | — | உள்ளத்தி நன்றும் (,,) |
| 150:2 | அளியோ டுமறித்தும் விடாய் (,,) | — | அளியோ டுதிரும் பவிடாய் (,,) |
| 154:2 | ஆசில்கரக் | — | ஆசில்விழிக் (இ.பா) |
| 155:1 | தகைகொண்டுறு (இ.பா) | — | தகைகொண்டிடு (பு.பா) |
| 156:2 | மறைத்தல் செய் காவல ,, | — | மறைத்திடு காவலனே (,,) |
| 159:2 | காமன் விட | — | காமன் விலால் (இ.பா) |
| 160:4 | மீள்கில தொடர மாதோ | — | மீள்கிலாத் தொடர மாதோ (,,) |
| 161:4 | திண்டேர்ப் படை (இ.பா) | — | திண்டோட் படை (பு.பா) |
| 162:4 | விளிம்புடுத்து | — | விளிம்படுத்து (இ.பா) |
| | சென்று சேர்ந்தான் (இ.பா) | — | சென்று விட்டான் (பு.பா) |
| 163:2 | முகத்தி னூ டே | — | முத்தினூ டே (இ.பா) |
| 3 | இலங்கக் கற்றைக் | — | இலங்கு கற்றை (,,) |
| 164:3 | வெள்ள மீண்ட (இ.பா) | — | வெள்ள மீண்டி (பு.பா) |
| 166:1 | நகை முடி | — | நகுமுடி (இ.பா) |
| 168:2 | உருகிட | — | உருகுறத் (,,) |
| 169:1 | தொழுது மேற்பத் | — | தொழுவார் தம்மைத் (,,) |
| 2 | முகிழ்த்தும் பார்த்தும் | — | முகிழ்த்து நோக்கி (,,) |
| 171:3 | உறைந்து | — | உறைந்த (,,) |
| 172:2 | செகுத்திடா வண்ணம் | — | செகுக்கலா வண்ணம் (,,) |

| | | | |
|---|---|---|---|
| 173:1 | பொலந்தார் முடி | — | பொலந்தண் முடி (,,) |
| | இலகுபொற் றுகிலோன் | — | இலங்குபொற் றுகிலோன் (,,) |
| 175:3 | விதிப்படிச் | — | விதிமுறைச் (,,) |
| 178:1 | தயரத ராமன் (இ.பா) | — | தசரத ராமன் (பு.பா) |
| 180:2 | மருவிள மதி ( ,, ) | — | மருவு மிம்மதி (,,) |
| 3 | பரதனா மகஞ் செயும் பண்பி னாலிவன் | — | பரதனின் மகன் செயும் பண்பி னானிகல் (இ.பா) |
| 181:3 | சாந்தமா தவ ரொடு (இ.பா) | — | சார்ந்தமா தவரொடு (பு.பா) |
| 187:2 | பரவுநற் றாதை | — | பழிச்சுநற் றாதை (இ.பா) |
| 189:2 | பார் தாமே(இ.பா) | — | பார்தானே (பு.பா) |
| 190:2 | திறைகொ டுய்ப்ப (,,) | — | திறைவந் துய்ப்ப (,,) |
| 191:2 | மதம்பொழி களி நல் யானை | — | மதங்கலுழ் களிநல் யானை (இ.பா) |
| 192:1 | அறநெறி கெழுமிய (இ.பா) | — | அறநெறி தவழ்தர, அற நெறி தழுவிய (பு.பா) |
| 193:3 | அவ்விட மன்றி | — | அவ்விட னன்றி (இ.பா) |
| 194:3 | ஓதலன் (இ பா) | — | ஓதிலன் (பு.பா) |
| 195:2 | கவளமார்ந்து (,,) | — | கவளமாந்தி (,,) |
| 196:2 | எவ்வுழி யெய்தி னான் | — | எவ்வழி யேகினான் (இ.பா) |
| 3 | ஆர மார்பிடை | — | அரசன் மார்பிடை (,,) |
| 199:3 | போற்றி யூட்டிடும் | — | போற்றி யூட்டுறும் (,,) |
| 201:1 | மன்னத னேழை | — | மன்னன்ற னேழை (,,) |
| 203:3 | ஏழும் போற்று மோர் | — | ஏழு மேத்தல்செய் (,,) |
| 205:1 | மண்ணக மதிர்ந் திடும் | — | மண்ணக மதிர்தரும் (,,) |
| 220:2 | நீங்கிடத் | — | நீங்குறத் (,,) |
| 223:2 | இளையாரு மேத் திட | — | இளையாரு மேத்துற (,,) |

| | | | |
|---|---|---|---|
| **225:4** | தென்புலத் திறைமை | — | தென்புலக் கிறைமை (,,) |
| **229:3** | தேமொழி | — | தேன்மொழி (,,) |
| **231:4** | வளை கலிக்கவே | — | களை கலித்தவே (,.) |
| **239:4** | தான யானையே | — | தானை யானையே (,,) |
| **240:4** | தக்க தன்றரோ (இ.பா) | — | தக்க தல்லவே (பு.பா) |
| **242:1** | மற்றத்தேர் | — | பற்றதேர் (இ.பா) |
| **3** | இருள்சூழ் சுரும்பென | — | இருள்சூழ் வரம்பென (,,) |
| **244:3** | மெல்லவே | — | மெல்லெனப் (,,) |
| **245:3** | குணக்கிற் றோமி றேர் (இ.பா) | — | குணக்கிற் செல்லுதேர் (பு.பா) |
| **248:3** | பாடினர் வாரி | — | பாடினர் வணங்கி (இ.பா) |
| **249:2** | நமையளிக்குவன் | — | நமையளிப்பவன் (,,)<br>நமையளித்தவன் (பு.பா) |
| **250:3** | வடாது நண்ணிய (இ.பா) | — | வடக்கு நண்ணிய (,,) |
| **252:3** | பாவும் பாலதாய் (இ.பா) | — | பரவப்பட்டதாய், பாவப் பட்டதாய் (பு.பா) |
| **257:1** | தாமரைக் கன்னி காதலால் | — | தாமரைக் கண்ணற் காதலால் (இ.பா) |
| **261:4** | கெழீஇயி னானரோ | — | கெழீஇயானரோ (,.) |
| **274:1** | விழைந்து கேட்ப | — | விரைந்து கேட்ப (,,) |
| **275:2** | நன்று நன்றெனும் | — | நன்று நன்றென (,,) |
| **276:2** | ஆட்டினுக்கெழுந் | — | ஆட்டினுற்றெழுந் (,,) |
| **282:1** | களிறு மாற்றலர் | — | கரியின் றெவ்வினை (,,) |
| **283:2** | புயல்கிழித்த பொற் | — | பொருதுவாரி சூழ் (,,) |
| **3** | குலவ ரைத்தடங் குடுமி கொண்ட செல் | — | நிலவ ரைப்பினி னீடு வெம்பகை (,,) |
| **4** | வலனு யர்த்தவாள் வழுதி மானவே | — | வலன ழித்தவாண் மன்னர் மன்னனே (,,) |
| **284:4** | போராளி | — | பேராளி (,,) |

| | | | |
|---|---|---|---|
| 286:2 | தம்மை மூடுறத் தாவில் சோரிகால் | — | தம்மை மூசுறத் தாவில் சோரிதான் (,,) |
| 287:4 | நடந்திட்டானரோ | — | நடத்த ணண்ணினான் (,,) |
| 290:2 | நீரிருக்கவும் | — | நீரிரக்கலும் (,,) |
| 295:4 | தாழ்கலா | — | தாழ்கிலா (,,) |
| 303:3 | தரித்திடு நாவினான் | — | தரித்துரை நாவினான் (,,) |
| 304:2 | குறித்து ணாடியான் | — | குறித்து நெஞ்சகம் (,,) |
| 3 | பொருந்து வேன் | — | பொருத்து வேன் (,,) |
| 306:3 | விரித்த புல் | — | விரிந்தபுல் (,,) |
| 307:1 | சவனன் | — | சவுனன் (,,) |
| 312:2 | நண்ணிய தெனு முனை நான்கண் டுய்ந்திடக் | — | நண்ணிய வெனு நினை யான் கண்டுய்யநம் (இ.பா) |
| 3 | காட்டின | — | காட்டிய (,,) |
| 314:2 | திறப்படக் கேட்ப தென் (இ.பா) | — | திறப்படச் செய்வதென் (பு.பா) |
| 315:1 | கூறினை | — | கூறினன் (இ.பா) |
| 316:4 | தொடர்ச்சிப் பற்றினை | — | தொடர்புப் பற்றினை (,,) |
| 319:2 | தெரிதரற் கரிதா யெங்குமாய் | — | தெரிதரற் கொல்லா தெங்குமாய் (,,) |
| 323:1 | உயிர்ப்பினை யடக்கி | — | உயிர்ப்பினை வீக்கி (,,) |
| 3 | பிரம ரந்திரம் | — | பிரமத் தொளையது (,,) |
| 330:1 | மூசும்பனி | — | மூசுபனி (,,) |
| 334:3 | செருக்கினாற்கண் | — | செருக்கினார்கண் (,,) |
| 336:3 | நறுந்துழாய்ப்பகவன் (இ.பா) | — | நறுந்துழாய்க் கொண்டல் (பு.பா) |
| 4 | கழிக்கின் றாரே | — | கழிக்கின்றாரால் (இ.பா) |
| 340:1 | பனியிரு விசும்பு தேட (இ.பா) | — | பனியிரு விசும்பர் தேட (பு.பா) |
| 346:2 | வியாதற் குரைத்திட | — | வியாதற் கிசைத்திட (இ.பா) |
| 3 | எனக்குச் சொன்ன | — | எனக்குச் சொற்ற (,,) |

| | | | |
|---|---|---|---|
| ***349:4*** | மறையு நின்றே (இ.பா) | — | மறையு மன்றே (பு.பா) |
| ***352:2*** | புரவியின் பெயர் சேர் தேவர் | — | புரவியின் பெயரந் தேவர் (இ.பா) |
| ***360:1*** | ஈட்டு மாதவங் | — | மீட்டு மாதவங் (,,) |
| ***361:2*** | ஒரு மூதண்ட வுருவ னாய் (இ.பா) | — | ஒரு மூதண்ட ரூபியாய் (பு.பா) |
| ***365:4*** | மறைமுனி வகுத்துக் கூறும் (இ.பா) | — | மறைமுனி வழங்கலுற்றான் (பு.பா) |
| ***366:2*** | துகில் கவரப் பார்த்த | — | துகில் கவர வுற்ற (இ.பா) |
| ***367:2*** | உயர்த்தோன் கேட்டுப் | — | உயர்த்தோன் கேளாப் (இ.பா) |
| ***368:4*** | எழுந்தனன் ஏகி னானே | — | எழுந்தனன் போயான் மன்னோ (,,) |
| ***370:2*** | ஒளி துளும்பு | — | ஒளிகழுழு (,,) |
| ***372:3*** | உருட்டிச் சென்றதும் | — | உருளச் சென்றதும் (,,) |
| ***373:3*** | பொற் குன்றையும் (இ.பா) | — | பொற்குன்றினில் (பு.பா) |
| ***374:2*** | உறைதரு மாயையி னொளித்த | — | கறைகெழு மாயையிற் கரந்த (இ.பா) |
| ***375:1*** | ஏத்திட | — | ஏத்துற (,,) |
| ***376:2*** | உச்சியி னடித்த வண்ணமும் | — | உச்சியி னடங்கு யின்றதும் (,,) |
| ***379:1*** | தாதவிழ் தாமரை | — | தாதலர் தாமரை (,,) |
| ***382:3*** | பொறுமென | — | போன்மென (,,) |
| ***385:1*** | துன்னிநீ | — | துன்னினை (,,) |
| ***389:2*** | தன்னைக் கொன்றதும் | — | தன்னைச் செற்றதும் (,,) |
| ***391:3*** | வாணாசுரன் மலர்க்கை | — | வாணாசுரன் வளக்கை (,,) |
| ***394:1*** | அந்தணனுக்கு | — | அந்தணருக்கு (,,) |
| ***2*** | தீண்டிட | — | தீண்டுற (,,) |
| ***395:1*** | இறந்தநற் | — | இறந்திடு (,,) |

| | | | |
|---|---|---|---|
| 401:4 | அறிந்தி லார்களே | — | அறிந்தி லார்களால் (,,) |
| 402:3 | பெற்ற மைந்தனும் | — | பெற்ற மெய்யனும் (,,) |
| 406:3 | விதுரற் கென்றான் | — | விதுரற் கின்னே (,,) |
| 4 | செப்பினான் போயி னானே | — | செப்பலுஞ் சேற லுற்றான் (,,) |
| 408:3-4 | அன்னதொர் சாபந் தன்னை யுத்தவ னடையா னாகி மன்னின னென்று மன்னன் வழங்கமா முனிவன் கூறும் | | அன்னவெந் திறல் கொள் சாப முத்தவ னடைத லின்றி மன்னின னெனக் கடாவ மன்னன் மாமுனி வன் கூறும் (இ.பா) |
| 409:3 | உறுவர் (இ.பா) | — | முனிவர் (பு.பா) |
| 410:2 | அலைகட லகடு கீண்டு (இ.பா) | — | அலைகடல் கிழியப் பாயும் (பு.பா) |
| 3 | துறையி னோர்பால் | — | துறையி னோர்சார் (,,) |
| 411:1 | பொறிய டக்கிய முனிவனை | — | பொறி செறிக்கும் முனி வனை (இ.பா) |
| 2 | என்ன | — | என்னே (,,) |
| 4 | சொல்லலுற் றன னால் | — | சோறலுற் றனனால் (,,) |
| 415:3 | மனத்தொடைம் பொறிக்கு | — | மனத்தொடு பொறிக்கு (,,) |
| 417:1 | ஆங்கத் தத்துவம் | — | ஏங்கு தத்துவம் (,,) |
| 418:1 | நிறை ஞானமோடு | — | நிறை தெய்வமோடு (,,) |
| 421:4 | வீசுகை தொழி லொடு | — | வீசுகை தொடலொடு (,,) |
| 424:1 | மையத்து | — | மையமும் (,.) |
| 434:3 | சொல்லலும் | — | சொற்றலும் (,,) |
| 4 | விளம்புவான் | — | விளம்புமால் (,,) |
| 438:2 | வேந்த னாம்விறல் விதுரன் (இ.பா) | — | வேந்தனாகிய விதுரன் (பு.பா) |
| 4 | மகனு ரைப்பான் | — | மகனுரைக்கும் (இ.பா) |
| 446:1 | மேற் கவித்த | — | மேற்கவிப்ப (,,) |
| 3 | பாய வந்தி | — | பாயலந்தில் (,,) |

| | | | |
|---|---|---|---|
| 448:3 | ஞானம் வந்துற்றிட முலகமீ ரேழும் | — | ஞானம்வந் துறுமுலகி யாவையும் நன்கு (,,) |
| 449:3 | ஞானம் வந்துற்றிட | — | ஞானம் வந்துறக்கடு(இ.பா) |
| 4 | பருகி யேழிரண் டுல குமம் மலரிடைப் படைத்தான் | — | பருகி யோங்குல கியாவுமம் மலர்வயிற் படைத்தான் (இ.பா) |
| 450:3 | எனமுறை நவின்ற | — | எண்முறை நவின்ற (,,) |
| 451:1 | அந்த மிஃறமத் தனிச்சை | — | அந்தில் வாய்தமத் தவிச்சை (,,) |
| 452:1 | படைத்திடும் படைப்பும் | — | படைக்குறு படைப்புப் (,,) |
| 456:2 | இவைமுன் | — | இறைமுன் (,,) |
| 457:2 | படைத்த | — | படைப்பப் (,,) |
| 4 | அருந்தவன் புகல் வான் | — | அருந்தவ னறைவான் (,,) |
| 459:1 | காலமான | — | காலமாய (,,) |
| 2 | தூலமான | — | தூலமாய (,,) |
| 460:1 | மூன்று பொறுந்து றின் | — | மும்மை பொறுந்துறின் (,,) |
| 2 | வயங்கிய | — | வயங்கிவெவ் |
| 462:3 | மூன்று | — | மும்மை (,,) |
| 470:4 | சந்தியென் றுரைப் பார் | — | சந்தியாப் பகர்வர் (,,) |
| 472:1 | கழிந்திடின் | — | கழியுமேல் (,,) |
| 473:4 | வீறுசால் பதும | — | வீறுசால் பற்ப (,,) |
| 476:3 | நினைதல் செய்தன வினைக்குறு (இ.பா) | — | நினைத்திடு மனத்தினி னின்றும் (பு.பா) |
| 477:4 | போனார் | — | போயார் (இ.பா) |
| 479:2 | அழுதலர்ப் | — | அழுதலாற் (,,) |
| 480:3 | துறவுவெண் டிங்கள் | — | துறக்கம்வெண் டிங்கள் (,,) |
| 481:2 | பூவையர்ப் புணர் வாய் | — | பூவையைப் புணர்வாய் (,,) |
| 483:1 | வசிட்ட னாற்றல் சால் புலத்தியன் புலகன் (இ.பா) | — | வசிட்ட னகத்தியன் புலகன் (பு.பா) |

| | | | |
|---|---|---|---|
| 2 | என்பவர்கண் | — | என்பவர்கள் (,,) |
| 485:1 | முழுக்கவி னொழுகு முளரி | — | முழுக்கவின் கலுழு முளரி (இ.பா) |
| 492:1 | அமர்ந்துறை மார்பன் (இ.பா) | — | மலர்ந்துறை மார்பன் (பு.பா) |
| 3 | மூரிவா னளவக் (,,) | — | மூரிவா னடைய (,,) |
| 494:2 | கடந்தி ரைத்தெழு (,,) | — | கடந்திகழ்ந்திடும் (,,) |
| 3 | வெண்மலை யென (,,) | — | மாமலையென (,.) |
| 4 | கொடு நிவந்தது நீண் ,, | — | கொடு வந்தது நீண் (,,) |
| 495:4 | கவள மால்களிறு | — | கவன மால்களிறு (இ.பா) |
| 496:2 | பணைப்பவெங் கடுங்கதை( இ.பா) | — | பணைத்திடக் கடுங்கதை (பு.பா) |
| 497:1 | பரப்பிய பசும் பொன் | — | பரப்புபொன் விசும்பொடு (,,) |
| 2 | கிடந்தலறக் | — | கிடந்ததிரக் (இ.பா) |
| 498:1 | சீறியல் வவுணன் | — | சீறுமவ் வவுணன் (,,) |
| 4 | ஆங்கது துணித்தது மாதோ | — | ஆங்கஃ தழிவுகண் டதுவே (இபா) |
| 500:2 | வெயில் பரப்புமுச் சிகைப்படை பற்றி | — | வெயில் பரப்பிய சூலங் கைபற்றி (பு.பா) வெயில் பரப்புமுச் சிகைப் படை பற்றூஉ (இ.பா) |
| 501:4 | விலங்கினவால் | — | விளங்கினவால் (இ.பா) |
| 504:2 | உருவவெண் கேழல் | — | உருவ வாண் கேழல் (,,) |
| 4 | சுடரடி யிமையவர் (இ.பா) | — | சுடர்முடி யிமையவர் (பு.பா) |
| 505:4 | உரைத்தனன் மாமயித்தி ரேயன் | — | உரைத்தனன் உயர்மயித் திரேயன் (இ.பா) |
| 507:2 | படர்ந்துலாங் கால மீதால் | — | படர்ந்துலாம் பதமீ தாமால் (,,) |
| 512;2 | பூங்குழலித னுளம் (இபா) | — | பூங்குழலினா ளுளம் (பு.பா) |

| | | | |
|---|---|---|---|
| 513:1 | வாய்த்திடின் | — | வாய்க்குறின் (இ.பா) |
| 4 | கண்ணினாள் | — | கண்ணவள் (,,) |
| 516:3 | இருட்டிய தென் கொலாய் | — | இருட்டுற லென்கொலாய் (,,) |
| 517:4 | கூறுவான் | — | கூறுமால் (,,) |
| 518:1 | வயிறு கிழிய | — | வயிறு கீள (இ.பா) |
| 523:2 | மறை நான்கு | — | தவநான்கு (,,) |
| 3 | உளமகிழ்ந்து | — | உளமகிழ்ந்தார் (,,) |
| 524:2 | வாயிலா றிறந்தேகிப் | — | வாயிலா ரிறந்தேகி (,,) |
| 530:4 | மகிழ்ச்சி யெய்திக் | — | மகிழ்சிறப்பக் (,,) |
| 537:2 | வாயில் குறுகுழி | — | வாயிற் குறுகுழி (,,) |
| 538:2 | கருமுகி லவரை வீட்டும் (இ.பா) | — | கருமுகி லவரைக்கொல்லும் (பு.பா) |
| 544:1 | பெயர்த்திடின் | — | பெயர்க்குறின் (இ.பா) |
| 546:1 | வானவ ரஞ்ச (இ.பா) | — | வானவ ரலற (பு.பா) |
| 552:1 | தோன்றி யவ்வழிக் | — | தோன்றுற் றாயிடை (இ.பா) |
| 557:1 | சாற்றிய வவிச்சை யிற் (இ.பா) | — | சாற்றிய விச்சையிற் (பு.பா) |
| 558:4 | விரும்பிட னாய் விளங்கியதால் | — | விரும்பிடன் மிகவிளங் கியதால் (இ.பா) |
| 561:4 | அலமந் தாரரோ (இபா) | — | அலம் வந்தார் (பு.பா) |
| 568:3 | உருகிடப் பாடி | — | உருகுவான் பாடி (இ.பா) |
| 4 | விளம்புநன் மிதுன மாய் | — | விசும்புழி மிதுனமாய் (,,) |
| 569:4 | விரைவிறி கொண் டவே | — | விரைவின் மேயவே (,,) |
| 570:4 | மனுக்கள் தோன்றினர் | — | மனுக்கள் வந்தனர் (,,) |
| 573:1 | ஏழிரும்புவி | — | ஏழிரும்பொழில் (,,) |
| 574:2 | எய்துவ னென்றோர் | — | எய்துக வென்றோர் (,,) |
| 578:2 | கோதையா விளந் தளிர் (இ.பா) | — | கோதைய ராவிளந்தளிர் (பு.பா) |
| 592:3 | மினி னன | — | மினலென (இ.பா) |

| | | | |
|---|---|---|---|
| 600:4 | உவந்தனன் மாதோ | — | உவந்தன னம்மா (,,) |
| 606:4 | பயந்தவர் களிப்ப (இ.பா) | — | ஈன்றவர் களிப்ப (பு.பா) |
| 611:3 | ஆரிருள் விழுங்கிய வலர்கதிர் | — | ஆரிரு ளயிலும்வெள் ளலர் கதிர் (இ.பா) |
| 612:2 | ஆர்த்திடப் | — | ஆர்ப்புற (இ.பா) |
| 623:2 | கனியிருள் (இ.பா) | — | கனையிருள் (பு.பா) |
| 629:4 | தெரியினும் | — | தெருளினும் (இ.பா) |
| 638:2 | புகன்றிடு சுவையை | — | புகல்வரு சுவையை (,,) |
| 3 | நிலைபெறு மணத்தை | — | நிலைபெறு நெஞ்சை (,,) |
| 4 | குணமெனப் பொருதுமன்றே | — | குணனெனப் பொலிந்து தோன்றும் (,,) |
| 639:3 | கவினுறு மூக்கி | — | கவினநீண் முக்கி (,,) |
| 640:1 | கவின்பெறு தொக்கு | — | கதுவுறு தொக்கு (,,) |
| 641:1 | பராற்பர னருளி னானன் (இ.பா) | — | பரமனல் லருளி னாலே (பு.பா) |
| 642:2 | இயையவு மெழுந்த | — | இயைந்துற வெழுந்த (இ.பா) |
| 645:1 | புனலுறு விதிர்ப்புத் தண்ணம் (இ.பா) | — | புனலுறு நடுக்கந் தன்னை (பு.பா) |
| 650:1 | விளைவதை | — | வினைவகை (இ.பா) |
| 653:2 | செக்கர் சிறந்த(இ.பா) | — | செக்கச் சிவந்த (பு.பா) |
| 664:2 | பற்றி யலைத்திடக் | — | பற்றி யலைக்குறக் (இ.பா) |
| 684:4 | ஒளிது ளும்பு | — | ஒளிகளுலு (,,) |
| 729:4 | மக்க ளோர்பதி னறுவரைப் | — | மக்களோரறு பதின் மரைப் (,,) |
| 730:3 | புலத்தவர்க் கொருத் தியை | — | புலத்தவற் கொருத்தியை (,,) |
| 733:4 | மென் மொழித் திதிக்கை | — | மென்மொழித் தக்கை (பு.பா) [மென்மொழித் ததீக்கை (இபா)] |
| 738:4 | ஐந்தெனுந் தனய ரைத் | — | ஐந்தெனெண் தநயரைத் (இ.பா) |
| 742:1 | தேறல் வாக்கும் (இ.பா) | — | தேற றூற்றும் (பு.பா) |

| | | |
|---|---|---|
| 2 | நீழ லுறைவானவர் | — நீழன் மருவானவர் (இ.பா.) |
| 744:4 | இளந்திங்க ளேயும் (இ.பா) | — இளந்திங்கள் சூடும் (பு.பா) |
| 750:1 | இழைத்த காலை | — இழைத்த லோடும் (,,) [இழைக்குங் காலை (இப)] |
| 752:2 | சீற்றம் (இ.பா) | — செற்றம் (பு.பா) |
| 4 | மக மாற்றுமால் (,,) | — மகமாற்றினான் (,,) |
| 757:1 | கொந்து வார்குழல் (,,) | — கொந்துலாங் குழல் (,,) |
| 3 | தக்கன் சினந்துரை(,,) | — தக்கன் மொழிந்திடு (,,) |
| 761:3 | கொண்டிள | — கொள்ளிள (இ.பா) |
| 767:1 | வீடு நான்முகன் வெண்டலை | — வீடு நாண்மிளிர் வெண்மதி (இ.பா) |
| 769:2 | அழிகுறு நாளெனக் (இ.பா) | — அழிந்திடு நாளென (பு.பா) |
| 778:3 | மாயுமல ரண்ணறலை மாலைகள் வயங்கக் | — மாயுர ஙிறும்பைமலர் மாலைகள் குலாவ (,,) [மாயுற லிறும்பைநறு மாலைகள் வயங்கக் (இபா)] |
| 792:3 | கூற்றந் தன்னொடு (இ.பா) | — கூற்றந் தன்னெடுங் (பு.பா) |
| 796:4 | எய்தினாரால் (இ.பா) | — எய்தினானால் (,,) |
| 798:4 | நிகர்த்த தம்மா | — நிகர்த்த மாதோ (இ.பா) |
| 806:3 | அங்கை யற்றோர் | — அங்கணுற்றோர் (,,) |
| 836:2 | கிண்ணிணி | — கிங்கிணி (,,) |
| 845:3 | நிலாச்சொரி தூசு | — நிலாச்செறி தூசு (,,) |
| 856:4 | தடவந் தானே | — தடவா நிற்கும் (,,) |
| 865:1 | நஞ்சு குமிழி | — நஞ்சு குழுமி (,,) |
| 872:4 | மன்ன குமரன் | — மன்னன் குழகன் (,,) |
| 878:2 | ஆடல் வாள ரக்க னால் | — ஆடல் வாளிய ரக்கரால் (புபா) [ஆடல் வாள ரக்க ரால் (இ.பா)] |
| 885:4 | வல்ல ரக்கர் வந்தரோ (இ.பா) | — வல்லியக்கர் வந்தரோ (பு.பா) |

| | | | |
|---|---|---|---|
| 888:1 | வல்ல ரக்கர்தம் (,,) | — | வல்லியக்கர்தம் (,,) |
| 889:3 | விரிதா ரரக்கர் (,,) | — | விரிதா ரியக்கர் (,,) |
| 891:2 | ஓரரக்கன் (,,) | — | ஓரியக்கன் (,,) |
| 3 | வலயத்தரக்கர் (,,) | — | வலயத் தியக்கர் (,,) |
| 892:2 | மிசையேகு பேர னணுகாத் (இ.பா) | — | மிசையேகு பொன்ன கரினிற் (பு.பா) |
| 894:4 | உலகமு முருட்டி னானால் | — | உலகமு மோச்சி னானால் (இ.பா) |
| 895:4 | ஓங்கலான் மாரி காத்த | — | ஓங்குவான் மாரி காத்த (,,) |
| 896:1 | உருளுறு பசும்பொன் | — | உருளுறப் பசும்பொன் (,,) |
| 897:1 | மாய னுயர்பத மடையல் | — | மாய னொளிவீசும் படையல் (,,) |
| 898:3 | போகுயர் விசும்பின் | — | போகுழி விசும்பின் (,,) |
| 904:4 | விளம்புவான் | — | விளம்புமால் (இ.பா) |
| 926:2 | கூற்றைக் கொன்று | — | கூற்றைக் கொண்டு (,,) |
| 931:4 | நிடாத னாயினான் (இ.பா) | — | நிடத னாயினான் (பு.பா) |
| 934:2 | சொரியுங் காந்தி துலங்கும் வலக்கையின் | — | சொரியு நீள்சுடர் தோன்று வலக்கையின் (இ.பா) |
| 935:4 | மாலே யென்றான் (இ.பா) | — | மாய னென்றான் (பு.பா) |
| 940:4 | கொடுவந் துற்றன (,,) | — | கொண்டு வந்தன (,,) |
| 949:3 | உணர்வுறு நோன்மை யின் (,,) | — | உணர்வுறு பொறுமையின் (,,) |
| 950:3 | செப்ப வுட்டெளிந்து | — | மேவவுட் டெளிந்து (இ.பா) |
| 959:4 | சொல்லுவாள் | — | சொல்லுமால் (,,) |
| 960:3 | கண்ண னாதிநீ (இ.பா) | — | கண்ணனாகுநீ (பு.பா) |
| 977:4 | போக்கி னானே | — | போக்கல் செய்தான் (இ.பா) |
| 981:3 | கரைபொரு நதியி (இ.பா) | — | கறைந்திடு நதியி (பு.பா) |

| | | |
|---|---|---|
| 982:4 | நோக்கிச் சொல்வான் | — நோக்கிச் சொல்லும் (இ.பா) |
| 1001:4 | ஏந்தல் கதை (இ.பா) | — ஏய்ந்த காதை (பு.பா) |
| 1005:4 | பின்னுமோர் | — பெயர்த்து மோர் (இ.பா) |
| 1012:2 | செயிர் கதழ்ந்து | — செயிர் தழைத்து (பு பா) |
| 1013:4 | உரைத்துங் கேட்டி | — உரைக்குங் கேட்டி (இ.பா |
| 1024:4 | செய்ம்மினே (இ.பா) | — செய்யுமே (பு.பா) |
| 1034:3 | வெம்மாக்களை (,,) | — வன்மாக்களை (,,) |
| 4 | மெலிந்தனன் | — மெலிவுறும் (இ.பா) |
| 1035:1 | முனிந்திடின் | — முனிவுறும் (பு.பா) (முனிகுறின்-இ.பா) |
| 3 | வித்ரு மத்திதழ் விளையுந் தேனுண்டும் (இபா) | — வித்துரு மத்திதழ் விளை தேனுண்டும் (பு.பா) |
| 1041:3-4 | காலகன்னி (இ.பா) | — காலன்கன்னி (பு.பா) |
| 1046:3 | உடல் சினத்தால் | — உடல் சிதைக்கப் (இ.பா) |
| 1054:4 | அழன்றெதிர் குத்தியே (இ.பா) | — அழன்றெரி சிந்தியே (பு பா) |
| 1059:3 | நல்லித்தும வாகன் (,, | — நல்வித்தும வாகன் (,,) |
| 1060:3 | பசுந்தென்ற லுலா வரும் | — பசுந்தேறலு வட்டெழும் (இ.பா.) |
| 1079.4 | அடைந்தன னரசர் கோமான் | — அண்மின னரச ரேறே (,,) |
| 1080:1 | பரிகி யென்றும் | — பரிகி யென்னா (,,) |
| 2 | இறைவர்சொல் லாவிர்த்தான னென்று நன் னாம முற்றான் | — அறவர்சொல் லவிர்த்தா னன்னென் றை தினன் னாம முற்றான் (,,) |
| 1083:4 | பாம்பணையா னருள்சுரந்து வெளிப் பட்டான் | — பாம்பணைஞா னானந்தன் றோன்றுற்றான் (இ.பா) |
| 1085:3 | சொரிதர (இ.பா.) | — சொரிந்திட (பு.பா) |
| 1086:2 | விளைத்தவர்க ளுளங் குளிர | விளைத்தவருட் டண் ணென்ன (இ.பா) |
| 3 | என்னநறாத் | — என லுநறாத் (,,) |

| | | | |
|---|---|---|---|
| 1093:4 | மலரவன் விலக்கி னானே | — | மலரவன் மறுத்தான் மன்னோ (,,) |
| 1099:2 | உலகநீ யாளு வா யெனக் | — | உலக நீயரசு செய்கெனாக் (,,) |
| 1102:2 | தழையுமா போல | — | தழையுமா மான (,,) |
| 1107:4 | தம்முன்றன்னையே | — | தம்முனானையே (,,) |
| 1113:4 | இழைத்தனன் விழைந்தே (இ.பா) | — | இழைத்தனன் மன்னோ (பு.பா) |
| 1114:4 | புறத்திறுத் ததுவே | — | புறத்திறுத் தன்றே (இ.பா) |
| 1116:4 | புறந்தருகெனப் | — | புரந்தருளெனப் (,,) |
| 1118:4 | எங்ஙனம் புகல்கேன் (இ.பா) | — | எங்ஙன முரைக்கேன் (பு.பா) |
| 1120:2 | அழற் காமங் காய்ந்து | — | அழல் காய்ந்து நின்ற (இ.பா) |
| 1125:4 | மலரி னானே | — | மலரின் மேலான் (,,) |
| 1135:1 | அழிவில் தீர் நாபி (இ.பா) | — | அழிவிலா நாபி (பு.பா) |
| 1140:4 | நிலம் புரந்திட் டானே | — | நிலம் புரவு பூண்டான் (இ.பா( |
| 1141:4 | நன்னெறி தெரித்து (இ.பா) | — | நன்னெறி காட்டி (பு.பா) |
| 1149:4 | அண்ணல் போல | — | நக்கன் போல (இ.பா) |
| 1151:2 | சுடர மண்மேல் | — | சுடர்வ மேன்மேல் (,,) |
| 1156:1 | மடமா னாகப்(இ.பா) | — | மறைமா னாக (பு.பா) |
| | முற்பிறப்பிற் சேர்ந்த | — | முற்பிறந்தைசேர்ந்த(இ.பா) |
| 1157:2 | எழுதா முன்னூல் | — | செய்யா முன்னூல் (இ.பா) |
| 3 | நட்போ டில்லான் (இ.பா) | — | நட்பொன்றில்லான் (பு.பா) |
| 1162:1 | நெஞ்சி னிறீஇயுணர் | — | நெஞ்சி னினைத்துணர்( ,,) |
| 1164:1 | முழுமக்கள் வலிதிற் பற்றி (இ.பா) | — | முழுவலி மாக்கள் பற்றி(,,) |
| 1175:3 | புலிமிடைந் தியல் வெங் கானகம் (,,) | — | புலிமிடைந் திருந்த காட்டிடை (,.) |
| 4 | கடந்திடக் கருதல் | — | கடக்குதல் கருதல் (இ.பா) |

| | | | |
|---|---|---|---|
| 1179:1 | பழுத்துக் காட்டகத் | — | பழுத்தகாட்டகத்தே(பு.பா) (பழுத்த காட்டகத்-இ.பா) |
| 1184:4 | தெரிபுகழ் புனைதரு தேவ தாசித்தே(இ.பா) | | விரிபுகழ் சேர்தரு விருத்த சேனனே (பு.பா) |
| 1187:1 | உதவு கீதனாம் | — | உத்து கீதனாம் (இ.பா) |
| 1189:2 | சித்திர ரதனெனச் செப்பும் | — | சைத்திர ரதனெனச் சாற்றும் (,,) |
| 4 | சம்மி ராட்டுவே | — | சாமு ராட்டுவே (,,) |
| 1191:4 | ஏற்றமன் னியுவென் றோது மிறைவனை யினிதி னீன்றான் (இ.பா) | | ஏற்றநஞ் சுமந்து வென்று மிறைவனை நல்கி னானே (பு.பா) |
| 1192:2 | பசுந்தார் வேயும் புவனெனும் (இ.பா) | — | பசுந்தார் மார்பன் வகனெனும் (,,) |
| 1197:2 | சிருங்கி யென்னுமூ வெற்பும் | — | சிருங்க மென்னுமோர் வெற்பும் (இ.பா) |
| 1199:2 | முட்பட நிரவி (இ.பா) | — | முற்பட நிறுவி (பு.பா) |
| 1200:2 | பளகறு நீல (,,) | — | பழுதறு நீல (,,) |
| 3 | மன்னிய தெனாது (,,) மருவிய வடாதென (,,) | — | மன்னிய தெற்கா (,,) மருவிய வடக்கென (,,) |
| 1209:4 | மேரு மால்வரை வியனள விற்றென விரிக்கின் (இ.பா) | — | மேரு மால்வரையளவினைத் தெளிதர விளம்பில் (பு.பா) |
| 1210:1 | ஒரு மவ்வள வடி பருத்தும் | — | ஒரு மவ்வடி மேற்பருத்து (இ.பா) |
| 1214:2 | வெற்பின்மே லமர்ந்திடு | — | வெற்பின்மே லமர்தரு (,,) |
| 1217:5 | சூழ்ந்திடத் தோன்றும் | — | சூழ்வுறத் தோன்றும் (,,) |
| 1219:4 | மேருவைச்சுலாயினி (இ.பா) | — | மேருவைச் சூழ்ந்தினி (பு.பா) |

| | | | |
|---|---|---|---|
| 1221:3 | அதையருந் தினர் கள் | — | ஆங்கருந்தினர்கள் (இ.பா) |
| 4 | பரிமளிக்கும் | — | பரிமளிப்பர் (,,) |
| 1223:1 | புலங்கொள் (இ.பா) | — | பொலங் கொள் (பு.பா) |
| 1233:4 | சேர்ந்துறை வாரது திண்ணம் | — | சேர்குவ ரென்னுத றிண் ணம் (இ.பா) |
| 1236:4 | பழுதற வாழ்வார் | — | பளகறப் பல்கும் (,,) |
| 1238:2 | வழுத்திட வருள் புரிந் துறைவான் | — | வழுத்தவா னருள்புரிந் துறையும் (,,) |
| 1248:2 | ஆர்தரத்திறம் | — | ஆத ரத்திறம் (,,) |
| 3 | நார தற்கருள் செய நர நாரணன் | — | நார தற்கரு ணரன்சொனா ராயணன் (,,) |
| 1256:1 | வாரிகள் | — | வாரிசேர் (,,) |
| 1258:1 | தீவினை யினைத் தாத் (இ.பா) | — | தீவையில் வளவாத் (பு.பா) |
| 1260:4 | கட லவ்வள வாய தை யுடுக்கும் | — | கட லாங்கனைத் தாயதை யுறுமால் (இ.பா) |
| 1266:3 | புந்தியும் புலனும் | — | புந்தியு முரனும் (,,) |
| 1268:1 | வானி னோங்குற (இ.பா) | — | வானி னோங்கிட (பு.பா) |
| 1272:4 | வழங்கு தேவன் மல ரயன் (இ.பா) | — | வழங்கு மான மலரயன் (இ.பா) |
| 1278:1 | வில்லி னுதலால் புத் தேளிர் விளையாட் டயரும் பொல நிலத்தை (இ.பா) | — | வில்லி னுதலா ரொடுந் தேவர் விளையாட் டய ரும் பொன் னிலந்தை (பு.பா) |
| 1281:3 | நிலவு வளி | — | நிலையில் வளி (பு.பா) |
| 1286:2 | வழங்குமுற் பகை மை பற்றித் (இ.பா) | — | வழங்குமுற் பகையினாலே (பு.பா) |
| 3 | மறைத்து மாயன் | — | மறைத்து மால்செங் (இ.பா) |
| 4 | அகலு மாதோ (இ.பா) | — | அகல மன்றே (பு.பா) |

| | | | |
|---|---|---|---|
| 1288:2 | முக்கதிசெய் வெய்யோன் (இ.பா) | — | முக்கதிர் சேர் வெய்யோன் (,,) |
| 1289:1 | ஆயிரங் கதிர்ப்பிழம்பில் | — | ஆயிரங் கதிர்க டம்மில் (,,) |
| 1294:1 | கெழுமிய தேவ தானி | — | கெழுமிய தெய்வ யானம் (இ.பா) |
| 1296:4 | பொருந்துறக் கழியு மன்றே (இ.பா) | — | பொருந்திடக் கழியு மன்றே (பு.பா) |
| 1299:1 | செப்பிய நிசியில் | — | செப்பிய நிசிய (இ.பா) |
| 1303:2 | அளவுறு முருவு | — | அளவிற்றா முருவு(இ.பா) |
| 1308:1 | மலரி னண்ணலும் | — | மலரி லண்ணலும் (,,) |
| 1319:1 | சூழு வியாழம் | — | சேரும் வியாழம் (,,) |
| 4 | ஒளிருமே | — | ஒளிக்குமே (,,) |
| 1322:4 | விரித்திடு மதிமகன் | — | விருக்குறு மதிமகன் (,,) |
| 1330:3 | ஏத்திடத் துருவன் | — | ஏத்துமத் துருவன் (,.) |
| 1332:1 | கவின்செயத் துலங்கும் | — | கவின் செயக் கிளரும் (,,) |
| 1335:1 | தயங்கிட வொன்றுக் | — | தயங்குவா னென்றுக் (,,) |
| 1342:1 | முருத்திர மூர்த்தி யாய் விளங்கும் | — | முமையவள் கொழுநனா யொல்காப் (, ) |
| 1354:3 | உருக்கிரும் பூற்றிட | — | உருக்குசெம் பூற்றிட (,,) |
| 1355:4 | மாழ்குவார் | — | வாழ்குவர் (,,) |
| 1359:3 | ஒளியவீ சிமதி யென்னும் — | — | ஒளிவிசி மதியென்றோதும் (இ.பா) |
| 1360:4 | மருவிய நரகின் | — | மருவிய நரக (,,) |
| 1367:4 | ஐயந் தீர வருந்தவன் சொல்லுவான் | — | ஐய மோவ வறவ னறைகுவான் (,,) |
| 1382:4 | குலைந்து நீங்குமே | — | குலைந்து சாம்புமால் (,,) |
| 1385:4 | மால்பதம் | — | மால் கழல் (,,) |
| 1391:1 | அசாமிள னெஞ்சக முருகி | — | அசாமிள னகங்குழைந் தன்னோ (,,) |
| 1396:1 | கண்ணுத லரிய பழமறையொருங்கு கசடறத் தேர்ந்துமுன் வினையின் | — | கண்ணுதல் முனிவுற் றரசனா கென்னக் கருதிநின் றுரைத்தசா பத்தால் (பு.பா) |

| | | | |
|---|---|---|---|
| 1396:3 | மிகப்பெற வேண்டி | — | மிகப்பெறு பாக்கு (இ.பா) |
| 1413:1 | பேதைய ரிவர்பெயர் பேசின் (இ.பா.) | — | பேதைய ரிருவர்பேர்பேசின் (பு.பா.) |
| 1415:3 | சலபமே முதலிய | — | சலபத முதலிய (இ.பா) |
| 1422:4 | மாவே மாந்துமென்று | — | மாவே யயிலுமென்று (,,) |
| 1449:4 | மறைப்பொரு ளாய வன் வந்து காக்கவே (இ.பா) | — | திறற்படை யாழியஞ் செல்வன் காக்கவே (பு.பா) |
| 1458:3 | உன்னுறு மபரமா நிசி | — | உன்னுறு பரமமா நிசி (இ.பா) |
| 1460:3 | அற்றமி லயிற்படை யரசெ னாழிதான் (இ.பா) | — | அற்றமி லாதமா லங்கை யாழிதான் (பு.பா) |
| 1473:2 | விறலுடை யிந்திரன் வேள்வி | — | விறலுடைய வலாரிநல் வேள்வி (இ.பா) |
| 1478:3 | குறைக்கினுந் | — | குறைத்தலுந் (இ.பா) |
| 1508:3 | நான்மறை யின் வழி | — | நான்மறை மரபுளி (இ.பா) |
| 1524:4 | குலைந்தழு தான ரோ | — | குலைந்தழிந் தானரோ ('') |
| 1713:2 | தொழுதெழு மிமை யோர் | — | தொழுதெழுந் திமையோர் (,,) |
| 1770:1 | ஆழியான் விளை யாட்டெல்லாம் | — | அமலனல் விளையாட் டெல் லாம் (,,) |
| 1771:4 | பரமனல் விபுவென (இ.பா) | — | பச்சைமால் விபுவென (பு.பா) |
| 1772:2 | நறை பருகிடு மறு கால் | — | நறை பருகல்செ யறுகால் (இ.பா) |
| 1773:3 | அரக்கரே முதலாங் | — | அரக்கருள் ளிட்ட (,,) |
| 1774:1 | உத்தமன்றனக் கிளையோன் | — | உத்தமனுக் கிளையோன்(,,) |
| 1775:1 | அறைந்தநா ளரிமே தசன்றனை மணந்த வரிவையா ளரிணிதன் வயிற்றின் | — | அறைந்தநா ணிருமே தசன் றனை மணந்த வரிவைவை திருதியின் வயிற் றில் (பு.பா) (திருதியாள் வயிற்றின்- (இ.பா) |

| | | | |
|---|---|---|---|
| 1794:2 | மன்னுமால் | — | மன்னுமாங் (இ.பா) |
| 3 | குற்றம் | — | கொற்றம் (இ.பா) |
| 1803:4 | அமலவோ வென்ற ரற்றும் (இ.பா) | — | அமலவென் றழைத்த தன்றே (பு.பா) |
| 1805:4 | இழைத்தகா ரியம் யாமாவே மென்செய்து மாலின் றென்றார் (இ.பா) | — | இழைத்தகா ரியத்தின் வெவ்வே றியைந்தனம் பேர்மற் றன்றே (,,) |
| 1808:4 | வடிவுபெற் றுயர்ந்த தன்றே | | வரம்பில்வீ டுற்ற தம்மா (இ.பா) |
| 1809:1 | வண்ணத் தண்ணல் | — | வண்ணத் தெம்மான் (,,) |
| 1812:1 | இமிழ்கடல் சுவற் றும் | — | இமிழிருள் சுவற்றும் (,,) |
| 4 | உலைவில்வீ டுற்றா னன்றே (இ.பா) | — | உருவுபெற் றுயர்ந்தா னன்றே (பு.பா) |
| 1815:3 | பூதரயன்முதற் | — | பூதரதன் முதற் (இ. பா) |
| 1817:4 | வீறர் தவத்தா ரெதிர் வனதேர் விரகா தியரேழ் | — | வீறார் தவத்தா ராகவனல் விரிடா தியரேழ் (,,) |
| 1835:1 | யிரிந்தனர் பரந்து | — | யிரியல்போ யினராற் (இ.பா) |
| 1836:4 | தானுணக் கருத்துக் கொண்டான் (இ.பா) | — | தனைநுகர்ந் தருளி னானே (பு.பா) |
| 1847:2 | அணியென வணிந்த செல்வி | — | அணியென வணிந்து நம் மோய் (இ.பா) |
| 1946:2 | அதிதி யென்பாள் சேர்ந்தனள் | — | அதிதி யென்பா டிசைத்த னள் (,,) |
| 1961:3 | காமுறு மவ்வுரு | — | காமுறு மாணுருவம்(இ.பா) |
| 4 | வாமன னாகி | — | வாமன மாகி (,,) |
| 1976:4 | பகர்ந்திட வல்லவர் | — | பகரவல் லாரம்மா (,,) |
| 1984:4 | வென்றி யாக்கு | — | வென்றி யாற்கு (,,) |
| 2007:2 | மாயவ னென்று சீற | — | மணிவண்ண னெனச்சி னப்ப (,,) |

| | | | |
|---|---|---|---|
| 2015:4 | மகத்துக் கென்றான் | — | மகத்துக் கம்மா (,,) |
| 2029:1 | வைகின் மாக்கடல் (இ.பா) | — | முடியின் மாக்கடல் (பு.பா) |
| 2046:4 | எய்திடா ரிறைவ மாதோ | | எய்திடா ரிறையு மன்றே (இ.பா) |
| 2100:1 | ஆழி வெருட்டலால் | — | ஆழி யடர்த்தலால் (,,) |
| 2111:4 | சேயன்ன வனேன சாம் | — | சேயன்ன வேனசாம் (,,) |
| 2125:1 | வவ்வாறவ னுய்த் துழி | — | வவ்வாறவன் சென்றனன் (,,) |
| 2265:3 | காதலனை நோக்கா (இ.பா) | — | காதலனைக் காணா(பு.பா) |
| 2272:2 | அரக்கனே சொல் லின னென்னப் | — | அரக்கன்சொல் லெனநனி சொல்லும் (இ.பா) |
| 2336:2 | அவருயிர் கவர்ந்தான் (இ.பா) | — | அவருயிர் கழித்தான்(பு.பா) |
| 2348:4 | பயிர்க்குழு வென்ன வே | — | பயிர்க்குழுப் பண்பினே (இ.பா) |
| 2373:2 | புகன்றிடுந் திசைக டோறும் | — | புகல்புகத் திசைக டோறும் (,,) |
| 2387:3 | அருத்தி செய்மக வாயருந் தவத்தினோ டடைந் தான் | — | அருத்தி யுற்றமெய் யருந் தவத் திட்பமோ டடைந்தான் (இ.பா) |
| 2393:3 | வீரிய னாமவன் மைந்தன் | — | வீரிய னாம்வயமைந்தன்(,,) |
| 2413:2 | ஒளிக ஞலிய காதலன் | — | ஒளிக ஞலிய காதலோன்(,,) |
| 2420:1 | குரிசிலெனக் கிவ் வுலகில் | — | குரிசிலென நிலவரைப்பின் (,,) |
| 4 | நானீங்குவனால் | — | நான்றீர்குவனால் (,,) |
| 2430:2 | பாவை யெங்கே | — | பாவை யெங்ஙன் (,,) |
| 2442:1 | இசைநி லாவெறித் திலங்கிய | — | இசைநி லாவெடுத் தியம் பிய (,,) |
| 2530:4 | இயம்ப வல்லார் | — | இயம்பு மீட்டார் (,,) |

| | | | |
|---|---|---|---|
| 2603:3-4 | கூரி ருஞ்சுடர்க் கொற்றவன் குதன்முத லாய ஓரி ருந்தவ மூவரை யுயிர்த்தன னுவப்பால் | — | பேரிரி யன்றதன் புகழை யார் புகல்பவர் புவிமேல் சீரி யன்றவன் மதலைதன் றிறத்தையுந்தெரிக்கின்ற(,,) |
| 2637:3 | முனிவ னின்னகை முகமலர் | — | முனிவன் மூரலொன் முக மலர் (இ.பா) |
| 2647:4 | திருமணம் புணர்ந் தான் (இ பா) | — | திருமணம் புரிந்தான் (பு.பா) |
| 2659:4 | பச்சைப் பசும்புயல் பணிக்கு மன்றே | — | நங்கள் பரஞ்சுடர் பணிக்கு மன்றே (இ.பா) |
| 2662:2 | தேவகி வயாவை வாங்கி (இ.பா) | — | தேவகி கருப்பந் தன்னை (பு.பா) |
| 2668:4 | நித்தலும் வீதிதோ றும் நெய்விளை யாடி னாரே | — | நெய்த்த பேரன்பு போர்ப்ப [நெய் விளையாடல் செய் தார்-(,,)-] (இவ்வேறு பாட்டை ஐயர் குறிக்க வில்லை) |
| 2745:4 | சகடம் வேறாகி | — | சகடம் வீற்றாகி (இ.பா) |
| 2746:1 | வியந்து நோக்கி யெடுத்தன்னை | — | வீழ வியந்தே யெடுத் தணையா (,,) |
| 2747:4 | கழுத்து நெரிப்பக் கண் பிதுங்கிக் கன்மேற் கவிழ்ந்து வீழ்ந்திறந்தான் | — | கழுத்து நெரியக் கண் பிதுங்கிக் கன்மேற் கவிழ்புளு யிர் மாய்ந்தான் (,,) |
| 2822:1-2 | தேரார்க் குடைப் பெரு மாயை | — | தேரா துடைப்பெரு மாயை (,,) |
| 2830:3 | முல்லை மல்லற் கொடி | — | முல்லைமெல் வெள்கொடி (பு.பா) |
| 2841:1 | வணிகருங் கேச மாயன் | — | மணிக் குழலின் மாயன் (பு.பா.) [வணிகருங் கேசன் மாயன்-என்பது இ.பா.] |
| 2862:3 | இருள்குடித்திடு மிளங் கதிர் தோன்ற | — | இருள்கு டித்தெழு மிளங்கதி ரோனல் (இ.பா) |
| 2874;3 | சிதாமன் | — | சீர்த்தாமன் (இ.பா) |

| | | | |
|---|---|---|---|
| 2874:4 | மாரி காத்த | — | மாரியோப்பும் (,,) |
| 2893:1 | செங்கதிர் | — | செங்கரம் (,,) |
| 2896:4 | கோலங் காட்டுமே | — | கோலம் போன்மரோ (,,) |
| 2897:4 | வண்ணங் காட்டுமே (இ.பா) | — | வண்ணம் மாளுமே (பு.பா) |
| 2899:2 | குரவைக் கண்ணே | — | குரவைக் கந்தண் (இ.பா) |
| 4 | திருந்துபொற் றொடிசூழங்கை செங்கையாற் தொடுதல் போலும் | — | திருந்துபொற் றொடிசூழ் கையிற் தேமலர் தொடுத் தல் போலும் (,,) |
| 2913:1 | தெரிதரப் | — | தெரிப்பவான் (,,) |
| 4 | வளமுலைக் குவட்டில் | — | வளமுலைக் குவடு (பு.பா) [வனமுலைக்குவடு-என்பது இ.ப.] |
| 2935:4 | அளிக்குல மொய்த்த | — | அளிகுல மொய்ப்ப (இ.பா) |
| 2942:1 | கன்னியர் நுதன்மதி யடைந்து | — | கன்னியர் கன்மரி (பு.பா) [கன்னியரகன்மதி-என்பது இ.பா-] |
| 2943:2 | நிற்றலு நேயநோக் குதவி | — | நிச்சலு நெகிழ்ந்த நோக்கு தவி (இ.பா) |
| 2946:3 | கிளர்ந்த சாலைவாய்க் | — | கிளந்த காலைவாய்க் (,,) |
| 2953:2 | முனிவு செய்திமார் | — | முனிவு செய்கலர் (,,) |
| 2954:2 | காணப் பெற்றிலேம் | — | காண கிற்றிலேம் (,,) |
| 2978:2 | ஈன்ற வண்ணல் | — | ஈன்ற நம்மான் (இ.பா) |
| 2999:2 | காண வேட்ப | — | காணல் வேட்ப (,,) |
| 3017:2 | பானிலாப் பயன் | — | பானலார் பயன் (,,) |
| 3022:1 | ஒளிக்கரு மணியிற் | — | ஒளிக் கதிர் மணியிற் (,,) |
| 3104:3 | மருப்புநேர் தூக்கி | — | மருப்பிடை நோக்கி (,,) |
| 3108:4 | மின்னுநக் கொளிருங் கூர்வாள் | — | மின்னுநக் கொளிகால் கூர் வாள் (,,) |
| 3171:1 | நோக்கின னிறைவன் | — | நோக்கிய விறைவன் (,,) |
| 3 | மாதார ரவன்றன் | — | மாதரார் தனது (,,) |
| 3177:3 | வரைப்பெலாங் கமழ | — | வரைவெலாங் கமழ (,,) |

| | | | |
|---|---|---|---|
| 3179:2 | உழவ நின்னிடத் துளங்கனிந் துருகு பேரன்பு | — | உழவ நின்கழற் பொதுமை நீங்குருகு பேரன்பு (,,) |
| 3199:4 | பாவை போலெழில் பரந்தொழுக | — | பாவை போலிய பரந்துதவ (,,) |
| 3200:1 | ஏழையர்க ளித் தகையராய் | — | ஏழையரிரிந்த கையராய் (,,) |
| 3208:2 | முகட டைந்திட முருக்குபு | — | முகட டைந்திட முனையுபு (,,) |
| 3263:4 | மார்பினன் தேடி னானே | — | மார்பின னாடினானால் (,,) |
| 3268:3 | உம்மை யிங்ஙன் | — | உம்மை யிஞ்ஞன் (,,) |
| 3278:2 | கார் பயின்றதோர் | — | கார் பயின்ற வால் (,,) |
| 3299:3-4 | பார்மேலே அற்று | — | பார்மே லொன்றற்று (,,) |
| 3347:2 | சுற்றமை வல்வி | — | சுற்றமை வரவை (,,) |
| 3376:3 | தோன்றியபின் | — | தோன்றலுமல் (,,) |
| 3391:3 | சூழ்படை | — | சூழ்பவர் (,,) |
| 3445:4 | போற்றுவான் போயினாளே | — | போற்றுவான் போயாண் மன்னோ (இ.பா) |
| 3460:3 | உறைகின்றவந் நங்கை | — | உறைகின்ற வணங்கை (,,) |
| 3486:2 | ஈற்ற றைக்க ரந்தனபங் | — | இத்தறைக் கரந்தபைங் (,,) |
| 3488:4 | உவப்பி னுள்ள முருகியே | — | உவப்ப சும்பு ளூரவே (,,) |
| 3493:1 | துயிலு மேந்தல் பொன்மார்பினிற்கிடந்த | — | துயிலு மிறையவ ரிறை வன்மார் வத்துத் (,,) |
| 3527:4 | போயி னானே | — | போயான் மன்னோ (,,) |
| 3537:3 | காய்சின வரவிற் றுஞ்சும் | — | கற்றிலை யாலிற் றுஞ்சும் (,,) |
| 3566:4 | திகிரி மாயோன் | — | திகிரி மாலோன் (,,) |
| 3567:1 | தரங்கக் கருங்கடல் பசும்பொன் | — | தரங்கக் குரவைவாள் பசும்பொன் (,, |
| 1 | வரையினாற் கலக்கி | — | வரைவினால் மறுகி (,,) |
| 3568:4 | ஈகுவ னெனவுரை யிசைத்தான் | — | ஈகுது மெனவுரை யிசைத் தான் (,,) |

| | | | |
|---|---|---|---|
| 3573:1 | செஞ்சுடர் வலங் கொள் | — | செஞ்சிலை வளங்கொள் (,,) |
| 3575:4 | போர்க் குருசில் | — | பொற்குரிசில் (,,) |
| 3613:2 | செங்கட் கரியவன் | — | செங்கட் காரணன் (,,) |
| 3621:1 | புலவுஞ்செறி பூவுங்கமழ் | — | புலவுஞ்செறி பலவுங்கமழ் (,,) |
| 3627:3 | கொழுந்தாரணி யனந்துண்டு | — | கொழுந்தாரளை யளைந் துண்டு (,,) |
| 3634:4 | அந்தப்புர மோர் மாநிதி | — | அந்தப் புரமொடு மாநிதி (,,) |
| 3650:2 | திருமா வேந்தர் | — | திருமால் வேந்தர் (,,) |
| 3654:1 | மாது மடவை யழற்கவென் | — | மாது மடவை யழற்கவென (பு.பா) (மாது வடவை யழற்கவென-என்பது இ.பா.) |
| 3661:3 | மடவா ரோரொரு வர் | — | மடவா ரொரரோ வொருவர் (இ.பா) |
| 3673:2 | நேர்ந் தமையென்னே | — | நேர்ந்ததெனை குணம் (,,) |
| 3681:4 | உருக்குமி சென்னி மன்னே | — | உருக்கி யுவ்வி மன்னோ (,,) |
| 3697:4 | களித்திட் டாளே | — | களிமீக் கூர்ந்தாளே (,,) |
| 3712:4 | நரளெழும் பரவை | — | நாலெனும் பரவை (,,) |
| 3730:4 | வாளியா வக்கணை | — | வாளியை வடிக்கணை (,,) |
| 3732:4 | அழற்றிகிரி வெம் படையி னாங்கது துணிந்தான் | — | அழற்று திற னாரணன தம் படையின் மாய்த்தான் (இ.பா) |
| 3763:3 | கிடந்த கோம்பி | — | கிடந்த வோமான் (,,) |
| 3780:3 | இழுத்த னங்கொடுங் கலப்பையா விழுத் திடே லெனவன் | — | இழுத்த கூர்கொடுங் கலப் பையா லீர்க்குது மெனவன் (,,) |
| 3798:4 | எழுந்த தன்றே | — | எழுந்து சென்ற (,,) |
| 3799:3 | கோடு பாயச் | — | கோடு போழச் (,,) |
| 3801:2 | தெய்வத் திகிரிப் படை | — | தெய்வப் பருதிப்படை (,,) |
| 3811:4 | பணைத்த லாலே | — | பணைத்த மாதோ (,,) |

| | | | |
|---|---|---|---|
| 3812:4 | விழிக்கணை யாவர் வெல்வார் | — | விழிக்கிணை யாவர் சொல் வார் (,,) |
| 3815:1 | மண்டழ லுருமே றென்னச் | — | மண்டழன் மடங்க லென்ன (,,) |
| 4 | வந்தான் | — | போந்தான் (,.) |
| 3828:2 | வண்டுக டவழுந் | — | மண்டலந் தவழுந் (பு.பா) (மண்டகத் தவழுந்-என்பது இ.பா) |
| 3849:4 | கூறினான் | — | கூறிற்றால் (,,) |
| 3853:2 | கவிழ்ப்பல் யானெ னாப் | — | கவிழ்க்கும் யாமெனா (,,) |
| 3875:1 | கொடிய மூதெயில் குறுநகை நிலவி னான் முருக்கும் | — | நெடிய மூதெயி னீள்பொ லம் பொருப்பினான்முருக்கு (,,) |
| 3910:4 | வானமு மருள்கொள வனைந்தான் | — | வான்மரு டோள்வளை வனைந்தான் (,,) |
| 3962:2 | வீமன் வென்றிலன் பார்த்தானாக | — | வீமன் வென்றிலன்விழைந்து நோக்க (பு.பா) (வீமன்வெல்லு மாவிழைந்து நோக்க-என்பது இ.பா) |
| 4 | கொண்டனன் கிழித் திட்டானே | — | கொண்டனன் கீண்டானாங் கண் (இ.பா) |
| 4002:4 | செல்வனைச் சேர்ந் தான் | — | செல்வனை நேர்ந்தான் (,,) |
| 4048:4 | கூற லுற்றான் | — | சோற லுற்றான் (,,) |
| 4062:4 | சேர்ந்ததே | — | நேர்ந்தது (,,) |
| 4091:3 | பொழிமணி கிடந்த | — | பொழிகதிர் கடந்த (,,) |
| 4 | படலைதாழ் மார்பன் | | படலைநம்பெருமான் (,,) |
| 4096:4 | சேதுவைக் கண்டான் | — | சேதுவி னடைந்தான் (,,) |
| 4102:1 | யதுமுத லவற்குத் தற்பமா யுற்றோன் யதுகுலத்தலப்படை யொருவன் | — | தளிமுத லவற்குத் தற்ப மாய்த் தாங்கு தணப்பில்சீ ரலப்படை யொருவன் (பு.பா) (தனிமுதஎன்பது இ.பா) |

| | | |
|---|---|---|
| 4113:2 | வாங்குமஞ் செந்நெல் — | அறவர்பாற் கொடுவந்து (இ.பா) |
| 3 | வெண்ணிறத் துகில் — | இரந்த வெண்டுகில் (,,) |
| 4124:1 | எய்தின் — | எய்தல் (,,) |
| 4128:2 | நேரிலா மடப்பிணை — | நேரிழை மடப்பிணை (,,) |
| 4146:2 | போற்றைந் தடம்புரி — | போற்றத் தடம்புரி (,,) |
| 4165:4 | வாய்த்த தூ யறி வுத -- வல் | வாளாத் தூ யறி வுதவல் (,,) |
| 4171:2 | பிறந்த ஞாங்கர் — | பிறங்கு ஞாங்கர் (,,) |
| 4172:4 | ஊட்டினண் முறுவன் — | ஊட்டிளமுறுவல் (,,) |
| 4184:3 | நன்னுதல் — | நன்னய (,,) |
| 4186:2 | வளைத்தவன் தன் — னைக் கண்ட | வளைத்தவன் மாணுருக் காண் (,,) |
| 4195:2 | பிறர்க் கெங்குரி யாள்— | உறற்கெங் குரியாள் (,,) |
| 3 | வண்ணனவ் வள்ளல் — சீற்றம் | வண்ணன் முன்மல்கு சீற்றம் (,,) |
| 4418:2 | செம்பொரு ளிழக்கு — மாறும் | செம்பொருள் விழையா வாறும் (,,) |
| 4222:2 | வரைவிலன் வேட்ட — தெல்லாம் வண்டுண விரிந்த கொன்றை | வரைமயில் மருவு பாக னாலோன் வண்டுண் கொன்றை (,,) |
| 3 | விரைவினி லளிக்கு மிவ்வாறு | விழைந்தது விரைவி னல்கும் (,,) |
| 4224:3 | முருக்குதிறன் முக் — கணிறை (இ.பா) | முருக்கு முகிழ் மூரலிறை (பு.பா) |
| 4225:1 | களிற்றுரிவை யண்ண— லும் (இ.பா) | களிற்றுரிவை யந்தணன் (பு.பா) |
| 4226:4 | களிற்றரசு கூறவரு — கண்ணனுல குற்றான் | களித்தவிர லிக்கொடியின் காயிடைக் கரந்தான் |
| 4229:4 | ஆயிர முடித்தலை — யனந்தனைநிகர்ப்பாய் | ஆய்மறைசொ றக்கனுரை யாசுறுதலுண்டோ (இ.பா) |
| 2232;4 | வினாதல் செய்தார் — (இ.பா) | விடுத்தல் செய்தார் (பு.பா) |

| | | | |
|---|---|---|---|
| **4234:1** | மலர்மே லானை (இ.பா) | — | மலரோன் றன்னை (,,) |
| 2-3 | யென்று செந்தீச் சிந்துபு மலர்க்கண் சேப்பச் சிவந்தனன் சிவத்த லோடும் | | யென்னக் கட்டீச் சிந்துபு நினக்குக் கோயி நீர்கெனச் சினந்து செப்பி (இ.பா) |
| **4236:2** | புற்றரவணிந்த நம்பன் | — | புற்றர வணிந்தோ னீத் தோற் (இ.பா) |
| 3-4 | நிற்றிபோ நெறியி னென்ன நெற்றியிற் கண்ணே போல மற் றிரு கண்ணுஞ் சேந்து மண்டழற் சூலங் கொண்டான் | | நிற்றிநீ தூ ய்மை நீத்தா யன்னலு நீடு செந்தீ நெற்றி யிற் கண்டி றந்து நீடழ றேற்றி நின்றான் (,,) |
| **10:53** | ஆம் அத். தலைப்பு இறந்த மக்களைத் தந்த அத்தியாயம் (இ.பா) | | அந்தணனுக்குப் பிள்ளை களைக் கொண்டுவந்து கொடுத்த அத்தியாயம் (பு.பா) |
| **4242:4** | தெள்ளமுதுங் கைப் பத் திருமுனி செப்ப லுற்றான்(இ.பா) | — | தெள்ளமுத மூறத் திருமுனி கிளக்க லுற்றான் (,,) |
| **4249:4** | கியம்பி மீண்டான் (இ.பா) | — | கியம்பி னானே (,,) |
| **4250:2** | வெம்பு மடற்சரக் | — | வெம்பியடுசரக் (இ.பா) |
| 3 | கூருறு பகுவாய்(இ.பா) | — | கூரழற் பகுவாய் (பு.பா) |
| **4251:2** | பொம்மெனப் பொருமி (,,) | — | பொம்மென வலறி (,,) |
| **4256:1** | லமரிருட் பிழம்பிற் (,,) | — | லள்ளிருட் பிழம்பிற் (.,) |
| **4266:3** | ஒவ்வொ ருத்தருக்(,,) | — | ஒவ்வொருவருக் (,,) |
| **4288:2** | கள்ளத்தி லுண்ட கன்ற கண்ணன் | — | கள்ளத்தி லுண்டதங்கள் கண்ணன் (,,) [கள்ளத்தி னுண்ட நங்கள் கண்ணன் என்பது இ.பா)] |

| | | | |
|---|---|---|---|
| 4299:4 | வீடுற்ற | — | வீடோங்கல் (இ.பா) |
| 4305:3 | மன்னுமிந்திரன் காந்தி மான் | — | மன்னு நல்லெழிற் காந்தி மான் (,,) |
| 4635:3 | இறையோ யிவண்யா னெனதென் | — | இறையோன் பொருள் யா னென தென் (,,) |
| 4337:4 | பின்னமுறார் | — | மின்னமறார் (பு.பா) பின்ன மறார் என்பது (இ.பா) |
| 4391:3 | இளமறிகள் | — | இளமறி மான் (இ.பா) |
| 4395:4 | சிறிதென வுவந்து (இ.பா) | — | சிறிதென நுகர்ந்தேன் (பு.பா) |
| 4404:4 | புணர் வாளரோ | — | புணர் வாழ்க்கையாள் (இ.பா) |
| 4411:3 | மின்னைப் போல விழு நரை (இ.பா) | — | மின்னைப் போல்விழி நாத னை (பு.பா) |
| 4414:4 | பொரு ளுற்றிட ருற்றிலேன் | — | பொருளெய் திடருற்றிலேன் (இ.பா) |
| 4415:4 | மதிக்குகை (இ.பா) | — | மலைக்குகை (பு.பா) |
| 4461:4 | தொன்றுதொடு மறைப் பொருளாந் தூயவனாங் கிது சொல்லும் (இ.பா) | — | துன்றுமலர்த் தண்டுளவத் தொடையல்புனை முகில் சொல்லும் (,,) |
| 4470:1 | சொல்லு புந்தியிற் | — | சொல்லி னந்தியில் (இ.பா) |
| 4574:2 | தருது மென்று சொல் லினு மேட்டை கூரார் | — | தருதுமென்று சொற்றலு மேட்டை கூறார் (,,) |
| 4583:1 | செப்புமாச் சிரம நான்கும் | — | செப்புறு நிலைக ணான்கும் (,,) |
| 4631:4 | ஏக மாகுவ ரென் னொடும் வந்தரோ | — | ஏக மாகுவ ரெம்மிற் பிரிந்தரோ (,,) |
| 4679:4 | தனிநூபுரம் | — | மறைநூபுரம் (,,) |
| 4698:4 | ஏத்துவான் (இ.பா) | — | ஏத்தினான் (பு.பா) |
| 4717:2 | உவந் தருந்து மன்பி னர் | — | உவந்தருந் தருந்தவர் (இ.பா) |
| 4725:1 | அரும்பழி யுறாத (இ.பா) | — | அரும்பழியறாத (பு.பா) |
| 4742:2 | படர்வர் | — | படர்ந்து (இ.பா) |

| | | | |
|---|---|---|---|
| *3820:4* | சொல்ல லுற்றான் | — | சோர லுற்றான் (,,) |
| *4914:2* | விறற்றநஞ் சயனும் | — | வீரநஞ் சயனும் (,,) |
| *4916:2* | வற்சனென் பவனும் | — | வாசனென் பவனும் (,,) |
| *4917:4* | தொழில்களுந் தெரிப் பாம் | — | தொழில்களுஞ் சோறும் (,,) |
| *4919:3* | புயத்தியக்கர் | — | புயத்தரக்கர் (,,) |

# ஒப்புமையும் மேற்கோளும்

மூலநூலிலுள்ள சொல், கருத்து, உவமை முதலானவை எவ்வெவ்வாறெல்லாம் அதே நூலில் அல்லது பிற நூல்களில் காணப்படுகின்றன என்பதை ஒப்பிட்டுக் காட்டுவது ஒப்புமைப் பகுதியாம். மூலநூலுக்கு முன் அல்லது பின் எழுந்த நூல் களில் ஒரே சொல், கருத்து, உவமை முதலானவை எவ்வெவ் வாறெல்லாம் ஒத்துள்ளன என்பனவற்றை இவ்வொப்புமைப் பகுதிகளால் அறியலாம்.

மூல நூலிலுள்ள சொல், கருத்து, போன்றவற்றை விளக்கிப் புலப்படுத்தும் உரையாசிரியர் தம் உரைக்கு அரணாகக் காட்டும் இலக்கண விதிகள், எடுத்துக்காட்டுப் பாடல்கள் போன்றவை மேற்கோள்கள் எனப்பெறும். உரையாசிரியரின் விளக்கங் களைப் பிறர் ஏற்றுக் கொள்வதற்குரிய சான்றாதாரங் களாகவே இத்தகைய மேற்கோள்கள் அமைகின்றன. முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றுவம் என்ற வகையில் நூலையாக்கியுள்ள மூல நூலாசிரியரின் திறத்தை விளக்குமுகமாகவும் உரையாசிரியர்கள் இத்தகைய மேற்கோள்களை அளிக்கின்றனர்.

மூல பாடங்களை உறுதி செய்வதற்கும், பாடலின் தெளி வான பொருளை உணர்வதற்கும் ஒப்புமையும் மேற்கோளும் மிகவும் உறுதுணையாகின்றன. சுவடிப்பதிப்புப் பணியில் இவற்றை நன்குணர்ந்த உ. வே. சாமிநாதையரவர்கள் தாம் குறிப்புரை எழுதிப் பதிப்பித்த அனைத்து நூல்களிலும் இத்தகைய ஒப்புமைப் பகுதிகளையும் மேற்கோள்களையும் தவறாமல் வழங்கியுள்ளதைக் காணலாம். இவருடைய பல பதிப்புகளில், தேவைக்கேற்ப இவை மாறுபட்டும் வேறுபட்டும் அமைந்துள்ளன.

உ. வே. சா. தாம் முதலில் பதிப்பித்த நூல்களில், 'ஒப்புமைப் பகுதிகள்', 'மேற்கோள் விளக்கம்' போன்ற வற்றைத் தனியே தொகுத்தளித்துள்ளார். ஆயின், அதே நூல்களை மறுபதிப்புச் செய்தபோது அவற்றைத் திருத்தியும், சேர்க்காமல் விடுத்தும் பதிப்பித்துள்ளார். காட்டாக, சீவக சிந்தாமணியின் முதல் பதிப்பில், சீவக சிந்தாமணிப் பாடல்

வரி, சொல், கருத்து, உவமை முதலானவை பிறவிலக்கியங்களில் வருவதை, 'ஒப்புமை மேற்கோள் அகராதி'யாகத் தொகுத்தளித்துள்ளார். இரண்டாம் பதிப்பில் 'சீவக சிந்தாமணி ஆராய்ச்சி விளக்கம்' என்ற தலைப்பில் 41-பக்கங்களில் இந்த ஒப்புமைப்பகுதி இடம் பெற்றுள்ளது. இதுவே, மூன்றாம் பதிப்பில் 113 பக்கங்களாக விரிவடைந்துள்ளது. ஆயின், நான்காம் பதிப்பு முதல் இவ்வொப்புமைப் பகுதி இடம் பெறவில்லை.

இதே போன்று, உரையாசிரியர்கள் அவ்வவ்விடங்களில் சீவக சிந்தாமணியிலிருந்து மேற்கோளாக எடுத்துக்காட்டியிருக்கும் பகுதியைப் புலப்படுத்தும் 'பிரயோக விளக்கம்' என்பதைச் சீவக சிந்தாமணியின் முதலிரு பதிப்புகளில் அமைத்த ஐயரவர்கள் பின்வந்த பதிப்புகளில் அவற்றை நீக்கியும் பதிப்பித்துள்ளார். இவ்வாறே, முதற்பதிப்பில் இடம்பெற்ற 'மேற்கோள் விளக்க' என்னும் பகுதி, பின்வந்த பதிப்புகளில் இடம் பெறவில்லை.

ஒப்புமைப் பகுதிகள், மேற்கோள்கள் இவற்றைப் பின்வந்த பதிப்புகளில் அவ்வப்பகுதி அடிக்குறிப்புகளிலேயே இவர் தந்துள்ளதால், இவற்றைத் தனியே தொகுத்துத் தரவில்லை எனத் தெரிகிறது.

**ஒப்புமைப் பகுதிகளின் பயன்**

ஐயரவர்கள் புறநானூற்றுப் பதிப்பைச் செய்யும் முன் ஒப்புமைப் பகுதியின் பயன்பற்றி அவ்வளவாக அறியவில்லை எனத் தெரிகிறது. கும்பகோணம் கல்லூரியில் வரலாற்று ஆசிரியராக இருந்த கே. ஆர். துரைசாமி ஐயரென்பவர் வைத்திருந்த பைபிள்-ஆங்கிலப் பதிப்பு ஒன்றினைக் கண்ட பின்பே இவர் இதைப் பற்றி அறிந்தார் என்பர்.

பைபிளில் ஒரே செய்தி பல இடங்களில் வருகிறது. ஒரே விதமான சொற்றொடர்களும் வருகின்றன. இவ்வாறு ஒரே மாதிரியான சொல்லும் கருத்தும் உள்ள பகுதிகளை அங்கங்கே காட்டி அப்பதிப்பினைச் செய்திருந்தனர். இவ்வாறு தொகுத்து வைத்து ஆராய்ந்தமையால் சிலவற்றின் பொருளும் சில சொற்களின் திருத்தமான உருவமும் புலப்பட்டன என்பதையும், பைபிளில் ஏறியிருந்த பிழையான பாடங்கள் இதனால் திருத்தமடைந்தன என்பதையும் அந்தப் பதிப்பைப் பார்த்தபின் இவர்

தெரிந்து கொண்டார் என்பர். பின்பு புறநானூற்று ஆராய்ச்சியில் இவருக்குப் புதுமுறை ஒன்று தோன்றியது. புறநானூற்றிலுள்ள செய்திகளையும் சொற்களையும் முதலிலே அகராதியாகச் செய்துகொண்டு ஆராய்ச்சி செய்தால் உண்மையுருவத்தைக் கண்டுபிடிப்பது சுலபமாக இருக்குமென்பதை அறிந்து, அதன்படியே செய்து வைத்துக் கொண்டதை இவரே குறிப்பிடுவார்.[1] இம் முறையை இவர் பின்னால் பதிப்பித்த எல்லா நூல்களுக்கும் மேற்கொண்டார் எனத் தெரிகிறது.

**மேற்கோள் விளக்கங்களின் பயன்**

திருத்தமான பாடங்களை அறிவதற்கும் பிழையான பாடங்களை அறிவதற்கும் மேற்கோள் விளக்கங்கள் எவ்வாறு துணை புரிகின்றன என்பதையும் ஐயரவர்கள் விளக்குகிறார். இதற்காகத் தமக்குத் துணைபுரிந்த அன்பர்களையும் இவர் அடிக்கடி நினைவு கூர்கிறார்.

''புறநானூற்றுச் செய்யுட்களையும் செய்யுட் பகுதிகளையும் இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள் மேற்கோள் காட்ட வேண்டிய காரணத்தையும் ஆராய்ந்தால் பாடம் திருந்துவதோடு பாட்டின் கருத்தும் விளங்கும். பிரயோகங்களைத் தொகுப்பதற்கு எல்லா உரைகளையும் முற்றும் படித்துப் புறநானூற்றுப் பகுதி வருகின்றதா என்று பார்க்க வேண்டும். அச்சிட்ட புத்தகங்களில் பிரயோக விளக்கம் பெரும்பாலும் இருப்பதில்லை. ஏட்டுச் சுவடிகளிலோ மேற்கோட் செய்யுளைக் கண்டு பிடிப்பதே கஷ்டம். நூல்களைப் பாடங் கேட்பவர்கள் தம் ஆசிரியர் கூறும் விஷயங்களை அங்கங்கே சுவடிகளில் இரண்டு வரிகளுக்கிடையே எழுதி வைப்பதுண்டு. ஏடுகளில் உள்ளவற்றை உள்ளவாறே பிரதி செய்து அதற்குரிய ஊதியம் பெற்று ஜீவனம் செய்பவர்கள் அந்தக் குறிப்புக்களையும் பழைய மூலத்தோடும் உரையோடும் சேர்த்து எழுதிவிடுவார்கள். ஆராய்ச்சி செய்யும்போது அவற்றைத் தனியே பிரித்தறிவது சில சமயங்களில் மிகவும் சங்கடமாக இருக்கும்.

உரைகளைப் படித்து வரும்போது அங்கங்கே வரும் மேற்கோள்களில் எனக்குத் தெரிந்தவற்றிற்கு ஆகரம் அங்கங்கே குறித்து வைப்பது எனது வழக்கம். அச்சிடப்பட்ட தொல்காப்பிய உரைகளிலும், திருக்குறள் உரையிலும், வேறு உரைகளிலும் கண்ட மேற்கோள்கள் பலவற்றின் இடங்களை என்

---

1. என். சரித்திரம் பக். 724

கைப்புத்தகங்களில் குறித்துக் கொண்டிருக்கிறேன். அந்த முயற்சியில் அந்தப் பதிப்புக்களிலுள்ள பிழையான பாடங்கள் எனக்குப் புலப்பட்டன. **என் பதிப்புக்களில் அவற்றின் திருந்திய வடிவத்தை மட்டும் அமைப்பதையன்றி, ''இது பிழை'' என்று சுட்டிக் காட்டும் வழக்கத்தை நான் கொள்ளவில்லை.**

இப்படி மேற்கோளாராய்ச்சியிலே சென்ற காலம் மிக அதிகம். பிரயோகங்களைத் தொகுத்து வகைப்படுத்துவதிலேயே உண்டான சிரமம் எவ்வளவோ மிகுதியாக இருந்தாலும் ஒருமுறை பட்ட கஷ்டம் பல நூற் பதிப்புக்கு உபயோகமாக இருந்தது. அக்காலத்தில் நான் செய்து வைத்துக் கொண்ட பலவகை அகராதிகளே இன்றும் எனக்கு மூல நிதியாக உதவுகின்றன. அவற்றைக் காணும்போது, 'எவ்வளவு காலம், எவ்வளவு அன்பர்களுடைய உழைப்பு இவற்றில் சென்றிருக்கின்றன?' என்று எண்ணி வியப்புறுவேன். **அவற்றின் அருமை பெருமையை அச்சிட்ட புத்தகங்களைப் படிப்பவர்கள் சிறிதும் அறியார்**. மிக உயர்ந்த அலங்காரமான மாளிகையைக் கண்டு அதன் அழகில் ஈடுபடுபவர்கள் அம்மாளிகை எந்த அஸ்திவாரத்தின் மேல் எழுப்பப்பட்டதென்பதைக் கவனிப்பதில்லை. மிகவும் ஜாக்கிரதையாகப் போட்ட அந்த அஸ்திவாரம் பூமிக்குள் மறைந்து கிடக்கின்றது''[1] என ஐயரவர்கள் தம் அனுபவங்களை விளக்குவது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

**நூல்களைத் தெளிவாகச் சுட்டுதல்**

அடிக்குறிப்பில் ஒப்புமைப் பகுதிகளையும் மேற்கோள்களையும் சுட்டுமிடத்து நூலும், பாடல் எண்ணும், அடி எண்ணும்கூடத் தவறாமல் சுட்டும் அருமையுடையது ஐயரவர்கள் பதிப்புகள். இதற்குக் காரணம் அவர் முந்தைய பதிப்புகளில் கண்டுணர்ந்து துன்புற்ற நிலைகளேயாம். காட்டாக, ஐயரவர்கள் உச்சி மேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரை பற்றிக் கூறியுள்ள சில தெளிவான கருத்துக்கள் இவண் குறிப்பிடத்தக்கன.

''நச்சினார்க்கினியர் உரையினால் புதிய புதிய விஷயங்களை உணர்ந்தேன். இரண்டு விஷயங்களில் அவரிடம் சிறிது வருத்தம் உண்டாயிற்று. பல இடங்களில் மாறிக் கூட்டிப் பொருள் விளக்குகிறார். ஓரிடத்திலுள்ள பாட்டிலிருக்கும் சொல்லைப் பல பாட்டுக்கு முன்னே மற்றோரிடத்திலுள்ள

1. என் சரித்திரம், பக். 725, 726.

தோடு இணைத்து மாட்டெறிகின்றார். அத்தகைய இடங்களில் அவர் உரையில் சிறிது வெறுப்புத் தட்டியது. ஒரு விஷயத்துக்கோ, சொற் பிரயோகத்துக்கோ ஒருநூற் செய்யுட் பகுதியை மேற்கோள் காட்டுமிடத்தில் அந்த நூற் பெயரைச் சொல்வதில்லை. 'என்றார் பிறரும்' என்று எழுதி விட்டு விடுகிறார். சிந்தாமணிப் பாட்டாக இருந்தால் சந்திரநாத செட்டியார்[1] இருக்கிறார். வேறு நூலாக இருந்தால் என்ன செய்வது! அவர் மேற்கோளாகக் காட்டும் உதாரணங்களோ நான் படித்த நூல்களிலே இல்லாதன. அவர் உதாரணங்கள் காட்டும் அந்த நூல்களின் தொகுதியே ஒரு தனி உலகமாக இருக்குமோ என்ற மலைப்பு எனக்குத் தோற்றியது. ''நூற்பெயரையாவது இந்த மனிதர் சொல்லித் தொலைக்கக் கூடாதா?'' என்று அடிக்கடி வருத்தம் உண்டாகும். ஆனாலும் அந்த மகோபகாரியின் அரிய உரைத்திறத்தின் பெருமையை நான் மறக்கவில்லை. சுருக்கமாக விஷயத்தை விளக்கிவிட்டு எது நுணுக்கமான விஷயமோ அதற்கு அழகாகக் குறிப்பு எழுதுகிறார். அவர் எழுதும் பதசாரங்கள் மிக்க சுவையுடையன. அவர் அறிந்த நூல்களின் பரப்பு ஒரு பெருங்கடலென்றே சொல்ல வேண்டும். இவ்வளவு சிறப்புக்களுக்கிடையே முன் சொன்ன இரண்டு குறைபாடுகளும் மறைந்து விடுகின்றன.''[2]

பழைய உரை நூல்களில் காணும் இத்தகைய குறைபாடுகளால் பெரிதும் துன்பமுற்ற ஐயரவர்கள் தாம் செய்த பதிப்புகளில் இவற்றைக் களைந்து பதிப்பிப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொள்கிறார். மேற் கோளாக–ஒப்புமையாகக் கூறப்பெறும் பாடல், அடி, சொல் ஆகியன எந்த நூலிலிருந்து எடுத்தாளப் பெறுகிறது என்பதை மிகத் தெளிவாகச் சுட்டுதல் இவர்தம் தனிச் சிறப்பாகும்.

பாகவதப் பதிப்பில் ஐயரவர்கள் ஒப்புமைப் பகுதிகளையும் மேற்கோள் பகுதிகளையும் தனித்தனியாகச் சுட்டாமல் எல்லாவற்றையும் ஒன்றாகவே அமைக்கின்றார். இடத்திற்கேற்பவும் பொருளமைப்பிற்கேற்பவும் இவற்றை நாம் இனங் காணலாம். இவருடைய குறிப்புரை முழுவதையும் நோக்க இப்பகுதிகளை,

---

1. சந்திரநாதசெட்டியார் ஐயரின் சிந்தாமணிப் பதிப்புக்கு மிக உதவி செய்தவர். கும்பகோணத்தில் வாழ்ந்த சைனர். சிந்தாமணியில் நிகரற்ற புலமையும், சைன சமயத் தேர்ச்சியும் மிக்கவர். 'சிந்தாமணி விஷயத்தில் அவர் ஓர் அகராதி' என்பார் ஐயரவர்கள்.
2. என் சரித்திரம், பக். 541, 542.

*1.* முதனூல் ஒப்புமை, *2.* பாகவத நூலிலேயே ஒப்புமை, *3.* பிற நூல்கள் ஒப்புமை என மூன்று வகைகளில் பிரித்தறியலாம்.

## 1. முதனூல் ஒப்புமை

தமிழில் செவ்வைச் சூடுவார் இயற்றிய இப் பாகவதநூல் ஒரு மொழி பெயர்ப்பு நூல். இதற்கு முதனூலாக விளங்குவது வடமொழி பாகவதம். மொழிபெயர்ப்பு நூலாகிய இந்தத் தமிழ்ப் பாகவதத்திலுள்ள சில சொற்களையும், சில கதை மாந்தர்களையும், அவர்தம் உறவுநிலைகளையும், சில மரபுகளையும், சில வரலாறுகளையும் விளக்க வந்த ஐயரவர்கள், வடமொழி பாகவதமாகிய முதனூலினை அங்கங்கே ஒப்பிட்டுக் காட்டுகின்றார். குறிப்புரையில் முதனூல் கருத்துக்களைச் சுட்டி, 'என்று கூறும் முதனூல்', 'என்னும் முதனூல்', 'என்பர் முதனூலார்'-என இவ்வாறு பல ஒப்புமைகளைக் குறிக்கின்றார்.

'என்பது முதனூலுள் இல்லை' (பா. 4500),' என்று பாடமிருப்பின் முதனூலுக்குப் பொருத்தமாக இருக்கும்' (பா. 2449) என இவ்வாறு இத்தமிழ்ப் பாகவதநூல் வடமொழி பாகவத நூலிலிருந்து மாறுபடுமிடங்களையும் அங்கங்கே குறிப்பிடுகின்றார்.

முதனூல் கருத்துக்கள் பலவற்றை இவ்வாறு ஒப்பிட்டுக் காட்டும் ஐயரவர்கள், முதனூலில் இவை காணுமிடங்களைக் குறிப்பாகச் சுட்டினாரில்லை. இருப்பினும், தமிழ்ப் பாடற் பகுதிகள் பல விளக்கம் பெறுவதற்கும்,முதனூலாசிரியரின் கருத்துக்களை ஒருங்கே அறிவதற்கும் இவை பெரிதும் துணையாகின்றன என்பதில் ஐயமில்லை. இதற்குச் சான்றாகப் பின்வரும் குறிப்புக்களை நோக்கலாம். (எண்-பாடல் எண்)

*42* அஜினர் என்பவருக்குப் புத்திரராகப் புத்தர் பிறந்தாரென்று கூறும் **முதனூல்.**

*43* இருபதோடிரண்டெனும் அவதாரங்கள்-கவுமார வடிவாகிய புருஷாவதாரம் முதல், கற்கியவதாரம் இறுதியாக உள்ள இருபத்திரண்டு அவதாரங்கள். கவுமார வடிவமாகிய புருஷாவதாரத்தைப் பிரித்துக் கூறித் திருமாலின் அம்சாவதாரங்கள் இருபத்தொன்று எனக் கூறும் **முதனூல்.**

178 சிலைத் தொழிலால் அருச்சுனன்; இங்கு, கார்த்த வீரியார்ச்சுனன், பாண்டவார்ச்சுனன் என்ற இருவரையும் கூறுவர் **முதனூலார்.**

183 பரிட்சித்து தன்னைக் கருப்பத்தில் பாதுகாத்த கண்ணபிரானைப் பார்த்து, 'இவன் யார்' என்று ஆராய்ந்தனன். தன்னைக் காத்த கண்ணபிரானைப் போல் மனிதவர்க்கத்தில் யாரேனும் உளரா என்று தேடிப் பார்த்தவன் என்று கூறுவர் **முதனூலார்.**

257 கொடியொடு தாமரைக் குலிசரேகை—துவசரேகையும், பத்மரேகையும், வஜ்ரரேகையும்; **முதனூலில்** அங்குச ரேகையும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது.

344 பதம்—பதவியை; குணாதிசயங்கள் என்று **முதனூல்** கூறும்.

413 மாயையினின்றும் மதத்தத்துவம் தோன்றியது என்று கூறும் **முதனூல்.**

421 தொழில்—ஜீவனத்தைக் கொடுப்பது; இஃது இந்திரனுடைய அமிசம் என்னும் **முதனூல்.**

422 விரிஞ்சன்—பிரமன்; பிரமனின் கூறென்னும் **முதனூல்.**

663 ஆறு கன்னல்—ஆறு நாழிகை; மூன்று முகூர்த்தத்தில் செல்லும் என்பர் **முதனூலார்.**

734 குழலையுடைய இரீ என்பவள் கல்வியைப் பெற்றாள். இரீ—ஹரீ. ஹரீ யென்பவள் பிரஸ்ரயனைப் பெற்றாள் என்னும் **முதனூல்.**

822 சுருதி: சுருசி யென்னும் **முதனூல்.**

875 பூமி—பிரமி என்று கூறும் **முதனூல்:** இவள் சிம்சுமாரனுடைய பெண்.

878 உத்தமன் காடகம் கலந்து வீடினான் (இறந்தான்). உத்தமனை இயக்கர் கொன்றனர் என்று கூறும் **முதனூல்.**

931 நில்லென வுரைத்தலி னிடாத னாயினான்—நில் என—இவ்விடத்தில் இரு என்று உட்காரு என்று பொருள் படும். 'நிஷீத' என்ற சொல்லைக் கூறினமையால் நிஷாதனாயினான் என்பர் **முதனூலார்.**

943 சந்திரன் பரியை அளித்தான். தேர் கொடுத்தவன் துவஷ்டா என்னும் **முதனூல்.**

1043 பயம்: காலயவனன் என்னும் **முதனூல்.**

1055 விதேகத்தரசன்: வீதர்ப்பராஜன் என்னும் **முதனூல்.**

1211 இங்குக் கூறப்பட்ட அளவு **முதனூலுக்கு** மாறுபட்டுள்ளது.

1223 சங்கம், வைகங்கதம், நாகம், நாரதம் முதலிய வரைக் குலங்கள்; இவை இருபது என்பர் **முதனூலார்.**

1400 மைந்தர்—தக்கன் புதல்வர். இவர்கள் பெயர் ஹர்யச்வ ரென்னும் **முதனூல்.**

1406 சாத்தியை: சந்தியாவென்னும் **முதனூல்.**

1773 வசிட்ட புத்திரர் சப்தரிஷிகளாய் இருந்தனர் எனக் கூறும் **முதனூல்.**

2088 வருண பாசத்தால் கருடன் கட்டினான் என்று **முதனூல்** கூறும்.

2020 தமிழ் நாட்டைத் திரவிடேச்வரமென்று கூறும் **முதனூல்.**

2029 வித்து—பீஜம், விதை; உயிர்களும் ஓடதியும் என்று கூறும் **முதனூல்.**

2152 சமதங்கிபிரம்மா; சமதங்கி—சமதக்நி; **முதனூல்** வேறு விதமாகக் கூறும்.

2449 'செவி கறுத்து' என்று பாடமிருப்பின் **முதனூலுக்குப்** பொருத்தமாக இருக்கும்.

2498 புரூரவா அளித்த ஆயு என்பவனுடைய மைந்தரை நகுடன், அரசவிருத்தன், அரசியரம்பன், ஏனசு என விளம்புவர்; க்ஷத்திர விருத்தன், ரஜீரம்பன், அனேனசு என்னும் **முதனூல்.**

2622 எழுவர்–தேவகி, திருததேவை, சாந்திதேவை, உபதேவை, சகதேவை, ததிதேவை தேவரக்கிதை; இப் பெயர்கள் **முதனூலில்** மாறுபட்டுள்ளன.

3091 சுதரிசனன் என்ற பெயரையுடையோன் தவமுனிவரை ஏரிலாரென எள்ளினன். இதற்கு அரா உருவைச்

சார்க என அவர் சபித்தார். பிரகஸ்பதி முனிவரைச் சுதரிசனன் என்ற வித்தியாதரன் இகழ்ந்தமையால், அவர், அவனைப் பாம்பாகும்படிச் சபித்தார் என்றும், கண்ணபிரானால் அவன் பாம்புரு நீங்கப் பெற்றா னென்றும் **முதனூல்** கூறும்.

3584 பத்திரையுடன் கைகேயி என்பவளை மணம் செய்து கொண்டதாக **முதனூல்** கூறும்.

4087 முருகனைக் கண்டது மகேந்திரமலையில் என்பது **முதனூல்.**

4500 அந்தணருள் பிருகு என்பது **முதனூலுள்** இல்லை.

4515 கிம்புருடரில் அனுமான் என்னும் **முதனூல்.**

4893 மாகிருத்து—மஹாகிருது; ரதகிருத் என்னும் **முதனூல்.**

4895 மோகன்: அதௌஜஸ் என்பது **முதனூல்.**

4915 **முதனூலில்** விசுவன் என்ற வித்தியாதரனும் சேனஜித் என்ற அரம்பையும் கூறப்பட்டிருக்கின்றனர்.

இவை இரு மொழி நூல்களின் ஒப்பாய்வுக்கு மிகவும் பயனுடையன.

**முதனூலிற் கண்டது**

பாகவதக் கதைகளில் குறிப்பிட்ட மாந்தர்களின் குடும்ப உறவு நிலை, எண்ணிக்கை போன்றவை நூலாசிரியரால் குறிப்பாகச் சுட்டியவிடத்து, அவற்றின் தெளிவை முதனூலாகிய வடமொழி நூலிற் கண்டு அவற்றை அடிக் குறிப்பில் தருவதும் இவருடைய சிறப்பாகும்.

(எ-டு) பத்தாம்கந்தம், 54. புனல் விளையாட்டு அத்தியாயம் நாற்பதாம் பாடலில், ''அண்ண லம்மல....னரங்கணை வேண்முதல் எண்ணி ரெண்டொ டிரண்டின ரென்பவே'' (4304) என்னும் அடிகளுக்கு உரை கூறியவிடத்துப் பின்வரும் விளக்கம் தருகிறார்.

மலராகிய ஐங்கணையையுடைய வேள்: பிரத்துமனன். எண்ணிரண் டொடிரண்டு—பதினெட்டு. பதினெண்மராவார்: 1. பிரத்துமனன், 2. அநிருத்தன், 3. தீப்திமான், 4. பானு, 5. ஸாம்பன், 6. மது, 7. பிருஹத்பானு, 8. சித்திரபானு

9. விருகன், 10. அருணன், 11. புஷ்கரன், 12. வேதபாஹி, 13. சுருத தேவன், 14. ஸுநந்தனன், 15. சித்திரபாஹீ, 16. விரூபன், 17. கவி, 18. நியக்ரோதன். இது **முதனூலிற் கண்டது**.

இச்செய்தி முதனூலில் எங்குக் கண்டது என்ற விவரங்களை இவர் அளிக்கவில்லை.

**முதனூல் ஸ்கந்தம், அத்தியாயம், சுலோக எண் சுட்டுதல்**

தமிழ் நூலாசிரியர் கூறும் சில கதைமாந்தர் பெயர்கள், சில கதை நிகழ்ச்சிகள், சில வரலாறுகள் போன்றவை முதநூலாசிரியரால் விரிவாக விளக்கப் பெற்றுள்ளதைச் சுட்டவந்தவிடத்தும், சிலவற்றைச் சான்றுகளாகக் காட்ட விழைந்தவிடத்தும் வடமொழி நூலிலுள்ள ஸ்கந்த எண், அத்தியாய எண், சுலோக எண் ஆகியவற்றை இவர் குறிப்பாகச் சுட்டுகின்றார். காட்டாகச் சிலவற்றை நோக்கலாம். (எண்–பாடல் எண்)

46 விண்டுராதன்–விஷ்ணுவால் ஆபத்தினின்றும் காப்பாற்றப்பட்டவன்; விஷ்ணுவால் கொடுக்கப்பட்டவன்; **முதனூல்** 1.12:16–7.

231-2 பச்சைக் குதிரைகளும், சிங்கக் கொடியும் பரிட்சித்துக் குரியன; **முதனூல்**, 1.16:12.

380 காந்தினி புதல்வன்-அக்குரூரன்; சுவபல்கனுக்கும் காந்தினி என்பவளுக்கும் பிறந்தவன் அக்குரூரன்; **முதனூல்**, 9. 24:14–7.

537 இம் முனிவர்கள் கூறிய சாபமேயல்லாமல் முன்னம் இலக்குமி வரும்பொழுதும் நீங்கள் தடுத்தமையின் அவள் உங்களுக்குக் கொடுத்த சாபமும் உண்டு; **முதனூல்**, 3. 16:30.

566 புரம்–உடம்பு; என்றது அந்தர்த்தான சக்தியை; **முதனூல்**, 3.20:44-5.

816 பிரமதேவனது முதுகில் பாவம் பிறந்தது; **முதனூல்**, 3.12:25.

1619 இவ் வரலாறு **முதனூல்** 7.2:50-57 ஆம் சுலோகங்களிற் காணப்படும்.

2857 தவன்-சௌபரி என்னும் முனிவன்; **முதனூல்**, 10.17:1-12.

இவ்வாறு முதனூலாகிய வடமொழி நூலின் ஒப்புமைப் பகுதிகளைச் சுட்டிச் செல்வதால், இருமொழி நூலாசிரியர்களின் மொழித்திறன், பாடலமைப்பின் பாங்கு, மரபு போற்றும் தன்மை போன்ற கூறுகளை நாம் நன்கு அறியலாம். இத்தகைய மொழி பெயர்ப்பு நூல்களைப் பதிப்பிக்குமிடத்து, முதனூலின் மொழியறிவும் பயிற்சியும் எந்த அளவுக்குத் தேவை என்பதையும் நாம் நன்கு உணரலாம்.

## 2. பாகவத நூலிலேயே ஒப்புமை

பாகவத நூல் முழுமையையும் பதிப்பித்த ஐயரவர்கள், இதிலுள்ள சொற்கள், உவமைகள், நிகழ்ச்சிகள், வரலாறுகள் ஆகியவற்றை முதலில் அட்டவணைப்படுத்திக் கொண்டுள்ளார் எனத் தெரிகிறது. பாடல்களுக்குக் குறிப்புரை வரைந்தவிடத்து நூலினுள்ளே எங்கெங்கெல்லாம் ஒரே மாதிரியான சொல், உவமை முதலானவை வருகின்றன என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றார். நூல் நுவலும் பொருளைத் தெளிவதற்கு இவ்வொப்புமைப் பகுதிகள் பெரிதும் துணையாகின்றன. அத்துடன், மூலபாடங்களை உறுதி செய்வதிலும் இவை பயனுடையனவாகின்றன. இவ்வாறு அமையும் ஒப்புமைப் பகுதிகளைச் சுட்டுமிடத்துப் பல்வேறு நிலைகளையும் இவர் மேற்கொள்கின்றார். அவை வருமாறு:

### அ) ஒப்புமைப்பாடல் தொடர் எண் கொடுத்தல்

உரை கூறும் பாடலிலுள்ள கருத்து, உவமை போன்றவை வேறு பாடல்களில் காணப்பெறுமாயின் அப்பாடல்களின் தொடர் எண்களைக் குறிப்புரையில் தருகின்றார்.

(எ—டு) மூன்றாம் பாடலில் 'பிறைக்குழவி போல் நடப்ப' எனவரும் உவமையே வேறு பாடலில் வந்தவிடத்து அப் பாடலின் தொடர் எண்ணான 180 என்பதை அடிக்குறிப்பில் சுட்டுகின்றார்.

55 ஆம் பாடலில், அந்தணர்க்குத் தாமரைப் பூமாலை உரித்து' என்ற கருத்து வந்தவிடத்து, அதை அடிக்குறிப்பில் எடுத்துக்காட்டி, அதுவே 3906 ஆம் பாடலிலும் வந்துள்ள தைச் சுட்ட அப்பாடல் எண்ணை மட்டும் குறிக்கின்றார்.

ஐயரவர்கள் பதிப்பித்த சீவகசிந்தாமணி போன்ற நூல் களில் இத்தகைய ஒப்புமைப் பகுதிகளைக் குறித்தவிடங்களி லெல்லாம் சீவக. 10; சீவக. 963 என இவ்வாறு அந்நூற்

பெயரின் சுருக்கத்தைக் கூறி அதனுடன் பாடலின் தொடர் எண்ணைக் குறிப்பிடுவர். ஆயின், இப்பாகவதப் பதிப்பில் பாடலின் தொடர் எண்களை மட்டும் குறித்துள்ளமை இவர்தம் பதிப்புச் செம்மையில் கண்ட முன்னேற்றம் எனலாம். இவ்வாறு இந்நூல் முழுமையும் அமையக் காணலாம்.

**ஆ) கந்தம், அத்தியாயம், பாடல் எண் கொடுத்தல்**

பாடலிலுள்ள ஒரு கருத்தின் தெளிவைக் காண இதே நூலில் வேறு பகுதிகளிலுள்ளவற்றை ஒப்பிட்டுக் காட்டுகிறார். இவ்விடங்களில் இக்கருத்து அமைந்துள்ள கந்தம், அத்தியாய எண், பாடல்களின் எண்கள் ஆகியவற்றைக் குறிப்புரையில் தருகின்றார்.

(எ-டு) 39 ஆம் பாடலில் வந்த 'ரோமஹர்ஷணரும் சாதியாற் சூதரே' என்ற கருத்தை விளக்க இந்நூலின் பின்னுள்ள பகுதியைச் சுட்டுமிடத்து (10.44:5-11) எனக் குறிப்பிடுகின்றார். இங்கு, பாடல்க்ளின் தொடர் எண்களைக் குறிப்பதில்லை.

**இ) கந்த எண், அத்தியாய எண் மட்டும் அளித்தல்**

பாகவதப் பாடல்களில் குறிப்பாகச் சுட்டப்பெறும் சில கதை நிகழ்ச்சிகள், சில வரலாறுகள் ஆகியவற்றை விளக்கமாக அறிவதற்கு இதே நூலின் பிற பகுதிகளைக் குறிப்பிடுமிடத்து அவை அமைந்துள்ள கந்த எண், அத்தியாய எண் இவற்றை மட்டும் குறிப்பிடுகின்றார்.

(எ-டு) (எண்-பாடல் எண்)

69 பரிக்ஷித்தைச் சிருங்கிமுனிவர் சபித்த வரலாறு 1:8ஆம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளது.

129 கண்ணபிரான் நாகத்தின் மேல் நடித்தது: 10:7 ஆம் அத்தி.

139 கஜேந்திரனைக் காத்த வரலாறு: 8:2 ஆம் அத்தி. என இவ்வாறு அமைக்கின்றார்.

இங்குக் குறிப்பாகச் சுட்டப்பெற்ற இதே வரலாறுகள் இந் நூலுள் தனி அத்தியாயமாகவே விரித்துக் கூறியுள்ளனவற்றை ஒப்பிட்டுக் காட்டுமுகமாக இவ்வாறு அமைக்கின்றார். நூலின் தொடர்ச்சியான பொருளுணர்வில் கவனம் செலுத்துவதற்கு இத்தகைய ஒப்புமைப் பகுதிகள் தேவையாகின்றன.

### ஈ) முன் அமைந்த பாடல்களைச் சுட்டுதல்

ஒரே சொல், தொடர் அல்லது கருத்து இந்நூலில் முன்னமே வழங்கப்பெற்றிருப்பின் அவற்றைப் பொருள் ஒப்புமை நோக்கி எடுத்துக் காட்டுவது இவருடைய மரபாக உள்ளது. காட்டாக முதல் கந்தம், 3. தன்மபுத்திரன் அரசியலடைந்த அத்தியாயத்தில், 96 ஆம் பாடலில் வரும் ''சூதென்றோதும் தழல்'' என்ற பகுதியை விளக்கிய விடத்தில், சூதென்றோதும் தழல்–சூதாட்டமாகிய தீ; ''சூத பெருமுகிற் குலங்களாக'' (71) என்றார்முன் என முன்னமைந்த பாடல் எண்ணையும் தொடரையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

இதே போன்று, 10ஆம் கந்தத்தில் வரும் ஒருபாடற் கருத்து 4ஆம் கந்தத்திலுள்ள ஒரு பாடற்கருத்துடன் ஒத்துள்ளதை எடுத்துக் காட்டுகிறார். அது வருமாறு:

3210 ஆம் பாடலில், 'மறை உருக்கொள் புள்பாகன்–வேதத்தின் உருவத்தைக் கொண்ட கருடனுக்குத் தலைவனான கண்ணபிரான்; கருடன் வேத உருவத்தினன் என்பது; 852. என முன்னமைந்த பாடல் எண்ணைச் சுட்டுகின்றார். 852 ஆம் பாடலில் வரும் 'வேதமேனி வரிச்சிறைப் புள்ளின்மேல்' என்னும் இந்த ஒப்புமைத் தொடரை எடுத்துக் காட்டவில்லை. நூலைப் பயில்வோர்க்கு ஆர்வத்தை தூண்டும் வகையிலும் இத்தகைய ஒப்புமைப் பகுதிகள் அமைகின்றன.

### உ) பின்வரும் பாடல்களைச் சுட்டுதல்

ஒரு பாடலிலுள்ள அதே கருத்தும் தொடரும் நூலின் பின்னால் தெளிவாக வருவதைச் சுட்டிக்காட்டிச் செல்வது இப்பதிப்பின் தனித் தன்மையாகும். இதனால் இலக்கியச் சுவை மிகுவதுடன், நூலாசிரியரின் சொல்லாட்சி, கருத்துச் செம்மை ஆகியவற்றையும் நூல் பயில்வோர் தெளிவாக உணர இயலும். காட்டாக,

முதல் கந்தம், 4. கண்ணபிரான் துவரையடைந்த அத்தியாயத்தில் 146 ஆம் பாடல் மகளிர் கூற்றாக அமைகின்றது. 'காட்டுத்தீயை முன்னம் உண்ட நீ நாங்கள் அணிந்துள்ள குளிர்ந்த முத்துமாலையைச் சுடும்படி செய்தது என்னை' என்றவாறு இப்பாடல் அமைகின்றது. இதற்கு உரை விளக்க வந்தவிடத்து, ''அழலை......வெண்ணெ யுண்டென விழுங்கினனன்றே'' (2861) என்றார் பின். என இவ்வாறு பின்னாலமைந்த

பாடல் எண்ணையும் தொடரையும் ஒப்பிட்டுக் காட்டுவர். அத்துடன், கண்ணபிரான் காட்டுத் தீயை உண்ட வரலாறு: 2860-61 என்ற குறிப்பையும் தருவர்.

பின்னால், 2860-61 ஆம் பாடல்களில் 'கானழல்' என்பதை விளக்குவர். அத்துடன், கண்ணபிரான் காட்டுத் தீயை உண்டது: 2879 என 2861 ஆம் பாடலின் குறிப்பில் சுட்டுவர்.

இவ்வாறு, பின்வரும் ஒப்புமைத் தொடர், கருத்து, வரலாறு போன்றவற்றைத் தேவையான இடத்தில் எடுத்துக்காட்டி விளக்குவது அரிய முயற்சியாகும்.

**ஊ) முன்னமைந்த குறிப்புரைகளை ஒப்பிட்டுக் காட்டல்**

சில குறிப்பிட்ட தொடர், கருத்து ஆகியவற்றிற்கு முன்னமே குறிப்புரை வரைந்துள்ளதை எடுத்துக் காட்டுவதும் இவண் சுட்டத்தக்கதாகும்.

(எ-டு)

3449 ஒலிகருங் கூந்தல்-தழைத்த கரிய கூந்தல். நரந்தமும் மலரும் நாறிய கூந்தல்; 2929, குறிப்புரை.

3455 ஓடாத தானை; "ஓடா வயப்படை" (3403, குறிப்புரை)

3513 வெண்டலைப் புணரி வேலையில்; 3451, குறிப்புரை.

3574 குடம்புரை செருத்தல் ஆன் இனம்-பாற்குடம் போன்ற மடியையுடைய பசுக்கூட்டம்; "பாற்குட மருட்டு செருத்தலான் கன்று" (2802, குறிப்புரை) என

இவ்வாறு முன்னமைந்த பாடல்களின் குறிப்புரைப் பகுதிகளை ஒப்பிடுகின்றார்.

ஒரே கருத்துக்கு விளக்கமும் பிற நூல் ஒப்புமையும் முன்னமே கூறப்பட்டிருப்பதையும் இங்கே அவை ஒப்பாக அமைவதையும் சுட்டவே இத்தகைய குறிப்புகளை இவர் தருகின்றார்.

**எ) முன் சொன்னவை இங்கே விடுபட்டுள்ளன என்பதைச் சுட்டுதல்**

12ஆம் கந்தம் 9. பாயிரம் உரைத்த அத்தியாயப் பாடல்களில் இந் நூலின் முன்னே கூறப்பெற்ற செய்திகள் அனைத்தும்

தொடர்ச்சியாகப் பட்டியலிட்டுக் கூறப்பெறுவதை இவர் அங்கங்கே ஒப்பிட்டு ஆராய்ந்து குறிப்புரை வரைந்துள்ளார். முன்னுள்ள அத்தியாயத் தலைப்பு, கதை, வரலாறு ஆகிய வற்றை இப்பகுதியோடு ஒப்பிடுகின்றார். அத்துடன் முற்பகுதியில் விளக்கமாகக் கூறப்பட்ட செய்திகள் அல்லது அத்தியாயங்கள் இங்கு விடுபட்டுள்ளன என்பதையும் அங்கங்கேயே எடுத்துக் காட்டுகின்றார். (எ-டு)

4933 அகிலரூபனைக் குரவனாகக் கொண்டது; (6.3 ஆம் அத்.) இதற்கு முன், தக்கன் படைப்புரைத்த அத்தியாயத்தைப் பற்றிக் கூறவில்லை; விடுபட்டுள்ளது.

4948 எது மரபு உரைத்தவாறு; (9.18ஆம் அத்.) இதற்குமுன் அநுமரபுரைத்தவாறும் என்பது கூறப்படவில்லை.

4949 மாயன், வசுதேவனும் தேவகியும் அன்புகூர அவதரித் தருளுமாறு; (10.1 ஆம் அத்.) பத்தாங் கந்தத்தின் கதைப் பகுதிகளை முதல் கந்தத்தில் கண்ணன் சரித் திரமுரைத்த அத்தியாயத்தில், கூறினமையால் இங்கும் கூறவில்லை போலும்.

என இவ்வாறு விடுபட்ட செய்திகளை இவர் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

### ஏ) பத்தாம் கந்தத்தில் வரும் பல பாடல்களுடன் ஒப்பிடுதல்

செவ்வைச் சூடுவார் பாகவதத்திலுள்ள பன்னிரு கந்தங்களில் பத்தாம் கந்தமே அளவில் மிகப்பெரியதாகும். இதில் 54 அத்தியாயங்களும் 1682 பாடல்களும் அமைந்துள்ளன. நூலின் பெரும் பகுதியை உள்ளடக்கிய இப்பத்தாம் கந்தத்தில் கண்ண பிரானின் திருவவதாரம் மற்றும் அவருடைய புராண வரலாறுகள் தெளிவாக எடுத்துரைக்கப்படுகின்றன. பாகவதத்தின் சிறப்பான பகுதிகளின் விளக்கமாக இந்தப் பத்தாம் கந்தம் அமைந்துள்ளது. எனவே, மற்ற பதினோரு கந்தங்களில் வரும் பாடற் பகுதிகள் பலவற்றை, இதிலமைந்த பல பாடல்களுடன் ஐயரவர்கள் அங்கங்கே ஒப்பிட்டுக் காட்டுகின்றார். இவற்றை இவருடைய குறிப்புரை முழுமையிலும் காணலாம்.

## 3. பிறநூல்கள் ஒப்புமை

பாகவதப் பாடற்பகுதிகள் பலவற்றைப் பிற தமிழ் இலக்கிய பகுதிகளுடன் ஐயரவர்கள் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். சங்க இலக்கியம் முதல் பிற்காலப் பிரபந்தங்கள் வரை வெவ்வேறு இலக்கியங்களில் காணலாகும் சொல், தொடர், பொருள்,

உவமை முதலானவை எவ்வாறு இப் பாகவதப் பாடல்களுடன் ஒத்துள்ளன என்பதை இவருடைய குறிப்புரைகளால் உணரலாம்.

ஐயரவர்களின் பல நூலறிவு, பல நூல்களைப் பதிப்பித்த அனுபவம், ஒப்பற்ற நினைவாற்றல், தாம் பதிப்பிக்க எடுத்துக் கொண்ட நூலின் சிறப்பினை எடுத்துரைக்க வேண்டுமென்ற ஆர்வம் போன்றவற்றின் விளைவாகவே இத்தகைய ஒப்புமைப் பகுதிகள் அமைகின்றன. இப்பதிப்பு முழுவதிலும் இவர் காட்டியுள்ள ஒப்புமைப் பகுதிகளைப் பின்வருமாறு தொகுத்துக் காணலாம்.

### அ) சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை நூல்கள் அனைத்திலிருந்தும் ஒப்புமைப் பகுதிகள் காட்டப் பெறுகின்றன. இவற்றுள், கலித்தொகை பாடற் பகுதிகளே மிகுதி. இதற்கு அடுத்த நிலையிலுள்ளது புறநானூறு ஆகும்.

பத்துப்பாட்டு நூல்களுள் பட்டினப்பாலை, மலைபடுகடாம் தவிர மற்ற எட்டு நூல்களிலிருந்தும் ஒப்புமைப் பகுதிகளை இவர் காட்டுகின்றார்.

செவ்வைச் சூடுவாரின் சொல்லாட்சித் திறனை வெளிப் படுத்தும் இப் பகுதிகளில் அவர் சங்க இலக்கிய ஆட்சிகளையும், உவமை மேற்கோள்களையும் தம் பாடல்களுள் பதித்துக் காட்டியுள்ளமை நன்கு விளங்கும்.

சங்க இலக்கியங்களைப் பதிப்பித்த அனுபவத்தால் மட்டுமே ஐயரவர்கள் இவற்றை ஒப்பிட்டுக் காட்டினார் எனக் கொள்வ தற்கில்லை. அதற்கும் மேலாக, பல நூற்றாண்டுகளாகச் சங்கத்தமிழ் மரபுகள் அழியாது போற்றப்பட்டு வருவதைக் காட்டுமுகமாகவே இவர் இப்பகுதிகளை எடுத்துக்காட்டுகிறார் எனலாம்.

### ஆ) இலக்கண நூல்கள்

தொல்காப்பியம், நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை, நேமிநாதம், தண்டியலங்காரம், நம்பியகப் பொருள் போன்ற இலக்கணநூற் செய்திகள் பலவற்றை மேற்கோளாகவும், ஒப்புமையாகவும் இவர் அங்கங்கே பொருத்திக் காட்டுகிறார். காட்டாக,

20 புலம்-அறிவு; நூலுமாம்-(தொல். சிறப்)

61 நாகணை—நாகம் அணை-(தொல். எழுத். 171.3)

743 வேந்தன்—இந்திரன்-(தொல். அகத்.)

1648 அறங்கரை-தர்மத்தைச் சொல்லும்-(தொல். பாயிரம்)

3364 புள்இயல் படைத்த-''புள்ளியற் கலிமா'' (தொல். கற்பு. 53)

826 அன்று என்பது முன்னிலை ஒருமைக்கும் வரும்-(நேமி. வினைமரபு, 7 உரை)

111 ஆள்—வீரர் — (பு.வெ.32)

886 நூழிலாட்டினான் — கொன்று குவித்தான் — (பு.வெ. 141)

1307 ஆறறி அரச; ஆறு-படை, குடி, கூழ், அமைச்சு நட்பு, அரண் என்பன—(பு.வெ.225)

1720 அரசருக்கு அறன் அறுவகைத்து என்ப; ஐந்தொழில் என்று கூறுவதுமுண்டு—(பு.வெ.157)

1721 வணிகருக்கு அறன் பயின்றிடல், புரிதல், செய்திடல், தருதல், காத்தல் எனப் பகர்வார்—(பு.வெ.164)

என இவ்வாறு வருமிடங்களில் இலக்கண நூற்பகுதிகளை மேற்கோளாகக் காட்டி அவற்றை நிறுவுகின்றார்.

'மலையொடு பொருவெண் கோட்டு வாரணம்' (பா. 1814) என்ற தொடருக்கு ஒப்புமையாக ''மலையொடு பொருத மாஅல் யானை'' என நச்சினார்க்கினியரின் மேற்கோளைக் (தொல், வேற்றுமை. 13. ந. மே.) காட்டுகின்றார்.

'மழலை மொழியே தேனாக. செவ்வாய் தளிராக' (பா. 1089) என்ற பாடற்பகுதிக்கும், 'கொய்யிணர்த் தருவின் பொன்னங் கொடியெனத் தோன்றுற்றாளால்' (பா. 1843) என்ற பாடற்பகுதிக்கும், கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா, அரும்பிவர் மென்முலை தொத்தாப்—பெரும்பணைத் தோட் பெண்டகைப் பொலிந்த பூங்கொடி'' (பு. வெ. 285) என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடற்பகுதிகளை ஒப்புமையாகக் காட்டுவர்.

## இ) காப்பியங்கள்

சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, பெருங்கதை, மணி மேகலை ஆகிய பெருங்காப்பியங்களைப் பதிப்பித்த ஐயரவர் கள், இப்பாகவதப் பதிப்பில் அக்காப்பியப் பாடற்பகுதிகள் பலவற்றை ஒப்புமையாகக் காட்டுகின்றார். இவற்றுள், சீவக சிந்தாமணியிலிருந்து காட்டப் பெற்றவையே மிகுதி.

பொதுநிலையில், பழந்தமிழ்க் காப்பியங்களில் பாகவத நூலாசிரியர் கொண்டிருந்த ஈடுபாடு, பயிற்சி போன்றவை இத்தகைய ஒப்புமைப் பகுதிகளால் விளங்குகின்றன. சீவக சிந்தாமணியின் செல்வாக்கும் பெருமையும் சமயங்கடந்த நிலை யில் அக்காலத்தில் போற்றப்பட்டதையும் இதனால் அறியலாம். சமண நூலான சீவக சிந்தாமணியின் சொல்லாட்சிகளும், உவமை நயங்களும், சந்தங்களும், இன்ன பிறவும் வைணவ நூலான கம்பராமாயணம் போன்றவற்றில் செல்வாக்குப் பெற்று மிளிர்ந்தது போலவே, இப்பாகவத நூலிலும் மிளிர் வதைக் காட்டவே ஐயரவர்கள் இத்தகைய ஒப்புமைப் பகுதிகள் பலவற்றைக் குறிப்பிடுகின்றார் எனலாம்.

பலவகையான உவமைகளைக் கூறும் சொற்றொடர்களும், பல இலக்கிய வழக்குகளும் காலத்தால் மாறாமல், பாகவத நூலாசிரியரால் போற்றப்பட்டுள்ளதை இத்தகைய ஒப்புமைப் பகுதிகளால் நன்கறியலாம். அக்கால மக்களால் பெரிதும் போற்றப்பட்ட தமிழ்க் காப்பிய மொழிகளைப் போலவே தம்முடைய பாகவத நூலையும் அமைப்பின் இதுவும் ஒரு காப்பிய நிலையைப் பெறும் என இந்நூலாசிரியர் எண்ணி இவற்றை ஒப்பிட்டு அமைத்திருக்கலாம். எவ்வாறாயினும், பெருங்காப்பியங்களில் காணும் பகுதிகளையெல்லாம் ஐயாயிரம் பாடல்கள் கொண்ட பாகவதம் போன்ற பெருநூல்களுடன் ஒப்பிட்டுக் காட்டும் திறன் உ. வே. சா. போன்றவர்களுக்கே யுரியது என்பது இவற்றால் தெளிவாகும்.

சீவகசிந்தாமணியை முதன் முதலாக 1887இல் ஐயரவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். அக்காலத்திலேயே இவர் பாகவதத் திலுள்ள சில ஒப்புமைப் பகுதிகளைச் சிந்தாமணிப் பாடல்களின் குறிப்புரையில் எடுத்துக்காட்டியுள்ளார். சான்றாக,

''கண்ணினை மாரி கற்ப'' — பாக. 10. 17:53
(சீவக. 21)

| | | |
|---|---|---|
| மகளிர் பந்தாடல் (சீவக. 151) | — | பாக. 8. 5:10 |
| சீவக. 157-160 | — | பாகவதம் 4.4: 43-6 |
| அந்தணர் இயல்பு (சீவக. 400) | — | பாக. 8. 7:46 |
| 'வெடிபட முழங்கி' (சீவக. 507) | — | பாக. 7. 2:84 |
| 'பாடகம் போலச் சூழ்ந்த பழவினை (சீவக. 510) | — | பாக. 12. 9:10 |
| 'ஆம்பொருள்களாகும் ... போகும்'(சீவக. 848) | — | பாக. 7. 2:12 |
| தருமத்தை விடைவடிவமுடைய தென்பர் (சீவக.973) | — | பாக. 1. 7:40 |
| 'கடலெனக் காற்றென... தீயென' (சீவக. 1017) | — | பாக. 1. 2:7 |
| 'பாவைநீ...விழைந்த வன்னமே' (சீவக. 1017) | — | பாக. 1. 2:7 |
| 'என்பினை நரம்பிற்...வென் றான்' (சீவக. 1577) | — | பாக. 5. 2:31 |
| 'ஏந்தலைத்...தீர்ந்தார்' (சீவக. 1864) | — | பாக. 1. 4:62 |
| 'பொன்னனங் நின்றான்' | — | பாக. 10.41:41 |

ஆகிய ஒப்புமைப் பகுதிகள் அப்பதிப்பில் அமைந்துள்ளன.

1881இல் இராசகோபாலபிள்ளை பாகவதத்தை அச்சில் பதிப்பித்து வெளியிட்டபொழுதுதான் ஐயரவர்கள் சிந்தாமணிப் பதிப்பைத் தொடங்கியிருந்தார். அக்காலத்திலேயே இவர் இவ்விரு நூல்களின் ஒப்புமைப் பகுதிகளை ஆராய்ந்து வந்தார் எனத் தெரிகிறது. இதற்காக இவர் பாகவதத்தின் அச்சு நூல்களை ஆதாரமாகக் கொண்டாரா அல்லது சுவடிகளையே ஆதாரமாகக் கொண்டாரா என்ற விவரங்கள் அறியக்கூட வில்லை. பிற்காலத்தில் (1941இல்) ஐயரவர்கள் பாகவதத்தைப் பதிப்பிக்க முற்பட்டபொழுது பலவிடங்களில் சீவக சிந்தாமணி நூற்பகுதிகளை ஒப்புமையாகக் காட்டுகின்றார். சீவக சிந்தாமணியிலிருந்து சுமார் 140 பாடற்பகுதிகளை இவர் ஒப்புமையாகக் காட்டுகின்றார். சீவகசிந்தாமணிப் பாடல்களுடன்.

நச்சினார்க்கினியர் உரைப்பகுதிகள் பலவற்றையும் ஒப்பிடுகின்றார்.

| | |
|---|---|
| ஆவியந்துகில் (பாக. 591) | — ஆவியன்ன பூந்துகில் (சீவக. 67)<br>ஆவியந்துகிலார் (சீவக. 873) |
| அருவிக்கு மாலை உவமை (பாக. 3134) | — சீவக. 35 அடிக். |
| சிலம்பொலிக்கு அன்னத்தின் குரல் உவமை (பாக. 3589) | — சீவக. 2890 |
| வீரர்க்குப் புலி உவமை (பாக. 3888) | — சீவக. 1750 |

இவ்வாறு பல உவமைகளும் பிறவும் இருநூல்களிலும் ஒரே வகையில் அமைந்திருப்பதை இவர் அங்கங்கே எடுத்துக் காட்டுகின்றார்.

### ஈ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

கார்நாற்பது, திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு ஆகிய நூல்களிலிருந்து இவர் ஒப்புமைகளைக் காட்டுகின்றார். அகப்பொருள் நூலான கார்நாற்பதில் காணும் இரண்டு உவமைகளைப் பாகவதப் பாடல்கள் இரண்டில் ஒப்புமையாகக் காட்டுகின்றார். நீதி நூல்களான நாலடியார், பழமொழி நானூறு ஆகியவற்றில் ஒரு சில ஒப்புமைப் பகுதிகளைச் சுட்டிக் காட்டும் இவர் திருக்குறட்பாக்கள் பலவற்றைப் பாகவதப் பாடல்களுடன் பொருத்திக் காட்கிறன்றார்.

சில உவமைகளை விளக்க வந்தவிடத்தும், சில தொடர்களை விளக்க வந்தவிடத்தும் குறட்பாக்களை இவர் ஒப்பாகக் காட்டுகின்றார். உளி-மூன்றாம் வேற்றுமை உருபு (பா. 1395) செஞ்சொல்-மூவகைச் சொற்களுள் ஒன்று (பா. 2181) போன்ற இலக்கணக் குறிப்புகளுக்கு முறையே குறள் 545, 711 ஆகியவற்றிற்குப் பரிமேலழகர் கூறிய உவமைகளை மேற்கோளாகக் காட்டுகின்றார். பழைய உரையாசிரியர்கள் தம் உரைகளில் குறட்பாக்களை மிகுதியான எண்ணிக்கையில் மேற்கோளாகக் காட்டுவது போன்றே இவரும் பலவிடங்களில் காட்டுகின்றார்.

## உ) வைணவ நூல்கள்

பாகவதம் கண்ணபிரானுடைய வரலாறுகளைக் கூறும் நூலாகையால், இதற்கு முன்னும் பின்னும் எழுந்த வைணவ நூல்கள் பலவற்றிலிருந்து ஒப்புமைப் பகுதிகளை எடுத்து அங்கங்கே இவர் குறிப்பிடுகின்றார். திருவரங்கத்து மாலை, திருவரங்கத்தந்தாதி, அழகர் கலம்பகம், திருவரங்கக் கலம்பகம், அழகர் கிள்ளைவிடு தூது, கம்பராமாயணம், திருச்சந்தவிருத்தம் திருமாலை, திருப்பாவை, திருவாய்மொழி, திருவேங்கடத்ந்தாதி, திருவேங்கடமாலை, நாச்சியார் திருமொழி, பெரிய திருமடல், பெரிய திருமொழி, பெருமாள் திருமொழி, வியாச பாரதம், வில்லிபாரதம் போன்ற வைணவ நூல்களை இப் பாகவத நூலில் இவர் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

திருமாலை ஒப்பற்ற பரம்பொருளாக ஏத்திப் பாடிய ஆழ்வார்களும், இராமபிரானை ஒப்பற்ற தலைவனாகப் பாடிக் களித்த கம்பரும், அரங்கநாதனை ஒப்பற்ற தனிமுதலாகப் பரவிய பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் இன்னும் பல வைணவ நூலாசிரியர்களும் வைணவ மரபு காத்த பல்துறை அறிஞர் களாவர். இவர்தம் பாடல்களின் தாக்கத்தால் வைணவ பக்தி இலக்கியங்கள் பல பிற்காலத்தில் தோன்றின. இப் பெரியோர்கள் வழங்கிய இலக்கியச் சொல்லாட்சிகளும், கருத்துக்களும், வரலாறுகளும் பலவகையில் ஒப்பிடற்குரியன என்பதை ஐயரவர்கள் இப்பதிப்பில் பலவிடங்களில் சுட்டுகின்றார்.

காப்பியங்களில் சீவக சிந்தாமணிப் பாடற்பகுதிகளை மிகுதியாக ஒப்புமை காட்டியுள்ளது போன்றே, வைணவ நூல்களில் கம்பராமாயணப் பாடற்பகுதிகளை மிகுதியான எண்ணிக்கையில் இவர் எடுத்துக் காட்டுகின்றார். பாகவதத்தில் காணும் சில உவமான உவமேயங்கள், சில அரிய தொடர்கள், வரலாறுகள் ஆகியவற்றைக் கம்பராமாயணப் பாடல்களுடன் ஒப்பிடும் ஐயரவர்கள், கம்பராமாயணத்திலிருந்து இந்நூல் மாறுபடுமிடங்களையும் (பாக. 2243, 2291) அங்கங்கே சுட்டிக் காட்டுகின்றார்.

பாரதக் கதை மாந்தர்களான விதுரன், சகாதேவன், நகுலன், அபிமன்யு, திருதராட்டிரன் போன்றோர்களின் வரலாற்று விளக்கங்களுக்கு வியாசபாரதம், வில்லிபுத்தூராழ்வார் பாரதம் ஆகியவற்றிலிருந்து ஒப்புமைப் பகுதிகளைத் தருகின்றார்.

## ஊ) புராணங்கள்

விஷ்ணு புராணமேயன்றி இலக்கிய வளமிக்க சைவ புராணங்கள் பல்வற்றையும் இவர் ஒப்பு நோக்குகிறார். கந்த புராணம், கூர்மபுராணம், தணிகைப்புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், பெரிய புராணம் ஆகியவற்றிலிருந்தும் இவர் எடுத்துக்காட்டுகளைத் தருகின்றார்.

அற்றம்-சோர்வு (434), ஏண்-கர்வப் பேச்சு (4348), கிளையினம்-மூங்கிற் கூட்டம் என இவ்வாறு அமையும் அருகிய சொல் வழக்குகளை விளக்கக் கந்தபுராணப் பாடற் பகுதிகளை ஒப்பிடுகின்றார். சில புராண வரலாறுகளை விரித்துக் காணவும் சில பாடற்பகுதிகளின் திரண்ட கருத்துக்களை விளக்கவும் திருவிளையாடற்புராணம் போன்ற புராண நூற் கருத்துக்களை அங்கங்கே காட்டுகின்றார்.

## எ) பல்வகை நூல்கள்

அரிய சில விளக்கங்களை எடுத்துக்காட்டுகளுடன் வழங்க விரும்பிய ஐயரவர்கள் பல்வேறு நூல்களையும் ஆராய்ந்தார் எனத் தெரிகின்றது. சில இலக்கண வழக்குகளைக் காணவும், உவமைகளை ஒப்பிடவும் இவர் சிற்றிலக்கியங்களையும் பிற நூல்களையும் நுணுகி ஆராய்ந்துள்ளார்.

கோழியின் கூட்டுக்கு, முள் முருங்கையின் துணர் உவமையாகக் கூறுவதைக் (பாக. 3900) கல்லாடம் கடவுள் வாழ்த்துப் பகுதியோடு ஒப்பிடுகிறார்.

கண்ணனைக் கண்டு மயங்கிய மகளிர் நிலையைக் (பாக. 126) குலோத்துங்க சோழன் உலா (109-10) மகளிருடன் ஒப்பிடுகிறார்.

அருளப்பாடு (கட்டளை) (பாக. 2013) என்ற சொல்லின் பொருளைக் கோயிலொழுகு நூலைக் கொண்டு நிறுவுகிறார்.

ஐந்து வகையான பசுக்களை விளக்க (பாக. 1844) சிவ தருமோத்தரம், கோபுரவியல், 122 ஆம் பாடலை அப்படியே எடுத்துக் காட்டுகிறார்.

பொடித்த செங்கதிர் (முளைத்த சூரியன்) (பாக. 339), கிண்கிணிவாய்மலர் (சிறிதலர்ந்த மலர்) (பாக. 2194) ஆகியவற்றிற்குத் திருச்சிற்றம்பலக் கோவையாரில் ஒப்புமை காண்கிறார்,

அமுதம் கடைந்தது உப்புக்கடலில் (பாக. 107) என்பதையும், ஆதிசேடன் வெண்ணிற முடையவன் (பாக. 251) என்பதையும், பாற்கடல் சிவப்பத் தோன்றும் மணி கவுத்துவம் (பாக. 525) என்பதையும், பூமாலைக்கு இந்திரவில் உவமை (பாக. 3549) என்பதையும் தக்கயாகப் பரணிப் பாடற்பகுதிகள் கொண்டு விளக்குகிறார்.

பாகவதப் பாடலில் காணும் சொற்பொருள் கருத்துக்களுடன் தேவாரப் பாடல்களை அங்கங்கே ஒப்பிடுவது ஐயரவர்களின் தனிச் சிறப்பாகும். குஞ்சி-சடை (பாக. 222), குழல்-ஆண் தலைமயிர் (பாக. 321), அலமந்து-திரிந்து (பாக. 660) போன்ற சொற்பொருள் நயங்கூறவும் தேவாரத்தை நாடுகிறார். குரவத்தின் அரும்பு அரவின் எயிற்றுக்கு உவமையாவதை (பாக. 2927) இவர் தேவாரத்திலும் காண்கிறார். 'தும்மினும் இருமினும்' என்னும் பாகவதப் பாடல் (1385), 'தும்மல் இருமல்' என்னும் தேவாரம்-நமச்சிவாயப் பதிகத்தை நினைவுறுத்துவதை இவர் அங்கேயே எடுத்துக் காட்டி இது 'இங்கே ஒப்புநோக்கற்பாலது' என்றும் குறிக்கிறார்.

இவ்வாறே, ஆசிரியமாலை, குமரகுருபரர் பிரபந்தங்கள், சகலகலாவல்லிமாலை, தஞ்சைவாணன் கோவை, திருவள்ளுவ மாலை, நீதி நெறிவிளக்கம், நைடதம், பிரமோத்தர காண்டம், வான்மீகம் போன்ற நூல்களிலுள்ள பாடற்பகுதிகளையும் பலவாறு ஒப்பிட்டளிக்கின்றார்.

தாயுமானவர் பாடல்களையும் (பாக. 1981) தனிப் பாடல்களையும் (பாக. 59,564,1975) இவர் விடவில்லை. அவற்றையும் தேவையான பகுதிகளில் எடுத்துக்காட்டுகளாகத் தருகின்றார்.

மேற்கூறிய நூல்களின் ஒப்புமைப் பகுதிகள் பலவற்றை ஒரே விடத்தும் இவர் தொகுத்துக் காட்டி விளக்குகின்றார். பாடலின் பொருள் விளக்கத்திற்கேற்பவும் தெளிவு கருதியும், வாய்ப்பு நேர்ந்தவிடத்தெல்லாமும் இத்தகைய ஒப்புமைகளையும் மேற்கோள்களையும் இவர் அளிக்கின்றார் என்பதை இப் பாகவதப் பதிப்பு முழுவதையும் நோக்க விளங்கும். (பின்னிணைப்பில் காண்க)

ஒரு நூலைப் பதிப்பிக்கும் ஆசிரியர் அந்நூலுக்கான உரை வரைந்தவிடத்து, ஒப்புமைப் பகுதிகளையும் மேற்கோள்

களையும் அமைப்பது மரபு. இவை பதிப்பாசிரியரின் பலநூற் புலமையை மட்டும் காட்டுவதாக நாம் கொள்வதற்கில்லை. அதற்கும் மேலாக வேறு பல பயன்களும் இப் பணியால் நமக்குக் கிடைக்கின்றன. மறைந்துபோன தமிழ் நூல்கள் பல வற்றை உரையாசிரியர் கூறும் மேற்கோள்களாலேயே நாம் இன்று அறிகிறோம். எனவே, நூல்கள் அழியினும் இத்தகைய மேற்கோள்கள் பலவிடங்களில் காக்கப்பெறும் என்பது தெளி வாகிறது. பழந்தமிழ் நூல்கள் காக்கப்பெறவும், பழந்தமிழ் மரபுகள் போற்றப்பெறவும் இத்தகைய ஒப்புமைப் பகுதிகள் தேவையாகின்றன. இவற்றால் இலக்கியச் சுவை மிகுதியாக உணரப்பெறும். இலக்கிய இலக்கணச் சான்றுகளால் மொழித் தெளிவுண்டாகும். நூலின் நம்பகத் தன்மை, நூலாசிரியர் பெருமை போன்றவை மேலோங்கும். குறிப்பாக ஒப்பியல் ஆய்வுக்கு இப்பகுதிகள் பெரிதும் துணையாகும்.

உ. வே. சா. குறிப்பிடும் இத்தகைய பகுதிகளை ஒன்றாகத் திரட்டிக் காண்பது தமிழியல் ஆய்வுக்குப் பெரும் பயனாகும்,

# ஒப்புமையும் மேற்கோளும்

| பா. எண். | செவ்வைச் சூடுவார் பாகவதம் | சங்க இலக்கியங்கள்—எட்டுத்தொகை |
|---|---|---|
| 2927 | குரவத்தின் அரும்பு அரவின் எயிற்றுக்கு உவமை | அரவெயிற்றன்ன வரும்பு முதிர் குரவின் அக. நா. 237:3 |
| 2971 | மழைத் தாரைக்கு யானைத் துதிக்கை உவமை | பெருங்களிற்றுத் தடக்கை புரையக்கால் வீழ்த்தது அகநா. 334:5 |
| 4094 | எரிமருள் ஈர்ஞ்சடைக்கடவுள்-தீயையொத்த நிறமுடைய குளிர்ந்த சடையையுடைய சிவபெருமான் | எரியகைந் தன்ன வவிர்ந்து விளங்கு புரிசடை அகநா. கடவுள் 10 |
| 4113 | வாங்கும் அம்செந்நெல் இடித்த பாசவல்-வளைந்த அழகிய செந்நெல்லை இடித்துச் செய்த பசிய அவலை | பெருஞ்செந் நெல்லின் வாங்குகதிர் முறித்துப் பாசவ லிடித்த அகநா. 141 |
| 1832 | அழியும்-மிக்க, அழிதுளி-மிக்கதுளி | ஐங்குறு. 251 |
| 3449 224, | நறை-நறைக்கொடி | ஐங்குறு 276 |

| | | |
|---|---|---|
| 3426 | மயிலெருத்துறழ்தரு மாயன் | மயிலெருத்து வண்ணத்து மாயோய் கலி. 108:38 |
| 975 | ஆறறி முனிவர் | ஆறறி யந்தணர்க்கு கலி. கடவுள். 1 |
| 2703 | ஏமுறு–மயக்கமடைய | ஏமுறுகடுந் திண்டேர் கடவி கலி. 27, 25, |
| 2789 | நரந்தம் கமழ்குழல் மங்கையர் | நரந்த நாறிருங் கூந்தல் கலி. 54.5 |
| 2812 | ஊது வண்டு-தாதை உண்ணுகின்ற வண்டு<br>ஊதுதல்–நுகர்தல் | அரும்பவிழ் நறுமுல்லை, பாய்த்தூ திப் படர் தீர்ந்து கலி. 66. 6–7 |
| 2835, 3852 | மரா மென மருளு மேனிவள்ளல்—வெண் கடம்ப மரமோ வென்று மயங்கும் படியான வெண்ணிற மேனியையுடைய பலராமன்; | ஒரு குழை யொருவன்போ லிணர் சேர்ந்த மராஅமும் கலி. 26:1<br>,, ,, |
| 2839 | ஒற்றையங் குழையினன்-பலராமன் | ,, ,, |
| 2890 | கூதிர் இறுத்தந்தது–குளிர்காலம் வந்துவிட்டது | இறுத்தந்த மருண் மாலை கலி. 138:8; 148:8 |
| 3044 | ஆம்பற் குழல் | கலி. 108:62; 3 |
| 3079 | நெறிந்து–அறல்பட்டு | நெறிந்த குரற் கூந்தல் கலி. 93:22 |
| 3161 | களிறு காழ்வரை நிற்கில கழிவ | காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல் கலி. 2:26 |
| 3297 | வீழாரோ! விரும்பார்களோ | வீழ்வார்கட் டோன்றும் கலி: 145:16. ந. |

| | | |
|---|---|---|
| 3305, 2929 | நரந்த நறைக்குழல்-நறையூட்டப்பெற்ற குழல் | நரந்த நாறிருங் கூந்தல் கலி. 54:5 |
| 3314 | வடசொற் பெயரால் விளங்கும் பருதி வதனத்தரசனை; திருதராஷ்டிரனை | வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற முகத்தவன் கலி. 25:1-2 |
| 3426: | 1-2. வெயில்பொற வாட்ட முற்ற மென்றளிர்ப் பசிய வல்லி புயல்பொழி துவலை மாந்திப் பொங்கெழில் படைக்கு மாபோல் | "நீரற்ற புலமெபோற் புல்லென்றாள் வைகறை, கார்பெற்ற புலமேற்போற் கவின்பெறும் கலி. 38:11-2. |
| 3435, 3023 | மாமையும் சுணங்கும் அணிந்து | மாயவன் மேனிபோற் றறிரீன வம்மேனித், தாய சுணங்குபோற் றளிர்மிசைத் தாதுக கலி. 35:3-4 |
| | | பூத்ததைந்த தாழ்சினைத் தளிரன்ன வெழின் மேனித் தகைவாட கலி. 40:19–20 |
| 3442 | கழைக்கரும்பு அனுக்கும்-கோற்கரும்பின் இனிமையைக் கெடுக்கின்ற, கழை-கோல் | தீங்கட் கரும்பின் கழைவாங்கு முற்றாரின் கலி. 40:28 |
| 3519 | அணைபுரை பணைமென் றோளார்-அணையைப் போன்ற பெருத்த மெல்லிய தோளையுடைய மகளிர் | பணையெழி லணைமென்றோள் கலி. கடவுள். 9 மகளிர் தோளை அணையாகக் கூறுதல் மரபு. |
| 3566 | நடாக் கரும்பு—எழுது கரும்பு | நடாஅக் கரும்பமன்ற தோளாரை கலி. 112:6 |

| | | |
|---|---|---|
| 3853 | முறம்புரை தழைசெவி மூரிமா–முறத்தைப்போன்ற தழைத்த காதையுடைய வலியைக் கொண்ட யானை | முறஞ்செவி வாரண முன்குள கருந்தி கலி. 42:2 |
| 75 | அம்சிறை–அகம் சிறை–உள்ளிடத்தே சிறையையுடைய | அஞ்சிறைத் தும்பி குறுந். 2 |
| 1030 | ஆடியம்பாவை-கண்ணாடியிற் றோற்றும் பிரதிபிம்பம் | கையுங் காலுந் தூக்கத் தூக்கும், ஆடிப் பாவை போல, மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே குறுந். 8 |
| 1156 | தெறிநடை-துள்ளுகின்ற நடை | தெறித்து நடை குறுந். 213:5 |
| 1783 | பன்னகத்து உறும் அருவியின்–பாம்பைப் போன்ற அருவியில்; அருவிக்குப் பாம்பு உவமை | குறுந். 134:5-6, ஒப்பு. |
| 2709 | நள்ளென் யாமத்து—செறிந்த இருளையுடைய கடையிரவின் கண் | நள்ளென்றன்றே யாமம் குறுந். 6.1 |
| 2768 | முளி தயிர்—முற்றிய தயிர் | முளி தயிர் பிசைந்த குறுந். 167 |
| 2773 | கை விரல்களுக்குக் காந்தளரும்பு உவமை | குறுந். 161 |
| 2789 | நரந்தம் கமழ் குழல் மங்கையர் | நரந்த நாறுங் குவையிருங் கூந்தல் குறுந். 52. |
| 2828 | வெண்மணலுக்கு நிலாக் குவியல் உவமை | நிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறை குறுந். 123. |
| 1072, 4391 | வேடர் இசைபாடி விலங்குகளை அகப்படுத்துதல் | அசுணங் கொல்பவர் கைப்போ னன்றும் இன்பமுந் துன்பமு முடைத்தே நற். 304 |

| | | |
|---|---|---|
| 1495 | மடங்கல்போல்-ஊழித்தீயைப்போல் | பதிற். 62:8. உரை |
| 1719 | அந்தணரென விதிப்பார் அறுதொழில் இயற்றுதற் குரியர் | பதிற். 24:6-7 |
| 3004 | ஒலி-தழைக்கின்ற | பதிற். 13:7. உரை. |
| 3611, 3656 | பாய்மா-குதிரை; பவளம் போன்ற குளம்பு; | பதிற். 65:1-2 |
| 88 | நட்பொடு பகையிலதாய் | மாற்றோ ரும்மிலர் கேளிரு மிலரெனும் பரி.4:54 |
| 1323 | பூமகன்-செவ்வாய்; பூ—பூமிதேவி | படிமகன் பரி. 11:5 |
| 1787 | கலாவுறும் - கூடிமகிழும்; பலராமரும் கண்ண பிரானும் சேர்ந்திருத்தல் | பரி. 15:11—4 |
| 2808 | பறவாப் பூவை-காயாம்பூ மரம்; வெளிப்படை | பறவாப் பூவை பூவினோயே பரி. 3:73 |
| 3724 | குருகின் பெயர் புணர் மால்வரை கொன்று | குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து பரி. 5 |
| 108 | ஐவர்-பாண்டவர் ஐவர்; தொகைக் குறிப்புப் பெயர் | புறநா. 2:13. அடிக். |
| 184. | குறு குறு நடந்து; 2798 | குறுகுறு நடந்து சிறுகை நீட்டி புறநா. 188:3 |
| 274 | ‘செக்கர் அ கமலை மார்பன்’ —சிவந்த அழகிய தாமரையிலுள்ள திருமகள்; செக்கர்—சிவப்பு; | செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்ற புறநா. 16 |

| | | |
|---|---|---|
| 368 | வல்வில்—பல இலக்குகளை ஊடுருவிச் செல்லும் அம்பையுடைய வில் | புறநா. 150. |
| 396 | நாத்தழும்பாக | நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும் புறநா.200 |
| 498 | பாம்புபோல் சீறுதல் | எறிகோ லஞ்சா வரவி னன்ன சிறுவன் புறநா. 89:5–6 |
| 513 | குயின் மருள்—மேகத்தைப் போன்ற; மருள்—உவமவுருபு | எரிமரு ளவிர்சடை புறநா. 56:1 |
| 1539 | பருதி ஒளிமிகுதிக்கு உவமை | செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ புறநா. 4 |
| 1609 | ஆபுரம்—கோலோகம் | புறநா. 7:1, உரை; பசுத்தொழுவுமாம். |
| 1838 | அணியதாகி—அழகையுடையதாகி | கறைமிட றணியலு மணிந்தன்று புறநா. 1 |
| 2791 | குறுமாக்கள்—சிறுவர் | புறநா. 94, உரை |
| 3451 | வெண்டலை புணரி ஆடும் விரிகடல்-வெண்மையான தலை பொருந்திய அலை அலைகின்ற விரிந்த கடல் | வெண்டலைப் புணரிக் குடகடல் புறநா. 2:10<br>வெண்டலைப் புணரி நின்மான்குளம் பலைப்ப புறநா. 31:14 |
| 3611, 3656 | பாய்மா-குதிரை; பவளம் போன்ற குளம்பு | புறநா. 97:11–3; 98:5-7 |
| 3853 | முறம்புரை தழைசெவி மூரிமா | முறஞ்செவி யானை புறநா. 339:13 |
| 3913 | மதி போன்ற குடை | உவவுமதி யுருவி னோங்கல் வெண்குடை புறநா. 3:1 |

| | | |
|---|---|---|
| 3979 | விழுக்கு—ஊன்விசேடம்; விழுக்கும் நினக்கும் | விழுக்கொடு விரைஇய வெண்ணிணச் சுவை யினன் புறநா. 371.22 |
| 4030 | வலவனேவா ஊர்தி-பாகனாற் செலுத்தப்படாத விமானத்தை | வலவனேவா வான வூர்தி புறநா. 27 |
| 4072 | மாலைக்கு இந்திரவில் உவமை | புறநா. 10:10 |
| 4094 | ஏரிமருள் ஈர்ஞ்சடைக் கடவுள் | எரிமரு ளவிர்சடை புறநா. 56:1 |
| | | **பத்துப்பாட்டு** |
| 295 | காழ்-கருமை | குறிஞ்சிப். 107. ந; விடமுமாம். |
| 88 | எழு—கணையமரம் | எழுவுறழ் திணிதோற் சிறுபாண். 49 |
| 198 | தூங்கிசை-ஆடுதற்கமைந்த இராகம்; தூங்கல்—ஆடல் | சிறுபாண். 162 |
| 863 | ஏக்கற்றிருத்தல் - மற்றொன்றின் தன்மையைத் தான்பெற விரும்பி யிருத்தல் | சிறுபாண். 157. ந. |
| 982 | உடுவின் நாப்பண் வெண்மதியைப் போல நின்று | பன்மீ னடுவட் பான்மதி போல சிறுபாண். 219 |
| 1057 | நிழலும்—நிழலைச் செய்கின்ற | ஏரோர்க்கு நிழன்ற கோலினை சிறுபாண். 233 |
| 1779 | தடங்கண்மங்கையர் முகமெனத் தாமரை மலரும் | திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை சிறுபாண். 73 |

| | | |
|---|---|---|
| 2653 | யானைக் கோட்டினில் இயற்றுதேர் | கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர் சிறுபாண். 168 |
| 2656 | தாழ் இரு தடக்கை யானை-நிலத்தே தாழ்ந்த பெரிய வளைந்த கையையுடைய யானை | ஈர்ந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கை சிறுபாண். 19 |
| 2776 | எரிபொன் வார்ந்தன்ன-விளங்குகின்ற பொன் கம்பியாக்கினாற் போன்ற | சிறுபாண். 34, புரி நரம்பு. |
| 3777 | அடி 3-4 | சிறுபாண். 219-20 |
| 3975 | தடக்கையான்-வீமன் இவன் அடிசிற்றொழிலில் வல்லவன்; வீமபாகம் என்பது வழக்கு | சிறுபாண். 238-241 |
| 4017 | தாழ்ந்த அம்துகில் இடவயிற் றழீஇயினன்-தொங்கிய அழகிய ஆடையை இடப்பக்கத்தே அணைத்துக் கொண்டவனாய் | புடைவீழ்ந்துகி லிடவயிற் றழீஇ நெடுநல். 181 |
| 14 | கரைக்குறும்பு-கரையாகிய அதனை; குறும்பு-அரண் | பெரும்பாண். 129 |
| 513 | காந்தளுக்குப் பாம்பும், மேகத்திற்குத்திருமாலும் உவமைகள் | காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப் பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண் பெரும்பாண். 372-3 |
| 2008 | உரவுநீர்-உலாவுதலையுடைய கடல் | பெரும்பாண். 350, ந. |

| | | |
|---|---|---|
| 2840 | அணர்ச் செவிக் கழுதை-மேலே எடுத்த காதை யுடைய கழுதை | அணர்ச் செவிக்கழுதை பெரும்பாண். 80 |
| 2872 | அளவிலைப் பொலம்பூண் ஆகத்து ஆயர்-வெண் ணெய்க்கு விலையாகக் கொண்ட பொன்னா லாகிய அணிகளை மார்பிலணிந்த இடையர் | நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள் பெரும்பாண். 164 |
| 3519 | சந்திராசித்து உறங்குவதற்குப் பள்ளிகொள் களிறு உவமை | காந்தளஞ் சிலம்பிற் களிறு படிந்தாங்குப் பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண் பெரும்பாண். 372-3 |
| 4026 | மதியின் முதுகை உறிஞ்சுகின்ற மதிலின் குடுமி யைக் கொண்டும் | கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும் பெரும்பாண். 451 |
| 4139 | வெயில் நுழைபு அறியலாகா விரிமலர்க் காவினீழல்-சூரியன் புகுதலை அறிய முடியாத விரிந்த பூக்களையுடைய சோலையின் நிழலில் | வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர் பெரும்பாண். 374, 1 |
| 4325 | பொன் வார்ந்தன்ன இன்னரம்புளர்யாழ்-வார்தல் ஒழுகுதல் | பெரும்பாண். 15 |
| 79 | கோட்டினிற் புரி கொடிஞ்சியந்தேர் | கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர் பொருந. 163 |
| 840 | யாழ் வடித்தவன்-யாழை ஆராய்ச்சி பண்ணு வோன்; வடித்தல்-நரம்பை எறிதலெனினுமாம் | பொருந. 23, ந. |
| 869, 2764 | பருகுவான்போல் நோக்குதல் | பருகு வன்ன வருகா நோக்கமொடு பொருந. 77, அடிக். |

| | | |
|---|---|---|
| 2226 | ஊசலை நிகர் குழை யுலவும் – ஊசலைநிகர்-ஊஞ்சலையொத்த | பூங்குழை யூசற் பொறைசால் காதின் பொருந. 30 |
| 2927 | அரவின் உரிவை யன்ன வால் நுண் துகில் | அரவுரியன்ன வறுவை பொருந. 83 |
| 3435 | அரவின் உரிவையன்ன அம்துகில் | ,, ,, |
| 3827 | ஈர்க்கிடை போகலாகாமுலை | ஈர்க்கிடை போகா வேரிள வனமுலை பொருந. 36 |
| 4042 | பால்கெழு புரவி நான்கும் | பால்புரை புரவி நான்குடன் பூட்டி பொருந. 165 |
| 288 | தம்மின்-தாரும் | நல்லெயி லுழந்த செல்வர்த் தம்மின் மதுரைக். 731 |
| 355 | ஆவுதி - ஆஹுதி யென்னும் வடமொழிச் சிதைவு | ஆவுதி மண்ணிய அவிர்துகின் முடிந்து மதுரைக் 494 |
| 3650 | நரை உரும்-பெருமையினையுடைய இடியேறு | நரையுருமினேறனையை மதுரைக். 63 |
| 3436 | மாமையும் சுணங்கும் அணிந்து | மாவின், தளிரே ரன்னமேனித் தளிர்ப்புறத், தீர்க்கினரும்பிய தலையர் மதுரைக். 706-8 |
| 287, 518 | விண்ணம் போழும்வாள் | வாள்போழ் விசும்பின் முருகு. 8 |

| | | |
|---|---|---|
| 540 | உருவ நஞ்சு-அச்சத்தை விளைவிக்கும் விடம்; உரு-அச்சம்; அ: சாரியை | முருகு. 273 |
| 622 | பார்முதிர் பனிக்கடல் - பாராகிய நிலம் முற்றுப் பெற்ற குளிர்ச்சியையுடைய கடலை | பார்முதிர் பனிக்கடல் முருகு. 45 |
| 788 | அந்தரத்தை அறுத்து ஒளிர் அருக்கன் | வாள்போழ் விசும்பு முருகு. 8 |
| 836 | கிண்கிணி கவைஇய தாளான்-துருவன் | கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடி முருகு. 13 |
| 842 | சிந்துரத் திலகந் தைஇய-தைஇய-அணிந்த | திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல் முருகு. 24 |
| 1336 | புழையுறு மெயிற்று-புழை-துளை | கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்று முருகு. 148 |
| 1797 | காலினோடும் கலந்து வழங்கும்-காற்றெழத் திரியும் | கால் கிளர்ந்தன்ன வேழம் முருகு. 82 |
| 2580 | ஓவலில்-ஒழிதல் இல்லாத | முருகு. 3 |
| 2681 | கிண்கிணி கவைஇய சிற்றடி | கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடி முருகு. 13 |
| 3724 | குருகின் பெயர் புணர்மால்வரை கொன்று-கிரவுஞ்ச மென்னும் பறவையின் பெயரைக் கொண்ட பெரிய மலையை அழித்து | குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து முருகு. 266 |

| | | |
|---|---|---|
| 3917 | குடந்தம்படு-வழிபடுகின்ற | குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி முருகு. 229 |
| 2001 | நீர்செல-மாவலி வார்த்த நீர் விழ | வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை நீர்செல நிமிர்ந்த மாஅல் போல முல்லைப். 2-3 |
| | | **இலக்கணம்** |
| 60 | ஒழியா முதலிய பெயரெச்சங்கள் உளத்திருள் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தன | வெங்கதிர்க்குஞ் செந்தீ விரிசுடர்க்கு நீங்காது, பொங்கு மதியொளிக்கும் போகாது-தங்கும், வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க் கிளமையான் வந்த விருள்-தண்டி 48, மேற். பாடல் இங்கே ஒப்பிடற் பாலது. |
| 2895 | கண்ணபிரானுக்கு மேகம் உவமை | வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டி ரங்கி தண்டி. மேற். சூத். 56 |
| 20 | புலம்-அறிவு; நூலுமாம் | புலந்தொகுத் தோனே தொல். சிறப். |
| 61 | நாகணையான் - திருமால்; நாகணை- நாகம் அணை | தொல். எழுத். 171, ந. |
| 743 | வேந்தன்-இந்திரன் | வேந்தன் மேய தீம்புன லுலகமும் தொல். அகத். |
| 1648 | அறங்கரை மழலைச் செவ்வாய்ப் புதல்வன் பிரகலாதன், அறங்கரை-தர்மத்தைச் சொல்லும் | அறங்கரை நாவி னான்மறை முற்றிய, அதங்கோட் டாசாற்கு தொல். பாயிரம் |

| | | |
|---|---|---|
| 1814 | மலையொடு பொருவெண் கோட்டு வாரணம் | மலையொடு பொரு மாஅல் தொல். வேற்றுமை 13, ந, மேற். |
| 2035 | ஓர் செலவுள் சென்று மடங்கியது-ஓர் எலும்புப் புரையுள் சென்று தங்கியதை | உளையாழி யோரேழு மொருசெவி னொடுங்கு தலால், விளையாட நீர்பெறா மீனுருவம் பரவுதுமே தொல். செய். 149, பேர். மேற் |
| 3364 | புள் இயல்படைத்த-பறவையின் இயல்பைக் கொண்டன | புள்ளியற் கலிமாவுடைமையான் தொல். கற்பு. 53 |
| 4026 | மதியின் முதுகை உரிஞ்சுகின்ற மதிலின் குடுமியைக் கொண்டும் | இகன்மதிற் குடுமிகொண்ட மண்ணுமங்கலம் தொல். புறத். 13 |
| 4041 | பறவை யன்ன-கருடனைப் போன்ற, இயலவாய-விரையும் தன்மையையுடைய கடுஞ்சொல்-விரைந்து செல்லுதலையுடைய | புள்ளியற் கலிமா தொல். கற்பு. 53 |
| 287 | விண்ணம் போழும் வாள் | வாள் போழ் வானத்து வயங்குகதிர் சிதறி நம்பி, 147, மேற் |
| 518 | வாள் போழ்ந்த விசும்பு | ,, ,, ,, |
| 826 | கோற்றொடிப் புதல்வ நீயெங் கோவிளங் குமர னன்று மாற்றவள் வயிற்றின் வந்தாய்—புதல்வ என்றது துருவனை நோக்கிய விளி. அன்று என்பது முன்னிலை ஒருமைக்கும் வரும் | நேமி. வினைமரபு, 7, உரை. |

| | | |
|---|---|---|
| 111 | ஆள்-வீரர் | ஆளமர் வெள்ளம் பு. வெ. 32 |
| 886 | நூழிலாட்டினான்-கொன்று குவித்தான் | பு. வெ. 141. |
| 1089 | மழலைமொழியே தேனாக, செவ்வாய் தளிராக | கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா பு. வெ. 285 |
| 1307 | ஆறறி அரச; ஆறு—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்பன | பு. வெ. 225 |
| 1513 | கொய்யுளைப் புரவி—கொள் உளை—கத்திரிகை யால் மட்டம் செய்த தலையாட்டம் | பு. வெ. 45, உரை |
| 1720 | அரசருக்கு அறன் அறுவகைத்து என்ப; ஐந்தொழில் என்று கூறுவதுமுண்டு | பு. வெ. 157 |
| 1721 | வணிகருக்கு அறன் பயின்றிடல், புரிதல், செய் திடல், தருதல், காத்தல் எனப் பகர்வார் | பு. வெ. 164 |
| 1843 | 'கொய்யிணர்த் தருவின் பொன்னங் கொடி யெனத் தோன்றுற் றாளால்'—கொடி என்றதற் கேற்பத் தளிரும், கொத்தும், தேனும் கூறப் பட்டன | கருந்தடங்கண் வண்டாகச் செவ்வாய் தளிரா, அரும்பிவர் மென்முலை தொத்தாப்-பெரும் பணைத்தோட், பெண்டகைப் பொலிந்த பூங்கொடி பு. வெ. 285 |
| 4046 | தாப்புலி—வலிய புலி | பு. வெ. 31 |

| | | |
|---|---|---|
| 164 | கொற்றவன் – அவ்வரசுக்குரிய கண்ணபிரான் கொற்றம்—அரசுரிமை; இப்பொருள் | தென்னவன் கொற்றஞ் சிதைந்தது சிலப். 19:20 |
| 227 | மண்டலீகர்—அரசர்கள் | மண்டல மாக்க ளாவார், அரசர் சிலப். வேனிற்காதை 84.9, அடியார் |
| 270 | கோதை வெண்குடை – முத்துமாலை சூட்டப் பெற்ற குடை; 273; கோதை—ஒழுங்குமாம் | கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்ப சிலப். ஊர்காண். 113 |
| 337 | கழையிசை வடித்தான் செவ்வி காண்கிலாக் கண்கண் மஞ்ஞைத்... | கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே சிலப். 17, அடியார் கண் படைத்ததற்குப் பயன் கண்ணபிரானின் அழகைக் காணுதற்கே என்றபடி. |
| 338 | ஊதுலைக் குருகு—கொல்லன் உலை மூக்கு | ஊதுலைக் குருகி னுயிர்த்தனர் சிலப். 4:59 ஆம் அடியையும் அதனடிக் குறிப்பையும் பார்க்க |
| 339 | வழங்காதநா – ஒலித்தல் இல்லாத நாவாகும் சிற்கை நா, கலப்பை நா என்றபடி | நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே சிலப். 17, அடியார் |
| 341 | மால் சரிதங் கேளாச் செவி | சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே, திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே சிலப். 17, அடியார். |

| | | |
|---|---|---|
| 1789 | புன்னை மலருக்கு நட்சத்திரங்கள் உவமை | சிலப். 7:29 |
| 1829 | வயிறு—நடு | கடல் வண்ணன் பண்டொருநாட் கடல் வயிறு கலக்கினையே சிலப். ஆய்ச்சியர் குரவை |
| 1977 | நரகரிப்படி—நரசிங்க உருவத்தை; படி—உருவம் | சிலப். 9:16 |
| 2814 | செவ்வழி வண்டு பாடும் | செவ்வழிப் பண்ணிற் சிறைவண் டரற்றும் சிலப். 11:88 |
| 2836 | பாண்—பாட்டு | சிலப். 13:103–5 |
| 2927 | துவர்—பத்துத் துவர் | சிலப். 6:76 |
| 3044 | ஆம்பற் குழல் | அடியார்க்கு நல்லார்; சிலப். பக். 445, 447. |
| 3124 | காழக உடை—கரிய உடை, ஒரு உடை விசேடமுமாம் | காழகஞ் செறிந்த வுடையினன் சிலப். 22:91 |
| 3168 | காலதர்—சாளரம் | காலதர் மாளிகை சிலப். 5:8 |
| 3219 | முல்லைக் குழலிசை | முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி சிலப். 17:பாட்டு 3 |
| 3648 | நிலவுப் பயன் கொள் முற்றத்து—நிலாவினது பயனைக் கொள்ளுதற்குக் காரணமாகிய முற்றத்தின் கண் | நிலவுப் பயன் கொள்ளு நெடுநிலா முற்றத்து சிலப். 4:31 |
| 3909 | சந்திரனைத் திருமாலின் இதயத்துத் தோன்றியதாகக் கூறுதல் ஈண்டு உணரற் பாலது | கரியவன் மனத்தி னுதிதனை சிலப். 6:36–7, அடியார். மேற் |

| | | |
|---|---|---|
| 3 | பிறைக்குழவி போல் நடப்ப 180 | மாமதி யன்னான் வளர்கின்றான் சீவக. 362 |
| 32 | இடபன்—ரிஷபேசுர சக்கரவர்த்தி, இவர் நாபிக்கு மேருதேவியினிடத்துப் பிறந்தவர் | சீவக. 32, 366, குறிப்பு |
| 54 | கன்னியந்துழாய்—புதிய துளவு; கன்னி—புதுமை; அம்: சாரியை | சீவக. 900, ந. |
| 60 | தேறல் ஒழுகியன்ன தொடை-தேன் ஒழுகினா லொத்த நரம்பு (தந்தி) | தீந்தேன், அணிபெற வொழுகியன்ன வமிழ்ழறழ் நரம்பி னல்யாழ் சீவக. 722 |
| 70 | சிலைத்தழும்பு இருந்த தோள் | சீவக. 16 |
| 85 | உலம்—திரண்ட கல் | உலங்கலந் துயர்ந்த தோளான் சீவக. 1167 |
| 96 | கச்சம்-ஒரெண்ணுப் பெயர் | சீவக. 2219 |
| 107 | அமுதின் சாயல்-அமுதத்தை ஒத்த சாயல் | அமிர்தன்ன சாயல் சீவக. 8 |
| 117 | வாளையுற்ற-வாளை மீனை ஒத்த; உற்ற:உவம வாசகம்; வாளுக்கு வாளை மீன் உவமை | வாளுற்ற கண்ணாள் சீவக. 10. ந.<br>வாளென வாளை பாய்வன சீவக. 1180 |
| 160 | நிழல்பொரு களிறு | நிழறுழாய்க் குனிந்து குத்தும், அழறிகழ்க தத்த யானை சீவக. 2220 |
| 169 | கண்ணபிரான் நகர மாந்தர்களுடைய தகுதிக் கேற்ப ஒழுகியதைக் கூறியபடி | சீவக. 1864 |

| | | |
|---|---|---|
| 174 | திங்களங்குழவி: 180 | மாமதி யன்னான் வளர்கின்றான் சீவக, 362 |
| 184 | பருதியன்ன மார்பு | சேட்டிளம் பருதி மார்பின் சீவக. 1913 |
| 188 | தருமன்-தருமபுத்திரன்; அறக்கடவுளுமாம் | தருமன் றண்ணளியால் சீவக. 160 |
| 191 | வண்டு கொப்புளித்து மாந்த | வண்டு கொப்புளித்துணும் சீவக. 1622 |
| 202 | நாகனை யான் | நஞ்சுபதி கொண்டவள் நாகணையி னான்றன் சீவக. 287 |
| 213 | குன்றெனவுயரிய மாதவன் | மல்லன் மலையனைய மாதவரை சீவக. 2789 |
| 256, 630 | கன்னி-புதுமை | சீவக. 900. ந. |
| 302 | பைப்பய-பையப்பைய—மெல்ல மெல்ல | காமம் பைப்பயக் கழிய சீவக. 2760 |
| 337 | பட்ட மரமும் மலையும் குழைதர வேய்ங் குழலி சைத்து 377, 2902, 2912 | கலைத் தொழில் படவெழீஇப் பாடினாள்களிந் திலைப் பொழில் குரங்கின வீன்ற தூண் டளிர் சீவக. 657. |
| 343 | திலக வெண்குடையான்-திலகம்—மேலாதல் | திலக வெண்குடைப் பெருமகன் சீவக. 183. ந. |
| 443 | பிரமன் நான்கு திசைகளையும் பார்த்தமையி னாலே நான்கு முகங்கள் உண்டாயின; பிரம னுக்குத் திலோத்தமை என்னும் தெய்வமாதினால் நான்கு முகம் உண்டாயின என்பர் | சீவக. 207 |

| | | |
|---|---|---|
| 528 | குண்டலந் திருவில் | மகரக் குழைத் திருவிலும் சீவக. 339. ந. |
| 552 | தொடையமை யாழ்—தொடை—நரம்பு | தீந்தொடை மகர வீணை சீவக. 608. ந, |
| 562 | கூந்தலம் பிடி | கூந்தன் மாலைக் குமரிப் பிடிக்குழாம் சீவக. 858 |
| 564 | ஆவித்தல்-கொட்டாவி விடுதல் | ஆவித் தழலுயிரா சீவக. 2050. ந. |
| 584 | என்ப, ஏ. அசைகள் | சீவக. 39. ந. |
| 585 | முகிழ்ந்து-அரும்பி | சீவக. 1004. ந. |
| | முத்துரிஞ்சு மென்முலை-முத்தமாலை உராயும் மெல்லிய முலை 608 | முத்தம் முரிஞ்சு முகிழ்மென்முலை மின்னனாளை சீவக. 18 |
| 589 | மணி தெளித்தெனத் திகழும் நீரவாம்-பளிங்கைக் கரைத்தாற் போன்று விளங்கும் நீரையுடைய | வண்ண மாச்சுனை மாநீர் மணிதெளித் தனையது சீவக. 1566 |
| 591 | யோசனை நாறும் என்றல் மரபு | ஓசனை யுலாவி நாறுமே சீவக. 99 |
| 591 | ஆவியந்துகில்-பாலாவி போலும் ஆடை | ஆவி யன்ன பூந்துகில் ஆவியந் துகிலார் சீவக. 67. 873 |
| 622 | பார்முதிர் பனிக்கடல்-பாராகிய நிலம் முற்றுப் பெற்ற குளிர்ச்சியையுடைய கடல் | பாருடைப் பனிக்கடல் சீவக. 274 |
| 628 | ஊர்வதும்-அசைவதும் | சீவக. 1182. ந. |
| 667 | ஒன்று திங்களின்-ஒரு மாதத்தில், ஒன்று திங்கள் | ஒன்று தேரினான் சீவக. 417 |

| | | |
|---|---|---|
| 764 | ஏக்கறுதல்-இளைத்திடைதல் | சீவக. 1622, ந. |
| 823 | அரசற்கமுதாய் | சீவக. 8 |
| 833 | சாயல்-மென்மை; அமுதின் சாயல் | சீவக. 8. |
| 838 | ஏழுயர் களிநல் யானை | சீவக. 775 |
| 868 | கூந்தற்பரி—பிடரி மயிரையுடைய குதிரை | சீவக. 781 |
| 871 | இலைப் பூங்கண்ணி-பச்சிலை விரவித் தொடுத்த பூமாலை | இலையுடைக்கண்ணி சீவக. 392 |
| 872 | நீலக்களிறு—கரிய யானை | சீவக. 148, 2195. |
| 882 | ஏழு முழம் உயர்ந்த வேழம் | ஏழுயர் போதகம் சீவக. 755 |
| 883 | வீரர்க்குப் புலிக்குழாம் உவமை | சீவக. 2164 |
| 948 | ஈகையான் வருணன் | ஈகையால் வருணன் சீவக. 160 |
| 1037 | புரஞ்சனனுக்கு வண்டும் அவன் மனைவியின் செவ்வாய்க்குத் தாமரையும் உவமை | சீவக. 191. |
| 1113 | வெளிறிலாக் கேள்வி—குற்றமில்லாத ஞானம் | சீவக. 200 |
| 1124 | தீவிய-இனிய | சீவக. 197 |
| 1148 | நிழல் சுளிக்கும் களிற்றை | சீவக. 2175 |
| 1151 | மரகத ஒளியைப் பசும்புல் லென்று நினைத்தல் | சீவக. 932 |

| | | |
|---|---|---|
| 1174 | பொதிந்து-மூடி | சீவக. 1577 |
| 1182 | ஈனுலகு-இந்த உலகை | ஈனேர் சீவக. 29 |
| 1534 | மின்னலைப்போல மாயும் பிறவி பரவை மணலிற் பலஆம் | தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடன் மணலு மாற்றா, எல்லைய சீவக. 270 |
| 1692 | களிறன்னானை-இரணியனை களிறன்னானென்றது, தன் மகன் வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமை பற்றி | சீவக. 200, ந., இரணியன் பட்ட தெம்மிறை யெய்தினான் சீவக. 1813 என்பதும் அதனுரையும் இங்கே அறிதற்பாலன |
| 1697 | கலிமதம் கடந்த வென்றிக் கனகன்-இரணியன் | சீவக. 2292 |
| 1723 | மற்றைய குலத்தோர்; அனுலோமர், பிரதிலோமர் சங்கரசாதியர் | சீவக. 116. ந. |
| 1769 | நறை விளையாடும்-வாசனை உலாவும் | சீவக. 397 |
| 2648 | சிலைத் தழும்பிருந்த தோள் | சீவக. 1645. ந. |
| | | ல |
| 2653 | சேட்டிளம் பருதி மார்பு | சேட்டிளம் பருதி போலுந் திருமகிழ் மாலை மார்பன் சீவக. 442 |
| 2655 | வளரிளந் திங்களன்ன மதலை | மாமதி யன்னான் வளர்கின்றான் சீவக. 362 |
| 2658 | இன்றளிர்ப் படலைமாலை-வகை மாலை என்று கூறப்படும் | முறிமிடை படலை மாலை சீவக. 483, 1889 |
| 2661 | அமுதின் சாயல்—அமுதத்தைப் போன்ற சாயலையுடைய 2985, 2702 | அமிர்தம் கட்கினிதாகிய மென்மையும் தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமற் றடுக்கும் |

| | | |
|---|---|---|
| | | மென்மையு முடைமையின் 'அமிர்தன்ன சாயல்' என்றார் சீவக. 3. ந. |
| 2672 | மணி விளக்கு-இரத்தின தீபம் | சீவக. 1364 |
| 2712 | குழல்-கஞ்சனுடைய தலைமயிர், ஆடவர் குடுமியையும் குழல் என்று கூறுதல் மரபு | குழலுடையச் சிகழிகைக் குமரன் சீவக. 1092 |
| 2716 | காளக உடையினள்-கரிய ஆடையினள் | காளக வுடையினன் சீவக. 320 |
| 2720 | ஆதலும் அழிதலும்-உண்டாதலும், அழிவடைதலும் | ஆதலு மழித றானு மவை பொருட் கியல்பு கண்டாய் சீவக. 69 |
| 2726 | முல்லை மலரால் தொடுத்த பந்தைக் கையாகிய தளிர் சிவப்ப வீசி | சீவக. 743. |
| | சிவிறியால் நீரைத்தூய்; சிவிறி-நீர்வீசு கருவி; நெடுந்துருத்தி என்பர் | சீவக. 86, ந. |
| 2764 | பொருகளிறு வருக | வருகவென் களிறென் றேத்தி வாங்குபு தழுவிக் கொண்டான் சீவக. 1911, அடிக். |
| 2776 | உளர்—குறுக்கிய வீணையின் நரம்பைத்தடவுகின்ற | புரிநரம் பிசைகொள் பாடல் சீவக. 662. |
| 2777 | தீந்தொடை மகர வீணை-இனிமையைக் கொண்ட நரம்பையுடைய வீணை | தீந்தொடை மகர வீணை சீவக. 608 |
| 2789 | சுரும்பும் வண்டும் யாழ் செய்யும் | அரவ வண்டொடு தேனினம் யாழ்செயும் சீவக. 1196 |

| | | |
|---|---|---|
| 2802 | பாற்குடம் மருட்டும் செருத்தல் ஆன்—பாற்குடத்தை மருளச் செய்கின்ற மடியை யுடைய பசு | குடம்புரை செருத்தல் குவளைமேய் கயவாய்க் குவிமுலைப் படர்மருப் பெருமை சீவக. 2102 |
| 2803 | வட்டுடை—முழந்தாள் அளவாக வீரர் உடுக்கும் உடைவிசேடம் | சீவக. 767. |
| 2867 | மதுக்குடம் விரிந்தா லன்ன மலர்க்கோதை | மதுக்குடம் விரிந்தன மாலை யாரொடும் சீவக. 1999 |
| 2872 | அளிவிலைப் பொலம் பூண் ஆகத்து ஆயர்—வெண்ணெய்க்கு விலையாகக் கொண்ட பொன்னாலாகிய அணிகளை மார்பிலணிந்த இடையர் | நெய்விலைப் பசும் பொற்றோடு சீவக. 488 |
| 2877 | திரை விளையாடும்-அலைகள் உலாவுகின்றன விளையாடும்-உலாவும் | சீவக. 397, ந. |
| 2898 | மணி தெளித்தன்ன பைஞ்சுனை—பளிங்கைக் கரைத்தாற் போன்ற நீரையுடைய பசுமையான சுனையில் | வண்ண மாச்சுனை மாநீர் தெளித்தனையது சீவக. 1566, ந. |
| 2901 | மழலை வண்டு—இளஞ்சொல்லையுடைய வண்டு | மழலை வண்டுழ சீவக. 1503 |
| 2925 | முத்த வெண் மணல் | முத்த வார் மணல் சீவக. 1037 |
| 2936 | நிலாப் போலும் திகழ்கின்ற துகிலை | நிலவு வெண்கதிர் நீர்மைய பூந்துகில் சீவக, 1982 |
| 2937 | ஆவியந்துகில்—பாலாவி போன்ற ஆடை | ஆவியன்ன பூந்துகில் சீவக. 196 |

| | | |
|---|---|---|
| 3002 | இசை காமக் கனலை வளர்க்கும் | இசையுங் கூத்துங் கேழ்த்தெழுந்தீன்ற காம. விளைபயன் சீவக. 2598, குறிப்புரை |
| 3003 | நீலப்போதினுக்கு—குவளை மலருக்கு; ஓலை போக்கல் | ஓடரி நெடுங்கணென்னு மோலையை யெழுதி விட்டாள் சீவக. 683 |
| 3014 | மகளிர்க்குப் பூங்கொம்பையும் அவரைச் சேரும் ஆடவர்க்கு வண்டையும் உவமையாகக் கூறுதல் | தோடணி மகளிர் போன்ற துணர்மலர்க் கொம்பர் கொம்பின், ஆடவர் போல வண்டு மடைந்தன சீவக. 852 |
| 3100 | விலங்கிவில் உமிழும்—குறுக்கிட்டு ஒளியைச் சிந்துகின்ற | விலங்கிவில்லுமிழும் பூணான் சீவக. 1167, அடிக் |
| 3108 | ஐம்பாலையுடைய தேவகி பெற்ற தோன்றல் கண்ணன்; ஐம்பால்—குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை என்பன | சீவக. 2437, ந. |
| 3118 | தீயைச் சிந்துகின்ற முகத்தையுடைய வேல் | தீத் தும்மும் வேலான் சீவக. 2348 |
| 3134 | அருவிக்கு மாலை உவமை | சீவக. 35, அடிக் |
| 3166 | கூந்தலையுடைய பிடிக்குலம் | கூந்தன் மாலைக் குமரிப் பிடிக்குழாம் சீவக. 858 |
| 3174 | வெய்ய—விரும்பிய | சீவக. 237, ந. |
| 3202 | குவலயாபீடத்தைக் காற்றென்னவும் கனலென்னவும் கடலென்னவும் கூற்றமென்னவும் தூண்டினன் | கடலெனக் காற்றெனக் கடுங்கட் கூற்றென, உடல்சின வுருமென ஒழித்தீயென...... தோன்றிய அசனி வேகமே சீவக. 973 |

| | | |
|---|---|---|
| 3205 | கொம்மை கொட்டிடும்—புறத்தைத் தட்டுவான்; பொய்க்கத் தட்டுதல் என்றுமாம் | சீவக. 529 அங்கையந் தலத்தினா லப்புதாதை யெனக், கொங்கலர் கண்ணியான் கொம்மைதான் கொட்டலும் சீவக. 1834 |
| 3244 | கறவை கன்று எதிர்ந்ததென்ன—பிரிந்து சென்ற பசு, தன் கன்றைக் கண்டாற்போல | கறவைகாண் கன்றின் மவஃகி சீவக. 1125 |
| 3272 | சேட்டிளம் பருதியிற் றிகழும் மார்பு | சேட்டிளம் பருதி போலுந் திருமகிழ் மாலை மார்பன் சீவக. 442, அடிக் |
| 3291 | வெம்மை—விருப்பம் | சீவக. 2, ந. |
| 3338 | வெம்பு செம்பருதி—விரும்பத்தக்க சிவந்த சூரியன் | வெம்புஞ் சுடரிற் சுடரும் சீவக. 2 |
| 3351 | குடையும் பிச்சமும் | குடையும் பிச்சமு மொழிய சீவக. 416 |
| 3353 | ஏழ் உயர்களிறு—ஏழு முழம் உயர்ந்த யானை | ஏழுயர் போதக மினத்தொ டேற்றதே சீவக. 775 |
| 3390 | ஆசையை வேர் அரிந்தோர்—முனிவர்களுக்கு | ஆர்வ வேரரிந் தச்ச ணந்திபோய் சீவக. 409 |
| 3399 | தேன் உற்ற—தேனை ஒத்த; உற்ற—உவம உருவு | வாளுற்ற கண்ணான் சீவக. 10 |
| 3400 | தேன் ஊறு உற்ற மென்மொழி—தேனின் இனிமை இடைவிடாது பொருந்திய மெல்லிய சொல் | தேனூறு தீஞ்சொற் குணமாலை சீவக. 15 |
| 3403 | ஓடா வயப்படை உருக்கும் | ஓடாததானை சீவக. 7 |

| | | |
|---|---|---|
| 406 | கவிமதம் கடந்த யாணடர்க்கவின் குடியிருந்த சொம்மை குவிமுலை—கவிஞர் கற்பிக்கின்ற கொள்கையைக் கடந்த புதிய அழகு வீற்றிருந்த பெருமையையுடைய குவிந்த முலை | கவிமதங் கடந்து காமர் வனப்பு வீற்றிருந்த கண்ணார் குவிமுலை சீவக. 2292 |
| 3425 | வந்தனன் கண்ணன் என்று | தீண்டு வந்தெனத் தேனின் மிழற்றினான் சீவக. 1509 |
| 3442 | கழைக்கரும்பு அனுக்கும் | கழைமுற்று தீந்தேன் கரும்பார் வயல் சீவக. 1064 |
| 3448 | சிலம்பும் கிண்கிணியும் | இன்னரிச் சிலம்போ டேங்கிக் கிண்கிணி யிகலி யார்ப்ப<br>சிலம்பு செம்பொற் கிண்கிணி மிழற்ற சீவக. 1985,2068 |
| 3449 | நறை—நறைக்கொடி | நறையு நானமும் சீவக. 131 |
| 3452 | அரவிற் சீறி—பாம்பைப் போல் கோபித்து | ஐவா யரவி னவிராரழல் போன்று சீறி சீவக. 2345 |
| 3461 | தீத்தும்மு—தீயைக் கக்குகின்ற | தீத்தும்மு வேலான் சீவக. 2348 |
| 3498 | நிழல் சுளிகளிறு—தன் நிழலைக் கோபிக்கின்ற யானை | நிழறுழாய்க் குனிந்து குத்து, மழறிகழ் கதத்த யானை சீவக. 2220 |
| 3500 | வெம்புதல்—விரும்புதல் | சீவக. 2. |
| 3505 | சிலைத் தழும்பு இருந்த தோளால் | சிலைகண்டெதிர் கொண்டவாறும் சீவக. 21 |

| | | |
|---|---|---|
| 3513 | அமுதின் சாயல் | அமிர்தன்ன சாயல் சீவக. 8 |
| 3534 | ஓங்கிருந் தாழை நெற்றி யொண்பழன் வருக்கை போழ்ந்து தீங்கரும் பெருத்திற் றாழ்ந்த தேனிறால் சிதைய வீழும் | காய்மாண்ட தெங்கின்பழம் வீழக் கமுகி னெற்றிப், பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து சீவக. 31 |
| 3567 | களிறுமாய் செந்நெற் கழனி—யானை நின்றால் மறையும் செந்நெல்லையுடைய வயல் | களிறுமாய் கழனி யாக்கமும் களிறுமாய் கதிர்ச் செந்நெற்கழனி நாட்டிடை சீவக. 54, 1617 |
| 3573 | திலக வெண்குடை | திலக வெண்குடைப் பெருமகன் சீவக. 183 |
| 3581 | மைத்துனத் தோழற்கு—கண்ணபிரானுக்கு | மைத்துனத் தோழ னென்றான் சீவக. 1264 |
| 3589 | சிலம்பொலிக்கு அன்னத்தின் குரல் உவமை | மின்னார் சிலம்பிற் சிலம்புங் குரலன்னம் சீவக. 2890 |
| 3591 | சாந்தை அகலத்து அப்பி | சீவக. 2187 |
| 3602 | சிலை வடித்த—விற்பயின்ற | சீவக. 1450 |
| 3667 | குடங்கை நிறைந்து அடங்காத கண் | குடங்கை போலுண்கண் சீவக. 342 |
| 3673 | குன்றனையாய்; சுகமுனிவனுக்கு விளி | மல்லன் மலையனையமாதவரை சீவக. 2789 |
| 3704 | கூந்தலம் பிடி – பிடரிமயிரையுடைய பெண் யானை | கூந்தன் மாலைக் குமரிப் பிடிக்குழாம் சீவக. 858 |

| | | |
|---|---|---|
| 3821 | பூவையர் முகத்தினாளைக் களிற்றினுச்சியில் மணிக்குடத்திற்றந்த கங்கை நீரால் ஆட்டினார் | கங்கையின் களிற்றினுச்சிக் கதிர்மணிக் குடத்திற் றந்த மங்கல வாச நன்னீர் மணிநிறங் கழீஇய தொப்ப நங்கையை நயப்பவெல்லாம் விரையொடு துவருஞ் சேர்த்தி அங்கர வல்கு லாளை யாட்டினா ரரம்பை யன்னார் சீவக. 623 |
| 3838 | வீரர்க்குப் புலி உவமை | இனந்தலைப் புலியோ டொக்குந் தோழர் சீவக. 1750 |
| 3881 | தழுமுற்று எய்திட—முற்றுந் தழுவப் பெற்றிட | தழுமுற்றும் வாராத் திரடாமங்கள் சீவக. 1870 |
| 3910 | தேன்: ஒருவகை வண்டு | சீவக. 892 |
| 4015 | அச்சணங்குவேல்இளையரும் — வலியினையும் வருத்தத்தினைச் செய்யும் வேலையுமுடைய வீமன் முதலியவர் | அச்சணங்கு வேலோய் சீவக. 2777 |
| 4021 | குஞ்சர நகர்—அத்தினாபுரம் | குடர்தொடர் குருதிக்கோட்டுக் குஞ்சர நகரத் தார்கோன் சீவக. 2182 |
| 4051 | போற்று—காப்பாயாக | கொண்டனர் நிரை போற்றெனக் கூறினான் சீவக. 430 |
| 4057 | தட்டம்—மேல்வாய்ப் பல்லையுடைய | சீவக. 1286, ந. |
| 4065 | நெளியத் தானை ஈண்ட | சீவக. 433 |
| 4167 | காரன்னம்—கருநிறமுடைய அன்னப்பறவை | சீவக. 930, ந. |

| | | |
|---|---|---|
| 4109 | இந்திர திருவில்—இந்திரவில் | இந்திர திருவிலி னெழிலின தொருபால் சீவக. 121 |
| 4143 | விலங்கி வில்லுமிழும் பூணார்—குறுக்கிட்டு ஒளியை உமிழ்கின்ற ஆபரணத்தை யணிந்த மகளிர் | விலங்கிவில் லுமிழும் பூணான் சீவக. 1167 |
| 4145 | அம்மவோ; 'அம்மேயோ' என்பர் 'தொடுத்தபூங்கோதை யொன்று சுரிகருங் குழலிற் சூட்ட எடுப்பினு மம்ம வோவென் றிரும்புயல் கிழித்த மின்போல் நடுக்குறு மருங்குற் செவ்வாய் நறுநுதன் மாதர் தம்மை | சீவக. 1271, ந. அணிச்சப் பூங்கோதை சூட்டி னம்மனை யோவென் றஞ்சிப் பனிக்குநுண் ணுசுப்பிற் பாவை சீவக. 745 |
| 4172 | செதுமக—இறந்த பிள்ளைகளை | செதுமகப் பலவும் பெற்று சீவக. 1124 |
| 1687 | தூணைப் புடைத்தல் | சூளா. அரசியல், 9. |
| 3271 | ஒருகோடி வண்டு தேதாவெனச் சிலம்பு | தேதாவென்றே தேனொடு வண்டு திசைபாடும் சூளா. சுயம். 194 |
| 3571 | வாளை—வாளை என்னும் மீன் | வாளையா நெடுங்கண் சூளா. கலியாணச். 227 |
| 164 | கொற்றம்—அரசுரிமை | கொற்றங் கொண்டது பெருங்கதை, 4:1 |
| 234 | வெள்ளி வெண்டிரை—மிக்க வெள்ளிய திரை | வெள்ளி வெண்டிரை பெருங். 1. 40:13 |
| 564 | ஆவித்தல்—கொட்டாவி விடுதல் | ஆவித் திழிந்த விந்திர குமரன் பெருங். 1.47:170—1 |
| 855 | பருகுவான் போல நோக்குதல் | பெருங். 3.7:80 |

| | | |
|---|---|---|
| 872 | நீலக்களிறு—கரிய யானை | பெருங். 1.32:55 |
| 1166 | பதலை—ஒரு பாத்திரம்; தவலை யென்பர் | பதலையரியல் பெருங். 1.42:163 |
| 2764 | பருகுவனள் போல் நோக்க; 855 | பருகு வன்ன நோக்க மொடு பெருங். 3.7:80 |
| 2835 | விராய்மலர்—ஒருவகைப்பூ | விராய் மலர்க் கோதை பெருங். 4.12:38 |
| 2927, 3435 | அரவின் உரிவை யன்ன வால்நுண் துகில் | பாம்புரி யன்ன மீக்கொடானை பெருங். 1.43:244 |
| 2940 | கண்ணீரைச் செங்கையால் அரிதல் வேண்டும்; அரிதல்—அரித்தல் | நுரைஐக யரிக்குமோர் நுடங்கிடை காண்மின் பெருங். 1.40:151 |
| 3175 | கோசிகப் பொலம்பட்டு—வெண்மையாகிய பொன்னாலாகிய பட்டாடை | பாதிரிப் போது பிரித்தன்ன அங்கோசிகமும் பெருங். 1.42:204–5 |
| 3420 | மார்விற்கு அந்திவானும் ஆரத்திற்குத் திங்களும் உவமை | மேல்பாற் பிறையென விளங்க வமைந்த தொரு காழார மொளிபெற வணிந்து பெருங். 3.22:220–1 |
| 3505 | சிலைத் தழும்பு இருந்த தோளால் | சிலைப்பொலி தடக்கையிற் பெருங். 3.25:3 |
| 3549 | பூமாலைக்கு இந்திரவில் உவமை | திருவிற் றாம முருவுபட நாற்றி பெருங். 1.49:82 |
| 3654 | மடவை—அறிவில்லாய் | மடவை மன்ற மடவோய் பெருங். 1.36:74 |
| 4138 | கன்றெதிர் கறவை போல | கன்று காண் கறவையிற் சென்றவட் குறுகி பெருங். 2.10:41 |

| | | |
|---|---|---|
| 4244 | கொற்ற வாய்தல்—அரண்மனை வாசல் | கோப்புக வமைத்த கொற்ற வாயிலும் பெருங். 4.3:32 |
| 25 | கூத்தினில் | கூத்தாட்டத்தில் மணி. 12:51–2 |
| 1410 | நக்ஷத்திரங்களில் கார்த்திகையை முதற்கொண்டு எண்ணுவது பழைய வழக்கம் | மணி 11:42, குறிப்பு. |
| 1548 | இறும்பூது—ஆச்சரியம் | இறும்பூது சான்ற பூநாறு சோலை மணி. 24:30–31 |
| 1787 | பலராமரும் கண்ணபிரானும் சேர்ந்திருத்தல் | மணி. 19:75–7 |
| 4118 | அயர்த்தல்—மறத்தல் | அயர்ப்பா யன்றே மணி. 19:9 |

**பதினெண்கீழ்க்கணக்கு**

| | | |
|---|---|---|
| 2835 | மரா மென மருளு மேனி வள்ளல்—வெண்கடம்ப மரமோவென்று மயங்கும் படியான வெண்ணிற மேனியையுடைய பலராமன்; 3852 | நாஞ்சில் வலவ னிறம்போலப் பூச்சினைச் செங்கான் மராஅந் தகைந்தன கார். 19 |
| 2892 | அரவம் எனக் காந்தள் முகிழ் விண்டன-பாம்பைப் போலக் காந்தட் பூவின் அரும்பு அவிழ்ந்தன | அணர்த்தெழு பாம்பின் றலைபோற் புணர்க் கோடல் பூங்குலை யீன்ற புறவு கார். 11 |
| 37 | உனக்கு நீள்புக ழுற்றிட வுவந்துமா வலிநீ எனக்கு மூவடி யிமமரு ளென்றுமு னிரந்தான் | இரப்பார்க் கொன் றீவார்மே னிற்கும் புகழ் குறள். 232 ஆதலின் ‘உனக்கு நீள்புகழுற்றிட’ என்றார். |

| | | |
|---|---|---|
| 55 | ஆர்வ வேர் முதல் தடிந்து | அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும் தவாஅப் பிறப்பீனும் வித்து குறள். 361 |
| 100 | ஒன்றிய குடம்பை நீத்து ஞவந்தெழு பறவை போல அன்றுடற் சுமைநீத் தொல்கா வழியில்வீ டடைந்தான் மன்னோ | குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே உடம்பொடு உயிரிடை நட்பு குறள். 338 |
| 178 | ஏதமில் பொறுமையா வினிய பார்மகள் ஒதிய தாயுல குயிர்பு ரத்தலான் | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை குறள். 151 |
| 278 | கொடைக்கு மேகத்தை உவமையாகக் கூறுதல் | கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு? குறள். 211 |
| 293 | ஐந்து அவித்து | ஐந்தவித்தான் குறள். 25 |
| 331 | விழைவென நின்ற துன்பவித்து 55,61,332 | அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றும் தவாஅப் பிறப்பீனும் வித்து குறள். 361 |
| 340 | தனிமுத லடியிற் றாழாத் தலைதலை யென்ன லாகா | கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத் தான் தாளை வணங்காத் தலை குறள். 9 |
| 926 | கழறிடும் கூற்றைக் கொன்று—இடித்துக் கூறும் உரைகளை மறுத்து | அறிகொன்று குறள். 638 |
| 992:-3 | | குறள். 8 |

| | | |
|---|---|---|
| 1053 | உயிருக்குப் பறவை உவமை | குறள். 338 |
| 1307 | ஆறறி அரச; ஆறு–படை, குடி, கூழ், அமைச்சு நட்பு, அரண் என்பன | படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு முடையா னரசரு ளேறு குறள். 381 |
| 1353 | படிற்றொழுக்கம்-வஞ்சனையான ஒழுக்கம் | வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் குறள்.271 |
| 1355 | விருந்தி னோரை விழிகொடு சுட்டவர் | முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து குறள். 90 |
| 1391 | அளறு-நரகம் | அண்ணாத்தல் செய்யா தளறு. குறள். 255 |
| 1395 | இயல்புளி–இயல்பால்; உளி; மூன்றாம் வேற்றுமை உருபு | குறள். 545, பரிமேல். |
| 1488 | அன்பினர் அருள்கலாதது யாது? எல்லாம் அளிப்பர் என்றபடி | அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு குறள். 72 |
| 1572 | அண்டர்கோன், விரதத்தோடு குலவுதல் உட்கொள்ளா அன்னாளுக்கு ஏவல் செய்து கருப்பத்தைக் கொல்வான் விலங்கு மாய்ப்ப வேட்டுவன் இருத்தல் போல இயைந்தனன். | தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த்தற்று குறள். 274 |
| 1589 | விருப்பொடு வெறுப்பொன்றில்லாத மெய்ப்பொருள் | வேண்டுதல் வேண்டாமை யிலான் குறள். 4 |
| 1616 | வெறுத்து...பொருள் மாதோ | குறள். 376 |
| 1720 | அரசருக்கு அறன் அறுவகைத்து என்ப | குறள். 384 |

| | | |
|---|---|---|
| 1831 | அமரர் முகிழ் விளைப்ப அசுரர் உடல் முழுதும் எரிந்து விழுந்தார் | ஐந்தவித்தா னாற்றல் குறள். 25 |
| 1990 | நாடு பொய்ம்மையு நன்மையின் பாலவால் | பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின் குறள். 292 |
| 2099 | அறவாழி யந்தணன்-திருமாலது | குறள். 8. |
| 2181 | செஞ்சொல்-மூவகைச் சொற்களுள் ஒன்று | குறள். 711. பரிமேல் |
| 2594 | கோளொடும்-பசி. பிணி என்னும் குற்றங்களோடு | உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையும் சேரா தியல்வது நாடு குறள். 734 |
| 2678 | அடிப்புணை பெற்றால் பிறவி வேலையைக் கடப்பர் | அறவாழி யந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழி நீந்த லரிது குறள். 8 |
| 3574 | அறுகுணப் பெருமான்—பகவன்; என்றது கண்ணபிரானை | குறள். 1, பரி. |
| 4544 | வேண்டுதல் வேண்டாமையிலான் – விருப்பும் வெறுப்பும் இல்லாதவன் | குறள். 4. |
| 1427 | வேந்தன் அந்தணன் எய்தலும் செருக்கினால் தெரியகிற்றிலன் எழுகலன் இருந்தனன். தெரிய கிற்றிலன் - அறியாதவன்; எழுகலன் - எழுந்து மரியாதை செய்யாமல் | இருக்கை யெழலு மெதிர் செலவு மேனைவிடுப்ப வொழிதலோ டின்ன-குடிப்பிறந்தார் குன்றா வொழுக்கமாக் கொண்டார் நாலடி. 143<br>என்பது ஈண்டு அறியற்பாலது |
| 1523 | தொழுத்தை-வேலைக்காரி | தொழுத்தையாற் கூறப்படும் நாலடி. 326 |

331 தாய்முதல் எவரும் நாளில் கழிவது கண்டும்
கண்டிலார்போல வாழ்வர்

26 ஆயி ரந்தலை யாயிரங் கண்மல ரணிசேர்
ஆயி ரம்புய மாயிரஞ் சேவடி தழைப்ப
ஆயி ரந்தலை யரவினி லறிதுயி லமர்ந்த
ஆயி ரம்பெய ரிறைகலை யளப்பில வுளவால்

306 பொலமுகடுடைய நீட்டிய அடி

374 மறையவன் கன்றொடு மழவர் தம்மையும்
உறைதரு மாயையி னொளித்த தோர்ந்தவன்
குறைவற வாயர்தங் குமரர் தம்மொடு
நிறைதரு கன்றுமாய் நிறைந்து நின்றதும்.

376 பச்சிளம் புல்லுணப் பசுக்கண் மேய்த்ததும்
நச்சர வுச்சியி வடித்த வண்ணமும்
அச்சமுற் றிடவரு மடவித் தீயினை
இச்சைசெ யலையென யெடுத்து ளுண்டதும்,

இன்றியமையா விருமுது மக்களும் பொன்றினமை
கண்டும் பொருள் பொருளாகக் கொள்
பவோ பழமொழிநானூறு

**வைணவ நூல்கள்**

புரமா யிரந்திருக் கண்மல ராயிரம் புண்டரிகக்
கரமா யிரங்கழற் கான்மல ராயிரங் கண்ணிமுடிச்
சிரமா யிரந்திரு நாமமு மாயிரஞ் செய்யகையில்
அரமா யிரங்கொண்ட திண்டிற லாழி யரங்
கருக்கே அரங்கத்து மாலை .9

ஓலப் புனலரங் கேசர்பொற் றாள்பட்டுடைந்த
வண்ட மேலக் கடாகத் தொளைவழி யாக
விழும்புனல் அரங்கத்து மாலை. 37

குன்றா விளைவுடன் வண்மை பருவங் குணங்
களிவை பொன்றா திருந்தகண் மாயமென்
னோபொன்னி சூழரங்கா அன்றாயர்
தங்குல மைந்தர்க ளாயு மலகிலிளங்
கன்றாயு நாடொருஞ் சென்றுவந் தாடிய
காலத்திலே அரங்கத்து மாலை. 54

நெடுங்கா னிலத்துடன் கோவலர் தாமிக நின்று
நெஞ்சம் நடுங்கா திமைத்திடுங் கண்களெல்
லாமென்று நண்ணலர்மேல் விடுங்கால
நேமியங் கையரங் காகண் விழிக்குமுன்னே
சுடுங்கான நல்லன றுற்றவம் மாயமென்
சொல்லுகவே'' அரங்கத்துமாலை. 56

| | | |
|---|---|---|
| 377 | பட்ட பாதவம் தளிர்க்க வேய்ங்குழலூ தியது | அரங்கத்து மாலை 57 |
| 21 | ஏற்று-உயர்த்திச் சொல்லப்படுகிற | ஏற்றனை யாவையு மாயினை அரங்கத்தந்தாதி10 |
| 1634 | காருரு-மேகத்தின் வடிவை | குவலயஞ் சூழ்கடல் காயா மரகதங் கொண்ட னெய்தல் குவலையங் கண்டன்பர் நைவர் அரங் அந். 97 |
| 2864 | கழை-புல்லாங்குழல் | ஆக்கு வித்தார் குழலா வரங்கேசர் அரங். அந். |
| 148 | கொக்கின் வாயை முன்னம் கிழித்த நீ எங்கள் வாய்மொழியால் இகழ்தற்கேற்ற தகுதியை யுடைய குயில், எங்களை இகழவும், அதன் வாயைக் கிழியாதது என்னை? | அழகர் கலம்பகம் 63 |
| 156 | முன்பு அருச்சுனன் துயரந் தீர்த்தற்குச் சூரி யனையே மறைத்தநீ இன்று எங்கள் துன்பம் நீங்கச் சந்திரனை மறைத்தாயில்லை | இரவியை மறைத்தார்......மதியினை விடுத் தார் தோன்றிய மதியையென் சொல்வேன் அழகர் கலம். 63 |
| 337, 377 | பட்ட மரமும் மலையும் குழைதர வேய்ங்குழ லிசைத்தது, | "ஆயர், தறித்தமர மத்தனையுந்தழைத்தலர்ந்து பழுத்துதவ.......கருங்கற்றான் வெண்ணெ யெனக் கடைந்தோட .......தொனித்த குழலிசைத்தோய் கேள்" அழகர் கலம். 1 |
| 1700 | பூவுறை மணம்போ லெல்லாப் பொருளினு முறைவாய் நின்பொன் சேவடி தொழுது போற்றார் தேவரே யேனு நீசர் ஆவர்பொல் | பாதியா யழுகியகால் அரங்கக்கலம்பகம் 15 |

| | | |
|---|---|---|
| | லாத நீச ராயினும் வணங்கி நின்சீர் நாவினால் வழுத்திற் றேவ நாயகர் நாத ராவார். | |
| 143 | பழிகூ றவைநின் றுபறித் திடலும்<br>கழியா மலளித் தனைகண் ணதுகில்<br>அழியா மலுண்ணொந்து நெகிழ்ந் தறுவை<br>ஒழியா மலுகந் திலையென் பர்சிலர். | நற்கலைதான் ஆரஞ்சேர் கொங்கைக் களித்த தறியீரோ, சோரந் திரும்பத் தொடுத்தீரோ அழகர் கிள்ளைவிடுதூது. 174-75 |
| 1 | திருமால் முத்தொழிலும் இயற்றுபவர் | உலகம் யாவையும் கம்ப. கடவுள். 1 |
| 131 | ஆணவாவு வான் எழில் | ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய் கம்ப. தாடகைவதைப். 24 |
| 135 | விழிவழி புகுந்து மேவுங் கள்வன் | கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம் கம்ப. மிதிலைக். 55 |
| 138 | கண்ணன்-திருமால் | கம்ப. உலாவியற். 6 |
| 150 | உன்னைக் கண்டவர் கண்களையெல்லாம் கவர்ந் தமையால் உனக்கு உற்ற கண்ணன் என்னும் பெயரின் பொருளை இன்று எளியேம் அறிந் தோம் | மாதரார் கண்க ளூடே வாவுமான் றேரிற் செல்வான் யாதினு முயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் கண்ண னென்றே ஓதிய பெயர்க்குத் தானே யுறுபொரு ளுணர்த்தி விட்டான் கம்ப. உலாவியற். 6 |
| 167 | இப்பாடலிற் கூறிய உவமான உவமேயங்கள் | கடலன்றி, அன்றிம் மாடத் தும்ப ரளிக்கு மமுதன்னாள் கம்ப. மிதிலைக் 26 என்பத னோடு ஒப்பிடற்பாலன. |

| | | |
|---|---|---|
| 177 | அன்பினால் பிரகலாதனை ஒப்பான் | என்பெறாத விழிபிறவி யெய்திடினும் அன்பு பெறுகை யரும்பே றெனக்கென்றான் கம்ப இரணியன்வதை 169 |
| 205 | கோளமர்—கிரக யுத்தம் | கம்ப. வாலிவதை. 38 |
| 238 | கவட்டொடும் உயர்மரம் கைக்கொள் யானை | கம்ப. வரைக்காட்சி. 2 |
| 257 | சங்க ரேகையும் சக்கர ரேகையும் காலிலும் உள்ளன என்பர் | கம்ப. மராமரப். 117 |
| 306 | தர்ப்பசயனம் பிரயோபவேசத்திற்குரியது | தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும் பொருண யந்துநன் னூனெறி யடுக்கிய புல்லில் கருணை யங்கட றுயின்றனன் கம்ப். வருணனடைக்கலப். 5 |
| 367 | கழைசுளி களிநல் யானை | தாறுமாய் தறுகட்குன்றம் கம்ப. மிதிலைக். 7 |
| 471 | சேடன் முகத்தில் அழல் தோன்றுதல் | கம்ப. நகர் நீங்கு. 116 |
| 498 | பாம்புபோல் சீறுதல் | மூரிவெஞ்சிலை யிராவணனராவென முனிந்தான் கம்ப. முதற்போர். 239 |
| 513 | வயிறு வாய்த்தல்—பெறுதல் | கம்ப. குலமுறை. 16 |
| 523 | மறைநான்கு உருவெடுத்தன்னவர் | மறைநான்கு மனையார்கள் கம்ப. குலமுறை 23 |
| 544 | நிலம் முதுகுளுக்கல் | உய்த்தனர் நிலமுது குளுக்க கம்ப. கார்முக 10 |
| 694 | நினக்கு ஞாலத்தை விளைத்தலும் காத்தலும் அழித்தலும் விளையாட்டாம் | கம்ப. காப்பு. 1 |

| | | |
|---|---|---|
| 859 | தாமரைக் காடுபூத்த கொண்டல்—திருமால் | கம்ப. திருவவதாரப். 13 |
| 991 | மாலையைப் பாம்பாக எண்ணி மயங்கல் | கம்ப. கடறாவு. 1 |
| 1342 | பணாடவி—படங்களின் தொகுதி; மிகுதி பற்றி அடவி யென்றார் | வாளின் வனம் கம்ப. கரன்வதை. 116 |
| 1408 | அரிந்தமண் | அரிந்தமண் சிலை நாணெடி தார்த்தலும் கம்ப. மராமரப். 137 |
| 1481 | சொல்லும் கூறுதற்குக் கீழ்ப்படும் | உரை குறுக நிமிர்கீர்த்தி கம்ப. குலமுறை |
| 1495 | பச்சிரத்தம் | கம்ப. யுத்த. மந்திரப். 28 |
| 1600 | திருமாலையே நினைந்து அவனது அடி சேர்ந்த சிசுபாலனுக்கு வண்டையே நினைப்பதால் வண்டாகிவிடும் புழு உவமை. இதைப் பிரமரகீட நியாயம்என்பர் | அஞ்சிறை யறுபத மடைந்த கீடத்தைத்<br>தஞ்செனத் தன்மய மாக்குந் தன்மைபோல்<br>கம்ப. கரன்வதைப். 125 |
| 1821 | இசை பயில்வாள்—வித்தியாதர மங்கை | கம்ப. அகலிகைப். 5 |
| 1847 | அணிகட்கெல்லாமணி | கம்ப. கோலங்காண். 3 |
| 2004 | சாம்பவான் சூழ்ந்தான். இச்செய்தி | தேம்பொழி துழாய்முடிச் செங்கண் மாலவன்<br>ஆம்பரி சுலகெலா மளந்து கொண்டநாள்<br>சாம்பவன் றிரிந்தென கம்ப. எழுச்சி. 8<br>வேத மனைத்துந் தேர்தர வொட்டா<br>வொருமெய்யன் |

| | | |
|---|---|---|
| | | பூதல முற்று மீரடி வைத்துப் பொலிபோழ்தியான் மாதிர மெட்டுஞ் சூழ்பறை வைத்தே வரமேரு மோத விளைத்தே தாளுலை வுற்றேன் விறன் மொய்ம்பீர் கம்ப. மகேந்திரப். 5 |
| 2175 | யானை நடைக்கு உவமை | பொன் நாகமு நாகமு நாண நடந்தான் கம்ப. கார்முகப். 52 |
| | | கம்ப. கைகேயி சூழ்வினை. 3 |
| 2243 | மாகயனெனும் மன்னனை—பெரிய யானை எனத் தகும் அரசனாகிய தசரதனை கேகயன் மகள் தேரொடு மன்னனை எய்தினாள் | இப்பகுதி கம்பராமாயணத்தினின்றும் சிறிது மாறுபட்டுள்ளது. |
| 2246 | செம்பஞ்சையும் முள்ளதென்று முனிதருந் தாளினால் | பஞ்செனச் சிவக்கு மென்காற்றேவி கம்ப. விடணன-டைக். 126 |
| 2291 | இலங்கை மன்னவ...சார்ந்தான் | கம்பராமாயணத்தில் இவ்வரலாறு இல்லை |
| 2305 | மாற்கட...யென்னவே | ''அள்ளிமீ துலகை வீசு மரிக்குலச் சேனை நாப்பன் வெள்ளிவெண் கடலின்டே மனாள் விண்ணவர் தொழுது வேண்டப் பள்ளிதீர்ந் திருந்தா னென்னப் பொலிதரும் பண்பி னானை'' கம்ப. வீடணனடைக்கலப். 133 |
| 2315 | ஆடவர் திலகனும்—இராமனும் | ஆடவர் திலகனுக் கன்பி னாரெனப் கம்ப. சம்பாதி. 7 |

| | | |
|---|---|---|
| 2418 | தோகையுரு—பெண்ணுருவத்தை காதலிப்பான்—விரும்புவான் | ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய் கம்ப. தாடகைவதை. 44 |
| 2673 | அரவென முனிந்து—பாம்பைப் போலக் கோபித்து | இராவண னராவென முனிந்தான் கம்ப. முதற்போர். 239 |
| 2693 | கன்றைக் கண்ட கறவையைப் போல் | தாயருக் கன்று சார்ந்த கன்றெனும் தகைய னானான் கம்ப. மீட்சி. 337 |
| 2823 | கண்ணிய மேய அரவு | அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவென கம்ப. சுந்தர கடவுள் |
| 2892 | பாம்பைப் போலக் காந்தட் பூவின் அரும்பு அவிழ்ந்தன | கையென மலர வேண்டி யரும்பிய காந்த னோக்கிப் பையர விதுவென் றஞ்சிப் படைக் கண்கள் புதைக்கின்றாரும் கம்ப. வரைக் காட்சி. 53 |
| 2947 | தாமரைத் தெரியலார்—தாமரை மாலையை அணிந்த அந்தணர் | பங்கயத்துப் பரத்துவன் கம்ப. மீட்சி. 242 |
| 3019 | சிந்தூரம்—நெற்றியி லணிதற்குரிய ஒருவகைச் சிவப்புப் பொடி | கம்ப. மிதிலைப். 151 |
| 3092 | அன்னமாய் மறை அறைந்துளாய்-கண்ணபிரா னுக்கு விளி; | அன்னமா யருமறைக ளறைந்தாய் நீ கம்ப. விராதன். 60 |
| 3244 | கறவை கன்று எதிர்ந்ததென்ன-பிரிந்து சென்ற பசு தன் கன்றைக் கண்டாற் போல | தாயருக் கன்று சார்ந்த கன்றெனுந் தகைய னானான் கம்ப. மீட்சி. 337 |

| | | |
|---|---|---|
| 3425 | வந்தனன் கண்ணன் என்று | கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால் கம்ப. திருவடி. 58 என்றாற் போல வந்தது |
| 3520 | இறந்தவரை எண்ணெய் பெய்தோணியிலிடல் | கம்பராமாயணத்தில் தைலமாட்டுப் படலம் |
| 3717 | படையாகிய கடலின் கொழுந்து, கொழுந்து-முதல் | கம்ப. எழுச்சிப். 23 |
| 4289 | தென்றலுழுவைப் போத்தால்-தென்றற் காற்றாகிய ஆண்புலியால் | தென்றற்புலியே கம்ப. க. 21:7 |
| 4324 | அராவென-பாம்பு என்னும்படி; கணைக்குப் பாம்பு | பாவகா ரியருயிர்ப் பதமலா திரைபெறா பகழி நாகம் கம்ப. 6, மந்திரப். 88 |
| 4677 | கிளையினம்-மூங்கிற் கூட்டம் | தோன்றிய தோன்ற றன்னைச் சுட்டினள் காட்டிச் சொன்னாள் வான்றொடர் மூங்கி றந்த வயங்குவெந் தீயி தென்னத் தான் றொடர் குலத்தை யெல்லாந் தொலைக்குமா சனமந்து நின்றாள் ஏன்றுவந் தெதிர்த்த வீர னிவனிக லிராம வென்றே கம்ப. கரன்வதைப். 66 |
| 202 | நாகணையான் | நாகணைக் கிடந்த நாதன் திருச்சந்த. 117 |
| 1663 | அரிது மானிடப் பிறவிவந் தடைவதிங் கடைந்தால் உரைசெ யாயுண்மிக் குறையினு நூற்றின்மே லுறையார் விரசி லாவிளை ஞோர்களாய் மெலியு மூப் பினராய் கருது நாளவங் கழிப்பர்கண் படையினா லன்னோ | வேதநூற் பிராய நூறு மனிதர்தாம் புகுவ ரேனும், பாதியு முறங்கிப் போகும் திருமாலை. 3 |

| | | |
|---|---|---|
| 1664 | உரையு மாயுளிற் பாதியு மொழிப்பர் | ,, ,, |
| 1373, 1980, 3767 | தாமரை மாலை அந்தணர்க்குரியது | பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான் திருப்பாவை. 30 |
| 361 | உயர்வற உயர்ந்தோன் | உயர்வற உயர்நல முடையவன் திருவாய்மொழி 1.1:1 |
| 519 | உயர்வற வுயர்நலம் | ,, |
| 1534 | பிறப்புக்கு மின்னல் | மின்னிலையில மன்னுயி ராக்கைகள் திருவாய்மொழி, 1.22 |
| 2888 | உயர்வற உயர்ந்த நலன்உள்ள பொருள்-பரம் பொருளாகிய திருமால் | உயர்வற வுயர்நல முடையவ னெவனவன் திருவாய்மொழி |
| 4326 | மின்என-மின்னலைப்போல | மின்னினிலையில, மன்னுயிராக்கைகள் திருவாய்மொழி |
| 4372 | ஐந்து இந்திரியங்களாலும் அழியும் பிராணிகள் கூறப்பட்டன | திருவேங்கடத். 28 |
| 136 | சாதகப் முகிலை நாடி நிற்றல் | தண்டா மரைச்சுனையில் சாதகமும் வேடுவரும் விண்டாரை நாடுகின்ற வேங்கடமே திருவேங்கடமாலை, 17 |

| | | |
|---|---|---|
| 321 | குழல்-ஆண் தலைமயிர் | குழலிருண்டு சுருண்டேறிய குஞ்சிக் கோவிந்தன் திவ். 285 |
| 379 | கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தது | செப்பா டுடைய திருமா லவன்றன் செந்தா மரைக்கை விரலைந் தினையும் கப்பாக மடுத்துமணி நெடுந்தோள் காம்பாகக் கொடுத்துக் கவித்தமலை திவ். 269 |
| 2931 | கூந்தற்கு ஆணமாகிய; ஆணம்-பற்றுக்கோடு | திவ். திருச்சந். 69 |
| 3649 | உருப்பிணி–உருக்குமினி; பாகதச் சிதைவு | திவ். 309 |
| 2647 | மணவினையில் சங்கு ஒலித்தல் | மத்தளங் கொட்ட வரிசங்க நின்றூத நாச்சியார் திருமொழி |
| 1699 | சுடரே, கொழுந்தே, வண்ணா, நின்னை வழி படும் அன்பே யன்றி வேறு எவன் பெறுவது? என்னாத் தொழுதனன் | கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினார் பெரியபு. திருக்கூட்டச். 8 |
| 1351 | உருக்காலாகிய தூணைத் தழுவத்தக்க நரகத்தை ஒன்றுவார்; ஒன்றுவார்-பொருந்துவர்; 'தப்தோர்மி' என்பர் | பெரிய திருமொழி, 1.6:4. |
| 174,513, 724,2364 | வயிறு வாய்த்தனள்-பெற்றாள் | மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த் தவனே பெருமாள் திருமொழி |

| | | |
|---|---|---|
| 225 | ஆணி மாண்டவியரது சாபத்தால் யமன் விதுரனாகப் பிறந்த வரலாறு | வியாசபாரதம், ஆசிரமவாஸ. 30:12. |
| 95 | இராசசூயம்-எல்லா அரசர்களையும் தன்கீழ்ப் படுத்தித் திறைவாங்கி, ஆணை செலுத்தும் ஏகச் சக்கரவர்த்தியினால் செய்யப்படும் யாகம்; இதைத் தரும புத்திரன் செய்தான்<br>முற்பூசை-முதற்பூசை | வில்லி பா. இராசசூயச். |
| 156 | கண்ணபிரான் சூரியனை மறைத்த வரலாறு | வில்லி பா. 14ஆம் போர். 164. |
| 186 | சகாதேவன் தத்துவஞான முடையவன் | மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்<br>றாய வடிவுபதி னாறா யிரங்கொண்டான்<br>தூயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்<br>வுலகும் தாய வடியிணைக டன்கருத்தி<br>னாற்பிணித்தான் வில்லிபா. கண்ணன்<br>தூது. 37 |
| 187 | நகுலன் குதிரை செலுத்துவதில் வல்லவன்<br>அபிமன்யு வாட்போரில் சிறந்தவன் | வில்லி பா. நாடுகரந்துறை. 21–6.<br>வாளொடு பரிசை யேந்தி மண்டலம் பயிற்றி<br>யிற்றை நாளொடு துறக்க மெய்த நயந்தன<br>னின்ற வீரன் வி. பா. 13ஆம் போர். 106 |
| 225 | விதுரன் தருமதேவனின் கூறு | அம்பி கைக்கொடி தோழியை விடுத்தன, னவள்<br>புரி தவந்தன்னால், உம்ப ரிற்பெறு வரத்தி<br>னாற் றருமன்வந் துதித்திடும் பதம் பெற் |

| | | |
|---|---|---|
| | | றாள், வெம்ப டைத்தொழில் விதுரனென் றவன் பெயர் வி. பா. சம்பவச். 20 |
| 242 | இருள்சூழ் சுரும்பு-சக்கரவாளகிரி; சுரும்பு-மலை | தோளி ரண்டினு நாடொறு மிரண்டந்தண் சுரும்பினை விரும்பினான் வி. பா. சடாசுரன். 5 |
| 367 | உலம்பினான்-முழங்கினான்; உலம்பல்—ஒலித்தல் | வி. பா. பதினான்காம் போர். 23. |
| 499 | இடியென அடித்திடப்பொற்கண்ணன் தளர்ந்தான் தளர்ந்தவன், இரணியாக்ஷன் | முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ, பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ வி. பா. கண்ணன் தூது, 80 |
| 634 | சூரிய மண்டலம் அர்ச்சிராதி மார்க்கம் | வி. பா. இராசசூய. 139. |
| 2300 | சுரும்பு-மலை | தோளிரண்டினு நாடொறு மிரண்டந்தண் சுரும்பினை விரும்பினன் சுமந்து வி. பா. சடாசுரன் வதைச். 5 |
| 3314 | வடசொற் பெயரால் விளங்கும் பருதி வதனத் தரசன் திருதராஷ்டிரன் | ...என்று நச்சினார்க்கினியர் உரை யெழுதியிருத் தலும், அக்கருத்துப் பற்றி, ''முகுரவான னனும்'', ''முகமுகுரம்புரை முதலொடு'', ''ஆடித்திருமுகமன்னவன்'',''முகுரானனன் மைந்தனும்'' வி. பா. சம்பவ. 115; வாரணாவத. 102; அருச்சுனன்றவ. 165; பதினெட்டாம் போர். 194 |

| | | |
|---|---|---|
| 3426 | அடி, 1-2 | ''காரிற் குளிர்ந்து குழைத்தசெழுங் கானம் பூத்த தெனக்கவினி'' வி.பா. 12ஆம் போர். 82 |
| 3634 | அப்பிய-தாக்கிய | வி.பா. பதினேழாம் போர். 147 |
| 4921 | உந்தியொன்றில் உடைய தேரவன்; சூரிய நாராயணன்; உந்தி-தேருருளை எனவுமாம் | வி.பா. பதின்மூன்றாம். 12 |
| | | **புராணங்கள்** |
| 434 | அற்றம்-சோர்வு | கந்தபு. அசுரேந். 12. |
| 4348 | ஏண்-கர்வப் பேச்சு | கந்தபு. அவைபுகு. 153. |
| 4677 | கிளையினம்-மூங்கிற் கூட்டம் | யாரும், வெம்மைப்படலா லிகல்கொண்டனர் வேறுவேறு தம்மிற் பொருது முடிந்தார் கிளை தம்மி லுற்ற செம்மைக் கனலான் முடிவுற்றிருஞ் செய்கை யேபோல் கந்தபு. மகாசாத்தாப். 17 |
| 76 | பாட்டு வண்டு இமிர்-இசைப்பாட்டினை வண்டு ஒலிக்கின்ற | வண்டுபாட் டயர கூர்ம. தக்கன்வமி. 25 |
| 2835 | விராய் மலர்-ஒருவகைப் பூ | விராய் மலர்ப்பூங் குழலிபங்கன் கூர்ம. |
| 4046 | தாப்புலி-வலிய புலி | கூர்ம. கண்ணன் பூமி. 70 |
| 4631 | சேகு-பகைமை | கூர்ம பிரம. 7 |

| | | |
|---|---|---|
| 4094 | முழுவலின்-விடாது தொடர்ந்த அன்பினால் | முழுவற்கடல் பெருத்தான் தணிகைப். நந்தியுப. 6 |
| 4574 | ஏட்டை—விருப்பம் | தணிகை. நைமிச. 6 |
| 967 | அகரம்—அந்தணர் வசித்தற்குரிய இடம் அக்ரஹாரம் என்பர். | அகரமேற்றி நன்றிகொ டேவதானம் நல்கி திருவால. திருவிளை. 48:22 |
| 478 | பிரமனுடைய புருவத்திடை நீலலோகிதன் தோன்றியது. | ப. திருவிளை. திருமணப். 83 |
| 1196 | மாலிகை-மாலை | ப. திருவிளை. திருமணப். 99 |
| 1212 | கீட்டிசை-கீழ்த்திசையில் | கீட்டிசைக்கரிய சாத்தனும் ப. திருவிளை. திருநகரங்கண்ட. 43 |
| 1475 | வைத்துறு....போயவால் | ப. திருவிளை. இந்திரன் பழிதீர்த்த. 11 |
| 1477-8 | மற்றது....மாயதே | ப. திருவிளை. இந்திரன் பழிதீர்த்த 13-4. |
| 1820 | என்னையென்னை நறுந்துளவ மிலையா<br>திகழ்ந்தா யேழாய்நீ<br>முன்னை முளரிப் பூம்பொகுட்டின் முளைத்<br>தோன் முளைவெண் பிறையிதழி<br>துன்னு சடையோ னும்மூவிர் துய்க்குஞ்<br>செல்வச் செருக்கியாவும்<br>அன்னை திருமா மகட்பணிந்த அரும்பே றென்ன<br>வறிதியால் | வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்<br>புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்<br>அண்டர்தொழ வாழுன் னிறுமாப்பு மாலாலம்<br>உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலை<br>யால் ப. திருவிளை. வெள்ளானை.14 |

| | | |
|---|---|---|
| 3626 | செச்சை-சிவப்பான | திருவிளை. வலை. 24 |
| 3970 | முடிக்கு முதல்வன் முன்னின்றான் முடியாப் பொருண்மற் றெவையென்னா | யாவர்க்கும், முன்னவனே முன்னின்றான் முடியாத பொருளுளதோ<br>பெரிய. திருவாரூர்ச் சிறப்பு |
| 1307 | ஆறறி யரசவன் வருக்க னோடிவண் கூறிய வெழுவகைக் குழுவி னோர்களும் வீறுய ருலகுசீர் மேவ நன்முறை மாறகன் மதிதொறும் வலங்கொள் வார்களால். | விஷ்ணு புராணம், 2:10 |
| 4097 | கதிரொடு பனிவெண் மதிபுகா தோங்கு கடிமதி லிலங்கை | இருசுட ரியங்காப் பெருமு திலங்கை<br>ஆசிரியமாலை |
| 3900 | கோழியின் கூட்டுக்கு, முள் முருங்கையின் துணர் உவமை. | கவிரலர் பூத்த சென்னை வாரணம்<br>கல்லாடம், கடவுள் |
| 3381 | தருணம்-இளமை | தருணரவிகிரணம் காதம்பரி |
| 869 | உச்சி மோத்தல் | குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு 1:85, 313:22 |
| 126 | கண்ணனைக் கண்டு மயங்கிய மகளிர் சுண்ணத் துடன் கைவளையையும் சேர்த்துத் தூவினர் | குலோத்துங்க சோழன் உலா, 109-10 |
| 528 | பாற்கடல் சிவப்பத் தோன்றும் மணி | கொட்கும், கடல் சேப்ப வந்த கவுத்துவம்<br>குலோத். உலா. 236 |
| 2013 | அருளப்பாட்டின்-கட்டளையால் | அருளப்பாடு செம்பொன் மாளிகை திருவரங்கேச னார் அருளப்பாடு செம்பொன் மாளிகையருள் செய்தார் கோயிலொழுகு, பக்கம். 6-7 |

| | | |
|---|---|---|
| 3381 | குழற்காடு | ஐம்பாற்காடுஞ் சுமக்குங் கரும்பே சகலகலாவல்லி மாலை |
| 1844 | ஐந்தெனும் புனித ஆன்-ஐந்து வகையான பசுக்கள் | நந்தை சுபத் திரைசுரபி நற்கசிலை நமனையென நவின்ற நாமம் ஐந்தினுக்கு மறிகநிறங் கபிலமே கரியவுரு வணிகொள் வெண்மை சுந்தரத்த தூமிரயே தாமிரமே யெனத் துணிந்து நாமஞ் சொல்லி வந்தனைசெய் தவற்றுதித்த விருமூன்று மாட்டிடுக வரதற் கென்றும் சிவதருமோத்தரம், கோபுர வியல், 122 |
| 4541 | சூழ்ச்சியில்-உபாயத்தில் | சிவரகசியம், தேவிநாட். 22 |
| 339 | பொடித்த செங்கதிர்-முளைத்த சூரியன் | திருச்சிற். கோவை 104 |
| 547 | கமழலந்தார்–கமழ்தார்; அல்லும் அம்மும் சாரியைகள் | கூம்பலங் கைத்தலத்து சிற். கோவை 11 |
| 768 | பொன்னிற் றோன்றிறை–பொன்னின்-பொன்னைப் போல இறை–சிவபிரானது | பொன்பணைத் தன்ன விறை சிற் கோவை 219 |
| 791 | பருதி–பகனென்னும் சூரியன் | பகன்றா மரைக்கண் கெடக்கடந் தோன் சிற். கோவை 184 |
| 1855 | வருட்டினன்-தன்வசம் செய்தனனாகி | சிற். கோவை 270 |

| | | |
|---|---|---|
| 1922 | எருதுக்குக் கைலாயம் உவமை | வெள்ளி மலையன்ன மால்விடையோன் சிற். கோவை. 128 |
| 2194 | கிண்கிணி வாய்மலர்–சிறிதலர்ந்த மலர் | திருச்சிற். 123 |
| 2702 | கமழலங் கருங்குழல்-மணம் வீசுகின்ற கரிய கூந்தலையுடைய | கூம்பலங் கைத்தலத் தன்பர் சிற். கோவை. 11 |
| 4000 | கமழலந்துணர்–மணம் வீசும் பூங்கொத்தைக் கொண்ட | ,, ,, |
| 107 | உரவுநீர் அமுது-உப்புக்கடலில் உண்டாகிய அமுதம் அமுதங் கடைந்தது உப்புக்கடலில் என்பதை | தக்க. பரணி 284 ஆம் தாழிசையின் விசேடக் குறிப்பு |
| 251 | ஆதிசேடன் வெண்ணிற முடையவன் | மாயி ரும்பயோ ததித்தொகையென, வாய்வி டுந்திவா கரத்திரளென, ஆயிரம்பணா மிதப்பரவையது தக்க. பரணி 154<br>திறத்து மாலைத் திருமுடிப் பக்கமே சென்ற கன்ற பணங்களுஞ் சேடனும் புறத்துமாயிரம் வெள்ளித மாலொரு புண்டரீகமு மண்ணலும் போலவே தக்க. பரணி 282 |
| 528 | பாற்கடல் சிவப்பத் தோன்றும் மணி | பாற்கடல், சேப்ப வந்த கவுத்துவஞ் சேர்த்தியே தக்க. 277 |

| | | |
|---|---|---|
| 782 | கண்ணைச் செம்ம; செம்ம-மறைக்க | விம்மி யுள்ளதிசை செம்மியே தக்க. 135 |
| 952 | செறிந்த...வாழியே | குலநேமி ரவிபோல வலநேமி தனிகோலு குல தீபனே தக்க. 2 |
| 1072 | வேடர் இசைபாடி விலங்குகளை அகப்படுத்துதல் | கான வேட்டுவர் இசைபாடி மிருகங்களை அழைத்துக் கொன்றார் போல்வது தக்க, 610. உரை |
| 1515 | ஆழி-ஆஞ்ஞா சக்கரம் | தக்க. 2 |
| 3149 | வெண்ணிறத்தரவம்-வெண்ணை நிறமுடைய ஆதிசேடன் | தக்க. 282, அடிக். |
| 3426 | அடி. 1-2 | கார்வந்து தொடத் தொட வுய்ந்திளகுங் காடொத்த னென்யானிவர் கைப்படவே தக்க. 200 |
| 3549 | பூமாலைக்கு இந்திரவில் உவமை | மழைச்சிலையால் வழிதோ ரணமிட்டனன் வாசவனே தக்க. 182 |
| 4086 | ஏழ் வகையாக ஒழுகுகின்ற கோதாவிரி | தக்க. 31. உரை |
| 1779 | கடங்கள்-காடுகளில் | தஞ்சைவாணன் கோவை. 321 |
| 4336 | மால்-மேகம் | தஞ்சைவாணன் கோவை. 164 |

| | | |
|---|---|---|
| 59, 564 | வெடித்த-மலர்ந்த | அந்தி வெடி முல்லை தனிப்பாடல் |
| 1975 | கொடையொடும் பிறப்பதுங் குலத்தோர் பெற்றியே; பெற்றி-தன்மை | கொடையும் பிறவிக்குணம் தனிப்பாடல் |
| 1981 | ஆசை நோய்க்குமோ ரற்றமுண் டாகுமோ-அற்றம்-முடிவு | ஆசைக்கொ ரளவில்லை தாயுமானவர் |
| 1627 | செய்யாமறை-ஒருவராலும் செய்யப்படாத வேதம் | செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருளொன்றே திருவள்ளுவமாலை |
| 222 | விரிதரு குஞ்சியன்; குஞ்சி-சடை | குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே தேவாரம் |
| 321 | குழல்—ஆண்தலை மயிர் | குழலார் சடையர் தே. |
| 665 | செந்தீத் தடஞ்சினைத் தருவினுற்றது போல; தரு-அரணிக்கட்டை; மரம் எனவுமாம் | விறகிற் றீயினன் தே. |
| 660 | அலமந்து-திரிந்து | ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து தே. |
| 1385 | தும்மினு மிருமினுந் துயர மிக்குளம்<br>விம்மினும் வீழினும் வினைசெய் போதிலும்<br>அம்மவிந் நூலெழுத் தறைவ ரேலவர்<br>செம்மலர் மால்பதஞ் சேர்த றிண்ணமே | தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்<br>வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்<br>இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்<br>அம்மை யினுந்துணை யஞ்செ ழுத்துமே<br>தே. நமச்சிவாயப் பதிகம் |

| | | |
|---|---|---|
| 1800 | மழலை-இளமை | மழலையேற்று மணாளன் தே. |
| 2927 | குரவத்தின் அரும்பு அரவின் எயிற்றுக்கு உவமை | அரவின் வாயின் முள்ளெயி றேய்ப்ப வரும்பின்று தே. திருஞா. |
| 3906 | தாமரைமாலை அந்தணர்க்கு உரியது | வண்கமலத் தார்மிகுந்த வரைமார்பன் சம்பந்தன் தே. திருஞா. |
| 1289 | சூரியன் மழையைத் தருதல் | நைடதம் |
| 2191 | இருக்கு நாளினிற்...மாதோ | இனைய விஞ்சைநீ யெனக்குமற் றளித்தனை யெண்ணின், துனைவ யப்பரி யுளமுணர் விஞ்சையான் சொல்வன், வனைபொ லன்கழன் மணிமுடி மன்னவென் றுரைப்ப, அனைய விஞ்சையை வாகுகற் களித்தன னன்றே நைடதம் |
| 1710 | ஊனம்-மலம் | ஊன நீக்கிய சிவமுன்னர் நம்வினை யுரைக்கின் பிரமோத்தர காண்டம், பஞ்சா. 15 |
| 31 | அலர்க்கண்–குவலயாசுவன் என்னும் சூரிய வம்சத்து அரசனுடைய புதல்வன்; இவன் ஒரு பிராமண னுக்கு அவன் கேட்டபடி தன் கண்ணைக் கொடுத் தவன். | வான்மீகம், 2. 12:43 |

| | | |
|---|---|---|
| 838 | ஊழ் வினையின் பயனால் செல்வத்தா லுயர்ந்த வரைக் கண்டால், நாம் இனி வாழ மாட்டோ மென்று துணிதல் பெருமையுடையதன்று. | தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென் றகமகிழ்க நீதிநெறி. 15 |
| 4118 | விராய்-விறகு | நீதிநெறி. 64 |

# பதிப்புச் சீர்மை

பதிப்புக்கொருவர் எனப் பலரும் பாராட்டத்தக்க முறையில் தமிழ் நூல்களை ஏடுகளினின்றும் எடுத்துப் பதிப்பித்துத் தமிழ் நாட்டின் தனிப்பெரும் பதிப்பாசிரியராகத் திகழ்பவர் உ. வே. சாமிநாதையர். அளவற்ற கல்வி, தடுமாறாத நினைவாற்றல், ஒய்வறியாத உழைப்பு, தளராத பொறுமை, உண்மையினின்றும் விலகாத நிலை ஆகிய குணங்களை ஒருங்கே பெற்ற இவர் சிறந்த பதிப்பாசிரியருக்கு இலக்கணமாகவே திகழ்கிறார். இன்று கிடைக்கும் சுவடிப்பதிப்புகளில் சீர்மையும், ஒழுங்கும், ஆராய்ச்சிக் குறிப்புகளும், அட்டவணைகளும் நிறைந்த பயனுடைய பதிப்புகளாகத் திகழ்வன இவருடைய பதிப்புகளே யாம்.

## இரண்டு நிலைகள்

பதிப்புச் சீர்மை என்பது இரண்டு நிலைகளில் அமையும். பதிப்பிக்க எடுத்துக்கொண்ட நூலின் பல ஏட்டுப்பிரதிகளைத் திரட்டி ஆராய்தல், மூலபாடம் காணல், பாடவேறுபாடுகள் காணல்,பாடல்களைச் சீர்பிரித்து ஒழுங்கு செய்தல், குறிப்புரை வரைதல், ஒப்புமைப் பகுதிகள் மேற்கோள்களைத் திரட்டிச் சேர்த்தல், அச்சுக்கு அளிக்கத்தக்க வகையில் திருத்தமான கையெழுத்துருவினைத் தயாரித்தல் ஆகிய அனைத்துப் பணிகளும் கொண்டது முதல் நிலையாகும். நூல் அச்சாகும் நிலையில் பிழைகளைக் களைதல், வெவ்வேறு அளவிலான எழுத்துக்களை அமைத்தல், மூலத்தையும் உரையையும் பிற செய்திகளையும் தனித்தனியே பிரித்துத் தெளிவாகக் காட்டல், செய்யுள் முதற் குறிப்பகராதி, அரும்பதம் முதலியவற்றின் அகராதி போன்ற அகராதிகளைத் தொகுத்தளித்தல், பதிப்பில் கண்ட அனுபவங்கள் வரலாறுகள் ஆகியவற்றை முகவுரையில் எழுதிச் சேர்த்தல் ஆகியன இரண்டாவது நிலையாகும். இவையனைத்தையும் தம்மால் இயன்றவரை முறையாகச் செய்து நிறைவேற்றி நூல்களை வெளியுலகிற்கு அளித்தவர் உ. வே. சா. இப்பாகவதப் பதிப்பிலும் இப்பணிகளை இவர் மிகச் செம்மையாகச் செய்து நிறைவேற்றியுள்ளார். முதல் 600 பாடல்கள் அச்சாகும் வரையிலும் அவர் பார்வையிட்டுள்ளார். பிறகு அவர் மறைந்ததால் பிறர் இப்பணியை நிறைவு செய்துள்ளனர்.

## பணியின் முழுமை

இப் பாகவதப் பதிப்பில் இவர் பலவகையான சீர்மைகள் செய்து வழங்கியுள்ளார். முதலில் இப்பாகவதத்தின் ஆசிரியர் செவ்வைச் சூடுவார் என்பதை நிறுவி, அவர் பெயரிலான இப் பெருநூலைத் தமிழுலகிற்கு நன்முறையில் அளித்துள்ளார். பாடல்களைச் சீர்பிரித்து யாப்புஅமைதியோடு பதிப்பித்தல் ஒவ்வொரு பக்கத்திலும் கந்த எண், அத்தியாய எண், பாடல் எண் ஆகியவற்றைக் குறித்தல் ஆகியவற்றை முறையாகச் செய்து வழங்கியுள்ளார். நூல் தொடக்கம் முதல் இறுதி வரையி லான 4970 பாடல்களுக்கும் தொடர் எண்களை அமைத்து, அத்தொடர் எண் வரிசையில் ஒவ்வொரு பக்கத்திலும் பாடல் களுக்கு அடியிலேயே குறிப்புரையும் எழுதிச் சேர்த்துள்ளார். குறிப்புரையில், அருஞ்சொற்பொருள், பாடவேறுபாடு, ஒப்புமைப் பகுதிகள், மேற்கோள்கள் எனப் பல்வேறு செய்தி களை அமைக்கின்றார். இவை அனைத்தும் அச்சாகிக் கொண் டிருந்த நிலையில் இவர் காலமானதால் இப்பணியை இவருடைய மகனாரும் மாணாக்கர்களும் தொடர்ந்து செய்துமுடித்துள்ளனர்.

## இரண்டு பாகங்கள்

இப் பாகவதப் பதிப்பின் பக்க அளவைக் கருத்தில் கொண்டு (மொத்தம் 1574 பக்கங்கள்), இதை இரண்டு பாகங்களாகப் பிரித்து அச்சிட்டுள்ளனர். முதல் ஒன்பது கந்தகங்கள் (2635 பாடல்கள் வரை) முதல் பாகமாகவும், பத்து முதல் பன்னிரண் டாம் கந்தம் வரை (2636 முதல் 4970 ஆம் பாடல் வரை) இரண்டாம் பாகமாகவும் திருமலை—திருப்பதி தேவத்தானத் தாரால் அச்சிடப் பெற்றுள்ளது.

பொதுவாக, நூல் முழுவதும் அச்சான நிலையில், அதற்கான அகராதிகளையும் முகவுரைகளையும் எழுதிச் சேர்ப்பதே ஐயரவர் களின் பழக்கமாக இருந்துள்ளது. இப் பாகவதப் பதிப்பின் அச்சுப்பணிகள் அவர் காலத்தில் முழுமையாக நிறைவு பெறாத தால் இதற்கான பின்னிணைப்புகளையும், முகவுரையையும், ஆராய்ச்சிக் குறிப்புகளையும் அவர் எழுதியமைக்க இயலவில்லை. இப் பதிப்பைப் பொறுத்தவரை இது ஒரு குறையாகவே அமை கிறது.

## ஆராய்ச்சி முன்னுரை இன்மை

உ. வே. சா. தம் வாழ்நாளிலேயே மிகப் பெரிய பதிப்பாகச் செய்த இந்தப் பாகவதப் பதிப்பில் அவருடைய முகவுரை முதலா

னவை அமைந்திருப்பின் பல அரிய செய்திகள் நமக்குக் கிடைத்திருக்கக் கூடும். அவருடைய நிறைவான வாழ்வின் இறுதிப் பகுதியில் அவர் மனமகிழ்ச்சியோடு ஏற்றுச் செய்த நிறைவானதொரு சுவடிப்பதிப்புப்பணி இது. இதற்காக அவர் ஏடு தேடிய விவரம்,இப் பதிப்பில் தமக்கேற்பட்ட அனுபவங்கள்,இப் பதிப்பில் நேர்ந்த மனநிறைவு மற்றும் பல செய்திகளை அவர் முகவுரை எழுதியிருப்பின் தெரிவித்திருப்பார். அவர்தம் வாழ்நாளில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக இப் பதிப்பினைச் செய்ய எண்ணிச் செயல்பட்டிருந்தும் எண்பத்தைந்தாவது வயதில்தான் இதை அச்சாக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அது நிறைவேறுவதற்குமுன் அவருடை காலமும் முடிந்துவிட்டது.

## பதிப்புப்பணி நிறைவு

இருப்பினும், ஐயரவர்கள் இறுதிக்காலத்தில் இப்பணிகளில் துணையாகவிருந்த அவருடைய மகனார் **கலியாணசுந்தரம்** அச்சுப் பணியை ஏற்று நடத்தித் தம் தந்தையாரின் பதிப்புப் பணியை உலகறியச் செய்துள்ளார்.இப்பதிப்பின்போது ஏற்பட்ட காகிதப் பற்றாக்குறை போன்ற பல தடைகளால் முதல் பாகம் அச்சாக மட்டும் எட்டு ஆண்டுகள் ஆகியுள்ளனன. 1949 ஆம் ஆண்டில் வெளியான முதல் பாகத்திற்குக் கலியாண சுந்தரம் முகவுரை போன்றவற்றை எழுதிச் சேர்த்துள்ளார். அதில், ''இரண்டாம் பாகம் முடிந்தவுடன் அந்தப் பாகத்தின் செய்யுள் முதற் குறிப்பகராதியும், பாகவதம் முழுவதற்குமுரிய அரும்பத முதலியவற்றின் அகராதியும், அபிதான விளக்கமும், நூலாராய்ச்சியும் எழுதிச் சேர்க்க எண்ணியிருக்கிறேன்'' என எழுதியுள்ளார். ஆயின், 1953 இல் இரண்டாம்பாகம் வெளிவருவதற்குமுன் இவரும் காலமானதால் இப்பணிகளைப் பிறர் செய்ய வேண்டியதாயிற்று. முதல் பாகத்தின் இறுதியில், முதல் ஒன்பது கந்தங்களின் செய்யுள் முதற்குறிப்பகராதியும், பிழை திருத்தமும் ஒரு பக்கம் மட்டும் இணைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் பாகத்தின் முகவுரையை **வி. மு. சுப்பிரமணிய ஐயர்** எழுதியுள்ளார். இரண்டாம் பாகத்தின் இறுதியில், இதிலுள்ள பத்து முதல் பன்னிரண்டு கந்தங்களின் செய்யுள் முதற் குறிப்பகராதியை இணைத்துள்ளனர். இத்துடன், முதல் பாகத்தின் அரும்பதம் முதலியவற்றின் அகராதி தனியாகவும், இரண்டாம் பாகத்தின் அரும்பத முதலியவற்றின் அகராதி தனியாகவும் சேர்த்துள்ளனர். இவற்றிற்கு அந்தந்தப் பாகத்தின் பக்க எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அடுத்து, **அபிதான விளக்கம்** என்னும்

தலைப்பில் வைவச்சுதன் ஈறாக உள்ள 587 பெயர் விளக்கங்கள் எழுதிச் சேர்த்துள்ளனர். இப்பெயர்கள் அகரவரிசையில் அமைக்கப்பெற்று, அவை இடம்பெறும் செய்யுட்களின் தொடர் எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டு பாகங்களில் காணும் எல்லாப் பாடல்களுக்குமான அபிதான விளக்கம் இந்த இரண் டாம் பாகத்தில் அமைந்துள்ளது மிகவும் பயனுடையதாகும். இறுதியில் பிழையும் திருத்தமும் எட்டுப் பக்கங்களில் சேர்த்து வழங்கியுள்ளனர்.

1. ஐயரவர்கள் செய்த பேருழைப்பு வீணாகாமல் அவர் வழி வந்தோர் அவற்றை அச்சு வடிவில் வெளிக் கொணர்ந்திருப் பதே பெரும் பணியாகும். அவருடைய குறிப்புரை மட்டுமே அமைந்த இப்பதிப்பை அவரே இருந்து அச்சில் நிறைவேற்றி வெளியிட்டிருந்தால் மேலும் சிறப்பாக அமைத்திருப்பார் என எண்ணத் தோன்றுகிறது. இதற்குப் பிறகு இந்நூலை எவரும் பதிப்பிக்கவும் இல்லை. பாகவதச் சுவடிகள் பல பலவிடங்களி லும் இன்றும் கிடைக்கின்றன. அவற்றை ஒன்றாகத் திரட்டி ஒப்பிட்டும் திருந்திய பதிப்பை வெளியிடலாம். ஐயரவர்களே இருந்திருந்தாலும் மற்றொரு பதிப்பைத் திருத்தமான முறையில் வெளியிட்டிருப்பார் என்பது அவர் செய்த பிற பதிப்புகளை நோக்கத் தோன்றுகிறது.

2. சீவக சிந்தாமணியை ஐயரவர்கள் முதலில் பதிப்பித்த பொழுது பல கண்டனங்கள் எழுந்தன. அவற்றைக் கண்டு அவர் கூறும் பின்வரும் கருத்துக்கள் இவண் குறிப்பிடத்தக்கன.

"நூற்பதிப்பு விஷயத்தில் வரவரப் பாடங்கள் திருந்துவதும், உண்மைப் பொருள் தெளிவாவதும், புதிய புதிய செய்திகள் புலப்படுவதும் புதியனவல்ல. எடுத்த எடுப்பிலே முற்றத் திருந்திய பதிப்பை வெளியிடுவதென்பது இயலாத காரியம். என் முதற் பதிப்புக்களில் அமைந்திருந்த பல பிழைகளைப் பிற் காலத்தில் நானே திருத்திப் பதிப்பித்திருக்கிறேன். புதிய புதிய ஆராய்ச்சி செய்யும்போது கிடைக்கும் அறிவால் பல காலமாகத் திருந்தாத செய்திகள் திருந்தியதுமுண்டு. 'அறிதோ றறியாமை கண்டற்றால்' என்று திருவள்ளுவர் கூறியது பொய்யாகுமா?... இன்று இருக்கும் ஒரு பாடம் நாளைக் கிடைக்கும் புதிய பாடத் தால் பிழையாக நேர்வதும் உண்டு. மனிதன் சிற்றறிவால் ஆராய்ந்து அமைக்கும் ஒன்றை எப்படி முடிந்த முடிபென்று கொள்ள முடியும்?"[1] என அவர் காலந்தோறும் தம்மைத்

1. என் சரித்திரம், ப. 653.

தாமே திருத்திக் கொண்டு வாழ்ந்தவராவார். அதனால், தமிழ் நூற்பதிப்புத் துறையில் இன்றும் அவர் புகழ் நிலைத்து நிற்கக் காண்கிறோம். ஆராய்ச்சிக்கான பல கூறுகளை அவர் அமைத்துக் கொண்டு செயல்பட்டதாலேயே அவருடைய பதிப்புகள் பல சிறப்பான நிலையைப் பெற்றுள்ளன என்பதை அனைவரும் அறிதல் வேண்டும்.

3. ஒரு நூலைத் திருத்தமாகப் பதிப்பிக்க வேண்டுமென்றால் பலவகையான கருவிகளை முதலில் அமைத்துக் கொள்ள வேண்டும். ஏட்டுச் சுவடிகள் கிடைப்பது மட்டும் போதாது. ஏட்டில் இருப்பது அவ்வளவு திருத்தமாக இராது, பல காலமாகப் பிழையாகவே வழங்கி வந்த பாடல்களை அவற்றிற் பார்க்கலாம்; அவற்றுள் இதுதான் மூலபாடம் என்று தெரிந்து கொள்வதற்குப் படும் சிரமம்தான் மிகவும் அதிகம். நூலில் உள்ள கருத்துக்களுக்கும் சொற்களுக்கும் அகராதி எழுதி வைத்துக் கொள்வது மட்டுமல்லாமல் பிற நூல்களையும் படித்தறிதல் வேண்டும். ஒரு நூலைப் பதிப்பிப்பதற்காகப் பல நூல்களுக்கும் அகராதி எழுதி ஆராய்ச்சி செய்துள்ளார் ஐயரவர்கள். இதனால் பல பாடல்களின் நடையும், கருத்துக்களும் பாடங்களும் திருத்தம்பெற்றுள்ளன என்பார் இவர். இப்பணி அவ்வளவு எளிய பணியன்று. இவற்றைச் சுவடி ஆய்வோர் நன்குணர்வர்.

4. இவருடைய தீராத தமிழ்க் காதலே இப்பணிகளுக்குத் தூண்டுகோலாக அமைந்தது எனலாம். இவ்வரிய பணிகளுக்கிடையே இவருக்குண்டான துன்பங்கள் பலவற்றையும் இவர் பொருட்படுத்தாமல் இறுதிவரையிலும் செயலாற்றியதன் பயனாக இன்று பல மூலநூல்கள் தமிழுலகில் உலா வருகின்றன. தமிழாராய்ச்சிகள் பலவற்றிற்கும் இவருடைய பதிப்புகளே அடித்தளமாக அமைகின்றன. இவ்வகையில் மேலும் பல சுவடிப் பதிப்புகளும் மறுபதிப்புகளும் தமிழாய்வுக்குத்தேவையாகின்றன.

5. உ. வே. சா. சுவடிப் பதிப்புகளைச் செய்யத் தொடங்கிய காலம் முதல், தம்முடைய இறுதிக்காலம் வரையில் தொடர்ந்து ஈடுபாடு கொண்டு செய்து வந்த மிகப்பெரிய பதிப்பு இப் பாகவதப் பதிப்பாகும். பலராலும் போற்றப்பெறும் அவருடைய சிந்தாமணிப் பதிப்பைக் காட்டிலும் பெரிய பதிப்பான இப் பாகவதப் பதிப்பைத் தமிழறிந்த பலரும் அறியவில்லை. ஐயரவர்களின் பதிப்புகளை ஆராய்வோருக்கும் இப் பதிப்பு கிடைப்பது அரிதாகவுள்ளது. இவருடைய முழு உழைப்பின் பிழிவாக நமக்குக் கிடைத்திருக்கும் இப் பாகவதப்

பதிப்பிலுள்ள ஐயாயிரம் பாடல்கள், அவற்றின் குறிப்புரை விளக்கங்கள் போன்றவற்றிலிருந்து பல புதிய சொற்களும் விளக்கங்களும் தமிழாய்வுக்குப் பெரிதும் பயன் தருவனவாம். இவற்றைக் கருத்தில் கொண்டு, இப்பதிப்பினை மேலும் செம்மையாக்கி வெளிக்கொணர்வது மிகவும் தேவையாகும்.

## புண்ணியரைப் போற்றுவோம்

உ. வே. சா. அறிவிற் சிறந்த தமிழர்; சாதி,சமய வேறுபாடுகள் கடந்த சான்றோர்; சமணம், பௌத்தம், சைவம், வைணவம் என அனைத்துச் சமய நூல்களையும் வேறுபாடின்றிப் போற்றிப் பதிப்பித்து உலகிற்கு வழங்கிய வள்ளல். இவர் தம் அரும்பணிகளை அந்நாளில் உணர்ந்த மகாகவி **பாரதியார்** தமக்கேயுரிய முறையில் இவரைப் பாராட்டிக் கூறும்பொழுது, ''அழிந்துபோன ஆலயங்களை மறுபடியும் புதுக்கிக் கட்டிப் பிரதிஷ்டை புரிந்தோர், நெடுங்காலமாக நின்று போன அன்னச் சத்திரங்களுக்கு மறுபடியும் உயிரளிப்போர், வறண்டு மண்ணேறிப் போய்க் கிடக்கும் தடாகங்களை மறுபடி வெட்டி நலம் புரிவோர் என்னும் பலவகையாரினும் மங்கி மறைந்து போய்க் கிடக்கும் புராதனப் பெருங்காவியங்களைப் பெருமுயற்சி செய்து திரும்ப உலகத்திற்கு அளிக்கும் பெரியோர்கள் புண்ணியத்திற் குறைந்தவர்களல்லர். உ. வே. சா. மேற்கூறிய தருமம் புரிந்தவர்'' என்று கூறுவர்.[1] இவ்வாறு தமிழ்த் தொண்டின் சிகரமாகத் தமிழ் நூல்கள் பல இறவாமல் காத்த இத்தமிழ்ப் பெரியாரை நாமும் போற்றுவோமாக!

---

1. சி. சுப்பிரமணிய பாரதி, சக்ரவர்த்தினி, சென்னை, பெப்ரவரி, *1906*, ப. *153*

## துணை நூல்கள்

அச்சும் பதிப்பும், மா. சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1980.

உரையாசிரியர்கள், மு. வை. அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம்; சிதம்பரம், 1983.

என் ஆசிரியப்பிரான், கி. வா. ஜகந்நாதன், டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 1983.

என் சரித்திரம், உ.வே. சாமிநாதையர், உ.வே.சாமிநாதைய்யர் நூல் நிலையம், சென்னை, 1982.

செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம்-முதல் பாகம் (முதல் ஒன்பது ஸ்கந்தங்கள்), திருமலை–திருப்பதி தேவஸ்தான வெளியீடு, 1949.

செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம்-இரண்டாம் பாகம் (10, 11, 12 ஸ்கந்தங்கள்), திருமலை-திருப்பதி தேவஸ்தான வெளியீடு, 1953.

டாக்டர் உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள், கி. நாச்சிமுத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1986.

டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள், இரா. காசிராசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.

டாக்டர் உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள், குளோறியா சுந்தரமதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.

டாக்டர் உ. வே. சா. பதிப்புப்பணி-ஓராய்வு, பூ. சொல் விளங்கும் பெருமாள், வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1981.

தமிழ் இலக்கிய வரலாறு, பதினாறாம் நூற்றாண்டு-முதல் பாகம், புராண இலக்கியம், மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், மாயூரம், தஞ்சை ஜில்லா, 1977.

ஸ்ரீமத் பாகவத புராணம். (பதிப்) கோமளபுரம் இராசகோபால பிள்ளை, சென்னபட்டணக் கிரேவ்ஸ் கூக்ஸன் அண்டு கம்பெனியார் ஸ்காட்டிஷ் அச்சுக்கூடம், 1881,

ஸ்ரீமத் மகா பாகவதம், நெல்லிநகர் அருளாளதாசரென்னும் மதுரகவி ஸ்ரீ வரதராஜ ஐயங்கார் அருளியது, (பதிப்.) பவாநி பால பாரதி முத்துசாமி ஐயர், ச. திருச்சிற்றம்பலம்பிள்ளை கா. ல. வெ. திருமலைகொண்ட நாயக்கர், வித்தியாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1913.

## கட்டுரை

செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பு வரலாறு, வே. இரா. மாதவன், தமிழ்க்கலை, தமிழியல் காலாண்டு ஆய்விதழ், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1990, பக். 165-179.

# சிறப்புச் சொல்லகராதி

**(எண்—பக்க எண்)**


அகநானூறு 23
அதிவீர ராமபாண்டியன் 3
அம்பிகாபதி 4
அரும்பத உரை 23
அருளாளதாசர், நெல்லிநகர் 3,9
அழகர் கலம்பகம் 4, 38, 116
அழகர் கிள்ளை விடுதூது 116
அழகர் பிள்ளைத் தமிழ் 4
அனதாரியப்ப புலவர் 15
ஆசிரிய மாலை 118
ஆழ்வார்கள் 118
ஆளவந்தான் மாதவபட்டர் 4
ஆறுமுக நாவலர் 46
ஆனந்தலகிரி 4
இதிகாச பாகவதம் 4
இராசகோபாலபிள்ளை 8, 9, 10, 16, 49-52, 58-60, 113
இராமலிங்க செட்டியார் 18
இராமாயணம் 2, 12, 22
ஈசான முனிவர் 4
எட்டுத் தொகை 111
ஏரெழுபது திருக்கை வழக்கம் 8
ஐங்குறு நூறு 23
கந்தபுராணம் 117
கம்பர் 116
கம்பராமாயணம் 7, 8, 113, 116
கல்லாடம் 117
கலித்தொகை 111
கலியாணசுந்தரம், சா. 20, 45, 177
கவிகுஞ்சரமையர் 4
காளிதாசர் 39
கிருஷ்ணசாமிரெட்டி 13
குமரகுருசாமிகள் கடலூர் 8,
குமரகுருபரர் 110
குலோத்துங்க சோழன் உலா 117
கூர்மபுராணம் 3, 117
சகலகலாவல்லி மாலை 118
சடகோபையங்கார், அரியலூர் 11, 12
சண்முகம்பிள்ளை, மயிலை 8
சந்திரநாத செட்டியார் 100
சாகுந்தலம் 39
சாமி கவிகாளருத்திரர் 4
சிலப்பதிகாரம் 23, 39, 61, 113
சிவகவசம் 38
சிவபுராணம் 2
சீவகசிந்தாமணி 9, 14, 97, 100, 106, 113, 114, 116
சுக முனிவர் 59
சுந்தர பாண்டியம் 15
சுப்பிரமணிய ஐயர் வி. மு. 21, 44, 45, 48, 177
சூடாமணி 2
சேனாவரையம் 8
சோழமண்டல சதகம் 15
சௌந்தரிய லகரி 4
ஞான வாசிட்டம் 4
தக்கயாகப் பரணி 118
தஞ்சைவாணன் கோவை 118
தண்டியலங்காரம் 111
தணிகைப் புராணம் 117
தத்துவராயர் 4
தாமோதரம் பிள்ளை சி.வை 46
தாயுமானவர் 118
திருக்குறள் 36, 98, 115
திருக்கோவையார் 13
திருச்சந்த விருத்தம் 116
திருச்சிற்றம்பலக் கோவை யார் 110
திருநீலகண்ட நாயனார் விலாசம் 8
திருநெல்வேலிப் பெருமாளை யர் 4
திருப்பாவை 116
திருமலை கொண்ட நாயகர் கா. ல. வெ. 9
திருமால் 59
திருமாலை 116
திருமுறை 29
திருவரங்கக் கலம்பகம் 116
திருவரங்கத்தந்தாதி 116
திருவரங்கத்து மாலை 116
திருவள்ளுவ மாலை 117
திருவள்ளுவர் 178

திருவாய்மொழி 8, 116
திருவாலவாயுடையார் திரு விளையாடல் 15, 117
திருவிளையாடற் புராணம் 13, 15
திருவேங்கடத் தந்தாதி 116
திருவேங்கடமாலை 116
திவாகரம் 2
துரைசாமி, கே. ஆர் 97
தென் திருப்பதி புராணம் 8
தேவாரம் 118
தொண்டைமண்டல சதகம் 15
தொல்காப்பியம் 8, 98, 111
நச்சினார்க்கினியர் 38, 99, 115
நம்பியகப் பொருள் 111
நளவெண்பா 8
நன்னூல் 24, 111
நாச்சியார் திருமொழி 116
நாலடியார் 8,115
நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 23
நெல்லை வருக்கக் கோவை 4
நேமிநாதம் 111
நைடதம் 118
பகவத் கீதை 4
பட்டினப் பாலை 111
பத்துப்பாட்டு 111
பதிற்றுப் பத்து 23
பதினெண் கீழ்க் கணக்கு 115
பரமோத்தரசர் பாசதரு பணம் 8
பராபரை மாலை 4
பரிபாடல் 23, 36
பரிமேலழகர் 23, 36, 115
பவணந்தி முனிவர் 24
பழமொழி நானூறு 115
பாகவத புராணம் 4
பாடுதுறை 4
பாரதியார் 180
பிங்கலம் 2
பிரபந்த தீபிகை 4
பிரம புராணம் 2
பிரமோத்தர காண்டம் 118
பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் 116
புறநானூறு 23, 93, 98, 111
புறப்பொருள் வெண்பா மாலை 111, 112
பெரிய திருமடல் 116
பெரிய திருமொழி 116
பெரிய புராணம் 117
பெருங்கதை 61, 113
மகாபாகவதம் 9
மகா பாரதம் 38
மகா புராணம் 2
மணிமேகலை 61, 113
மதுரைத் தமிழ்ச் சங்கம் 17
மலைபடுகடாம் 111
மீனாட்சி சுந்தரம் பிள்ளை 14
முத்துவேங்கட சுப்பையர் 4
ராக்வைய்யங்கார் ரா. 15
வரதராஜ ஐயங்கார் 3,9
வரதுங்க ராம பாண்டியன் 4
வான்மீகம் 18
விண்டு பாகவதம் 4
வியாசபாரதம் 113
வியாசர் 2,4,10,18
வில்லிபுத்தூரார் பாரதம் 8, 116
விஷ்ணுபுராணம் 2,28
வீரைக் கவிராச பண்டிதர் 4
வேம்பற்றூர்க் குமரனார் 4
வேலாயுத முதலியார், தொழுவூர் 8
வைத்திய நாதையர், அ.4
வையாபுரிப் பிள்ளை, ச. 46
ஸ்ரீ பட்டர் 4

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## டாக்டர் உ.வே. சாமிநாதையர் அறக்கட்டளை வெளியீடுகள்

கா.

1983இல் நிறுவன, சுவடியியல் துறையின் மேனாள் ஆய்வு உதவியாளர் திரு. மு.கோ. ராமன், மற்றும் பலரின் உதவியுடன் நிறுவப்பட்டது.

**டாக்டர் உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள்**

டாக்டர் குளோறியா சுந்தரமதி; செப். 1984;
VII + 172; ரூ. 10

ஐங்குறுநூறு, குறுந்தொகை, பரிபாடல், புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, ஆகிய ஆறு சங்க நூல்களின் பதிப்பாசிரியரான ஐயரவர்களின் முன்னிசுரில் பதிப்புப்பணி திறனாய்வு செய்யப்பட்டுள்ளது.

**டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள்**

டாக்டர் இரா. காசிராசன்; பிப் 1985;
VIII + 170; ரூ. 10

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவக சிந்தாமணி ஆகியவற்றின் பதிப்பு வரலாறு, பிற பதிப்பா ரியரினின்றும் உ. வே. சா. தனித்து மிக உயர்ந்து நிற்றல், மூலபாட ஆய்வுபோல்வன சிறப்பிக்கப்பட்டுள்ளன.

**டாக்டர் உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள்**

டாக்டர் கி. நாச்சிமுத்து; பிப். 1986; VII + 124; ரூ12

புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மயிலை நாதர் உரை, நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை, தமிழ் நெறி விளக்கம் எனும் நான்கு இலக்கணப் பதிப்புகளின் வழிப்புலனாகும் ஐயரவர்களின் பொருவாரில் தனியாட்சிப் புலமை இதில் எடுத்துக் காட்டப்படுகிறது.

**உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு**

எஸ். டி. காசிராசன்; பிப். 1987; VIII + 137; ரூ. 15

டாக்டர் உ. வே. சா. அவர்கள் வாழ்வு எவ்வாறு தமிழ் வாழ்வாகவும் தமிழுக்கென்றே உழைத்த வாழ்வாகவும் அமைந்ததென்பதை மையமாக்கிச் செல்கின்றது.

**தொல்காப்பியப் பதிப்புகள்**

முனைவர் ச. வே. சுப்பிரமணியன்; ஏப்.1992;
XII + 177; ரூ. 27.

1847 முதல் இன்று வரை தொல்காப்பியத்திற்கு எழுந்துள்ள சுமார் 138 பதிப்புகளின் விளக்கவியல் ஆய்வாக நூலமைகிறது. முன் பகுதி இவற்றின் பொதுநிலை ஆய்வாக அமைய, பின்பகுதி ஒவ்வொரு நூலையும் தனித்தனியே ஆய்வுநோக்கில் அறிமுகம் செய்துள்ளது.